அன்பே நம் ஆயுதம்

ஆசிரியர் :

K. ஸ்ரீனிவாசன்

'கஸ்தூரி பிரிண்டிங் பிரஸ்'

(Printers & Publishers)

ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

PRINTED AT KASTHURI PRINTING PRESS, JAIL ROAD,
COIMBATORE.

அன்பே நம் ஆயுதம்

அத்தியாயம் ஒன்று

ஒன்று பிற்பகல் மிகவும் உஷ்ணமாய் இருந்தது. செடி, கொடி, கொம்பு, முதலியன ஆடாது அசைவற்று நின்றன. உடையார் மில்ஸ் லிமிடெட் என்னும் பஞ்சாலை மீதும், அதற்கு அருகேயுள்ள ஆபீஸ் கட்டிடத்தின் மீதும், சுற்றியுள்ள காய்ந்த நிலங்களின் மீதும், சூரிய கிரணங்கள் பட்சபாதமின்றி விழுந்து தகித்தன. மில்லுக்குள்ளே யந்திரங்கள் சுற்றும் சத்தமும் பஞ்சுப்புகையும் சேர்ந்து வெப்பத்தை இரண்டு மடங்கு அதிகப்படுத்திற்று. பஞ்சை நூலாகவும், நூலை சிட்டங்களாகவும், கட்டுக்களாகவும் செய்வதில் சுமார் ஆயிரம் பேர் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள்.

ராமச்சந்திர உடையார் தமது ஆபீஸில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் தான் மில் முதலாளி. தாம் உட்கார்ந்த இடத்திலிருந்தே மில் கட்டிடத்தை அவர் பார்க்க முடியும். யந்திரங்கள் ஓடும் சத்தம் தேனீக்களின் ரீங்காரம்போல் அவர் காதில் விழுந்து அவருக்கு திருப்தியளித்தது. அடர்ந்த மரங்களால் சூழப்பட்ட அந்தக்கட்டிடத்தில் உஷ்ணம் அவ்வளவாகத் தெரியாது. மேலும் அவர் தலைக்குமேல் ஒரு மின்சாரவிசிறி சுழன்றுகொண்டிருந்தது. அப்படியிருந்தும் அவர் அடிக்கடி தம் கைக்குட்டையால் முகத்தையும் கழுத்தையும் துடைத்துக்கொண்டும், ஐஸ் போட்ட ஜலத்தை சிறிது சிறிதாகப் பருகிக்கொண்டும் இருந்தார்.

உடையாருக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். சலவை மல் வேஷ்டி, சில்க் ஜிப்பா, ஜரிகை அங்க வஸ்திரம்' இவைதான் அவருக்கு வழக்கமான உடைகள். எப்போது பார்த்தாலும் ஏதாவது யோசனையில் ஆழ்ந்திருப்பார். இப்போது அவர் 1930-ஆம் வருஷத்தோடு முடிவடைந்த லாபநஷ்டக் கணக்கைப்பரிசிலனை செய்துகொண்டிருந்தார். அப்போதிருந்த உலக பொருளாதார நெருக்கடி இன்னும் அவரை எட்டவில்லை. மில்லில் நல்ல லாபம். துணியில்லாமல் ஜனங்கள் வாழமுடியாது என்று தனக்குத்தானே நினைத்துக்கொண்டார். "எனக்கு நஷ்டம் வரவேண்டும் என்பதற்காக உலகமே நிர்வாணமாகவா ஆகிவிடும்?" என்று நினைத்ததும் அவருக்கு சிரிப்பு வந்துவிட்டது.

அன்று நாலரை மணிக்கு மில்லின் நிர்வாக சபை மீட்டிங் நடக்க ஏற்பாடு ஆகியிருந்தது. நிர்வாக சபை அங்கத்தினர்களில் இரண்டு வகை இருந்தார்கள். சிலர் ராமச்சந்திர உடையாருக்கு பந்துக்கள் அல்லது மிகவும் வேண்டியவர்கள். அவருடைய தாட்சண்யத்துக்காக மில்லில் பணம் போட்டவர்கள். மற்றவர்கள், உடையாரிடம் நமக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டியிருக்கும். பணம் போட்டு வைத்தால் அதற்கு சௌகர்யம், என்று நினைத்துக்கொண்டு பணம் போட்டவர்கள். ஆகவே இந்த நிர்வாக சபை மீட்டிங்குகள் பெயருக்குத்தான் மீட்டிங்குகளே தவிர உண்மையில் அங்கத்தினர்கள் ஒருவரையொருவர் க்ஷேம சமாசாரங்களை விசாரித்துக்கொண்டு போவதற்கும் அவர்களுக்கு சேரவேண்டிய பீஸ் வாங்குவதற்குமே வருவார்கள். மற்ற மீட்டிங்குகளைப் போல் அவ்வளவு ஒழுங்காக நடப்பதில்லை.

உடையாருடைய மருமகன் ரங்கசாமி தான் முதலில் அங்கு வந்தான். அவனுக்கு வயது சுமார் இருபத்தெட்டு இருக்கும். மாமனாரைக் கண்டால் கொஞ்சம் பயம் உண்டு. ஆனால் அவருடைய திறமையில் அபார நம்பிக்கை. அவரைப் போலவே ரங்கசாமியும் ஒரு பெரிய மிராஸ்தார் குடும்பத்தில் பிறந்தவன். சிறு பையனாய் இருக்கும்போது அவன் தகப்பனார் ரங்கசாமியை ஆங்கிலம் கற்றுக்கொள்ள மதுரையில் ஒரு பாடசாலைக்கு அனுப்பினார். அப்போது ரங்கசாமிக்கு தான் ஒரு பணக்காரர் மகன் என்று பெருமை அதிகம். கஷ்டப்பட்டு நன்றாகப் படிக்கும் பையன்களைப் பார்த்து, "நீங்கள் இவ்வளவு படித்து என்னடா செய்யப் போகிறீர்கள்? என்னிடம் குமாஸ்தா வேலைக்குவருவீர்கள்." என்று ஏளனம் செய்வது வழக்கம். மெட்ரிகுலேஷன் என்னும் கோட்டையை மூன்று தடவை முற்றுகையிட்டும் பிடிக்க முடியாமல் சீக்கிரம் சொந்த கிராமத்துக்கு திரும்பி போய்விட்டான். ஆனால் அவன் பெற்றோர்கள் தம் பைய னுக்கு படிப்பு வரவில்லை என்று ஒப்புக் கொள்ளவில்லை. ரங்கசாமியைப் பற்றி யார் விசாரித்தாலும், "நம்ம பையன் என்ன, படித்து உத்தியோகத்திற்கா போகவேண்டும்? ஏதோ மூதாதைகள்செய்தபுண்ணியத்தினால் இன்னொருவர் தயவை எதிர்பார்க்காமலே சுகமாயிருக்க கடவுள் நமக்குக் கொடுத்து வைத்திருக்கிறார்." என்று சொல்லி வந்தார்கள். பல பணக்கார குடும்பங்களில் படிப்பைப் பற்றி இம்மாதிரி மனப்பான்மை உண்டு. ஆகவே அப்பேர்ப்பட்டவர் களுடைய குழந்தைகளுக்கும் மெட்ரிகுலேஷன் பரீட் சையைத் தாண்டாவிட்டாலும் கூட கர்வம் அதிகம் இருக்கும். இருந்தாலும் குமாஸ்தா வேலை சம்பாதிக்க முக்கால்வாசிப்பேர் ஆங்கிலம் கற்கிறார்கள் என்பதும்

வாஸ்தவம். ஷேக்ஸ்பியர், மில்டன், ஆகிய மகாகவிகளை யெல்லாம் கற்றுவிட்டு பிறகு மாதம் இருபத்தைந்து ரூபாய்க்கு திண்டாட வேண்டியிருக்கிறது. அதனால்தான், தங்கள் மகன் ஆங்கிலம் கற்றால் அது சம்பளம் வாங்க அல்ல என்பதைப் பற்றி ரங்கசாமியின் பெற்றோர்கள் பெருமையாக பேசிக்கொண்டார்கள்.

ரங்கசாமி உள்ளே வந்ததும் ராமச்சந்திர உடையார், "எப்போது வந்தீர்கள்? உட்காருங்கள்", என்று தம் மேஜைக்கு முன்னால் இருந்த நாற்காலிகளில் ஒன்றைக் காட்டினார். ரங்கசாமி உட்கார்ந்து கொண்டான்.

"ஊரில் எல்லோரும் சௌக்கியமா ?"

"சௌக்கியம் தான்."

"இந்திராவும் உங்களோடு வந்திருக்கிறாளா?" என்று உடையார் தம் மகளைப்பற்றி விசாரித்தார்.

"ஆம். இந்திராவை பங்களாவில் விட்டு விட்டுத்தான் இங்கே வந்தேன்."

அத்துடன் குடும்ப விசாரணை முடிந்தது. உடையார் நேராக வேலையில் இறங்கினார். "இந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று கொஞ்சம் சொல்லுங்கள். குமாஸ்தா சொன்னான். ஆனால் முக்கியமான விஷயத்தை இரண்டு பேர் அர்த்தம் செய்தால்தான் மனதுக்கு சமாதானம்." என்று சொல்லி ரங்கசாமியிடம் டைப் செய்த கடிதம் ஒன்றைக் கொடுத்தார். ஆங்கிலம் தெரியாதவர்கள் அனேகர் மாதிரி உடையாருக்கும் தெரிந்தவர்கள் மேல் நம்பிக்கை இல்லை. ஆகையால் முக்கியமான கடிதங்களை எல்லாம் இரண்டுபேர் மொழிபெயர்ப்பது வழக்கம்.

ரங்கசாமிக்கு ஆங்கிலம் நன்றாகத் தெரியும் என்று அவன் பந்துக்களிடம் ஒரு அபிப்பிராயம் இருந்து வந்தது. இதைப் பற்றி ரங்கசாமி உள்பட எல்லோருக்கும் பெருமை. இந்த அபிப்பிராயத்தை மாற்ற இதுவரையில் ஒன்றும் நடந்ததில்லை. இப்போது மாமனார் கொடுத்த கடிதத்தை வாங்கிப் பார்த்தான். பத்து வருஷங்களுக்கு முன் அரை குறையாகக் கற்ற ஆங்கிலத்தில் 'டியர் சார்' (அன்பார்ந்த ஐயா) 'யுவர்ஸ் ட்ரூலி' (தங்கள் உண்மையுள்ள) என்னும் வார்த்தைகளைத் தவிர பாக்கி எல்லாம் மறந்து விட்டது. ஆனால் நல்ல வேளையாக இன்னொரு நிர்வாக சபை அங்கத்தினரின் வருகை ரங்கசாமியின் பெருமையைக் காப்பாற்றியது.

அப்பொழுது வந்தவர் மிகவும் முக்கியமான மனிதர். அவர் பெயர் ராவ் பகதூர் கிருஷ்ணசாமி ரெட்டி, முனிசிபல் சேர்மென், ஜில்லா போர்ட் பிரசிடெண்ட், சென்னை சட்ட சபை மெம்பர். அப்போதிருந்த மந்திரிகளுக்கு மிகவும் வேண்டியவர். மேற்கூறிய பதவிகளில் அவர் செய்த சேவைக்காக கவர்ன்மெண்டாரால் முந்திய வருஷம் அவருக்கு ராவ் பகதூர் பட்டம் அளிக்கப் பட்டது. மனதுக்கு உற்சாகமாய் இருந்த சமயங்களில் அவர் 'ஸர்' பட்டத்தைப் பற்றிக் கூட நினைப்பது உண்டு. டில்லி அசெம்பிளி எலக்ஷனுக்கு நின்றால் உடையாரின் உதவி அனுகூலமாய் இருக்கும் என்றுதான் அவர் இம்மில்லில் பணம் போட்டிருந்தார். சிநேகம், அன்பு, கருணை முதலிய உயர்ந்த குணங்கள் அவர் பேச்சில் ததும்பும். எப்போதும் சிரித்த முகத்துடனேயே காணப்படுவார். முழங்கால் வரை நீண்ட சில்க் கோட்டுடனும், ஜரிகை உருமாலையுடனும்,

கடுக்கன் சாந்துப் பொட்டுடனும், வழக்கமாக அவரது கையிலிருந்து தொங்கும் கைத்தடியுடனும், பழைய கால வைதிகமும் நவீன நாகரிகமும் ஒன்று சேர்ந்து உருவெடுத்தாற்போல் விளங்குவார்.

“ஹலோ, மிஸ்டர் உடையார், நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?” என்று சொல்லிக்கொண்டே ராவ் பகதூர் கிருஷ்ணசாமி ரெட்டி ஆபீசுக்குள் வந்தார். “உங்களைப் பார்த்து வருஷக்கணக்காய் இருக்கும் போல் தோன்றுகிறது. ஏழை பங்குதாரர்களாகிய எங்களை மில்லுக்குள் வராமல் இருக்கச் செய்கிறீர்களா, என்ன? வீட்டில்எல்லோரும் சௌக்கியம் தானே?” இப்படி கேள்விக்குமேல் கேள்வி கேட்டுக்கொண்டே அவர் உடையாருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு ரங்கசாமியைப் பார்த்து தலையை ஆட்டினார். உடையாரும் ரங்கசாமியும் தம் ஆசனங்களிலிருந்து எழுந்தார்கள். அதிருஷ்ட வசமாக ஏற்பட்ட இந்த தடங்கலுக்காக ரங்கசாமி கடவுளுக்கு வந்தனம் செலுத்தினான்.

“நமஸ்காரம். வரவேண்டும், வரவேண்டும். உங்களைப் பார்க்க எப்போதும் சந்தோஷம் தான். ஆனால் ராவ்பகதூர் பட்டம் வந்ததிலிருந்து நீங்கள் ரொம்ப பெரிய மனிதர் ஆகிவிட்டீர்கள். பொதுக் காரியங்களில் இவ்வளவு ஈடுபடாமலிருந்தால் என்னைப் போன்றவர்களைப் பார்க்க நேரம் இருக்கும்.” என்று சொல்லி உடையார் அவரை உபசரித்தார்.

உடையாரும் ரெட்டியும் மேஜைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள். பெரிய மனிதருக்கு

மரியாதையாக ரங்கசாமி கொஞ்சம் தூரமாய் இருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டான். உடையார் மேஜை மீதிருந்த மணியடித்து ஐஸ் போட்ட லெமனேட் கொண்டுவரச் சொன்னார். கிருஷ்ணசாமி ரெட்டி லெமனேடை சிறிது சிறிதாகப் பருகிக் கொண்டே சில்க் கைக்குட்டையினல் முகத்தைத் துடைத்து சிரம பரிகாரம் செய்து கொண்டார்.

"ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா? உங்களைக் கேட்டால் தானே தெரியும்." என்ருர் உடையார்.

"எல்லாம் ரொம்ப மோசம். என்ன போங்கள், இந்த காங்கிரஸ்காரர்களின் குறும்புத்தனம் ஒரு பக்கம், கவர்ன் மெண்ட் அதிகாரிகளின் முட்டாள்தனம் இன்னெரு பக்கம். இந்த இரண்டும் சேர்ந்து பொது வாழ்க்கையையே என் போன்றவர்களுக்கு ஒரு முள் படுக்கையாய் ஆகிவிட்டது. ஒரு வாரத்துக்கு முன்பே நான் ஊர்வலங்களின் மேலும் பொதுக் கூட்டங்களின் மேலும் தடையுத்திரவு போட்டு முக்கியமான காங்கிரஸ்காரர்களை அரஸ்ட் செய்ய வேண்டும் என்று கலெக்டரிடம் சொன்னேன். என் வார்த்தையைக் கேட்டிருந்தால் ஒரு தொந்திரவும் இருந்திருக்காது. ஆனல் கலெக்டர் நான் காரணமின்றி பயப்படுத்துவதாய் நினைத்தார். 'மிஸ்டர் ரெட்டி, உமது நாட்டினரின் தேச பக்தியை நீர் மிகவும் அதிகமாக மதிப்பிடுகிறீர்.' என்று என்னை கேலி செய்தார். இப்போது என்ன நடந்தது என்று பாருங்கள். நான் சொன்னபடி தான் ஊர்வலங்கள், மீட்டிங்குகள், மறியல், உற்சாகம், எல்லாம் இன்று காலையில் முற்றிவிட்டது."

"ஏன்? இன்று என்ன நடந்தது?" என்று உடையார் விசாரித்தார். ரெட்டி இந்த மாதிரி பேசி அவர் கேட்டதில்லை. புன்சிரிப்புடன் இரண்டு நிமிஷத்துக்கு முன் வந்த முகம் தொல்லை என்னும் மேகத்தில் மறைந்து விட்டது. ரெட்டி இவ்வளவு பதட்டமாகப் பேசினால் சமாச்சாரம் மிகவும் முக்கியமாக இருக்கும், என்று நினைத்தார் உடையார்.

"காங்கிரஸ் தொண்டன் ஒருவன் கடை வீதியில் போலீசார் அடியால் இறந்துவிட்டான்."

"நிஜமா?"

"ஆம். டவுன் பூராவும் பைத்தியம் பிடித்தது மாதிரி இருக்கிறது. கடைகளெல்லாம் மூடிக்கிடக்கின்றன. எங்கு பார்த்தாலும் ஊர்வலங்கள், ஜனக்கூட்டம், காலேஜ் மாணவர்கள் கூட ஹர்த்தால் செய்வதாக வதந்தி. சாயந்திரம் அத்தொண்டன் உடலை தகனம் செய்யும்போது இவையெல்லாம் இன்னும் அதிகமாகும். நான் சொன்ன மாதிரி தலைவர்களையாவது முன்னமே அரஸ்ட் செய்திருந்தால்........."

இதுவரையில் ராமச்சந்திர உடையாருக்கு ராஜீய விஷயங்களில் சிரத்தையில்லை. ஆயிரக் கணக்காக காங்கிரஸ்காரர்கள் கைதியாவதைப் பற்றியும், தடியடிப் பிரயோகத்தைப் பற்றியும், உப்பு சத்தியாக்கிரகத்தைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தார். காந்திஜீயின் ஆத்ம சக்தியைப் பற்றியும், பாமர ஜனங்களுக்கு அவர்மேலிருந்த பக்தியைப் பற்றியும் கேட்டபோதெல்லாம் அவர் ஒரு பெரிய மகான் என்று நினைப்பதுண்டு. ஆனால் காங்கிரஸ்காரர்களுக்கு

ஜெயிலுக்குப் போக யாரோ பணம் கொடுப்பதாகவும் கேள்விப்பட்டிருந்தார். ஆனால் யார் என்று மட்டும் தெரியவில்லை. சுதந்திரத்தின் தேவையும் உடையாருக்குத் தோன்றவில்லை. குடியரசு, சுயாட்சி, ஜனநாயக ஆட்சி, என்னும் வார்த்தைகள் அவர் மனதில் தாக்காமல் காற்றில் பறந்தன. தாய் நாட்டைப் பற்றிய உருக்கமான கோஷங்கள் கூட அவர் இருதயத்தில் ஒருவிதமான கிளர்ச்சியையும் உண்டாக்கவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சக்தியில் அவருக்கு பயமும் நம்பிக்கையும் உண்டு. சத்தியாக்கிரக இயக்கத்தைப் பற்றி கேள்விப்பட்ட போதெல்லாம், 'பாவம் இவர்கள் ஜெயிலுக்குப் போயா சுயராஜ்யம் சம்பாதிக்கப் போகிறார்கள்?' என்று நினைத்துக் கொள்வார். ஆனால் எது எப்படி இருந்தாலும், ஒரு மனிதன் — காங்கிரஸ்காரனாய் இருந்தால்கூட — காரணமின்றி சாவதென்றால் அவருக்கு அர்த்தமாகவில்லை.

"ஏன்? அவனை அடித்து ஏன் கொல்ல வேண்டும்? சட்டத்தை மீறினால் அரஸ்ட் செய்து ஜெயிலுக்கு அனுப்பலாமே?" என்று கேட்டார் உடையார்.

"எனக்குத் தெரியாது. கலெக்டர் பங்களாவில் இப்போது தான் ஒரு மீட்டிங் நடந்தது. போலீஸ் அதிகாரி மற்றவர்களுக்கெல்லாம் இது ஒரு உதாரணமாய் இருக்கும் என்கிறார். ஆனால் அவர் செய்தது என்னவென்றால், ஒரு பைத்தியக்காரத் தொண்டனை பெரிய பிராணத்தியாகி ஆக்கிவிட்டார். தலைவர்களை அரஸ்ட் செய்யவும் மீட்டிங்குகளையும், ஊர்வலங்களையும் தடுக்கவும் இப்போதுதான் உத்திரவு போட்டிருக்கிறது. ஆனால் என்ன பிரயோஜனம்?"

"அன்னிய துணி மறியலைத் தவிர அவன் மீது வேறு குற்றம் உண்டா?" என்று உடையார் மறுபடியும் அத் தொண்டனைப் பற்றி விசாரித்தார்.

"அவன் தலையிலிருந்த காந்திக் குல்லாயை எடுக்க மறுத்துவிட்டானும். இந்த காங்கிரஸ்காரர்கள் முரட்டுப் பிடிவாதம் உள்ளவர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. குல்லாய் எடுக்கும் வரையில் அடிப்பேன் என்று போலீஸ்காரன் அடித்தான். இவன் சாகும் வரையில் எடுக்க மாட்டேன் என்று இரண்டு கைகளாலும் குல்லாயைத் தலையோடு சேர்த்துப் பிடித்துக் கொண்டான். அப்படியே செத்துப் போய் விட்டான்." கிருஷ்ணசாமி ரெட்டி எப்போதும் போல் அமைதியாயும் கம்பீரமாயும் இல்லை. தம் இருதயத்தில் எழுந்த உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் உடையாரிடம்சொல்ல விரும்பினுர். "எனக்கு பிரிட்டிஷ் ஆட்சியில் விருப்பம் என்று நினைக்கிறீர்களா? இல்லை. அதை இங்கிலீஷ்காரர்கள் உள்பட யாரும் விரும்புவதில்லை. அவர்கள், நாம், நம் தேசம், சீதோஷ்ணஸ்திதி, ஆகிய எல்லாவற்றையும் வெறுக்கிறுர்கள். இப்படியிருக்க அவர்கள் ஏன் மூட்டை கட்டிக்கொண்டு போய் விடுவதில்லை என்று நானே சில சமயங்களில் யோசனை செய்வதுண்டு. அவர்களுடைய கர்வம், அகம்பாவம், எனக்கே பிடிப்பதில்லை. அவர்களுடைய நன்மைக்காகவே நாம் ஏதாவது சொன்னுல்கூட நம் அபிப்பிராயத்தை கவனிப்பது கிடையாது. அவர்களுடைய சினேகிதர்களையும் இங்கே அவர்கள் நம்புவதில்லை. ஆனுல் நாம் என்ன செய்வது? நமக்குள் ஒற்றுமை இல்லை. அவர்களிடம் துப்பாக்கி, ஏரோப்ளேன் இருக்கின்றன. சில சமயங்களில் இந்த காங்கிரஸ்காரர்கள் பிரிட்டிஷாருடைய

உண்மை நிலையை எடுத்துக் காட்டும்போது எனக்குக்கூட உள்ளுக்குள் சந்தோஷம் தான், ஆனால். . . . . . ”

அச்சமயத்தில் இன்னொரு நிர்வாகசபை அங்கத்தினர் உள்ளே வந்தார். அவர் ஒரு விவசாயி. கிராமத்தில் தன் வாழ்நாளைக் கழித்து புதிதாகப் பணம் சம்பாதித்தவர். அதற்குத் தகுந்த மாதிரி அவருடைய உடைகளும் கொஞ்சம் டாம்பீகமாக இருந்தன. இரண்டு வைர மோதிரங்கள் அவரது இடது கை விரல்களில் பிரகாசித்தன. உள்ளே வந்து உட்கார்ந்ததும் கொஞ்சம் தாம்பூலம் எடுத்துக்கொண்டு சம்பாஷணையில் பிரவேசித்தார்.

“ நான் இங்கே வரும்போது சில காங்கிரஸ் கைதிகளை போலீஸ் ஸ்டேஷனுக்கு கூட்டிக்கொண்டு போவதைப்பார்த்தேன். நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். அவர்களைப் பார்த்தால் ஜெயிலுக்குப் போகிறவர்கள் மாதிரியே இல்லை. பாட்டு பாடிக்கொண்டும், சிரித்துக் கொண்டும், ராஜாக்கள் மாதிரி நிமிர்ந்து நடந்து போகிறார்கள். சில வருஷங்களுக்கு முன்னே சர்க்காருக்கு எதிரிடையாகபோக முடியுமென்று யார் நினைத்தார்கள்? ”

“ அவர்களிடம் அது இருக்கிறது. ஜெயிலுக்குப் போனால் பெரிய கௌரவம் என்று நினைக்கிறார்கள்.” என்றார் உடையார்.

“ நான் என்ன நினைக்கிறேன் என்றால்,” என்று புதிதாக வந்தவர் மறுபடியும் தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க ஆரம்பித்தார். “நமக்கெல்லாம் இந்த வெள்ளைக்காரனைக் கண்டால் பயம். அவனைக் கண்டால் வெறுப்பு. ஆனால் அதை வெளியே காட்ட தைரியமில்லை. இந்தக்

காங்கிரஸ்காரர்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஜெயிலுக்கு அனுப்பினாலும் சரி, அல்லது அடித்தாலும் சரி, சுயராஜ்யம் சுயராஜ்யம் என்றே சொல்லுகிறார்கள். தைரியம் என்றால் அது தான் தைரியம். பேப்பரில் என்ன சொல்லுகிறதோ எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் கிராமங்களில் வந்து பாருங்கள். பண்ணையாள், தச்சன், கொல்லன், சக்கிலியர்கள்கூட காந்தியைப் பற்றியும் சுயராஜ்யத்தைப் பற்றியும் பேசிக் கொள்ளுகிறார்கள். இந்த இயக்கம் நெருப்பு மாதிரி பற்றிக்கொண்டு விட்டது."

"இந்த இயக்கத்தினால் தான் ஜனங்கள் சுதேசித் துணி வாங்க ஆரம்பித்திருக்கிறார்கள். மில்லிலும் லாபம் கிடைக்கிறது." என்றார் உடையார்.

இந்த தாறுமாறான சம்பாஷணையை அதிக தூரம் போகுமுன் நிறுத்துவது தம் கடமை என்று கிருஷ்ணசாமி ரெட்டி உணர்ந்தார். "இந்த இயக்கத்தின் உண்மைப் போக்கை நீங்கள் அறிந்து கொள்ளவில்லை. இது நம் சமூகத்தின் வெகுகால சம்பிரதாயத்தையெல்லாம் சீர் குலைக்கிறது. ஜெயிலுக்குப் போவதற்காக, பெண்கள் வீடுகளிலிருந்தும், பையன்கள் பள்ளிக்கூடங்களிலிருந்தும் வெளியேறுகிறார்கள். இந்த இயக்கம் ஏழை கிராமவாசிகளிடம் கூட சட்டம், அதிகாரம், என்பதற்கு மதிப்பில்லாமல் செய்துவிட்டது. தன் மனதிற்கும் மனச் சாட்சிக்கும் விரோதமான சட்டங்களை இன்று பிரிட்டிஷ் அரசாங்கத்தில் மீறக் கற்றுக்கொண்டவர்கள் நாளைக்கு இந்திய அரசாங்கத்தில் மட்டும் மீறத் தயங்குவார்களா? இந்த இயக்கமானது இந்துக்களையும், முகம்மதியர்களையும்,

கிருஸ்துவர்களேயும் ஒன்று சேர்த்து நம் மதத்தின் புராதன மகிமையைக் கெடுத்துவிட்டது. இப்பொழுது தீண்டாதார் கோவிலுக்குள் வரவேண்டும் என்கிறுர்கள். இது பாமர ஜனங்களின் மனதில் புதிய எண்ணங்களேப் புகுத்தி அவர்களே யெல்லாம் சிந்திக்கச் செய்கிறது. மனைவிகளேப் புருஷர்களுக்கு எதிராகவும், மக்களேப் பெற்ருேர்களுக்கு எதிராகவும், ஏழைகளே பணக்காரர்களுக்கு எதிராகவும் எழுந்து தம் உரிமைகளே நிலைநாட்டச் செய்கிறது." மூச்சு வாங்குவதற்காக தம் பேச்சை ரெட்டி கொஞ்சம் நிறுத்திஞர்.

"காந்தி இதையெல்லாம் நினைத்தா இந்த இயக்கத்தை ஆரம்பித்தார்?" என்று உடையார் கேட்டார்.

"காந்தி ஒரு குறி, அடையாளம் மாதிரி. இக்காலப் போக்கின் ஒரு தோற்றம். ஆனல் புரட்சி என்னும் பந்தை உருட்டி விட்டால் அப்புறம் காந்திகூட அதை நிறுத்த முடியாது. காந்தியினுல் இன்று எல்லோரும் சத்தியாக்கிரகிகளாய் இருக்கிறுர்கள். ஆனல் நாளைக்கு பலாத்காரத்தை உபயோகிக்கலாம். இன்றைக்கு சுதந்திரம் கேட்கிறுர்கள். நாளைக்கு பொது உடைமை, சோஷியலிசம் என்ருல் பிறகு நாமெல்லாம் எங்கே?"

"இவ்வளவு தூரம் இதைப் பற்றி நான் நினைத்தது கிடையாது." என்று உடையார் ஒப்புக்கொண்டார். "உமது விளக்கத்தில் நீங்கள் மிகவும் தெளிவாய் இருக்கிறீர்கள். காங்கிரஸ்காரர்கள் தான் எல்லோருக்கும் ஓட்டு வேண்டும் என்கிறுர்களே? அது சோஷியலிசம் தானே?"

இந்த சம்பாஷணையின் போது மற்றும் சில நிர்வாக சபை அங்கத்தினர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எல்லோரும்அன்றைய சமாச்சாரங்களைப்பற்றி பலவிதமாய் தம் மனதிற்குத் தோன்றியவாறு பேசிக் கொண்டிருந் தார்கள்.

மீட்டிங் ஆரம்பமாயிற்று. ஒரு குமாஸ்தா அவ் வருஷத்திய லாபநஷ்டக் கணக்கைப் பற்றியும், பஞ்சு, நூல் விலைகளைப் பற்றியும் விவரமாக எடுத்துச் சொன்னார். ஆனால் அதை யாரும் அதிகமாக கவனிக்கவில்லை. சிலர் தாம் பூலம் போட்டார்கள். சிலர் எச்சில் துப்பவும், வாய் கொப்பளிக்கவும் அடிக்கடி வெளியில் போய்க் கொண்டிருந் தார்கள். "எல்லாம் உடையார் மனதிற்குத் திருப்தியாய் இருந்தால் சரி. வட்டி மட்டும் எவ்வளவு என்று சொல்லி விடுங்கள்." என்று கேட்டார்கள். கிருஷ்ணசாமி ரெட்டி மட்டும் சில விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

ஜிலேபி, காரசாமான், வடை, காப்பி, முதலிய பல காரங்கள் கொண்டுவரப்பட்டன. எல்லோரும் சாப்பிட வும் பேசவும் சத்தம் பலமாயிற்று. சிறிது நேரத்தில் ஒவ்வொருவரும் நிர்வாக சபை அங்கத்தினர் பீஸ் முப்பது ரூபாயை வாங்கிக்கொண்டு உடையாரிடம் விடைபெற்றுச் சென்றனர்.

அத்தியாயம் இரண்டு

ஆறு மணி சுமாருக்கு ராமச்சந்திர உடையார் தன் மருமகன் ரங்கசாமியுடன் தமது பியூக் காரில் வீட்டுக்கு புறப்பட்டார்.

பிரகாசிக்கும் மோட்டார் கார் புழுதியிலும் வெய்யிலி லும் வேகமாகச் சென்றது. உடையாரின்மனதில் சந்தோஷ மும் திருப்தியும் கலந்து ஒரு விதமான ரம்மியத்தை ஏற்ப டுத்தின. அவர் இப்போது ஸ்திரமான நகர வாசி ஆகிவிட் டார். அவர் கிராமத்தில் பிறந்து கிராமத்தில் வளர்ந்தவர். ஏராளமான பூஸ்திதி உண்டு. அவருடைய தகப்பனருக்கு அநேக கிராமங்களில் செல்வாக்கு இருந்து வந்தது. அக்கா லத்தில் அவரை ஜனங்கள் பெயர் சொல்லி அழைக்க பயப் படுவார்கள். பெரியவர் என்று தான் சொல்வது வழக்கம். இவ்வளவு பொருளுக்கும் அந்தஸ்துக்கும் ஏக புத்திரனய்ப் பிறந்தும் ராமச்சந்திர உடையாருக்கு கிராமத்தில் இடம் கொள்ளவில்லை. நகரத்தில் வசிக்க வேண்டும், அங்குள்ள பெரிய மனிதர்களின் சிநேகமும் சகவாசமும் வேண்டும் என்ற எண்ணங்கள் இருந்து வந்தன. விவசாயத்தில் பணம் இல்லை. கைத்தொழில், வியாபாரம், முதலிய வற்றில் தான் லாபம், என்பதையும் உணர்ந்தார்.

ஆகவே முதல் மகா யுத்தம் முடிந்ததும் அவர் இந்த மில் ஆரம்பித்து, கஷ்டப்பட்டு வேலைசெய்து அதை முன் னுக்கு கொண்டுவந்தார். சிறு வயதிலேயே தன் மகள்

இந்திராவை ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி ஆங்கிலம் நன்ருகப் பேச கற்கவைத்தார். பிறகு எழு வருஷத்துக்கு முன்பு, அதாவது 1924-ஆம் வருஷத்தில் தன் மனைவி ராஜலட்சுமி அம்மாளுடனும், மகன் குமாரசாமியுடனும் மதுரை நகருக்கே குடி வந்துவிட்டார். இந்திராவின் கல்யாணம் கூட புராதன கிராமத்தில் நடக்காமல் மதுரையிலேயே அவருடைய புது பங்களா 'உடையார் ஹவுஸில்' வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இப்பொழுது சுகமாகக் காரில் போய்க்கொண்டிருந்த போது இதைப்பற்றியெல்லாம் நினைத்தார். நகரவாசமே கூடாது என்று சொல்லிக்கொண்டிருந்த அவர் சம்சாரத்துக்குக்கூட இப்போது அது பழக்கமாகி விட்டது. புராதன கிராமத்தையும் விவசாயத்தையும் கவனிக்காது பட்டணத்துக்கு வந்துவிட்டதைப் பற்றி பெரியவர் உயிரோடிருந்தால் என்ன நினைப்பார், என்று தனக்குத்தானே எண்ணிஞர். ஆனுல் பெரியவர் ராமச்சந்திர உடையாருக்கு கலியாணம் ஆனதும் காலமானுர். எல்லாம் நேற்று தான் நடந்த மாதிரி உடையாரின் மனதுக்குத் தோன்றியது. ஆனுல் எத்தனை வருஷங்கள் சென்றுவிட்டன! வாழ்க்கையில் எவ்வளவு மாறுதல்கள். தன் தலைகூட நரைத்து சொட்டையும் விழுந்துவிட்டது. ஆனுல் கடந்த வருஷங்களில் எத்தனை காரியங்கள் செய்திருக்கிறுர்! இன்னும் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது!

ராமச்சந்திர உடையார் இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கும் போதே கார் மதுரை நகரத்திற்குள் வந்து விட்டது. புழுதி, சத்தம் நிறைந்த வீதிகளிலும் பலவித

உடை அணிந்த ஆண்களும் பெண்களும் கூட்டம் கூட்டமாக நின்று தர்க்கம் செய்யும் கடைவீதி மார்கெட் வழியாகவும், தம்மைச் சுற்றியுள்ள உலகமே மாறுவதைப் பார்த்தும் மாருத பண்டைக் கால கோவில்களுக்குப் பக்கமாகவும், எலெக்ட்ரிக் ஹாரனை ஊதிக்கொண்டு கார் சென்றது. கந்தல் உடையுடுத்தி அழுக்கு நாற்றம் வீசும் பிச்சைக்காரர்கள் தம் வறுமைக்கு சாட்சி சொல்ல ஆயிரம் கடவுள்களை அழைப்பது ஒரு பக்கம். காய்கறிகளையும் பழங்களையும் கூடைகளில் வைத்துக்கொண்டு விற்கும் பெண்கள் இன்னொருபக்கம். இவர்களிடையே டிரைவர் ஹாரன் அடித்துக்கொண்டும் அதை கவனிக்காமல் குறுக்கே நடப்பவர்களிடம் சத்தம்போட்டுக்கொண்டும் வெகு கஷ்டத்தின்மேல் கார் ஓட்டிக்கொண்டு போனன்.

அன்று காலையில் நடந்த சம்பவங்களுக்குப் பின்னல் வீதிகளில் இன்னும் பரபரப்பு இருந்தது. உற்சாகம் இல்லாவிட்டாலும் தெரு மூலைகளிலும் கடைகளுக்கு முன்னும், ஜனங்கள் கூட்டங்கூட்டமாக நின்று காங்கிரஸ்காரர்களைப் பற்றியும், அன்று காலையில் இறந்த தொண்டனைப்பற்றியும் பேசிக்கொண்டு இருப்பதாகத் தோன்றியது. அனேக கடைகள் மூடப்பட்டிருந்தன. திறந்திருந்த கடைகளுக்கு முன் போலீஸார் பாரா செய்துகொண்டிருந்தார்கள். வீதிகளிலும் பல போலீஸ்காரர்கள் குண்டாந்தடிகளுடன் அங்குமிங்கும் நடமாடிக்கொண்டும் ரகசியமாகப் பேசுபவர்களை கவனித்துக்கொண்டும் இருந்தார்கள்.

உடையார் இவற்றையெல்லாம் பார்த்தவண்ணமே தன் மகன் குமாரசாமியைப் பற்றி நினைத்தார். அவனை

எல்லோரும் குமார் என்றுதான் கூப்பிடுவது வழக்கம். குமாருக்கு வயது இருபதுக்கு மேல் இருக்கும். பீ. ஏ. பரீட்சைக்கு படித்துக்கொண்டிருந்தான். உடையாருக்கு தன் மகனைப் பற்றி மிகுந்த பெருமை உண்டு. தான் ஆங்கிலம் கற்காவிட்டாலும் தன் மகனாவது அந்த பாஷையை நன்றாகக் கற்கவேண்டும் என்று முடிவுசெய்திருந்தார். ஆங்கிலேயர்களுடன் பேசும்போது இந்தியர்கள் தப்பு செய்வதாயும் அதைப் பற்றி அவர்கள் ஏளனமாய்ப் பேசுவார்களென்றும் அவர் கேள்விப்பட்டிருந்தார். தன் மகன் அவ்வித ஏளனத்திற்கு ஆளாகக் கூடாதென்று சிறு வயதிலிருந்தே அவனுக்கு தனி உபாத்தியாயர் வைத்து ஆங்கிலம் கற்பித்துவந்தார். தன் மகன் ஆங்கிலத்தில் முதல் மார்க் வாக்கினான் என்று கேட்டபோதெல்லாம் அவர் உள்ளம் பூரிப்படையும். குமாரை இங்கிலாந்துக் கனுப்பி இஞ்சினீரிங்கும், நெசவுத் தொழிலும் கற்றுக் கொண்டு வரவேண்டும் என்றுகூட எண்ணியிருந்தார். இதனால் பணம் சம்பாதிப்பதைத் தவிர மகன் இங்கிலாந்துக்குப் போயிருக்கிறான் என்றால் தன் குடும்பத்திற்கே ஒரு தனி மதிப்பு என்பது அவருடைய எண்ணம். தன் மகனைப் பற்றி இன்னும் பெரிய பெரிய யோசனைகள் அவருக்கு உண்டு. ஆனால் அவைகளைப்பற்றி இன்னும் யாருடனும் பேசவில்லை. இருந்தாலும் அவன் அபிப்பிராயங்கள் எல்லாம் ஒரு மாதிரி இருக்கின்றன. என்னமோ கடவுள் இல்லை, அது தப்பு, இது தப்பு என்றெல்லாம் பேசுகிறான் என்று ஒரு நிமிஷம் நினைத்தார். உடனே காலேஜ் மாணவர்கள் ஹர்த்தால் செய்கிறார்கள் என்று கிருஷ்ணசாமி ரெட்டி சொன்னது ஞாபகம் வந்தது. "குமார் இந்த கலாட்டாவில் எங்கே அகப்பட்டுக்கொண்டானோ

என்னமோ," என்று தன் பக்கத்தில் இருந்த ரங்கசாமியை கேட்டார்.

"அப்படி ஒன்றும் இருக்காது". என்றான் ரங்கசாமி.

வீடு வந்து சேருவதற்குள் இந்த சந்தேகமும் உடையார் மனதை விட்டு நீங்கியது. மறுபடியும் சந்தோஷமும் நிம்மதியும் குடிகொண்டது.

அத்தியாயம் மூன்று

ராமச்சந்திர உடையாரின் 'உடையார் ஹவுஸ்' என்னும் பங்களா ஒரு அழகிய தோட்டத்தின் மத்தியில் அமைந்திருந்தது. கார் உள்ளே போகும் பாதைக்கு இரு புறமும் மரங்கள். கார் நிற்கும் போர்டிகோவின் மேல் படர்ந்த கொடிகள். மறையும் சூரியனின் கிரணங்கள் அந்த வெண்மையான கட்டிடத்தின் மீது விழுந்து அதை மின்னும் சிவப்பாக மாற்றியது.

இந்திரா தன் தகப்பனுரைச் சந்திக்க வெராண்டாவில் நின்று கொண்டிருந்தாள். உடம்புக்கு ஒட்டிக்கொண் டிருக்கும் மாதிரி ஒரு ஸில்க்சேலை கட்டிக்கொண்டு மாலை ஒளி யின் முழுப்பிரவாகத்தில் நின்ற அவள் புராதன காலத்தில் செய்யப்பட்டு இப்பொழுதே உயிர் பெற்ற ஸ்வர்ண விக்கிரகம் மாதிரி தோன்றினுள். ஆனல் அவளுடைய அழகிய கூந்தல் மட்டும் இக்காலத்திய நாகரிகப் பெண்க ளுடையது மாதிரி வாரி விடப்பட்டிருந்தது. அது இன் னும் எவ்வளவோ நவீனமாய் இருந்திருக்கும். ஆனல் அவ ளுடைய தாயாரின் வைதீகம் அதற்குச் சம்மதிக்கவில்லை. தன் தலையைக் கொஞ்சம் திருப்பி காரிலிருந்து இறங்கும் தன் தகப்பனுரைப் பார்த்துச் சிரித்த பொழுது அவள் காதில் இருந்த வைரக் கம்மல்கள் ஜ்வலித்தன. அதே சம யத்தில் இந்திராவின் மகன் ராஜா கார் சத்தத்தைக் கேட்ட தும் உள்ளேயிருந்து ஓடிவந்து தன் பாட்டனுரின் கால்களைக் கட்டிக்கொண்டு ஒருவருக்கும் அர்த்தம் ஆகாத மழலைச்

சொற்களைப் பேசிக் கொண்டே போனான். உடையார் குழந்தையை வாரி எடுத்துக்கொண்டே "நீ எப்படி இருக்கிறாய் இந்திரா?" என்று கேட்டார். அவரும் ரங்கசாமியும் வெராண்டாவில் செருப்பை விட்டுவிட்டு உள்ளே சென்றார்கள்.

ராமச்சந்திர உடையார் பங்களா பாதி ஆங்கில, பாதி இந்திய முறையில் ஜோடனை செய்யப்பட்டிருந்தது. முன் புறத்தில் குஷன் வைத்த சோபாக்களும், நாற்காலிகளும், தரையில் கம்பளங்களும், கண்ணாடி அல்மேராக்களும், மேஜைகளும் ஏராளமாக இருந்தன. இங்கு உடையாருக்கு வேண்டியவர்களும் குமாரின் சினேகிதர்களும், உட்கார்ந்து கொண்டு பேசுவதும் மேஜைகளின் மேல் காப்பி, பலகாரம் முதலியன சாப்பிடுவதும் வழக்கம். ஆண்கள் வீட்டில் இல்லாத பொழுது இந்திராவும் தன் சினேகிதிகளை அங்கே உட்காரவைத்துப் பேசிக் கொண்டிருப்பாள். ஆனால் பங்களாவின் பின்புறத்தில் ஒரு வைதீக இந்து குடும்பத் திற்கு வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் இருந்தன. வாழையிலை விரித்துச் சாப்பிடுவதற்கு வசதியாக சாப்பிடும் அறை இருந்தது. கீழே உட்காருவதற்குச் சௌகரியமாக பாய்கள் விரிக்கப் பட்டிருந்தன. புருஷர்களைப் பார்க்க வீட்டின் முன்பக்கம் வரும் பல ஜாதியினரின் தீட்டுப் படாதபடி ராஜலட்சுமி அம்மாளின் பூஜை அறை இங்கே இருந்தது.

ரங்கசாமியும் உடையாரும் கைகால் சுத்தி செய்து கொண்டு வெராண்டாவின் ஒரு மூலையில் இரண்டு பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்து கொண்டனர். இந்திரா இன்னொரு நாற்காலியில் உட்காராமல் அதன் மேல் சாய்ந்த

மாதிரி நின்று கொண்டிருந்தாள். நாகரிகத்தைத் தழுவி ஞலும் இன்னும் அவள் புருஷனுக்குச் சமமாக உட்காரக் கூடாது என்னும் பழைய வழக்கத்தைப் பூர்த்தியாக விட வில்லை. இம்மாதிரி விஷயங்களிலெல்லாம் இந்திரா நடு வழியையே கைப்பற்றுவது வழக்கம். பழைய வழக்கங்களில் நம்பிக்கையில்லா விட்டாலும் அவைகளை நேராக எதிர்த்து ஒன்றும் செய்வதில்லை. தனக்கு இஷ்டமில்லாவிட்டால் அவற்றை சுற்றிக்கொண்டு போவதற்கு ஏதாவது வழிகள் கண்டு பிடித்துக் கொண்டேயிருப்பாள். ஆகையால் அவள் புதிய வழக்கங்களைப் பின் பற்றுபவர்களாலும் வைதீகமாய் இருப்பவர்களாலும் ஏக்மனதாய் நல்லவள் என்றே கருதப் பட்டு வந்தாள்.

“குமார் வந்துவிட்டானு?” என்று கேட்டார் உடையார்.

“இன்னும் இல்லை. யாரோ ஒரு நண்பன் வீட்டிற்கு படிக்கப் போகிறுனும். தன் அக்காளைப் பார்ப்பதை விட படிப்பு முக்கியம் போல் இருக்கிறது.” என்றுள் இந்திரா.

“பி. ஏ. பரீட்சையல்லவா. அதிகம் படிக்க வேண்டியிருக்கும்.” என்று தன் மைத்துனனுக்காகப் பரிந்து பேசினுன் ரங்கசாமி.

“ஆம். பரீட்சைக்கு இன்னும் இரண்டு வாரம் தான் இருக்கிறது. இப்போது கஷ்டப்பட்டாலும் சீக்கிரம் பி. ஏ. ஆகிவிடுவான்.” என்றுர் உடையார்.

"நம்மகுமார் கூட ஒரு பி.ஏ." என்றாள் இந்திரா. அது அவளுக்கு ஆச்சரியமாகத் தோன்றியது. "அவன் இவ்வளவு தூரம் படிப்பான் என்று யார் நினைத்தார்கள்? குமார் ஒரு பி. ஏ. என்றால் நமக்கெல்லாம் ஒரு பெருமைதானே?"

அந்தப் பையனைப் பற்றிப் பெருமைப்பட ஒரு காரணமா? எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன." இம்மாதிரி பேசிக்கொண்டு உள்ளே வந்தது உடையாரின் சம்சாரம் ராஜலட்சுமி அம்மாள். அவளுக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். ஆழ்ந்த கண்களும் கம்பீரமான முகமும் உடையவள். நெற்றியில் பிரதானமாயிருந்த பெரிய குங்குமப் பொட்டு அவளுடைய தெய்வ பக்திக்குச் சாட்சியாக விளங்கியது. அகன்ற குறிபோட்ட நீலநிறப் புடவை கட்டிக் கொண்டிருந்த அவளுக்கு தன் மகளின் நாகரிகமும் நாசுக்கும் இல்லாவிட்டாலும், முகத்தில் உண்மை என்ற தேஜசும் வாழ்க்கையில் திருப்தியும் தாண்டவமாடின. இந்நேரம் இரவுச் சாப்பாட்டைப்பற்றி கவனித்துக் கொண்டிருந்தவள் இப்பொழுது வந்து தன் மகனுக்கு ஒத்தாசையாகப் பேசினாள். "நம்ம வகையராவில் சிபாரிசு இல்லாமல் லஞ்சம் கொடுக்காமல் மெட்ரிகுலேஷன் பாஸ் செய்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அப்படியும் பாஸ் ஆகாவிட்டால் சிகரெட் பிடித்துக்கொண்டும் - நாம் கேள்விப்படுவது உண்மையானால் - குடித்துக்கொண்டும் மோட்டார் கார்களில் ஊர் சுற்றுகிறார்கள். மற்றவர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் நம்ம பையன் தங்கம். ஒரு சன்யாசி மாதிரி."

"சன்யாசியைக் கண்டால் யாரம்மா இந்தக் காலத்தில் மதிக்கிறார்கள்?" என்று இந்திரா தன் தாயாரைத் திருப்பிக்

கேட்டாள். "நம்முடைய அந்தஸ்துக்குத் தகுந்த குடும்பங்களில் யாராவது குமாருக்குச் சிநேகிதம் உண்டா? யாரோ சில காலேஜ் பையன்கள் தான் அவனைப் பார்க்க இங்கு வருகிறார்கள். இனிமேலாவது அவன் படிக்கிறதைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு பெரிய குடும்பங்களுக்குப் போயும் வந்தும் நாலு பேரை சிநேகம் செய்து கொள்ளவேண்டும். சீக்கிரம் நாம் அவனுக்கு ஒரு நல்ல பெண் பார்க்க வேண்டாமா?" தன் தாயாருடைய அபிப்பிராயங்களைக் கேட்க இந்திராவுக்குப் பொறுமை கிடையாது.

"ஆம். அவனுக்கு சீக்கிரம் கல்யாணம் செய்து விட வேண்டும்." என்றாள் ராஜலட்சுமி அம்மாள். அவளுடைய வாழ்க்கையின் லட்சியங்களில் அதுவும் ஒன்று. "வயதும் இருபதுக்கு மேல் ஆகிறது. எத்தனையோ சோதனைகளும் மயக்குதல்களும் இருக்கும் இந்த நகரத்தில் கல்யாணம் இல்லாமல் இருப்பது தப்பு. படிப்பும் இந்த வருஷத்தோடு முடிவடைகிறதனால் நாமும் பெண் பார்க்க வேண்டியது தான்." எத்தனையோ இந்து தாய்மார்கள் மாதிரி ராஜலட்சுமி அம்மாளும் தன் மகன் கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழ்வதைப் பார்க்க விரும்பினாள். இந்திராவிற்குக் கல்யாணம் ஆனதிலிருந்து குமாரின் கல்யாணத்திற்காக ஆவலுடனும் பெருமையுடனும் காத்துக் கொண்டிருந்தாள். எல்லாவற்றையும் விட மக்களே பிரதானம் என்று மக்களுக்காக சகலத்தையும் தியாகம் செய்த தாய்மார்களுக்குத் தான் இந்த உணர்ச்சி தெரியும். மகனுக்குக் கல்யாணம் ஆனதும் தனக்கு இவ்வுலகின் கடமைகள் எல்லாம் முடிந்து விடும். அப்புறம் குடும்பப் பொறுப்பு, பூலோக உபத்திரவம் ஆகியவற்றிலிருந்து விடு

வித்துக்கொண்டு அடுத்த உலகின் சாதனத்தைப் பற்றி நினைக்கலாம். ஒவ்வொன்ருக இவ்வுலக பாந்தவ்யங்களை யெல்லாம் உதறிவிட்டு ஆத்ம சாந்திக்கு வழி தேட லாம்..................ராஜலட்சுமி அம்மாளுக்கு ரங்கசாமியின் சிறிய தகப்பனர் குமாரத்தி மீனாட்சிதான் குமாருக்குத் தகுந்த பெண் என்று யோசனை. அவள் கிராமத்தில் பிறந்து கிராமத்தில் வளர்ந்த பெண். ஆகவே தான் பேசும் ஜாடையை அறிந்துகொண்டு ரங்கசாமி அதைப் பெண் வீட்டாரிடம் சொல்ல வேண்டும் என்று அந்தச் சமாச் சாரத்தைப் பற்றியே பேசலாளுள். "ஆம். குமாருக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்துவிட வேண்டும். ஆனல் எனக்கு பவுடர் போட்டுக்கொள்வதும் தலைவாரிக்கொள்வ தும் தவிர வேறொன்றும் தெரியாத டவுன் பெண்கள் யாரும் மருமகளாக வேண்டாம். வீட்டுக் காரியங்களைக் கவனிக்கவும் புருஷனைப் பார்த்துக் கொள்ளவும் தெரிய வேண்டும். பெரியவர்களிடம் பயத்துடனும் நாணத்துட னும் இருக்க வேண்டும். என் மாதிரி பழைய காலத்து கிராமவாசியானலும் பரவாயில்லை." கடைசி வாக்கியத் தைக் கொஞ்சம் அழுத்திச் சொன்னுள்.

இதை என்ன எண்ணம் கொண்டு தன் தாயார் சொன்னுள் என்று இந்திராவுக்கு உடனே அர்த்தம் ஆகி விட்டது. ஆனல் அது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்க வில்லை. அவளுக்கு நகர வாழ்க்கையும் நகரவாசிகளின் சொந்தமும் சினேகமும் தான் இஷ்டம். தன் புருஷனு டைய உறவினர் எல்லாம் கிராமவாசிகளானதால் அவளுக் குக் கொஞ்சமும் அவர்கள் மேல் அன்பே கிடையாது. சினிமா, புதுமாதிரியான சேலைகள், வைர நகைகள், நாவல்

கள் இவற்றைப் பற்றி கிராமத்தில் பிறந்து வாழ்ந்தவர்களுக்கு என்ன தெரியும்? அறுவடையைப் பற்றியும், ஆடு மாடுகளைப் பற்றியும்தான் அவர்கள் பேசுவார்கள். அது இந்திராவுக்குப் பிடிக்குமா? ஆகவே "ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணைக் குமார் எப்படி கல்யாணம் செய்து கொள்வான்?" என்றாள் இந்திரா. "ஜனங்கள் தான் என்ன சொல்வார்கள் அம்மா நாம் அப்படிச் செய்தால்? செல்வாக்கு உள்ள பெரிய குடும்பத்தில் படித்த பெண்ணுகயாரும் கிடைக்கவில்லை. அதனால்தான் இந்த கிராமப் பெண்ணை பிடித்துக் கட்டியிருக்கிறார்கள் என்பார்கள். இல்லை, பி.ஏ. படித்தவனுக்கு நாகரிகமான பெண் தான் வேண்டும்." இவ்வாறு பேசும் போது இந்திரா தன் புருஷனைக் கூர்ந்து கவனித்தாள். ஆனால் ரங்கசாமிக்கு தன் மாமியார் ஜாடையாகச் சொன்னதும், அதைத் தன் மனைவி மறுத்துப் பேசியதும், இரண்டும் அர்த்தமானதாகத் தோன்றவில்லை.

இந்த நூதன வழக்கங்களெல்லாம் தனக்குப் பிடிக்கவில்லையென்று ராஜலட்சுமி அம்மாள் இந்திராவுக்குப் பதில் சொல்லு முன் ராமச்சந்திர உடையார் பேச ஆரம்பித்தார். இது வரையிலும் அவர் தன் மனைவிக்கும் மகளுக்கும் நடந்த தர்க்கத்தை மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தார். இப்போது, "குமாரைப் பற்றி எனக்கு வேறு யோசனைகள் இருக்கின்றன. அவன் இப்போது கல்யாணம் செய்து கொள்ளப் போவதில்லை. மேல் படிப்புக்காக அவனை இங்கிலாந்துக்கு அனுப்ப உத்தேசித்திருக்கிறேன்." என்றார்.

அவர் மெதுவாகவும் யோசனை செய்தும் பேசிய இந்த வார்த்தைகள் வெடிகுண்டைப் போல் விழுந்தன. முன்பு எத்தனையோ தடவை குமார் இங்கிலாந்துக்குப் போவதைப்

பற்றி தமாஷாகப் பேசியதுண்டு. அப்போது அது எவ்வளவோ நாள் கழித்து வரக்கூடியதாகத் தோன்றியது. இதை ஒருவரும் உண்மையாக நடக்கும் என்று நினைத்ததில்லை. ஆனால் இப்போது அது மிகவும் முக்கியமாகி பக்கத்துக்கு வந்துவிட்டது. ரங்கசாமி ஒருவன் முகத்தில் தான் ஒருவித உணர்ச்சியும் தென்படவில்லை. இந்திராவும் ராஜலட்சுமி அம்மாளும் உடையார் சொன்னதைப் பூர்த்தியாகக் கிரகிக்க சில வினாடிகள் சென்றன.

"உண்மையாகவா அப்பா?" என்றாள் இந்திரா ஆச்சரியத்துடன். "நிஜமா? இது ரொம்ப நல்லது. நம் ஜாதியில் இன்னும் யாரும் இங்கிலாந்துக்குப் போகவில்லை யல்லவா?"

"நம் ஜாதியில் யாரும் கொலை செய்ததில்லை." என்றான் ரங்கசாமி தமாஷாக. "அதற்காக கொலை செய்வது நல்லது என்று சொல்ல முடியுமா?"

"நீங்கள் சும்மா இருங்கள், கேலி செய்யாதீர்கள். கெட்டிக்காரனை ஒரு தம்பியிருப்பது பெருமையல்லவா?" என்று பதிலளித்தாள் இந்திரா. 'கணவர் கெட்டிக்காரராய் இல்லாவிட்டால்கூட' என்று சேர்த்திருப்பாள். ஆனால் தன் பெற்றோர்களுக்குப் பயந்து அதை மனதில் மட்டும் நினைத்துக்கொண்டாள்.

ஆனால் ராமச்சந்திர உடையாருக்கு இந்திராவின் அபிப்பிராயங்களிலும் பெருமையிலும் இப்போது சிரத்தை யில்லை. அவர் தன் மனைவியின் முகம் மாறியதைக் கவனித்தார். அதிலிருந்து அவள் மனதிற்குள் நடந்து

கொண்டிருந்த வேதனையைப் பற்றித் தெரிந்து கொண்டார். ராஜலட்சுமி அம்மாள் தன் மனதில் எவ்வளவு துயரம், கோபம் இருந்தாலும் அதையெல்லாம் மருமகன் முன் காட்டாதிருக்க சிரமப்பட்டாள். அவள் மனதிலிருக்கும் குமுறுதலைப் போக்கவேண்டி, "நீ இதைப் பற்றி என்ன நினைக்கிருய்?" என்ருர் உடையார.

"நான் நினைக்கிறதை யார் கேட்கிருர்கள்? நான் என்ன நினைத்தால் என்ன? நான் ஒரு ஏழை ஸ்திரீ தானே. இது வரையில் எல்லாம் நான் நினைத்த மாதிரி தான் நடந்து வந்திருக்கிறதா? பின் என்னை ஏன் கேட்கிறீர்கள்? நான் இங்கே உழவு மாடு மாதிரி உழைக்கிறதற்குத் தானே இருக்கிறேன்." என்று பொங்கும் துக்கத்தை அடக்கிக்கொண்டு பேசினுள். உடையாருக்கு கடைசியில் எல்லாம் தன்னிஷ்டம் போல் தான் நடக்கும் என்று தெரியும். ஆனுல் அவருக்கு தன் மனைவியிடம் இருக்கும் கன்னீர் என்னும் ஆயுதத்தைக் கண்டால் பயம். ஆகை யால் அவள் அதை உபயோகிக்குமுன்பே தடுக்க எண்ணி, "சரி சரி, என்மேல் கோபத்துக்கு வராதே. இது ஒரு யோசனை தானே. அதற்குள் அவன் கப்பலேறி விட்டான என்ன? குமாருடன் இதைப் பற்றிப் பேசுமுன் உன்னை ஒரு வார்த்தை கேட்கலாம் என்று நினைத்தேன்.' அவ்வளவு தான்." என்ருர்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று பிறகு ரங்கசாமியைக் கேட்டார்.

"எனக்கு என்னமோ ஒன்றும் தோன்றவில்லை." என்ருன் ரங்கசாமி. தன் மாமனுருக்கு ஒரு யோசனை

தோன்றினால் அதற்குமேல் ஒன்றும் இல்லை என்பது அவன் எண்ணம். இருந்தாலும், "ஒரு வேளை குமாருக்கு வேறே யோசனை இருக்கலாம்." என்றான்.

குமாருக்கும் இதைப் பற்றி ஒரு அபிப்பிராயம் இருக்கலாம் என்று வேறொருவருக்கும் தோன்றவில்லை. "குமார் மிகவும் நல்ல பையன். பெற்றோர் வார்த்தைக்கு மாறாக ஒன்றும் செய்யமாட்டான்." என்றார் உடையார்.

இதற்கப்புறம் சில விநாடிகள் யாரும் பேசவில்லை. ராஜலட்சுமி அம்மாள் மறுபடியும் பேச ஆரம்பித்தால் தன் துக்கத்தை அடக்க முடியாமல் போய்விடும் என்று சமையல் வேலையைக் கவனிப்பதாகப் பாவனை செய்து கொண்டு உள்ளே போய்விட்டாள். ஆனால் உண்மையில் தன் இருதயத்தில் எழுந்த துயரத்தைப் போக்கவே அவ்வாறு சென்றாள். தனக்குக் கல்யாணம் ஆகி குழந்தைகள் பிறந்த முதல் தன் புருஷன் தனக்குத் தெரியாத வழிகளிலெல்லாம் போவதைத் தவிர தன்னையும் இழுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தார். முதலில் அந்த மில். பூர்வீகமான நிலங்களைக் கவனிக்காமல் அந்த மில்லை ஏன் ஆரம்பித்தார் என்று அவளுக்கு அர்த்தமாகவில்லை. அப்புறம் ஐந்து வயதிலேயே இந்திரா ஒரு ஆங்கிலப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டாள். பிறகு மதுரைக்கே குடிவரவேண்டியதாயிற்று. ஒவ்வொரு தடவையும் தான் இவற்றிற்கு எதிராக தடை சொல்லியும் தர்க்கம் செய்தும் அழுதும் முடியாமல் கணவனின் இஷ்டத்துக்கு விட்டுக் கொடுத்துக்கொண்டே வந்தாள். கணவனே கடவுள் என்னும் கொள்கையைத் தழுவி வந்தவள் தன் குல தேவதைகளை யெல்லாம் அவர் மனதை மாற்றும்படி

அடிக்கடி வேண்டிக்கொண்டாள். இப்போது தன் மகனின் திருமணக் காட்சியைக் கண் குளிரக்கண்டு ஆனந்திக்கக் காத்துக் கொண்டிருக்கையில் இந்த யோசனை வந்து விட்டது. ஆகவே மறுபடியும் ஒரு தடவை தன் இருதயம் உடையுமாறு அழவும் கெஞ்சவும் பிரார்த்திக்கவும் வேண்டியது தான். அந்த ஒரு வழிதான் தனக்குத் தெரியும். தன்னால் வேறென்ன செய்ய முடியும்?

"பங்கஜம் இதைப் பற்றி என்ன நினைப்பாளோ?" என்றாள் இந்திரா.

"அது யார்?" என்று கேட்டார் உடையார்.

"அவள் தான் ராவ் பகதூர் கிருஷ்ணசாமியின் மகள். ரொம்ப பேஷனபிள்." என்றாள் இந்திரா.

"ஒரு முடிவாகும் வரை குமார் இங்கிலாந்து போவதைக்குறித்து யாருடனும் பேசாதே." என்று உடையார் எச்சரித்தார்.

"அப்புறம் வேண்டுமானால் அதைப்பற்றி டம்பமாகப் பேசிக் கொள்ளலாம்." என்றான் ரங்கசாமி.

சில நிமிஷங்கழித்து ராஜலட்சுமி அம்மாள் உள்ளேயிருந்துகொண்டே, "இந்திரா, அவர்களை சாப்பாட்டுக்குக் கூட்டிக் கொண்டுவா." என்று கூப்பிட்டாள்.

அத்தியாயம் நான்கு

இரவு ஒன்பது மணியிருக்கும். எங்கும் நிம்மதியாய் இருந்தது. காற்றில் மெதுவாக ஊசலாடிக்கொண்டிருக்கும் மரங்களுக்கு அப்பால் இருந்த சாலையில் மின்சார விளக்குகள் மின்னிக்கொண்டிருந்தன. ராமச்சந்திர உடையாரின் பங்களாவில் இருந்து அவைகளைப் பார்க்கும்போது நட்சத்திரங்கள் மாதிரி தோன்றியது

உடையாரும் ரங்கசாமியும் போஜனத்தை முடித்துக் கொண்டு ஹாலில் உட்கார்ந்து தாம்பூலம் போட்டுக் கொண்டிருந்தார்கள். ராஜலட்சுமி அம்மாளும் இந்திராவும் இன்னும் சாப்பிட்டு முடியவில்லை. ரங்கசாமி அன்றைய பேப்பரைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"பேப்பரில் என்ன விசேஷம்?" என்றார் உடையார்.

"எங்கு பார்த்தாலும் சட்டமறுப்பு என்று போட்டிருக்கிறது. அது இல்லாத ஊர் கிடையாது, அனேகர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்." என்றான் ரங்கசாமி.

"என்னமோ, இதிலெல்லாம் என்ன பிரயோஜனம்?" என்று உடையார் தனக்குத் தானே பேசுவது மாதிரி பேசலானார். "எல்லாம் வீண்தான். மகா யுத்தத்தின்போது ஜெர்மனி வெற்றியடையப் போவதாயும் நமக்கு சுதந்திரம் கொடுக்கப் போவதாயும் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். அப்பேர்ப்பட்ட கெய்சராலேயே முடியாததையா இந்த காந்தி சாதிக்கப் போகிறார்? நாம்

விடுதலையானால் கூட நம்மைப் பாதுகாக்க சைன்யம் கிடையாது. படிப்புக்கும் மெஷின்களுக்கும் எல்லாவற்றிற்கும் நாம் வெள்ளைக்காரன் தயவை நாடவேண்டியிருக்கிறது."

இப்படி அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே இந்திரா உள்ளேயிருந்து வந்தாள். "என்னப்பா இது? நாளைக்கு சில சேலைகள் வாங்க நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இந்த காங்கிரஸ்காரர்கள் கடைவீதியில் மறியல் செய்கிறார்களாமே? என்ன நியூசென்ஸ். நாளைக்கு வாங்காவிட்டால் திரும்பி இங்கு எப்போது வரமுடியுமோ?"

"அதைப் பற்றியென்ன பரவாயில்லை. நாளைக்கு வாங்காவிட்டால் அதைச் சாக்காக வைத்துக்கொண்டு திரும்பவும் சீக்கிரமே மதுரைக்கு வரலாமல்லவா?" என்று சொல்லிச் சிரித்தான் ரங்கசாமி.

அந்தச் சமயத்தில் வெளி கேட்டுக்குப் பக்கத்தில் யாரோ வரும் சத்தம் கேட்டது. "அது குமாராய் இருக்கும்" என்றாள் இந்திரா.

"இல்லை. அது குமார் காலடிச் சத்தம் அல்ல" என்று சொல்லிவிட்டு அது யார் என்று பார்க்க உடையார் வொராண்டாவுக்கு வந்தார். இருட்டிலிருந்து ஒரு உயரமான உருவம் வெளிப்பட்டது.

"யார் அது?" என்று உடையார் சத்தமாகக் கேட்டார்.

அம் மனிதன் விளக்கு வெளிச்சத்தில் வந்ததும் மிகவும் உருக்கமான குரலில் "நான்தானுங்க எஜமான்."

என்றான். அவனுக்கு வயது சுமார் எழுபது இருக்கும். முழங்காலுக்குமேல் வேஷ்டி கட்டிக் கொண்டும், அழுக்கு, வேர்வை நிறைந்த பழுப்பு நிறமான சர்ட் ஒன்று போட்டுக் கொண்டும், ஒரு கந்தல் துணியை உருமாலையாகக் கட்டிக் கொண்டும் விளங்கினான். வெய்யிலில் கருத்து வயதால் சுருக்கு விழுந்த முகத்தை நரைத்த மீசை அழகு செய்தது.

"நீயா கந்தா?" என்று கேட்டார் உடையார். அவனை சில விநாடிகள் உற்றுப் பார்த்துவிட்டு அவருக்கு ஆச்சரியமாய் இருந்தது. "இந்நேரத்துக்கு இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? கிராமத்திலிருந்து எப்போது வந்தாய்?" என்றார்.

" அந்தக் கிழவன் வெராண்டா படிக்கட்டுகளின் மேல் நின்று கொண்டே கைகூப்பி நமஸ்காரம் செய்துவிட்டு, "ஐயோ எஜமான்." என்றான்.

"ஏன், என்ன சமாச்சாரம் கந்தா?" என்றார் உடையார்.

"நான் எப்படி சொல்லட்டுங்கொ சாமி?" என்றான் கந்தன். அவன் கண்களில் ததும்பிய நீரை வெகு கஷ்டத்துடன் வராமல் தடுத்துக் கொண்டான்.

வெளியே இருப்பது கந்தன் என்று தெரிந்ததும் ராஜலட்சுமி அம்மாளும் இந்திராவும் வெளியே வந்தார்கள்.

"இன்னைக்கு நடந்ததையெல்லாம் பார்க்கிறதைக் காட்டிலும் என் கண் முன்னேயே குருடாப் போயிருக்கப்

படாதுங்களா எஜமான்." என்று கந்தன் சோகமான குரலில் பேசலானான். பின்பு ராஜலட்சுமி அம்மாளைப் பார்த்ததும், "அம்மா, இதைக் கேட்டதும் உங்க இருதயமே வெடிச்சிப் போயிடுமே" என்றான். அவன் மனதில் எழுந்த துக்கம் பேசமுடியாது வார்த்தைகளைத் திணரச் செய்தது.

"நம்ம பெரிய வீட்டுக்கு ஏதாவது தீப்பிடித்துக் கொண்டதா என்ன? சொல்லு முட்டாள்." என்று உடையார் சத்தம் போட்டார். பெரிய வீடு என்பது கிராமத்திலுள்ள அவருடைய் வீடு.

"கந்தா, எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் உடனே என்ன என்று சொல்லு. எங்களைக் காக்க வைக்காதே." என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

"நம்ம மேலே யாரு திருஷ்டி பட்டதோ, இல்லெ எந்த தெய்வத்துக்கு நாம் காணிக்கை கட்டலெயோ தெரியலையுங்களே. தலையிலெ ஒரு பெரிய ஆபத்து வந்து விழுந்துட்டுதுங்களே. நல்லவுங்கோண்ணு இந்த உலகத்துலெ தலையெ நிமிர்ந்து நடக்க முடியாது. அம்மா, நாம் எப்பவும் நல்ல வழியிலெ நடக்கலெயா? வருஷா வருஷம் மீனாட்சியம்மனுக்கு அபிஷேகம் பண்ணலெயா? அப்படியிருந்தும் இதெல்லாம் எப்படி வந்ததுங்கொ? எல்லாம் நம்ம தலைவிதிதான். போன ஜென்மத்திலெ செய்த கருமத்துக்குத்தான் இப்பொ வட்டி கட்றோம்................"

"டேய் சும்மா உளராதே. என்னவென்று விஷயத்தைச் சொல்லிவிட்டு அப்புறம் நீ நாசமாய்போ." என்றார் உடையார் தம் பொறுமையிழந்து.

“சாமி நான் இண்ணெக்கி காலையிலெ ஊரிலிருந்து என் மகன் மாரியெப் பாக்க வந்தேனுங்கொ.” என்று கந்தன் தன் கதையை முதலிலிருந்து ஆரம்பித்தான். அவனை சும்மா அவசரப்படுத்துவதில் பிரயோஜனம் இல்லை என்பதை உணர்ந்த உடையாரும் பொறுமையாகக் கேட்டார். “அந்தப்பயல் மாரி ஊரை விட்டு வந்து நம்ம மில்லிலெ வேலெ செய்யறானுங்கொ. நான் காலையிலெ வந்தப்பொ அவனென்னமோ இந்த காந்திகூட்டத்தோடெ சேர்ந்துட்டதாக அவன் பெண்சாதி சொன்னாள். அந்த வேலெ கெட்ட பயல் எங்கெபோயி சிக்கிக்கறானோண்ணு அவனைத் தேடி கூட்டிகிட்டு வரப் போனேனுங்க. டவுனுக்குள்ளே எனக்கு வழி தெரியாதது வேறெ, இந்த காந்தி மனுசரின் ஊர்வலங்கள் வேறெ, எல்லாம் சேர்ந்து எங் கெங்கயோ போயிட்டேனுங்கொ. போலீஸ்காரர் இல்லாத சமயம் பார்த்து இந்த காங்ரஸ்காரர்களை மாரியெப் பத்தி விசாரிச்சேனுங்கொ. அவங்களுக்குள்ளெயே கொஞ்சநேரம் பேசிவிட்டு அப்புறம் ஒரு வேளை போலீஸ்டேஷன்லெ இருக்கலாமுண்ணு சொன்னாங்கொ. அவங்களெ வாயிக்கி வந்தபடி திட்டினேனுங்க. ஆனால் அவுங்க சிரிச்சிகிட்டு போயிட்டாங்கொ. ‘பயந்துக்காதய்யா, ஆறு மாசத்துலெ உன் மகன் திரும்பி வந்துடுவான். சர்க்கார் கொஞ்சம் பணிஞ்சு போனால் அதுக்கு முன்னாலெயே விடுதலையாகும்.’ அப்படீண்ணு ஒருத்தன் சொன்னான்.”

இதைக் கேட்டதும் இவ்வளவுதானா என்று உடையார் குடும்பமே பெருமூச்சு விட்டது. கந்தனுடைய புலம்பலி லிருந்து கிராமத்திலுள்ள தம் பூர்வீக சொத்துக்குத்தான் ஏதோ ஆபத்து வந்து விட்டது என்று நினைத்தார்கள்.

எப்போதும் கிராமத்தில் தம் வீட்டைப் பார்த்துக்கொண்டிருக்கும் கந்தன் திடீரென்று அங்கு வந்து இம்மாதிரி பேசியதனால்தான் இந்த எண்ணம் ஏற்பட்டது.

"மனசு கலங்காதே கந்தா. இதைப்பற்றி நான் விசாரிக்கிறேன்." என்றார் உடையார். "மறுபடியும் மறியலுக்குப் போவதில்லை யென்று கையெழுத்துப் போட்டால் அவனை விட்டுவிடுவார்கள். திரும்பி மில்லுக்கு வேலைக்கு வரலாம். நீ ஒன்றுக்கும் பயப்படாதே! பின் பக்கம் போய் ஏதாவது சாப்பிடு."

"எஜமான், இது மட்டும் இல்லீங்களே. இன்னும் இருக்குது." என்றான் கந்தன். மறுபடியும் அவன் குரல் தளதளத்தது. "காங்கிரஸ்காரர் சொன்னப்பறம் நான் போலீஸ் ஸ்டேஷனுக்கு வழி கேட்டுட்டு போனேனுங்க, ஆனால் என்னெ உள்ளெ உட மாட்டேன்னுட்டாங்க. என்னெயும் பிடிச்சு லாக்கப்பிலெ போடறதாக அங்கிருந்த போலீஸ்காரன் மெரட்டுனானுங்கொ. நான் காந்தியெச் சேர்ந்தவன் அல்லன்னு சொன்னதுக்கப்பறம் கூட என்னென்னமோ சொல்லி திட்டினானுங்கொ. பின்னெ நான் வெளியே வரும்போது............ ஐயோ எஜமான், என் நாக்கு பொரளமாட்டேனங்குதே." பாவம் கிழவன் பேச முடியாமல் அழ ஆரம்பித்துவிட்டான்.

திடீரென்று உடையார் மனதில் அந்த எண்ணம் உதித்தது. குமார்! காலேஜ் மாணவர்களின் ஹர்த்தாலைப் பற்றியும் ஞாபகம் வந்தது. "அங்கே என் மகனையும் பார்த்தாயா? சொல்!—சொல்!" தந்தையின் ஆவலான தொனி கிளம்பியது.

"சின்னெஜமானனை இன்னும் சில பேரோடெ உள்ளே கூட்டிகிட்டுப் போனுங்கோ." கந்தன் மிகவும் தாழ்ந்த குரலில் சொன்னான். "நான் அவரெக் கொஞ்ச நேரந்தான் பார்த்தேனுங்க. பேசறதுக்கு பக்கத்துக்கு ஓடினேன், ஆனால் கதவுக்குப் பக்கத்திலிருந்த போலீஸ் காரன் கத்தியெக் காட்டி அடிக்க வந்தான். பின்னெ அங் கெயிருந்து வழிகேட்டுகிட்டு நேரெ இங்கெ வந்தேன் எஜமான். சின்னெஜமானெப் பிடிச்சிகிட்டுப் போனவுங்க வீட்டு மேலெ இடி விழாதா? அவுங்க ஆயிசு கொறயாதா?" சமாசாரத்தை எப்படியோ சொல்லிவிட்டதானல் கந்தன் கொஞ்சம் மன நிம்மதியுடன் போலீஸ்காரர்களையும் காங் கிரஸ்காரர்களையும் திட்டலானான்.

ராமச்சந்திர உடையார் இதுவரையிலும் நின்று கொண்டிருந்தவர் தன் தலையை கைகளால் தாங்கிக்கொண்டு அப்படியே ஒரு நாற்காலியில் உட்கார்ந்துவிட்டார். ராஜ லட்சுமி அம்மாள் இந்திராவின் மேல் சாய்ந்துவிட்டாள். அவளுடைய இருதயம் குஞ்சைப் பறிகொடுத்த பறவை மாதிரி துடித்தது. தான் மட்டும் தன் செல்லக் குழந் தையை புராதன கிராமத்தின் அமைதியில் வைத்துக் காப் பாற்றியிருந்தால், அவனுடைய மனதையும் இருதயத் தையும் நகர வாழ்கையின் பலவிதமான தூண்டுதல்களி லிருந்தும் பாதுகாத்திருந்தால், இந்த விபத்து நேர்ந்திருக் குமா? வாய் விட்டுக் கதறியிருந்தால்; இருதயத்தில் பொங் கும் வேதனை என்னும் பிரவாகத்தை வெளியே விட்டிருந் தால், மனதில் கொஞ்சமாவது நிம்மதி ஏற்பட்டிருக்கும். தானே வீதிகளில் சென்று தன் மகன் குற்றமற்றவன் என்றும், வாழ்க்கையின் முதல் சோதனையில் அவனைப்

பாதுகாக்க பெற்றெடுத்த தாயாகிய தனக்கு உரிமையுண்டென்றும், பகிரங்கமாக உலகத்துக்கே அறிவித்திருந்தால், புண்பட்ட ஆத்மாவுக்கு கொஞ்சம் சாந்தி ஏற்பட்டிருக்கும். ஆனுல் அதெல்லாம் முடியுமா? தான் ஒரு பேதைப் பெண்தானே. மௌனமாகக் கஷ்டத்தை அனுபவிப்பதே தன் கதி. மற்றவர் உதவியை நாடுவதே தன் அதிருஷ்டம். ஐயோ! இப்பேதை வாழ்வே.

உடையார்தான் முதலில் பேச ஆரம்பித்தார். "அவன் ஒரு வேளை ஹர்த்தாலில் கலந்திருப்பானே?" என்ருர்.

"ஒரு வேளை ஏதாவது பிசகு இருக்கலாம்." என்ருன் ரங்கசாமி.

" பிசகு இருந்துதான் ஆகவேண்டும்." என்ருர் உடையார். "குமார் தானுக இதில் மாட்டிக்கொள்வான் என்பது நம்பக்கூடியதல்ல. அதுவும் பரீட்சைக்கு முன்னுல்." அவர் கந்தனைத் திரும்பவும் கேட்டார். "நீ பார்த்தது குமார்தானே? கொஞ்சம்கூட சந்தேகம் இல்லையே?"

"இல்லிங்கொ எஜமான். சின்னெஜமான் என்னெப் பார்த்ததும் பேசறதுக்குக் கூட திரும்பினுங்கொ. ஆனுல் அந்தப் போலீஸ்கார நாய் என்னெ அவங்க பக்கத்துக்கு விடலெ."

"என்ன செய்யப் போகிறீர்கள்?" தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு கேட்டாள் ராஜலட்சுமி அம்மாள்.

"ஏதாவது உடனே செய்யவேண்டுமப்பா." என்ருள் இந்திரா. "என்ன செய்தாவது டவுன் பூராவும் தெரியுமுன் அவனை விடுவித்துவிடுங்கள்."

"ஏதாவது செய்யவேண்டும்." உடையார் தம் மகளை எதிரொலித்தார். "நான் போய் கிருஷ்ணசாமி ரெட்டியை பார்க்கிறேன். அவர் உதவி செய்வார்."

"நான் கார் கொண்டுவருகிறேன்." டிரைவர் வீட்டுக்குப் போய்விட்டதினால் ரங்கசாமி கார்ஷெட்டுக்கு ஓடினான்.

"போலீஸ்டேஷனுக்குப் போய் அவனைப் பார்க்க முயற்சி செய்யுங்கள். விடுதலையாகாவிட்டால்கூட போலீஸ்காரர்களுக்கு ஏதாவது லஞ்சம் கொடுத்து அவனுக்கு எல்லாம் சௌகரியமாய் இருக்கிற மாதிரி பார்த்துக்கொள்ளுங்கள். அங்கே தூங்குவதற்கு பாய்கூடக் கொடுப்பதில்லையாம்." வேதனை பொருக்காத தாயின் தொனி மகனுக்காகப் பரிந்து பேசிற்று.

ராமச்சந்திர உடையார் உள்ளே சென்று ஜிப்பா போட்டுக்கொண்டு வந்தார். "எல்லாம் செய்துபார்க்கிறேன். இந்திரா, உங்க அம்மா ஜாஸ்தி அழாமல் பார்த்துக்கொள். எல்லாம் இந்த போலீஸ்காரர்களின் முட்டாள்தனமாய் இருந்தாலும் இருக்கலாம்." என்று தன் மகளுடன் சொன்னார்.

காரை ரங்கசாமி போர்டிகோவில் கொண்டுவந்து நிறுத்தினான். உடையார் ரங்கசாமிக்குப் பக்கத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டார். கார் விளக்குகள் சீக்கிரம் பாதையில் மறைந்தன.

அத்தியாயம் ஐந்து

"நம்மூர் ஜனங்கள் முகத்தில் நான் எப்படி முழிப்பேனம்மா?" கொஞ்சம் சாப்பிட்டு விட்டு ராஜலட்சுமி அம்மாளுடன் பேச உட்கார்ந்ததும் கந்தனுடைய புலம்பல் மறுபடியும் ஆரம்பமாயிற்று. "சின்னெஜமானெப் பத்திக் கேட்டால் அவங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? செய்தி, அதுலெயும் கெட்ட செய்தி இந்தக் காலத்திலெ சிக்கிரம் பரவுமே."

ராஜலட்சுமி அம்மாள் பங்களாவின் பின்புரத்து அரைகளில் ஒன்றில் ஒரு பாய்மேல் உட்கார்ந்துகொண்டிருந்தாள். கந்தன் மரியாதையாக தூரத்தில் உட்கார்ந்திருந்தான். இந்திராவும் அங்கே ஒரு புஸ்தகத்தை புரட்டிக் கொண்டிருந்தாள். ராஜலட்சுமி அம்மாளின் கண்கள் அழுகையினுல் சிவந்திருந்தன. ஆனுல் இப்போது தன் தொண்டையில் அடைத்துக் கொண்டிருந்த துக்கம் கரைந்து மனதில் சிறிது நிம்மதி ஏற்பட்டிருக்கிறமாதிரி தோன்றியது.

"ஜனங்கள் பேசாமல் இருப்பார்களா கந்தா?" ராஜலட்சுமி அம்மாள் மிகவும் மெல்லிய குரலில் பேசினுள். "பேசத்தான் செய்வார்கள். உலை வாயை மூடலாம், ஆனுல் ஊர் வாயை மூடமுடியாது என்று நீ கேட்டதில்லையா? ஆனுல் குமார் இப்படி ஆனதுதான் பெரிய ஆச்சரியமாக இருக்கிறது. அவன் எவ்வளவோ கெட்டிக்காரனுச்சே."

" அம்மா, இப்போதாவது உன் மகனைப் புகழ்ச்சி செய்யாமல் இருக்கக்கூடாதா " என்றாள் இந்திரா. "கெட்டிக்காரர்கள் போலீஸ் லாக்கப்பில் சிக்கமாட்டார்கள். மற்றவர்களை அங்கே போடுவார்கள். "

" இந்த உலகத்துக்கு என்ன ஆயிட்டு வருதுண்ணே தெரியமாட்டேங்குதம்மா. " என்று கந்தன் மாறும் உலகத்தைப் பற்றி தன் அபிப்பிராயத்தை தெரிவித்தான். " முன் காலத்திலெ எஜமானர் எஜமானராயும், வேலெக்காரன் வேலெக்காரனாயும் இருந்தாங்கொ. ஒவ்வொருத்தருக்கும் அவுங்கவுங்க அந்தஸ்து தெரியும். ஆனால் இப்பொ ரெண்டு பேருக்கும் வித்தியாசமே தெரியலெ. ரெண்டுபேரையும் ஜெயிலுக்கு அனுப்பறாங்கொ. நம்ம சின்னெஜமானரும் அந்த திருட்டுப் பயல் மாரியும் ஒட்டுக்கா ஜெயிலிலெ இருப்பாங்கொண்ணு யாரு நெனெச்சா? திருடாதுக்கும் கொலே செய்யாதுக்கும் மட்டும்ஜெயிலுண்ணு நெனெச்சிட்டிருந்தென். ஆனால் இப்பொ என்னென்னமோ குத்தமெல்லாம் இருக்காப்பலெ தெரியுது. காந்தி பெரிய மகான் அண்ணு சொல்லிக்கராங்கொ. ஆனால் அவர்கூட ஜெயில்லெதானெ இருக்காரு. இந்த காலத்திலெ நல்லவுங்கெல்லாம் ஜெயிலுக்குப் போறதாகவும், கெட்டவுங்கதான் அவுங்களெ அங்கெ வெக்கெறதாகவும் சொல்லிக்கறாங்கொ."

இந்திராவின் பொறுமை இதற்குமேல் தாளவில்லை " நீ யாரோ பேச்சைக்கேட்டுக்கொண்டு வந்திருக்கிறாய் கந்தா " என்றாள். " எவ்வளவு பெரிய மனிதராய் இருந்தாலும் சட்டத்தை மீறினால் ஜெயிலுக்குப் போகவேண்டியதுதான். மகாத்மாவாய் இருந்தாலும்கூட. "

"அதெல்லாம் எனக்கொண்ணும் தெரியாதம்மா." என்றான் கந்தன். "நான் படிச்சதில்லெ, ஆனால் காந்தி மகாத்மா மகாவிஷ்ணு அவதாரமுண்ணும் அவர் துஷ்டர்களை சம்மாரம் பண்ணி நல்லவுங்களெ காப்பாத்த வந்திருக்கிறதாயும் சொல்லிக்கறாங்க.................... "

"நான்சென்ஸ்" என்று கந்தன் வார்த்தைகளை இந்திரா இடைமறித்தாள். "சும்மா இரு இந்திரா. இதைப் பற்றி உனக்கென்ன தெரியும்? கந்தன் தனக்கு தெரிந்ததை சொல்லட்டும்." என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

இந்த கிழங்களின் சம்பாஷணை இந்திராவுக்கு பிடிக்க வில்லை. எழுந்து வெளியே சென்றாள்.

"நம்ம ஊர் எப்படியிருக்கிறது கந்தா?" என்று தன் கிராமத்தைப் பற்றி விசாரித்தாள் ராஜலட்சுமி அம்மாள்.

"கெட்ட காலம் அம்மா. ரொம்ப கெட்ட காலம்" என்று கந்தன் பொதுவாக சொன்னான். பிறகு கிராமத்தைப் பற்றி முக்கியமாக, "குத்தகைதார் எல்லாம் முன்மாதிரியில்லே. எப்பொப் பார்த்தாலும் அது மோசம் இது மோசம் எங்கறாங்கொ. நீங்க வெச்ச அந்த மானேசரய்யரும் உபயோகமில்லே. நெலத்திலெ வரும்படி வருசத்துக்கு வருசம் கொறஞ்சிட்டே வருது. பாக்கியெல்லாம் அப்படியே இருக்குது. ஆனல் எல்லாரும் சுயராச்சியத்தெப் பத்தியும் காந்தி சொல்ற ராம ராச்சியத்தெப் பத்தியும் பேசிக்கறாங்கொ."

"எல்லோரும் காந்தியைத்தான் பின்பற்றுகிறார்களா"?

" ஆமாம்மா, அனேகமா அப்படித்தான். சர்க்காருக்கு பயந்துட்டு அதை வெளிக்கு சொல்லிக்கறதில்லே. ஆனல் அவங்களுக்கு நம்ம மாதிரி தெய்வபக்தியில்லே. கீழ் ஜாதிகிட்டெ அலட்சியமும் மேல் ஜாதிகிட்டெ மரியாதையும் கெடெயாது. காந்திக்கி பயந்துட்டுதான் கடவுள் இல்லேன்னு சொல்றதில்லே."

" அவர்களெல்லோரும் அப்படியா இருக்கிறார்கள் ?."

" இல்லெயம்மா, சிலபேருதான் அந்தமாதிரி. ஆனல் அவங்கெ ஒரு காங்கிரஸ் சபை எற்படித்திகிட்டு ஜாதி, மதம் எல்லாம் ஒண்ணுதானண்ணும், பறையர், சக்கிலியர், நம் அண்ணன், தம்பிண்ணும் பாட்டுப் பாடிகிட்டு போதனெ செய்யறாங்கொ. நம்ம மாரியெப் பாருங்களேன். என்று தன் குடும்ப சரித்திரத்தை ஆரம்பித்துவிட்டான். " அவனெ வயல்லெ வேலக்கி வெக்கோணுமுண்ணு இருந்தனுங்கொ. அவன் மாட்டேண்ணுட்டான். இந்தத் தலெமொறைக்கி நெலத்துமேலெ பற்றே கெடயாது. நம்ம எஜமானரு ஊர்லெயே இருந்திருந்தால் எல்லாம் வேறெ மாதிரி இருக்கும். ஆனல் இந்தக் காலத்திலெ எல்லாரும் டவுன்லெயே இருக்கோணுமங்கறாங்கொ. கிராமத்தெவிட்டு வர்ரதுக்கு முன்னலெ என் மகன் இந்த நெலத்தெ உழுது அரெ வயிறுக்கு சாப்பிடறதெவிட பெசாசுக்கு ஊழியம் பண்ணியாவது முழுவயிறுக்கு சாப்பிடறது மேல், அப்படிண்ணு சொல்லீட்டு வந்தானுங்கொ. அவனெப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிச்ச பலன் அது. படிப்பினலெ சின்னவங்களெல்லாம் பெரியவங்ககூட எதுத்துப் பேசக் கத்துகுட்டாங்கொ. இந்தக் காலத்திலெ வயசானவங்களுக்கு மரியாதெ குடுக்கறதே இல்லே."

“ஆம், இந்திராவைப் பார்.” என்று ராஜலட்சுமி அம்மாள் கந்தனுடன் ஒத்துக்கொண்டாள். “படிப்பு அவள் தலைக்கேறி விட்டது. ஆனால் உண்மையில் அவளுக்கு ஒன்றுமே தெரியாது. அப்புறம் குமார்.” தன் மகனை நினைத்ததும் ஒரு பெருமூச்சு விட்டாள். “அவன் மேல் எனக்கு எவ்வளவோ நம்பிக்கை இருந்தது.”

“முன் காலத்துக்கும் இப்பொ இருக்கிறதுக்கும் எவ்வளவோ வித்தியாசம்” என்றான் கந்தன். “முன்னெல்லாம் ஏதொன்றுக்கும் கிராமத்திலெ பெரியவர் வீடு இருந்ததுங்கொ. எங்களுக்கெல்லாம் அது ஒரு பாதுகாப்பு மாதிரி. ஆனால் இப்பொ நீங்க இங்கயே இருக்கறீங்கொ. உங்களுக்கும் மற்ற ஊர்காரர்களுக்கும் இருந்த பந்தம் விட்டுப்போச்சு. ஊரிலெ ஒரு அத்து கெடெயாது. எப்பொ பாத்தாலும் சண்டெ, நியாயம், தகலார். எத்தனையோபேர் ஊரைஉட்டு வந்துட்டாங்கொ. ஊரே பாழாப் போயிடும்போலெ தெரியுதுங்கொ.”

“நாம் என்ன செய்யமுடியும் கந்தா?” என்றாள் ராஜலட்சுமி அம்மாள். “நாம் என்ன செய்வது? எனக்கு இங்கே இருக்க இஷ்டமா? ஊருக்குப் போக நான் எப்போதும் ஆவலாய் இருக்கிறேன். எப்போதும் மாறாத நம் நல்ல வாழ்க்கையில் தான் எனக்குப் பிரியம். நம்ம வீட்டில் வருஷாவருஷம் நடந்துவந்த விருந்து உனக்கு ஞாபகம் இருக்கிறதா? சிறு குழந்தையிலிருந்து வயதானவர்கள் வரை கிராமத்திலுள்ள எல்லோரும் என் மாமனாரைக் கும்பிட வருவார்கள். அப்போது கிராமத்தில் எவ்வளவு சந்தோஷம்! எவ்வளவு மகிழ்ச்சி! அந்தக் காலத்தில்

ஏழைகளாய் இருந்தாலும் போதுமென்ற மனமுடைய வர்களாய்த்தான் இருந்தார்கள்."

"அந்த காலத்திலெ அம்மா" கந்தன் பழைய நினைவுகளைப் பற்றிப் பேசிக்கொண்டே போனான். "ஒரு குத்தகைதாரன் பணம் குடுக்க சக்தியில்லாவிட்டால் தன் ஆடு, மாடுகளையெல்லாம் பெரியவரிடத்தில் குடுத்துடுவான். அவரும் பெரிய மனசுபண்ணி அந்த வருச குத்தகை வேண்டாண்ணுடுவாங்கொ. ஆனால் இப்பொ குத்தகைதாரன் இருக்கிறதெ சுருட்டிக்கிட்டு ஓடறான். இல்லேண்ணா மானேசரய்யரு ஜெயிலுக்கனுபிப்ச்சிடறாரு. மனசிலெ கசப்பு வளருதுங்கொ."

"ஆம்" என்றாள் ராஜலட்சுமி அம்மாள். "நாள் ஆகஆக ஜனங்களும் மோசமாகிக்கொண்டே போகிறார்கள். நம் காலத்தில் எல்லோருக்கும் தெரிந்த சாதாரண தர்மங்கள் இந்தக் காலத்துக்குப் போதுவதில்லெபோல் தெரிகிறது. உலகத்திலுள்ள பாபத்துக்கெல்லாம் கடவுளை வணங்குவதும் அவர் மன்னிப்பைக் கேட்பதும் தவிர நாந் வேறென்ன செய்ய முடியும்?" ...னை

"நாம் ஒண்ணும் செய்ய முடியாதம்மா." கந்த...ம். சொன்னான். "ஏதோ ஒரு கெட்ட தெசெதா உலகத்தெயே இம்மாதிரி செய்யுது. நம்ம பெரிய வீட்டே எவ்வளவோ கூட்டமும் சந்தோஷமும் இருந்த வீட்டெ... நான் ராத்திரி ராத்திரியாத் தனியே உக்காந்திருந்தா மனசுக்கு எப்படியோ இருக்குது. காலியா இருக்கிற அறைகளையும் உபயோகிக்காத புராதன சாமான்களையும் பாத்தாக் கண் கலங்குது. சில சமயங்களிலெ மூதாதைக

ளெல்லாம் வந்து உங்களை ஊருக்குத் திரும்பிக் கூப்பிட ருப்பலெ தோணுது. நான் மட்டும் அங்கெ பொதயல் காக்கற பிசாசாட்டம் உக்காந்து கெடக்கறேன். எல்லாம் நம்ம தலயெழுத்து." என்று கிழவன் தன் வழுக்குத் தலையைத் தடவிகொண்டான்.

ராஜலட்சுமி அம்மாளுக்கு கந்தன் பேசுவது மிகவும் இஷ்டம். தன் மனதுக்குகந்த விஷயங்களைப் பற்றி யெல்லாம் அவன் பேசினான். தன் உணர்ச்சிகளையும் ஆத்ம சிந்தனைகளையும் அவன் பிரதிபலித்தான். கிராமக் குடிகளுக்கு புத்திமதி சொல்லவும், அவர்களுடைய மக்களுக்கு பெண்பார்க்கவும், நியாயம் தீர்க்கவும், இன்னும் எத்தனையோ சிறிய விஷயங்களில் அவர்களுக்கு உதவி செய்யவும் அவளுக்குத்தெரியும். அவர்களுடைய நல் வாழ்க்கை தன்னுடைய பொறுப்பு என்று கருதினாள். தனது புராதன வீடு, கிராமத்திலுள்ள கோயில், ...யல்களிடையே வளைந்து செல்லும் சிற்ருறு, அறுவடை ...வத்தில் தலைசாய்ந்து நிற்கும் கதிர்களின் காட்சி, பருவ ...மழை பசும்புல் நிலத்தின்மேல் விழும்போது உண் ...ராஜ வாசனை, சாயந்திர நேரத்தில் பசுமாடுகள் இல்லுக்கு வரும்போது உண்டாகும் மணியோசை, பே...கள் கும்மி அடிப்பது, பூக்கொய்வது, தைப்பண் ...ங்க்கு பொங்கல் வைப்பது, இம்மாதிரி எத்தனையோ ...ச்சுகளைத் திரும்பிப் பெற அவள் ஆவி துடித்தது. இந்த ...தாரண கிராம இன்பங்களிலே அவள் பிறந்துவளர்ந் ...வள். அவற்றிலேதான் அவள் வாழ்க்கையும் வாழ்க்கை ...ட்சியங்களும் ஸ்திரமாய் ஊன்றியிருந்தன. நகர வாழ்க் கையில் அவள் வேரற்ற மரம்போல் வாடினாள்.

தன் கணவன் அறிமுகப்படுத்தி வைத்த இப்புதிய சமூகத்தில் ஒவ்வொருவர்க்கும் மற்றவர்களுடைய பொருளாதார நிலைமை தெரிந்திருந்தது. அதற்குத் தகுந்த மாதிரியே ஒருவரையொருவர் நடத்திவந்தார்கள். ஸ்திரீகளுக்கு மற்ற குடும்பங்களின் அந்தரங்க சமாசாரங்களெல்லாம்—முக்கியமாய் வேலைக்காரர் மூலமாக—தெரிந்திருந்தது. வதந்திகளும் பகிரங்க ரகசியங்களும் வேலைக்காரனிடமிருந்து இன்னொரு வேலைக்காரனிடமும், அவனிடமிருந்து எஜமானியிடமும் பறந்தன. சில எஜமானர்கள் தம் வேலைக்காரர்களுக்குத் தெரிந்ததெல்லாம் வெளியே வராதிருக்கவேண்டி என்ன சம்பளம் கொடுத்தாவது தம்மிடமிருந்து நீங்காமல் இருக்கச் செய்தார்கள் என்று கேள்வி.

ஆனால் தான் என்ன செய்யமுடியும்? தான் ஒரு பெண், அபலை. புருஷனைப்பின்பற்றுவதே சரி என்று தன் மதம் சொல்லிக் கொடுத்தது. அவருக்காக தன் உரிமைகளைத் தியாகம் செய்வதும், எல்லாவற்றையும் சகிப்பதும் தன் கடமை. தனது ஆத்ம இச்சைகளையெல்லாம் அடக்கிக்கொண்டு கணவனுடைய விருப்பத்திற்குக் கீழ்படிதலும், ஆழ்ந்த எண்ணங்களையும் சிந்தனைகளையும் மற்றவர்களுக்காகக் கைவிடுவதுமே தன் பாக்கியம். அதுவே தன் கதி ....

“உலகத்தில் இவ்வளவு தகரார் ஏன் இருக்கிறது தெரியுமா கந்தா?” ராஜலட்சுமி அம்மாள் கேட்டாள். “பணம், பணம், பணம் எல்லோரும் பணத்துக்குப் பின்னால் ஓடுகிறார்கள். சாகும்போது அதைத் தலையில் வைத்துக் கொண்டா போகப் போகிறார்கள்?”.

"உலகம் எந்த வழியிலெ போகுதுண்ணே தெரிய மாட்டேங்குதம்மா." என்ருன் கந்தன்.

இப்படியே அவர்கள் கிராமத்தைப் பற்றியும், திரும்பி வர முடியாத பழைய காலத்தைப் பற்றியும், தமக்கு அர்த்தமாகாத சம்பவங்களைப் பற்றியும் பேசினர்கள். ஆனல் அந்த சம்பவங்களில் அவர்களுடைய வாழ்க்கைகள் தம் மக்கள் மூலமாகக் கலந்திருந்தன. மாறிய உலகில் மாருது நின்றுவிட்ட அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் தம் இருதயங்களைத் திறந்து பேசினர்கள். பண்டைக் காலத்து நிம்மதியைப் பற்றியும், நேர்மையான வாழ்க்கையைப் பற்றியும், இக் காலத்திய பலபோக்கான அமைதியற்ற வாழ்வைப் பற்றியும், தம் இஷ்டத்துக்கு மாருகத் தம்மை இழுத்துக்கொண்டுபோய் ஆத்மாவை வழி தெரியாமல் முழிக்கச் செய்யும் நவீன வாழ்க்கையைப் பற்றியும்.................................

அத்தியாயம் ஆறு

பாவம். ஏழை இந்திரா பூந்தோட்டத்தில் மேலும் கீழும் நடந்துகொண்டிருந்தாள். அவளுடைய உள்ளம் துய ரத்தினுலும் கோபத்தினுலும் துடித்தது. பகல்வெப்பத் தினுல் பூமியில் இன்னும் உஷ்ணம் இருந்தது. ஆனுல் ஜிலு ஜிலு என்றடித்த காற்று இரவைக் குளிர்ச்சி பெறச் செய் தது. நட்சித்திரங்கள் இங்குமங்கும் பிரகாசித்துக்கொண் டிருந்தன. தேய்பிறைச் சந்திரன் உதயமாகும் சமயம். இந்திராவின் சிறிய இதயத்தில் எத்தனை கவலைகள்! எத்தனைஎண்ணங்கள்! எத்தனை முற்றுப் பெருத ஆசைகள்!

கந்தனுடைய மகன் மாரியைப் பற்றி நினைத்தாள் இந்திரா. பாவம். இப்போது அவன் எங்கிருக்கிருனே? என்று பெருமூச்சு விட்டாள். அவள்தான் தன் தகப்ப ஞரிடம் சொல்லி அவனுக்கு மில்லில் வேலை செய்துவைத் தது. ஆகவே அவன் இப்போது கைதியாகி இருப்பது தன் குற்றம் மாதிரி தோன்றியது. தான் கலியாணமாகாத பெண்ணுய் இருந்தபோது தவிர அவளுடைய வாழ்க்கைக் கும் மாரிக்கும் சம்பந்தம் இல்லை.

மாரியைப் பற்றிய நினைவைத் தொட்டு எவ்வளவோ எண்ணங்கள் நினைவுக்கு வந்தன. தான் அவனை முதலில் பார்த்து ஒரு சகாப்தம் ஆகியிருக்கும்போல் தோன்றியது. அந்த சம்பவம் வெகு நாளைக்கு முன் கண்ட ஒரு கனவு மாதிரியும், தன் தலைக்குமேல் சஞ்சரிக்கும் வெண்மை யானமேகங்கள் மாதிரியும் மிதந்து கொண்டு அவள்

ஞாபகத்துக்கு வந்தது. பள்ளிக்கூட விடுமுறை நாட்களை தன் தாயாருடன் கிராமத்தில் கழித்துக்கொண்டிருந்தாள். தாயும் மகளும் ஒரு நாள் பழத்தோட்டத்தில் மாம்பழம் சேகரித்துக் கொண்டிருந்த போது மாரி அவர்களுக்கு தாக சாந்திக்காக இளநீர் கொண்டுவந்து கொடுத்தான். பிறகு அவர்கள் சேகரித்த பழங்களை வீட்டு வரைக்கும் தூக்கிக் கொண்டு வந்தான். அப்போது அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள இந்திராவுக்கு ஆவலாய் இருந்தது. அவனுடன் பேச இஷ்டப்பட்டாள். அவன் பள்ளிக்கூடத்துக்குப் போனதுண்டா? அவனுக்கு நல்ல உடைகள் வாங்கவும் மயிர் வெட்டிக்கொள்ளவும் பணம் இல்லையா? தான் மிகவும் அழகு என்று அவன் நினைத்தானா?

மாரியைத் தவிற வேறு யுவர்களை அப்போது இந்திரா நன்றாகப் பார்த்ததில்லை. பேசியதே கிடையாது. அவள் ஒரு பெரிய மிராஸ்தாரின் புதல்வி. மாரியோ அவர்கள் வீட்டு வேலைக்காரனான கந்தனுடைய மகன். இந்த முறை யில்தான் அவள் மாரியுடன் பேசினாள். ஆனால் பழத் தோட்டத்தில் வேர்வை வடிய வேலைசெய்துகொண்டிருந்த அவனைப் பார்த்தபோதெல்லாம் தன்னையறியாமலே அவள் முகம் சிவத்தது. இருதயம் கொஞ்சம் வேகமாக அடித்துக் கொண்டது. அவனுடைய திரண்ட தோள்களிலிருந்தும் மருண்ட பார்வையிலிருந்தும் தன் முகத்தை வெட்கத் துடன் வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள். ஆனால் அவள் இருதயம் கேட்ட கேள்விகளுக்கு எப்போதும் பதில் தெரியவில்லை. தன்னைப் பற்றி அவன் என்ன நினைத்தான்? அவனுடைய ஆழ்ந்த, பிரகாசமான கண்களின் உள்ளே தான் என்ன இருக்கிறது?

இந்திரா ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படித்தபோது ஆங்கிலப் பெண்கள் காதலைப் பற்றியும் காதல்கலியாணங்களைப் பற்றியும் பேசிக்கொள்வதைக் கேட்டாள். அவர்களிடமிருந்து தம் புருஷர்களைத் தாமே பொருக்கியெடுப்பதாகத் தெரிந்துகொண்டாள். பிறகு தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட சில ஆங்கில நாவல்களிலிருந்து ஆண்களும் பெண்களும் சங்கோஜமின்றி வாழ்க்கைத் துணைவிகளையும் துணைவர்களையும் தேர்ந்தெடுப்பதைப் படித்துத் தெரிந்தாள். இவையெல்லாம் சேர்ந்து அவள் மனதில் விவரிக்க முடியாத உணர்ச்சி ஒன்றை உண்டாக்கியது. இதுவரையில் அவளுக்கு இம்மாதிரி உள்ளக் கிளர்ச்சி ஏற்பட்டதில்லை. தன்னையும் யாராவது தேர்ந்தெடுக்கமாட்டார்களா, தானும் யாரையாவது தேர்ந்தெடுக்கக்கூடாதா? என்று தோன்றியது. பணத்துக்காகவோ அந்தஸ்துக்காகவோ அல்லது வேறு காரணத்துக்காகவோ அல்ல. தான் ஒரு பெண் என்ற முறையில் மட்டும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மனது இச்சைக்காக தேர்ந்தெடுக்க வேண்டும். தனக்கு மாரிமேல் காதலா என்று இந்திரா சில சமயம் யோசனை செய்ததுண்டு. கள்ளச் சந்திப்பு, ரகசியக் கடிதங்கள், சிருங்கார லீலைகள்— இந்திராவின் மனத்தில் எழுந்த காதல் இம்மாதிரியல்ல. அவளுடைய இருதயத்தில் ஒரு இடம் காலியிருந்தது. மாரியைப் பற்றிய எண்ணங்கள் அந்த இடத்தை நிரப்பின. அவ்வளவு தான். ஆனால் புத்தி தெளிவாய் இருந்த சமயங்களில் எல்லாம் மாறிவிட்டது. என்ன முட்டாள்தனம். அவன் ஒரு வேலைக்காரனின் மகன் தானே. அவன்மேல் தான் எப்படி ஆசைகொள்ள முடியும்? அவள் பிறந்து வளர்ந்த சமூகத்தில் அதைத் தவிர வேறு எண்ணங்களுக்கு இடமில்லை. அது ஒன்றுமில்லை, ஒன்றும்

இல்லை, என்று தனக்குத் தானே சொல்லி மனதை திடப் படுத்திக் கொண்டாள். சீக்கிரம் விடுமுறை முடிந்து கிரா மத்தை விட்டு நகாத்துக்குப் போய்விட்டாள். அங்கே யிருந்து பார்த்தபோது மாரி இன்னும் அதிக தூரத்தில் இருப்பதாகத் தோன்றியது. நாளாக ஆக மாரியைப் பற்றிய நினைவுகள் மறைந்துகொண்டே வந்தன. இருந்தாலும் எப் போதாவது ஒரு நாள் அவள் மாரியைப் பற்றி தன் அந்த ரங்க உள்ளத்தில் நினைத்ததுண்டு. அவன் இருதயத்திலும் தன்னைப் பற்றி இது-மாதிரி நினைவுகள் இருந்ததா? அதை எப்படிக் கண்டுபிடிப்பது? அவன் ஒரு வேளை.........ஆனல் என்ன பிரயோஜனம்?

ஆண்களிடம் வெட்கப்படுமாறு வளர்ந்துவந்த இந்திரா வுக்கு மேல்நாட்டு மாதர்களின் சுதந்திரத்தையும் சங்கோஜ மின்மையும் பார்த்தபோதும் கேட்டபோதும் மனதில் ஒரு புதிய விஞேதமான உணர்ச்சி ஏற்பட்டது. மாரியைப் பற் றிய நினைவு வரும்போதும் அப்படித்தான். உண்மையில் அவளுடைய மனதில் ஒரு சண்டை நடந்துகொண்டிருந் தது. மாசுபடாத கன்னி உள்ளத்தில் மலர்ந்த ஆசைக்கும், சமூக, பொருளாதார, இன்னும் உலகத்திலுள்ள மற்ற கட் டுப்பாடுகளுக்கும் சண்டை. மனத்திலே சப்தமின்றி நடந்த இச்சண்டையைப் பற்றி யாருக்குத் தெரியும்?

சில மாதங்களுக்குப் பிறகு இந்திராவின் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டது. ரங்கசாமியை உனக்குப் பிடிக்கிறதா என்று அவள் தாயார் கேட்டபோது வெட்கத்தால் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பதில் சொல்லத்தான் ரங்கசாமி யைப்பற்றி அவளுக்கு என்ன தெரியும்? அவள் மௌனமாய் இருந்ததே சரியான பதில் என்று அவள் பெற்ருேர்கள்

நினைத்தார்கள். கலியாணச் சடங்குகளின் போது தன் கணவனைக் கடைக் கண்ணால் பார்த்ததற்காக எல்லோரும் அவளைக் கேலி செய்தார்கள்.

பிறகு தன் புருஷனை, முன்பின் தெரியாத புருஷனை நேருக்குநேர் முதல் தடவை தன் சயன அறையில் சந்தித்தாள். முதலில் இருவருக்கும் மிகவும் வெட்கமாய் இருந்தது. காதலைப் பற்றியும் ஸ்திரீபுருஷ சிநேகத்தைப் பற்றியும் எவ்வளவோ படித்திருந்த இந்திராவுக்கு, முதன்முதலாக சயன அறையில் பார்த்த ஒருவனுக்கு தன் உடம்பைக் கொடுக்க அருவருப்பாய் இருந்தது. மாரியைப் பற்றி நினைத்தாள். ரங்கசாமி அவளுடைய தோள்களைத் தன் பக்கம் திருப்பி அருகில் உட்காரவைத்ததும் இருதயம் வேகமாக அடித்துக்கொண்டது. அவளுடைய நெற்றியில் முத்துப் போன்ற வேர்வைத் துளிகள் தோன்றின. ஆண் ஸ்பரிசம் படாத அவள் உடம்பை ரங்கசாமி தொட்டதும் அவள் அறிந்திராத ஒரு ரம்மியமான உணர்ச்சி உடம்பெல்லாம் மின்சார சக்திபோல்பரவியது. கொஞ்சங்கொஞ்சமாக தன் கணவனுடைய, அம்மி மிதித்து அருந்ததி பார்த்து ஓமம் வளர்த்து சாஸ்திரோக்தமாய் மணந்த கணவனுடைய ஆலிங்கனத்தில் மெய்மறந்தாள். மாரியைப் பற்றிய நினைவுகளும் காதலைப் பற்றிய எண்ணங்களும் எங்கோ ஓடி விட்டன. தன் மனதை மாற்றி, தீர்மானங்களைத் தோற்கடித்த அந்த சர்வவியாபகமான சக்தியிடம் சரணாகதியடைந்தாள். இந்தியாவில் நடக்கும் எவ்வளவோ கலியாணங்களில் மாதிரி இதிலும் அந்த ஆண்பெண் சம்பந்தமான சக்தியானது வேறெந்த உதவியுமின்றி மணவாழ்க்கையின் வெற்றியை ஊர்ஜிதம் செய்தது.

தூரத்தில் கோபுரத்தின் ஆகிருதி பிரகாசிக்கும் வானத்தைப் பிளந்தாற்போல் நின்றுகொண்டிருந்தது. புஷ்பப் பாத்திகளிடையிலும் மரங்களின் நீண்ட நிழல்களினிடையிலும் இந்திரா தன்எண்ணங்களே துணையாக நடந்து கொண்டிருந்தாள். இவையெல்லாம் எத்தனையோ யுகங்களுக்கு முன் நடந்ததாகத் தோன்றியது. இவற்றையெல்லாம் மறந்து இந்த ஆறு வருஷங்களாக குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தாள். ஆனால் இப்பொழுது அவளுடைய நிலைமை என்ன?

நிகழ்காலத்தைப் பற்றி நினைத்ததும் இந்திராவுக்குக் கோபமும் ஆத்திரமும் வந்தது. செடியிலிருந்து ஒரு புஷ்பத்தைப் பிடுங்கி கையில் கசக்கினாள். மாரிக்காக அவளால் விசனப்பட முடிந்தது. ஆனால் குமாரைப் பற்றி நினைத்ததும் கோபத்தால் உதடு துடித்தது. குமார் கைது செய்யப்பட்டதினால் ஏற்படும் விளைவுகளை ஒவ்வொன்றாகத் தன் மனதில் கற்பனை செய்து பார்த்தாள். குடும்பத்துக்குப் பொதுவாகவும் தனக்கு முக்கியமாகவும் தன் தம்பியால் ஏற்படப்போகும் அவமானம், வெட்கம், மனோவேதனை, அவதூறு இவற்றைப்பற்றி நினைக்க நினைக்க அவனை என்ன வேண்டுமானாலும் செய்திருப்பாள்.

கொஞ்சநேரத்துக்கு முன்புதான் குமார் பி.ஏ. படிப்பதைப்பற்றியும், இங்கிலாந்து போவதைப்பற்றியும் பெருமைப் பட்டுக்கொண்டிருந்தாள். அவனைப் பற்றி பெருமையாய்ப் பேச எவ்வளவோ இருந்தது. ஆனால் இப்போது அவன் அவளைக் கைவிட்டுவிட்டான். கைவிட்டதுமின்றி அவளுடைய பெயரையும் அதல பாதாளத்துக்கு இழுத்துக்

கொண்டு போய்விட்டான். தன்னுடைய தம்பி ஒரு சாதாரண கைதிமாதிரி ஜெயிலில் இருப்பதா? இதை அவள் எப்படி மறக்க முடியும்? தன்னுடைய பணக்கார சிநேகிதிகளையெல்லாம் இனிமேல் வெட்கமின்றி எப்படிப் பார்க்க முடியும்?

ஒரு நாள் இந்திரா நகரத்திலுள்ள ஸ்திரீகளுக்கெல்லாம் முக்கியமானவளாய் இருக்க விரும்பினாள். நாகரிகமாகவும், நல்ல உடைகளோடும், எல்லோரும் மதிக்கும்படியாகவும், தனக்குச் சொந்தமானவற்றைப் பற்றி பெருமைப் படும்படியாகவும் இருக்க விரும்பினாள். இன்னும் எவ்வளவோ ஆசைகள் அவளுடைய ஆவலான உள்ளத்தில் பொங்கி எழுந்தன. ஆனால் ஒரு சிறிய சம்பவத்தால் குமார் அவளுடைய வாழ்க்கை லட்சியத்தையே சீர்குலைத்து விட்டான்.

அத்தியாயம் ஏழு

ராவ்பகதூர் கிருஷ்ணசாமி ரெட்டி சத்தியாக்கிரக இயக்கத்தினால் ஏற்படும் கெடுதிகளையெல்லாம் தன் சிநேகிதர்களுக்கு எடுத்து சொல்லிக்கொண்டிருந்த அதே சமயத்தில், கவர்ன்மெண்டு காலேஜுக்கு முன்புறம் மாணவர்கள் பெரிய கூட்டமாக நின்றுகொண்டிருந்தார்கள். குமாரும் அவர்கள் மத்தியில் இருந்தான். பால் வடியும் முகம் என்று சொல்வார்களே, அம்மாதிரி உலக கஷ்டங்களை அனுபவித்தறியாத குழந்தை முகம் உடையவன் குமார். பரந்த கண்கள், அவைகளில் எப்போதும் ஒரு தூரப் பார்வை, உலகத்துக்கு அப்பால் நடக்கும் ஒரு சம்பவத்தை கவனிக்கிற வேதாந்தியின் பார்வை. இருந்தாலும் அப்பொழுது தன்னைச் சுற்றிலும் நடக்கும் விஷயங்களில்தான் அவனுடைய கவனம் ஊன்றியிருந்தது. ஒல்லியான உடம்பு; சுருண்டு முகத்தின்மேல் விழும்படியான மயிர் ஒரு காந்திக்குல்லாயின் கீழ் அடக்கிவைக்கப்பட்டிருந்தது. அச்சமயத்தில் மற்ற மாணவர்களின் உதவியால் ஒரு ஊர்வலத்தை நடத்த ஏற்பாடு செய்துகொண்டிருந்தான்.

சில மாதங்களாக குமாரின் மனதில் ஒரு புயல் குமுறிக்கொண்டிருந்தது. இரண்டு நாள் நடக்காது என்று பலர் நினைத்த இயக்கம் ஒரு பெரிய தேசியப் போராக மாறியதைப் பார்த்துக்கொண்டுவந்தான். அவன் அதில் பங்கெடுத்துக்கொள்ளாவிட்டாலும் அவனுடைய ஆத்மா சத்தியாக்கிரகத்தில் வசப்பட்டுவிட்டது. இதைப் பற்றித்

தன் பெற்றோர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் எவ்வளவு வேதனைப்படுவார்கள் என்றும் குமாருக்குத் தெரிந்திருந்தது.

காந்திஜி வட்டமேஜை மகாநாட்டிலிருந்து வெறும் கையுடன் திரும்பிவந்தார். அவர் கப்பலைவிட்டு இறங்கியதும் கைதியானது மறுபடியும் சட்டமறுப்பை ஆரம்பிக்க சர்க்கார் ஒரு சங்கு ஊதியமாதிரி. தேசீயப் பாட்டுகள், கோஷங்கள், மறியல், பொதுக்கூட்டங்கள், ஜெயில், தடியடி எல்லாம் மறுபடியும் ஆரம்பமாயின. குமார் சட்ட விரோதமான கூட்டங்களுக்கு போவதுண்டு. அங்கே காங்கிரஸ் தலைவர்கள் எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். சுதந்திரம், பெண்ணுரிமை, தீண்டாமை விலக்கு, குடியானவர்களின் வறுமை, கதர், சுதேசிச் சாமான்கள், சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம்........

இவையெல்லாம் குமாருக்கு தெரிந்திருந்தது. ஆனால் எல்லாவற்றையும்விட காந்திஜியின் ஆத்மசக்திதான் அவன் மனதை கவர்ந்தது. சாத்மீகம், சத்தியாக்கிரகம் என்னும் வார்த்தைகளுக்கு அடிமையானான். தன் தாயாரால் வைதீக முறையில் வளர்க்கப்பட்ட அவனுக்கு இப்போது மதத்திலேயே நம்பிக்கையில்லை. ஆனால் உண்மையே தெய்வம், சாத்மீகமே வழி என்னும் இந்தப் புதிய காற்றின் வேகம் அவன் உடம்பில் பூரணமாகப் பட்டது. இருந்தாலும், தன் பெற்றோர்களின்மேல் அவனுக்கு பிரியம் அதிகம். அவர்களுக்கு எவ்வித மனக்கஷ்டமும் கொடுக்க இஷ்டமில்லை. வீட்டில் சாதாரணமாக நடக்கும் பேச்சிலிருந்து இதைப்பற்றி அவர்கள் என்ன நினைத்தார்கள் என்று குமாருக்குத்தெரியும். தங்கள் மகன் இந்த இயக்கத்தில்

சேர்ந்தால்அவர்கள் இருதயம் உடைந்து விடும். அவர்களுடைய உலகில் இம்மாதிரியான ஆத்ம சோதனைக்கு இடமில்லை.

ஆகவே குமார் பொதுக்கூட்டங்களுக்கு ரகசியமாக போவது வழக்கம். காலேஜ் பிரின்சிபாலும் அதைத் தடுத்திருந்தார். ஆனால் அது மாணவர்களின் உற்சாகத்தைத் தான் அதிகப்படுத்தியது. குமார் சில காங்கிரஸ் தொண்டர்களின் மூலமாக பத்திரிக்கையில் பிரசுரிக்காத நடவடிக்கைகளை நோட்டீஸ்களாகத் தயாரித்து வகுப்புகளில் வைத்துவிடுவது வழக்கம். இவை அங்கே எப்படி வந்தன என்று அதிகாரிகள் எவ்வளவு முயற்சி செய்தும் கண்டு பிடிக்கவில்லை. ஆனால் இதுவரையிலும் குமார் தன் குடும்பத்திற்கு ‘ இழிவு ’ வருமாறு பகிரங்கமாக ஒன்றும் செய்ய உத்தேசமில்லை.

அன்று நடந்த தடியடியைப் பற்றியும், காங்கிரஸ் தொண்டனின் மரணத்தைப் பற்றியும் சமாசாரம் காட்டுத் தீபோல் பரவியது. மத்தியான சாப்பாட்டிற்கு காலேஜிலிருந்து வரும்போது குமார் அதைப் பற்றிக் கேள்விப் பட்டான். உடனே குமாரும் மற்றும் சில மாணவர்களும் கடைவீதிக்குச் சென்றார்கள். அங்கு கூட்டம் ஏராளமாக இருந்தது. வழியின்றி, தலைவரின்றி என்ன செய்வது என்று தெரியாமல் சுற்றும் கூட்டம்; கூட்டத்தின் மத்தியில் புகுந்து மாணவர்கள் அத்தொண்டன் சிறிது நேரத்துக்கு முன்னால் இறந்த இடத்தை வெகு கஷ்டத்துடன் அடைந்தார்கள். பிணம் அங்கே காணப்படவில்லை—ஆனால் அந்தக் கல்படிகளின்மேல் கறுத்துப் போன ரத்தக் குறி

இன்னும் இருந்தது. அச்சமயம் ஜனக்கூட்டத்தின் மத்தியில் ஒரு குரல் எழுந்தது. எல்லோரும் அப்பக்கம் திரும்பினர். "சகோதரர்களே, இன்று மாலை காலமடைந்த நம் வீரரின் தகனமும் கடைசிச் சடங்குகளும் நடைபெறும். ஐந்து மணிக்கு மயானத்துக்கு வந்து உங்கள் வணக்கத்தைச் செலுத்துங்கள்." இம்மாதிரி பேசியவன் போலீசாரால் உடனே கைது செய்யப்பட்டான்.

குமாருக்கும் அவனுடைய சிநேகிதர்களுக்கும் மயக்கம் வந்தமாதிரி தோன்றியது. உயிர் போகும் உடம்பிலிருந்து சிந்திய ரத்தத்தை குமார் இதற்குமுன் பார்த்ததில்லை. இறந்த தொண்டன் யார் என்று அவர்களுக்குத்தெரியாது. ஆனால் தம் வாழ்க்கையில் அவன் இல்லாத நாளே கிடையாதுபோல் அவர்களுக்குத் தோன்றியது. 'அவன் நம்முள் ஒருவன், ஒரு வீரன். நமக்காகவும் நம் கொள்கைகளுக்காகவும்தான் அவன் இறந்தான்'. என்றெல்லாம் நினைத்தார்கள். வெகுநேரம் ஒன்றும் பேசாமல் மெதுவாக காலேஜை நோக்கி நடக்கலாயினர். திக்கற்று, உதவியற்று இருப்போர்மாதிரி துயரம் அவர்கள் உள்ளத்தை அழுத்தியது. திடீரென்று குமாரின் நண்பர்களில் ஒருவன் சொன்னான், "நாம் இன்று காலேஜை மறியல் செய்வோம். நம் மனதிலுள்ளதை அது உலகத்துக்குக் காட்டும்."

"எல்லோரையும் காலேஜுக்குப் போகாமல் இருக்க சொல்வதா?"

"ஆம். வேறு நகரங்களிலுள்ள மாணவர்கள் செய்ய வில்லையா? அன்றியும் நம்முடைய தேசபக்தியை அது உலகத்துக்கே காட்டுமல்லவா?"

"குமார், நீதானே இத்தனை நாளும் நோட்டீஸ் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தாய்? நாம் ஹர்த்தால் செய்யவேண்டுமல்லவா?"

இதனுடைய விளைவுகளைப் பற்றி நினைக்க அப்போது குமாருக்கு சமயமில்லை. உடனே ஒத்துக்கொண்டான்.

காலேஜ் முன்னால் இவர்கள் நின்றுகொண்டு மற்ற மாணவர்களை உள்ளே போகாதிருக்க வேண்டிக்கொண்டார்கள். சீக்கிரம் பெரிய கூட்டம் சேர்ந்துவிட்டது. உபகாரச் சம்பளம் போய்விடுமோ என்று பயந்த சிலரும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் பிள்ளைகளும்தவிர அனேகமாக மற்றெல்லோரும் வெளியே நின்றுகொண்டு தேசீய கோஷங்களைக் கிளப்பினர். யாரோ ஒரு மூவர்ணக்கொடியையும் கொண்டுவந்து விட்டனர். கூட்டம் பெரிதாக ஆக 'மகாத்மா காந்திக்கு ஜே.' 'வந்தே மாதரம்.' என்னும் கோஷங்கள் எழுந்தன.

குமார் மனதில் கொஞ்சம் முன்னால் குடிகொண்டிருந்த உதவியற்ற மனப்பான்மை மறைந்தது. சுதந்திரத்தைப் பற்றிக் கண்ட கனவுகளெல்லாம் உண்மையானதுபோல் உற்சாகம் உண்டாயிற்று. மத்தியானவேளை வகுப்புகளுக்குப் போகாததால் ஏற்பட்ட உற்சாகம் அல்ல. தன் உரிமைகளை, தன் தேசமக்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்குப் புரட்சி செய்யும்போது ஏற்படும் உற்சாகம்; வாலிபர்களின் மனதில் ஏற்பட்டிருக்கும் மாறுதல்களுக்கு ஓர் அறிகுறி.

காலேஜுக்குப் போகாமல் நின்றதும் அவர்களுக்கு வேறென்ன செய்வதென்று தெரியவில்லை. குமாரும்

மற்றும்சிலரும் கூடி ஆலோசித்தார்கள். பிறகு குமார் காலேஜ் வெளிக் கதவின் மேல் ஏறி நின்றுகொண்டு அவர்கள் செய்த முடிவை மற்றவர்களுக்கு அறிவித்தான். "நண்பர்களே, இங்கிருந்து நாமெல்லோரும் ஊர்வலமாக மயானத்திற்குச் செல்வோம்."

ஆனால் அதற்குள் காலேஜ் பிரின்சிபால் போலீசுக்குத் தகவல் அனுப்பி விட்டார்.

அவர்கள் வந்தார்கள். தடிகளுடனும் சிவப்புத்தொப்பிகளுடனும் மார்ச் செய்துகொண்டுவந்து மாணவர்களின் ஊர்வலத்திற்கு முன் வரிசையாக அடுக்கிவைத்த பொம்மைகள் மாதிரி நின்றார்கள். அவர்கள் முகத்தில் மனித உணர்ச்சி அனுதாபம் முதலிய குணங்கள் ஏதாவது உண்டா என்று குமார் ஆவலாய்க் கூர்ந்து கவனித்த தான். நிலைமை மிகவும் நெருக்கடியாய் சமுசயம் நிறைந்த தாக இருந்தது. ஒவ்வொரு கட்சியும் மற்றவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைக் கவனித்துக்கொண் டிருந்தது.

போலீஸ் அதிகாரி மாணவர்களின் ஹர்த்தால் சட்ட விரோதமானதென்றும், அவர்கள் சத்தம் போடாமல் போகாவிட்டால் தாம் நடவடிக்கைகள் எடுக்க நேரும் என் றும் ஒரு அறிக்கையைப் படித்தார். ஆனால் மாணவர்களின் பாட்டுகளும் கோஷங்களும் அவர் குரலை மூழ்கடித்தன.

மெதுவாக, கண்டிப்புடன் ஊர்வலம் முன்னுக்கு நகர ஆரம்பித்தது. இரும்புச் சுவர் மாதிரி நின்ற போலீஸ்காரர் களுக்கு முன்னால் வந்ததும் இன்ஸ்பெக்டர் தம் விஸில்

ஊதினர். சாவி கொடுத்த பொம்மைகள் மாதிரி போலீஸ் காரர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். குமாரின் தோளின் மேல் ஒரு கை விழுந்தது. அது ஒரு ஜவான். குமார் கைதியானன். அன்று இரண்டாவது தடவையாக குமாருக்கு தலை சுழன்று மயக்கம் வந்த மாதிரி இருந்தது. சுற்றிலும் எல்லாம் மங்கலாகத் தோன்றியது. முரட்டுத்தனமாக பக்கத்தில் நின்று கொண்டிருந்த போலீஸ் காருக்குள் தள்ளப்பட்டான். அங்கு மற்றும் ஆறு மாணவர்களுக்கும் தன் மாதிரியே மரியாதை செய்யப்பட்டிருந்தது. காரும் நகர்ந்தது.

வெளியே இருந்த மாணவர்களின் கூட்டம் தடியடியால் கலைக்கப்பட்டது. சத்தமும் குழப்பமும் அதிகமாயிற்று. பாட்டுகளும் கோஷங்களும் வரவர நின்று போயின. அவர்கள் வெவ்வேறு வழிகளில் மயானத்திற்கு செல்லலாயினர். காரில் இருந்த சிறிய சந்துகள் வழியாக குமார் இதையெல்லாம் பார்த்தான். ஆனல் அவைகள் சீக்கிரம் மறைந்துவிட்டன. வெளியுலகத்தின் ஞாபகம் அவன் மனத்தில் உறுத்தலாயிற்று.

அத்தியாயம் எட்டு

போலீஸ் காருக்குள்ளே இருட்டாய் இருந்தது. ஒரு சிறு ஓட்டை வழியாக உள்ளே கொஞ்சம் வெளிச்சம் வந்தது. குமாரும் மற்ற மாணவர்களும் வெப்பத்தாலும் மனக் கிளர்ச்சியாலும் வேர்க்கலானார்கள். தம்முடன் இருந்த போலீஸ்காரன் முன்னால் அவர்கள் ஒருவரோடொருவர் பேச விரும்பவில்லை. இருட்டில் அந்த ஜவான் உட்கார்ந்திருப்பது ஒரு பிசாசின் நிழல் மாதிரி இருந்தது. அவன் முகமோ கல் மாதிரி உணர்ச்சியின்றி இருந்தது. புகையிலை நாற்றமும் வேர்வை நாற்றமும் அவன் உடம்பிலிருந்து எழுந்தன. போன இரண்டு மணிநேர நடவடிக்கைகளுக்குப் பிறகு, துக்கம், திக்கற்ற உணர்ச்சி, வெற்றி முதலியன பருவகாலத்து மழை வெள்ளம் மாதிரி அவர்களுடைய இருதயங்களில் பெருக்கெடுத்துச் சென்ற.பிறகு, இப்போது நிம்மதி குடிகொண்டிருந்தது. நிம்மதி, நிசப்தம், செய்கையற்ற சாந்தம் அவர்களுடைய மனங்களில் பரவின. ஆனால் அவர்களுடைய இருதயங்களில் எழுந்த மழையிலும் புயலிலும் தாம் முழுகிப்போவது மாதிரி ஒரு உணர்ச்சி உண்டாயிற்று. இப்போது அவர்களுக்கு யோசனை செய்ய நேரம் இருந்தது. தாம் செய்ததைப் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் நினைக்க போதிய அவகாசம் இருந்தது.

குமார் சில நாட்களாக அமுக்கிவைக்கப்பட்ட ஸ்பிரிங் மாதிரி பெற்றோர்களின் அன்பு என்னும் பாரத்தால் நகா

முடியாமல் இருந்தான். ஆனால் அன்று திடீரென்று மனத்தில் எழுந்த ஒரு சக்தியால் தன்மேல் இருந்த கனத்தை உதறித் தள்ளிவிட்டு செய்கையில் ஈடுபட்டான். வெற்றி என்பது என்ன என்று ருசி பார்த்தான். எதற்காக? மறுபடியும் சட்டம், அதிகாரம் என்னும் சுமைகளின் கீழ் நசுக்கப்படுவதற்குத்தான். இந்த சுமைகள் பெற்றோரின் அன்பு மாதிரி அல்ல. இவை வெறுப்பு, கொடுங்கோல் முதலியவற்றையே அடிப்படையாகக் கொண்டவை. காந்தியே அப்படிச் சொல்லவில்லையா? பெற்றோர்களின் அன்புக்கு கட்டுப்பட்டு தன் சுதந்திர உணர்ச்சியை வெளிக்காட்டாமல் இருக்க குமார் தயாராய் இருந்தான். ஆனால் தன்மனச்சாட்சிக்கு விரோதமான சட்டத்துக்காகவும், அன்னியரின் அதிகாரத்தை மீறியதற்காகவும், தன் அந்தரங்க உள்ளத்திலிருந்து கிளம்பிய மாசற்ற எண்ணங்களுக்காகவும், கள்வன் குடிகாரன் மாதிரி உலகத்துக்கு எட்டாத ஜெயிலின் அந்தகாரத்தில் மறைவதென்றால்......... குமாரின் மனதில் அந்த நிற்கதியான நிலைமை மறுபடியும் தலையெடுத்தது. தன்னை ஒரு இருண்ட, மனித சஞ்சாரமற்ற அதல பாதாளத்தில் தள்ளிவிட்டார்களா? இந்த உபயோகமற்ற செய்கைகளினால் என்ன பிரயோஜனம்? என்று ஒரு வினாடி யோசனை செய்தான். ஆனால் சிறைக்குச் செல்லுமாறு காந்திஜியே சொல்லவில்லையா? சுயராஜ்யம் பெற அதுவே புனிதமான, கம்பீரமான வழியென்று சொல்லவில்லையா? தியாகம் செய்வது, துன்பத்தையும் மனங்கோணாமல் சகிப்பது, விரோதிகளையும் நேசிப்பது, பகைமைக்கு அன்பும், திட்டுக்கு வாழ்த்தும் திருப்பிக் கொடுப்பது, தடியடியையும் பலாத்காரத்தையும் புன்முறுவலுடன் வரவேற்பது, அதுவே சுயராஜ்யத்திற்கு வழி, அதுவே நேரான

மார்க்கம். குமாரின் உள்ளத்தில் சகல ஜீவராசிகளின் மேலும் அச்சமயத்தில் அன்பு பொங்கி வழிந்தது. ஆனால் மனத்திலுள்ள குழப்பம் தீரவில்லை. தான் கிளப்பிய புயல் தன்னையும் சேர்த்துத் தூக்கிக்கொண்டு போகிறதா?

"நீங்கள் உங்க வேலையைப் பார்த்துக்கிட்டுப் போகிறது தானே." கூட இருந்த போலீஸ்காரன் பேச ஆரம்பித்தான். "இதிலெல்லாம் நீங்கள் ஏன் தலையிடுகிறீர்கள்? கடை வீதியில் இருக்கிற தொந்தரவு போதாதா? இந்தக் கஷ்ட காலத்தில் சாப்பிடறதுக்குக் கிடைத்தால் போதும் என்று இல்லாமல் இதிலெல்லாம் நீஙகள் ஏன் சேருகிறீர்கள்? உங்க குடும்பங்களில் யாராவது சர்க்கார் உத்தியோகத்தில் இருந்தால் அவர்களுடைய வாயில் மண் தான்."

மாணவர்கள் யாரும் அவனுக்கு பதில் சொல்லவில்லை. அவர்களுடைய மனங்களில் கிளர்ச்சி, குழப்பம், முதலியன அதிகமாய் இருந்தது. "எப்படியோ தொலையுங்கள். எனக்கென்ன வந்தது?" என்று சொல்லிவிட்டு அந்த ஜவான் காரின் பலகையின் மேல் எச்சில் துப்பி அதை பூட்ஸ் காலால் தேய்த்தான்.

சீக்கிரம் வெளியுலக சப்தங்களெல்லாம் ஓய்ந்து விட்டன. கார் ஒரு சிவப்பு செங்கல் கட்டிடத்தின் முன் நின்றது. அது தான் பிரதம போலீஸ் ஸ்டேஷன். அது அநேக போலீஸ்காரர்களால் நன்றாக பாதுகாக்கப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தின் பக்கத்திலும் எந்த நெருக்கடிக்கும் தயாராக தடிகளுடனும் துப்பாக்கிகளுடனும் ஜவான்கள் மேலும் கீழும் 'மார்ச்' செய்து கொண்டிருந்தார்கள்.

ஆறு ஜவான்கள் இரு புறமும் காவல் காக்க கைதிகள் காரிலிருந்து இறங்கி போலீஸ் ஸ்டேஷனுக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். உள்ளே போவதற்குமுன்னுல் குமார் பின்பக்கம் திரும்பிப் பார்த்ததும் அங்கே கந்தன் நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அவன் தன் கைகளால் ஏதோ சைகைகள் செய்தான். ஒரு ஜவான் அவனை மிரட்டிக்கொண்டிருந்தான். குமாரும் கந்தனிடம் ஏதாவது பேச வாயெடுத்தான். ஆனுல் வார்த்தைகள் வரவில்லை. தொண்டையில் ஒரு கட்டி அடைத்துக்கொண்ட மாதிரி இருந்தது. கைதிகளும் அதற்குள் உள்ளே போய் விட்டார்கள்.

ஸ்டேஷனுக்குள்ளே ஒரு நீண்ட ஹால் வழியாக இவர்களை கூட்டிச்சென்ருர்கள். அதன் ஒரு பக்கம் உயர்ந்த சுவரும் மற்ருெரு பக்கம் கைதிகளை அடைப்பதற்கு கம்பிகள் போட்ட அறைகளும் இருந்தன. இந்த அறைகளில் வாலிபர்களும், முதியவரும், படித்தவரும், தற்குறிகளும் இருந்தார்கள். ஆனுல் எல்லோரும் கதர் அணிந்து காந்திக் குல்லாயுடன் விளங்கினுர்கள். சிலர் க்ஷவரம் செய்யாமலும், தாடி வளர்த்தும் இருந்த கிராமக் குடியானவர்கள். சிலர் கிராப்புத்தலையுடன் விளங்கிய நகரவாசிகள். வித்தியாசம் இன்றி ஒரே கொள்கைக்காகப்பாடுபட்டு, ஒரே சமயத்தில் கைதியாகி ஒரே ஜெயிலில் அடைக்கப்பட்டவர்கள். இவர்கள் குமாரையும் மற்ற கைதிகளையும் பார்த்ததும் இவர்கள் யாராயிருக்கலாமென்று ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டார்கள். வயது, உடை, பார்வை முதலியவற்றிலிருந்து மாணவர்கள் என்று தெரிந்து விட்டது. காலேஜ் ஹார்த்தாலைப் பற்றி இரும்புக் கம்பிகளுக்குப்

பின்னால்கூட தெரிந்து விட்டது. உடனே ஒரு கோஷம் எழுந்தது.

"காலேஜ் மாணவர்களுக்கு"

"ஜே" என்று அங்கிருந்த கைதிகளெல்லாம் எதிரொலித்தனர்.

"மாணவ சகோதரர்களுக்கு.........ஜே."

ஆம். பழைய கைதிகளுக்கு புதிதாக அங்கே வந்த கைதிகளை அடையாளம் தெரிந்து விட்டது. இங்கே கூடத் தம் சிநேகிதர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்ததும் சோர்வுபட்ட உள்ளங்கள் மறுபடியும் மலர்ந்தன. குமாரின் இருதயத்தில் மின்சார சக்திபோல் ஓர் உணர்ச்சி பாய்ந்தது. தன்னால் எதிர்க்க முடியாத ஒரு சக்தி தன்னை எங்கோ இழுத்துக்கொண்டு போவது போலவும், தான் ஒரு பெரிய அலையின் சிகரத்தில் மிதந்து செல்வதுபோலவும் அவன் மனதுக்குத் தென்பட்டது. முதல் அறையில் எழுந்த கோஷம் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குப் பரவியது. அந்த அறைகளில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் எல்லோரும் இப்படி சந்தோஷகரமான கலாசாலை வாழ்க்கையை விட்டு விட்டு ஜெயிலுக்குப் போகத் துணிந்த வாலிபர்களைப் பார்க்க கம்பிகளுக்குத் தம் முகங்களை அழுத்திக் கொண்டு நின்றார்கள்..

" மகாத்மா காந்திக்கு.........ஜே!"

" பாரத மாதாவுக்கு.........ஜே!"

கோஷங்கள் ஒன்றுக்குமேல் ஒன்று எழுந்தன. 'ஜே' என்று குமாரும் மெய் மறந்து ஒலித்தான். தானும்

அக்கைதிகளோடு ஒன்ருகக் கலந்ததாக குமாருக்குத் தோன்றியது. அவர்களுடைய ஒவ்வொரு கோஷமும் அவனுடைய இருதயத்தை இன்னும் கொஞ்சம் உருக்கியது. அவனுடைய ஒவ்வொரு அடியும் மற்ற கைதிகளுக்கும் ஜெயில் வாழ்க்கைக்கும் பக்கமாக அவனைக் கொண்டு சென்றது.

"முட்டாள்கள், ராஸ்கல்கள், சத்தம் போடாதீர்கள்.........வாயை மூடுங்கள். இன்ஸ்பெக்டர் ஐயாவுக்குத் தெரிஞ்சால் தோலை உரிச்சு விடுவார்" என்று ஒரு ஜவான் சத்தம் போட்டான். ஆனல் அவனுடைய வார்த்தைகள் தேசீய கோஷங்களின் சத்தத்தில் மூழ்கிவிட்டன. ஜவான்களின் முயற்சிகளைக் கண்டு கைதிகளுக்கு சிரிப்பு வந்துவிட்டது. "என் இஷ்டமாய் இருந்தால் ஒவ்வொருவனையும் சாகும்வரைக்கும் அடிப்பேன் தேவடியா மக்கள்" என்ருன் ஒரு போலீஸ்காரன். இதைக் கேட்டதும் கைதித் தொண்டர்களின் தேசீய கோஷங்களும் சிரிப்பும் உற்சாகமும் திரும்பவும் அதிகமாயின. "வாருங்கள், எங்களை அடியுங்கள். உதையுங்கள். வேண்டுமானல் சுடுங்கள். அதற்காகத்தான் நாங்கள் தயாராய் வந்திருக்கிருேம்." என்று அவர்கள் சத்தம்போட ஆரம்பித்தார்கள். போலீஸாரும் அமைதியை நிலைநாட்டும் முயற்சியைக் கைவிட்டுவிட்டு மாணவர்களை சீக்கிரம் ஒரு அறைக்குள் சேர்க்க முயற்சி செய்தனர். ஆனல் ஒருவன் பேச ஆரம்பித்தான். "நம் நண்பர்கள் போலீஸாருக்கு இந்தப் புது யுத்தத்தைப்பற்றிச் சொல்லுவோம். அவர்களுக்குத் தெரியாது போல் இருக்கிறது," என்ருன். உடனே எல்லோரும் பாட ஆரம்பித்தனர்.

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது"
....

பின்பு இன்னொரு பாட்டைப்பாட ஆரம்பித்தனர்.

" அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்,
....
....
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே."

அவர்கள் பாடிய சப்தத்திலேயே வானிடிந்து போலீஸ்டேஷன் மீது விழுந்து விடும்போல் தோன்றியது. குமாரின் வாலிப உள்ளம் பாட்டின் உச்சஸ்தாயில் மிதந்து பறந்து செல்லும் பறவையைப்போல் களிப்புற்றது. பாட்டின் கடைசியில் யாரோ இன்னும் ஒரு வரியைச் சேர்த்தார்கள்.

"போலீஸ்காரர் உணர்விழந்து சத்தம் போட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே."

சிரிப்பு மறுபடியும் செங்கல் சுவர்களைக் குலுக்கியது.

அத்தியாயம் ஒன்பது

சீக்கிரம் குமார் ஒரு அறைக்குள் தள்ளப்பட்டான். அவனுடைய மூளை அன்றைய நடவடிக்கைகளால் மயங்கி இருந்தது. இதுவெல்லாம் உண்மையா, அல்லது தான் தூக்கத்தில் காணும் ஒரு கனவா? தனக்குப் பின்னால் இரும்புக் கதவு தடாலென்று சாத்தப்பட்டது. பூட்டில் சாவி திரும்பியது. தன்னைக் கூட்டிக்கொண்டுவந்த போலீஸ்காரர்கள் காங்கிரஸ் கைதிகளை வைது கொண்டே திரும்பிப்போனார்கள். கோஷங்களின் ஆரவாரமும் சிறிது சிறிதாக அடங்கிவிட்டது.

அறைக்குள் போனதும் குமாருக்கு அங்கே ஒரு ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது. மாணவர்கள் உள்ளே போனதும் அங்கிருந்த பழைய கைதிகள் இந்தப் புதியவர்களுடன் பேசுவதற்காக முன் வந்தார்கள். அவர்களின் மத்தியில் கந்தன் மகன் மாரியும் இருந்தான். அதனால்தான் கந்தன் வெளியே நின்றுகொண்டிருந்தான்.

“மாரியா?” என்றான் குமார் தன் ஆச்சரியத்தை அடக்க முடியாமல்.

“நீங்களா?” என்றான் மாரி மெதுவாக.

குமாரும் மாரியும் அறிமுகமானவர்கள் என்று தெரிந்ததும் பழைய கைதிகளெல்லோரும் மற்ற மாணவர்களுடன் பேசலானார்கள். சிலசமயம் ரகசியமாகவும் சில சமயங்களில் சத்தமாகவும் விசாரணையைப் பற்றியும்,

ஜெயில் வாழ்க்கையைப் பற்றியும், தேசீய இயக்கத்தின் நிலைமையைப் பற்றியும் புதிதாக வந்தவர்களுக்கு எடுத்துச் சொன்னார்கள். ஆனால் குமார், மாரி, இவர்களிடையில் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஒருவரோடொருவர் என்ன பேசுவது என்பதைப் பற்றி யோசனை செய்து கொண்டிருந்தார்கள். இருவரும் சொந்த கிராமத்தில் இருந்த காலத்தில் ஒருவரையொருவர் அதிகம் பார்த்தது ண்டு. அது ஏழுவருஷத்துக்கு முன்னால். குமாருக்கு அப்போது வயது பதினொன்று. மாரியோ, இருபது வயதுள்ள வாலிபனாய் இருந்தான். அப்போது குமாருக்கு 'சின்ன எஜமானர்' என்று பெயர். மாரி உடையாருடைய தோட்டத்தில் வேலை செய்துகொண்டு எல்லோரிடமும் நல்லவன் என்று பெயர் வாங்கியிருந்தான். பின்பு மாரி தன் எஜமானரின் மில்லில் தொழிலாளியானான். கிராமத்தின் குறுகிய நோக்கங்களிலிருந்தும், கட்டுப்பாடுகளிலிருந்தும் தன்னை விடுவித்துக்கொண்டு ஒரு சுதந்திர புருஷனாக நினைத்துக்கொள்ளத் தலைப்பட்டான். நகர வாழ்க்கையிலும், தொழிலாளர் வாழ்க்கையிலும், கலியாணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையிலும், கஷ்டப்பட்டும், தியாகம் செய்தும், சுக துக்கங்களை அனுபவித்தும் எவ்வளவோ விஷயங்களை தெரிந்துகொண்டிருந்தான். ஏழு வருஷத்துக்கு முன்பு குமாரைப் பற்றி சின்ன எஜமான் என்றே நினைத்துவந்தான். வேறு எந்த பெயராலும் கூப்பிட்டதே இல்லை ஆனால் இப்போது ஏழு வருஷங்களுக்குப்பிறகு அவன் சுயமரியாதை அதற்கு எதிரிடையாக நின்றது. 'அவர் 'எந்த விதத்தில் எனக்கு எஜமானர்?' என்று நினைக்கலானான். தனக்கும் குமாருக்கும் பொதுவாக என்ன இருக்கிறது? தான்

எதைப்பற்றி பேசுவது ? இந்தமாதிரி யோசனைகள் மாரியை வெட்கப்படச் செய்தது.

குமாருக்கும் வெட்கமாய் இருந்தது. தன் தகப்பனாருடைய மில்லுக்குப் போன போது அங்கே மாரியை அடிக்கடி பார்த்ததுண்டு. ஆனால் கிராமத்திலிருந்து வந்த பின்பு அவனுடன் பேசியதில்லை. குமாரின் மனதில் மாரி தன் வீட்டு வேலைக்காரனாகவே தோன்றினான். ஆனால் குடும்ப வேலைக்காரனுடன் ஜெயிலில் எப்படி பழகுவது ? எல்லோரையும் விட்டு இவனையா இங்கே சந்திக்கவேண்டும்? அவனைச் சந்தித்தது குமாருக்கு இஷ்டமில்லாமலில்லை. ஆனால் திடீரென்று அந்த இடத்தில் பார்த்தது ஆச்சரியம், வெட்கம், கலக்கம் முதலியவற்றை உண்டுபண்ணிற்று. தான் மறந்துவிட்ட இறந்தகால வாழ்க்கையிலிருந்து ஞாபகசக்தி உயிர்பெற்றெழுந்த மாதிரி தோன்றியது.

முதலில் ஒருவரையொருவர் பார்த்து அறிந்து கொண்டபின் குமாரும் மாரியும் நேராகப் பார்த்துப் பேச வெட்கப்பட்டார்கள். இருவரும் தலைகளைக் குனிந்து கொண்டு நிலத்தை நோக்கினர்.

"நான் கந்தனை வெளியே பார்த்தேன்" என்றான் குமார் சிறிது நேரம் கழித்து.

"வேலையில்லாத கிழவன்" என்றான் மாரி. "நான் எமலோகத்துக்கு போனால்கூட விடமாட்டான் போல் இருக்கிறது."

"ஏன்? உன் தகப்பன்மேல் உனக்கு இஷ்டமில்லையா?" என்றான் குமார்.

"எப்போது பார்த்தாலும் ஊரைப் பற்றியும் முன் காலத்தைப் பற்றியுமே பேசிக்கொண்டிருக்கிறான். நானும் அங்கே போகவேண்டுமாம்."

திரும்பவும் கொஞ்சநேரம் இருவரும் மௌனமாய் இருந்தார்கள். குமார் எப்படி இங்கே இருக்க நேர்ந்தது என்று மாரி யோசனை செய்துகொண்டிருந்தான். ராமச்சந்திர உடையாரின் மகன் அவ்வளவு முட்டாள் தனமாக காங்கிரசில் சேர்ந்து ஜெயிலுக்குப் போவான் என்று அவன் நம்பவில்லை.

"சின்னெஜமான் இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டான் மாரி. குமாருக்கு மனத்தாங்கல் இருக்கக் கூடாதென்று சின்னஎஜமான் என்றே கூப்பிட்டான்.

"ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால் எஜமானும் இல்லை அடிமையும் இல்லை நண்பர்களே." காந்தி குல்லாயுடனும் கறுத்த பிடியுள்ள மூக்குக் கண்ணாடியுடனும் ஒரு மூலையில் தனியே உட்கார்ந்துகொண்டிருந்த ஒருவர்தான் இம்மாதிரி பேசினார். அவருக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். இதுவரையிலும் குமாரையும் மாரியையும் கவனித்துக் கொண்டிருந்தவர். இப்போது அவர்களிடம் எழுந்து வந்தார். "உலகத்தில் இரண்டு நிலைமைகள் எல்லாவற்றையும் சமப்படுத்துகின்றன. ஒன்று சாவு, மற்றொன்று ஜெயில். ஆகவே இந்த வெளியுலக மானிட வித்தியாசங்கள் நமது தியாகத்தினால் புனிதமாக்கப்பட்ட சிறைச் சாலைக்குள் வேண்டாம்." அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் பிரசங்கம் செய்வதுபோல் பேசினார். இருந்தாலும்

குமாருக்கு அவருடைய வார்த்தைகளின் உண்மை மனதில் பட்டது. அவரையும் ஸ்ரீஜத் சுந்தரம் என்று அடையாளம் தெரிந்து விட்டது.

“இவர்தான் குமார உடையார். ராமச்சந்திர உடையாரின் மகன்.” என்று மாரி அறிமுகம் செய்து வைத்தான்.

“எனக்கு உன் தகப்பனாரை கொஞ்சம் பழக்கம் உண்டு.” என்று சுந்தரம் பேச ஆரம்பித்தார். “தம்பி, நீ ஒரு பணக்காரருடைய மகன். அப்படியிருந்தும் சோம்பேரித்தனமான சுகபோக வாழ்வை விட்டுவிட்டு சிறுவயதிலேயே சத்யாக்கிரக மார்க்கத்தைக் கடைப்பிடித்ததற்காக எனக்கு மிகவும் சந்தோஷம். நீ எங்களுடன் சேர்ந்து தேசத்திற்காக தியாகம் செய்ததைப் பற்றியும் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். தியாகத்தின் மேன்மையால் தான் நாங்கள் ஒரு தொண்டனை மதிக்கிறோம், பணத்தினால் அல்ல. ஆகையால் நீயும் சாத்மீகம் என்னும் தீயில் புனிதமாக்கப்பட்டு சிறைவாசம் என்னும் சோதனையிலும் தேறினால் தேசத்திற்கு இன்னும் அதிக உபயோகமாய் இருப்பாய்.”

தேசத் தொண்டில் முதிர்ந்த ஒரு தொண்டனின் இவ்வார்த்தைகளைக் கேட்க குமாருக்கு பெருமையாய் இருந்தது. ஆனால் இது வரையிலும் தான் ஒன்றும் தியாகம் செய்ததாகத் தோன்றவில்லை. சுந்தரம் மறுபடியும் பேச ஆரம்பித்தார்.

"என் திருஷ்டாந்தத்தையே எடுத்துகொள். நான் வக்கீல் தொழிலை 22-ஆம் வருஷத்தில் விட்டுவிட்டு மகாத்மாவை பின்தொடர்ந்தேன். மூன்று தடவை ஜெயிலுக்குப் போயிருக்கிறேன். இரண்டு மூன்று தடவை தடியடியும் வாங்கியிருக்கிறேன். இருந்த சொத்தில் பாதிக்கு மேல் போலீசார் பறிமுதல் செய்து விட்டார்கள். ஆனால் பத்து வருஷங்களுக்குமுன் ஜில்லா கோர்ட்டை விட்டு வந்ததிலிருந்து ஒரு நாளாவது அதைப் பற்றி விசனப்பட வில்லை. சாத்மீக சட்டமறுப்பின்மேலுள்ள நம்பிக்கை ஒரு அணுவளவும் குறையவில்லை. ஒரு வேளை உன் தகப்பனார் இங்கிருந்து உன்னை விடுவிக்க முயற்சி செய்யலாம். உனக்கும் என் மாதிரியே நம்பிக்கையிருந்தால், மகாத்மாவின் கட்டளைகளுக்கு நீயும் என்மாதிரியே கீழ்ப் படிந்தால், ஜெயில் வாழ்க்கையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் சந்தோஷத்துடன் வரவேற்பாய். இது உனக்கு முதலில் பெரிய சோதனையாய் இருக்கும். அதிக மனோதிடம் வேண்டியிருக்கும். ஆனால் உனக்கு என்னை விட ஒரு சௌகர்யம் இருக்கிறது" என்று திரும்பவும் தன் சுய சரிதத்துக்கு வந்தார். "நான் தேசிய இயக் கத்தில் ஈடுபட்டபோது எனக்கு ஒரு மனைவியும் ஒரு மகளும் இருந்தார்கள். குடும்பத் தொல்லைகளில் மூழ்கி யிருந்தேன். என்னை நம்பியிருந்தவர்களுக்காக என் கடமையைப்பற்றி நினைக்க வேண்டியிருந்தது. பாவம். என்னைவிட அவள் அதிகம் தியாகம் செய்து கஷ்டப்பட் டிருக்கிறாள்" என்று தம் மனைவியை நினைத்து ஒரு பெரு மூச்சு விட்டார். "அவளும் மகாத்மாவைப் பின்பற்றி ஜெயிலுக்குப் போயிருக்கிறாள். ஆனால் உனக்கு இந்தத் தொல்லைகளெல்லாம் கிடையாது. நீ ஒரு பிரம்மச்சாரி.

உன் மனச்சாட்சியையும் உன் தேசத்தையும் தவிர வேறு எதைப் பற்றியும் நீ நினைக்க வேண்டியதில்லை............''

ஸ்ரீஜத் சுந்தரம் பேசுவதில் குமாருக்கு இப்போது அதிக சிரத்தையில்லை. மாரியுடன் பேசவும் அவனை எத்தனையோ கேள்விகள் கேட்கவும் இஷ்டப்பட்டான். சுந்தரம் நடுவில் வந்து பேசியதால் முன்பிருந்த வெட்கமும் ஆச்சரியமும் மறைந்தன. மாரி அங்கே எப்படி வந்து சேர்ந்தான்? அவன் மனதிலும் தன் மாதிரியே உற்சாகமும் ஒருவித் மயக்கமும் இல்லையா? அவன் ராஜீய நிலமையைப்பற்றி என்ன நினைத்தான்? அவன் ஜெயிலில் இருக்கும்போது அவன் சம்சாரம் என்ன செய்வாள்? தன் சொந்த கிராமத்தில் எல்லாம் எப்படி இருக்கின்றன? மாரியைச் சந்தித்தது தன் பிறந்த ஊரைப் பற்றியும் குழந்தை நாளைப் பற்றியும் எவ்வளவோ ஞாபகங்களைக் குமாரின் மனதுக்குக் கொண்டு வந்தது. ஆனால் சுந்தரம் இன்னும் பேசிக்கொண்டிருந்தார்.

"நான் விடுதலையாவதற்குமுன் நீ வெளியே வந்தால் கட்டாயம் என் மனைவியைப் போய்ப் பார்க்கவேண்டும். என்னை இங்கு பார்த்ததாகச் சொன்னால் போதும். அவளுக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருக்கும். அதாவது அவள் அப்போது ஜெயிலுக்கு வெளியே இருந்தால்.''

"சரி, பார்க்கிறேன்'' என்றான் குமார்.

"நீங்களிருவரும் அறிமுகமானவர்கள் என்பது எனக்கு மறந்தே போய்விட்டது'' என்றார் சுந்தரம்.

"பழைய எஜமானும் பழைய அடிமையும் ஒரே ஜெயிலுக்கு வந்து சேர்ந்தால் பேசுவதற்கு எத்தனையோ விஷயங்கள் இருக்கும்." சிரித்துக்கொண்டே சுந்தரம் மற்ற கைதிகளுடன் பேசப் போய் விட்டார்.

"சுந்தரம் மிகவும் நேர்மையானவர். ஆனால் காந்திஜீயைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுபவர்" என்றான் மாரி. "காந்திஜீயை நாமெல்லோரும் பின்பற்றவில்லையா?" என்று கேட்டான் குமார். மாரி பேசிய தினுசிலிருந்து மகாத்மாவைப் பின்பற்றுவது அவ்வளவு நல்லது என்று அவன் நினைத்ததாகத் தோன்றவில்லை.

"ஆமாம். நாமெல்லோரும் பின்பற்றுவது வாஸ்தவமே. ஆனால் எல்லா விஷயங்களிலும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமா? அவர் ஒரு தேசியத் தலைவர். தொழிலாளர்களையும், குடியானவர்களையும் தனிச் சங்கங்களில் சேர்த்துச் சுதந்திர இயக்கத்தில் ஈடுபடச் செய்திருந்தால் பிறகு சுதந்திர இந்தியாவில் தொழிலாளர்களும் தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். காந்தி பாமர ஜனங்களுக்குத் தேசிய உணர்ச்சியை உண்டு பண்ணினாரே தவிர அதை ராஜீய இயக்கத்தில் பயன் படுத்த ஒன்றும் செய்யவில்லை. நீங்கள் படித்தவர்கள். உங்களுக்கு இவைகளைப்பற்றி யெல்லாம் நான் சொல்லாமலே தெரியும்."

இவைகளைப்பற்றி யெல்லாம் குமாருக்கு உண்மையில் தெரியாது. ஆனால் அதை வெளியே சொல்லவில்லை. மாரி பேசும்போது அவன் முகத்தில் ததும்பும் ஆவலையும் ஆத்திரத்தையும் கவனித்தான். தொழிலாளர்களைப்

பற்றியும் அவர்களின் நிலைமையைப் பற்றியும் மாரி பேசப்பேச அவன் முகம் சிவந்தது. உலகத்தின் மேலேயே கோபம் கொண்டவன்போல் பேசினான்.

"நமக்கு எதற்காக சுயராஜ்யம் வேண்டும்? நம் தேசத்தில் எல்லோரும் வேலை செய்து சம்பாதித்து சுகமாக இருப்பதற்குத்தான். வீதிகளில் பிச்சைக்காரர்களும் வீடுகளில் பசியோடிருப்பவர்களும் சுதந்திர இந்தியாவில் இருக்கக்கூடாது. ஆகையால் ஏழைகளுக்குத்தான் நாம் முதலில் உதவிசெய்யவேண்டும். தொழிலாளர்களெல்லாம் ஒன்றுசேர்ந்தால் அவர்கள் குறைகளை எடுத்துச் சொல்லவும் அவற்றை நிவர்த்திக்கவும் முடியும். அதற்காகவே உங்கள் மில்லில் ஒரு தொழிலாளர் சங்கத்தை ஸ்தாபிக்க முயற்சி செய்துவருகிறோம். ஆனால் உங்கள் தகப்பனாருக்கு அது இஷ்டமில்லை. தம் கௌரவத்திற்குக் குறைவு என்று நினைக்கிறார். திருமலையைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்."

"திருமலை ஒரு கம்யூனிஸ்ட் அல்லவா?"

"அதென்னமோ எனக்கு அது ஒன்றும் தெரியாது. ஆனால் ஏழைகளுக்கு அவர் ரொம்ப பாடுபடுகிறார். சுயராஜ்யம் என்றால் என்ன என்பதை எங்களுக்கெல்லாம் தெரியும்படி தெளிவாக எடுத்துச் சொன்னார்."

இப்படியே சம்பாஷணை எங்கெங்கோ போயிற்று. குமாருக்கு எல்லாம் புதிதாகத் தோன்றியது. சுயராஜ்யத்துக்கும் தொழிலாளர் சங்கத்துக்கும் என்ன சம்பந்தம்? தன்னைப் பொருத்தவரையிலும் சுயராஜ்யம் என்றால்

ஆங்கில அரசாட்சியின் வீழ்ச்சி. வேறொன்றையும் பற்றி குமார் யோசனைசெய்ததே இல்லை. திருமலை எப்படி இருப்பான் என்றும் குமார் நினைத்தான். மாரி மறுபடியும் பேசலானான்.

" காலேஜ் மறியலுக்காகவா உங்களை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் ? "

" ஆம். இறந்துபோன தொண்டனுக்காக "

" பாவம். அவனை எனக்குத் தெரியும். பரமசாது. அவனா எல்லாரையும் விட்டுவிட்டு சாகவேண்டும்? இதை யெல்லாம் பார்க்கும்போது எனக்கு சில சமயங்களில் இந்தத் தடியடியையும் திட்டுகளையும் வாங்கிக்கொண்டு சும்மா இருக்க நாம் பைத்தியக்காரர்களா என்று தோன்று கிறது. பலாத்காரத்தை அஹிம்சையினால் எத்தனை நாள் எதிர்க்க முடியும் ? ஆனால் வேறு என்ன செய்ய முடியும் ? "

மாரி ஒரு புது மனிதனாகி விட்டான். கிராமத்தில் சுற்றித் திரிந்துகொண்டிருந்த வேலைக்கார மாரிக்கும் இந்த காங்கிரஸ் தொழிலாளர் தொண்டனுக்கும் எவ்வளவு வித்தியாசம் ! இந்த ஏழு வருஷங்களில் அவன் எவ்வளவு கஷ்டப்பட்டானோ ! எவ்வளவு கற்றுத் தெரிந்து கொண்டானோ !

"நீங்கள் காங்கிரஸில் மெம்பரா? " மாரி கேட்டான்.

"இல்லை. ஆனால் நானும் காங்கிரஸையும் காந்தியையும் பின்பற்றுகிறேன். கலேஜில் நான் காங்கிரஸ் நோட்டீஸ்களை

வினியோகிப்பதுண்டு. பிறகு இன்றைக்கு மறியல் செய்யும்போது அரஸ்ட் செய்யப்பட்டேன்."

"அப்போ அகஸ்மாத்தாகத் தான் இங்கு வந்து சேர்ந்தீர்கள்" என்றான் மாரி.

"அரஸ்ட் செய்வார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. ஆனால் அதைப் பற்றி எனக்கு வருத்தமில்லை. முன்னேயே இயக்கத்தில் சேர்ந்திருப்பேன். ஆனால் பெற்றோர்களைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே."

"இந்த காலத்தில் தாய் தகப்பன் பேச்சைக் கேட்டு பிரயோஜனம் இல்லை." மாரி தன் அபிப்பிராயங்களை வெளியிட ஆரம்பித்தான். "அதிலேயும் என்னைப் போல் சாப்பாட்டுக்கு பாடுபட வேண்டியவர்கள் பெரியவர்களுக்கு மரியாதை, கீழ்படிதல் என்பதை யெல்லாம் கவனிக்க முடியாது. எங்களுக்கு வேண்டிய ஒவ்வொரு நன்மைக்கும் கஷ்டப்பட்டு போராடவேண்டியிருக்கிறது. நான் என் தகப்பன் பேச்சைக் கேட்டிருந்தால் இன்னும் கிராமத்தில் ஒரு ஏக்ரா நிலத்தில் மாரடித்துக் கொண்டிருப்பேன். கடனும் நிறைய ஆகியிருக்கும்.—உங்கள் தகப்பனருக்கு." கடைசி வார்த்தைகளைச் சொல்லி மாரி சிரித்தான்.

"எல்லாரும் கிராமத்தை விட்டுப் போய் விட்டால் விவசாயம் செய்வது யார்?" என்று கேட்டான் குமார். "என்ன இருந்தாலும் நாம் நிலத்தில் விளைவதை சாப்பிட்டுத்தானே தீரவேண்டும்."

"உங்கள் தகப்பனர் ஏன் கிராமத்தை விட்டு வந்து விட்டார்?" மாரி திருப்பிக் கேட்டான். "ஏனென்றால்

மில்லில் லாபம் இருக்கிறது, விவசாயத்தில் இல்லை. கிராமத்தை விட்டு நகரத்துக்குப் போவது எல்லோருக்கும் வழக்கமாகி விட்டது."

"ஒருநாள் மில்லில் லாபம் வராவிட்டாலோ?" பள்ளிக்கூடத்தில் படித்த பொருளாதார சாஸ்திரம் இப்போது குமாருக்கு உதவியாய் இருந்தது. "துணி என்ன, சாப்பாட்டுக்கு அடுத்தபடிதானே?"

"அது வருவதற்கு முன்னால் இன்னும் ஏதாவது மாறுதல்கள் ஏற்படும்" என்றான் மாரி.

"எனக்கு கிராமத்தின்மேல் அதிகப் பற்றுதல் உண்டு. நான் நம் கிராமத்திற்குப் போய் அநேகச் சீர்திருத்தங்கள் செய்ய எண்ணியிருக்கிறேன்."

இப்போது நம் கிராமத்திற்குப் போயிருக்கிறீர்களா? ரொம்ப மாறிவிட்டது" மாரி சொன்னான். "என்னமோ எனக்கும் கிராமத்தின்மேல் ஆசைதான். எண்ணெ, கிரீஸ், பஞ்சுதூசு பூசிக்கொண்டு இரும்பு யந்திரங்களில் வேலை செய்வதைவிட காடு தோட்டங்களில் எவ்வளவோ நன்றாய் இருக்கும். வெய்யில் நேரத்தில் ஆற்றில் குளித்துவிட்டு ஆலமர நிழலில் தூங்குவதைவிட வேறு என்ன சுகம் வேண்டும்! ஒருநாள் நானும் திரும்பிப் போவேன் ஒரு வேளை." மாரி தனக்குத் தானே பேசிக் கொள்வதுபோல தோன்றியது குமாருக்கு. "நிலத்தை உழுவதிலும் நிலத்தின்மேல் ஆசை கொள்வதிலும் உபயோகம் இருந்தால்! ஆனால் அது வரைக்கும், மில்லிலானாலும் சரி, ஜெயிலிலானாலும் சரி, என் காலத்தைக் கடத்துவேன். ஆனால் உங்கள் சமாச்சாரம் வேறு........"

"இல்லை மாரி. என் சமாச்சாரம் வேறே அல்ல. நானும் உன்னைப்போல் பெற்றோர் இஷ்டத்திற்கு மாறாகவே ஜெயிலுக்கு வந்திருக்கிறேன்" என்று குமார் இடைமறித்தான்.

இவர்களுடைய சம்பாஷணை திடீரென்று முடிவுக்கு வந்தது. அந்த அறையின் இரும்புக் கதவுகள் திறக்கப் பட்டன. "காலேஜ் பசங்களையெல்லாம் இன்ஸ்பெக்டர் ஐயா கூப்பிடறாரு வாங்கொ" என்று இரண்டு ஜவான்கள் கூப்பிட்டார்கள்.

மாணவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். "உங்களுடைய பெயர், விலாசம் கேட்பதற்காக இருக்கும்" என்றான் மாரி.

மாணவர்கள் தயக்கத்துடன் வெளியில் சென்றார்கள். "வீட்டுக்கு அனுப்பினால் போகாதீர்கள், திரும்பவும் ஜெயிலுக்கு வாருங்கள்" என்று கைதிகளுக்குள் ஒருவன் சத்தம் போட்டான்.

அத்தியாயம் பத்து

அவர்கள் வந்த வழியிலேயே திரும்பவும் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆனால் இப்போது அவர்கள் நிசப்தமாய் இல்லை. மற்ற கைதிகளுடைய சத்தமும், உற்சாகமான வார்த்தைகளும் அவர்களுடைய பயத்தைப் போக்கிவிட்டன. "உண்மையான பெயரும், விலாசமும் சொன்னால் என் தகப்பனருக்கு வேலை போய்விடும்." என்றான் ஒரு மாணவன். மற்றவர்களும் தாழ்ந்த குரலில் பேசிக்கொண்டார்கள்.

கம்பி அறைகள், ஹால், படிக்கட்டு முதலியவைகளைத் தாண்டி ஒரு அறைக்குள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்த போலீஸ்காரர்கள் அறையின் வெளியே நின்றுகொண்டு கதவை மூடிக்கொண்டார்கள். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சபாபதிப் பிள்ளை அவர்களை உள்ளே வரவேற்றார். அவர் ஒரு நாற்காலியின்மேல் உட்கார்ந்திருந்தார். அவருக்கு முன்னால் இருந்த மேஜையின் மீது அநேக காகிதங்கள், பேனா, மைக்கூடு முதலியன கிடந்தன. அவருடைய அதிகாரத்திற்கு அறிகுறியாக ஒரு பிரம்பும் மேஜைமேல் இருந்தது. சுவற்றின் மூலையில் ஒரு டெலிபோனும், அவருடைய நாற்காலிக்குப் பின்னால் சில துப்பாக்கிகளும் மாட்டப்பட்டிருந்தன. அவருடைய உடுப்பும், பார்வையும் ஒருவரை பயமுறுத்தாவிட்டாலும் துப்பாக்கிகளாவது அவர்களுக்கு அச்சமூட்டும்.

சபாபதிப் பிள்ளை திடகாத்திரமான மனிதர். கறுத்து அடர்ந்த மீசைதான் அவருடைய முகத்தில் முக்கியமான அம்சம். தூக்கம் இல்லாததால் அவருடைய கண்கள் சிவந்திருந்தன. சிகப்பு சரிகை உருமாலையும் காக்கி நிற உடுப்பும் தரித்துக்கொண்டிருந்தார்.

உள்ளே வந்த மாணவர்கள் தயங்கி நின்றனர். அவ்வறையிலுள்ள நிம்மதியும் அதிகாரியினுடைய தோரணையும் அவர்களுடைய நிலைமையை நன்ருக எடுத்துக் காட்டின.

'உட்காருங்கள்' என்று இன்ஸ்பெக்டர் சுவரோரம் இருந்த ஒரு பெஞ்சைக் காட்டினுர். கைதிகள் உட்கார்ந்தார்கள்.

"மாணவர்களாகிய உங்களால் அதிக தொந்திரவு ஏற்படுகிறது" என்று பிள்ளை ஆரம்பித்தார். "அதற்காக நீங்கள் தண்டனை அடையவேண்டியது நியாயம். ஆனுல் உங்களுக்குச் சிறு வயது. சீக்கிரம் உங்களுடைய தவறை உணர்ந்து வெட்கப்படப் போகிறீர்கள். உங்களுடைய நன்மையில் பலர் கருத்துடனிருக்கிருர்கள். அதனுல் நீங்கள் இஷ்டப்பட்டால் உங்களுக்கு இந்தத் தடவை மன்னிப்புக் கொடுத்துவிடலாம் என்று தோன்றுகிறது." தான் சொன்னதை கிரகிப்பதற்காக இன்ஸ்பெக்டர் தம் பேச்சை கொஞ்சம் நிறுத்தினுர். பின்பு கைதிகளை நன்ருகப் பார்ப்பதற்காக நாற்காலியில் திரும்பி உட்கார்ந்து கொண்டு ஒரு கையால் தம் அழகிய மீசையைத் தடவிக்கொண்டே அதிகார தோரணையுடன் பேசலானுர். " உங்களை இப்போதே ஜெயிலுக்கு அனுப்பி வாழ்க்கையைப்

பாழ்படுத்த என்னால் முடியும் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். இருந்தாலும் ஏதோ போனால் போகிறது என்று இந்தத் தடவை கருணை காட்ட முடிவு செய்து விட்டேன். ஏன்? என்ன சொல்கிறீர்கள்?"

இந்த சமரஸப்பேச்சு சபாபதிபிள்ளைக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை; அதிலும் தான் குறும்புக்காரர்கள் என்று நினைப்பவர்களோடு. அவருக்கு அதிகாரம், சட்டம் இவற்றில்தான் நம்பிக்கை. தமது போலீஸ் வாழ்க்கையில் திருடர், கொலைகாரர் முதலியவர்களிடையே பெரும்பாலும் பழகியிருந்தார். ஆகவே மனிதத் தன்மையைப்பற்றி அவருக்கு மிகவும் கீழ்தரமான அபிப்பிராயம் இருந்து வந்தது. அன்றியும் ஆங்கில அரசாங்கத்துக்கு ஊழியம் செய்து அதில் நம்பிக்கை கொண்டிருந்தார். அரசாங்கத்துக்கு எதிரிடையாகப் பேசுபவர்களையும் காரியம் செய்பவர்களையும் வெறுத்தார். தனக்குமேல் அதிகாரம் செலுத்தும் ஆங்கில அதிகாரிகளிடம் பயமும், மரியாதையும், தன் நாட்டாரிடம் அலட்சியமும் உண்டு. மற்றவர்கள் தனக்குக் கீழ்ப்படியாத போது பயமுறுத்தல்களுக்கும் சில சமயங்களில் அடிக்கவும் அவர் பின்வாங்குவதில்லை. யூகம், சாதுர்யம், சமயோஜித புத்தி அவரிடம் கிடையாது. ஆகவே தமது வேலையை நன்றாகச் செய்பவர் என்று பெயர் வாங்கியிருந்தார். அன்று ஒரு காங்கிரஸ் தொண்டர் இறந்ததற்கு மேற்கூறிய அவருடைய குணங்களே காரணம் என்று சொல்லலாம். கொஞ்சம் நிதானத்தை உபயோகித்திருந்தால் நிலைமை இவ்வளவு மோசமாயிருக்காது. சமயோஜித புத்தியைப் பற்றி அப்போதுதான் அவருடைய மேலதிகாரி அவருக்கு ஒரு கடுமையான பிரசங்கம் செய்திருந்தார்.

தான் உண்மையுடன் உழைத்த ஆங்கிலேய அதிகாரியே தன்னைக் குற்றம் கூறியது அவர் மனதை மிகவும் புண் படுத்தியிருந்தது. இந்தியருடைய மனப்பான்மை ஆங்கி லேயருக்குத் தெரியாதென்றும் அதனால் அவர்கள் தாராள புத்தியுடன் நடந்துகொள்கிறார்களென்றும் அவர் எண்ணி யிருந்தார். சிக்கலான பிரச்னைகளை அலசி முடிவு செய்யும் திறமை அவருக்கு இல்லை. இருந்தாலும் உத்திரவுக்கு கீழ் படிந்து நடக்கவேண்டியது அவருடைய கடமை. அதனால் தான் மாணவர்களிடம் அந்த சமரஸப் பேச்சு.

"சரி, உங்களுடைய பதில் என்ன? என்று கோப மாகக் கேட்டார். ஆனால், கைதிகளோ ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றனர்.

"அப்படியானால் எங்களை விடுதலை செய்யப்போகிறீர் களா?" குமார் கேட்டான்.

"இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பதாக ஒப் புக் கொண்டு கையெழுத்திட்டால், ஆம்" இன்ஸ்பெக்டர் நாற்காலியிலிருந்து எழுந்து மேலும் கீழும் நடக்கலானார். "நீங்கள் கையெழுத்துப் போடாவிட்டால் நான் பார்த்து என்ன செய்தாலும் செய்ய முடியும்" தன் அதிகாரத்தை அவர்கள் உணர வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே அவர் அம்மாதிரி பேசினார். பின்பு நிபந்தனைகள் உள்ள காகிதங்களை அவர்களுக்கு வினியோகம் செய்தார்.

சர்க்காருக்கு கீழ்படிந்து நடப்பதாகவும் சட்ட மறுப்பு இயக்கத்தில் இனிமேல் கலந்து கொள்வதில்லை என்றும் தமக்கு கவர்ன்மெண்டில் பூரண நம்பிக்கை இருப்பதாகவும்,

எவ்வித நிர்ப்பந்தமுமின்றி தாமாக இந்நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு கையெழுத்திட்டதாகவும் அக்காகிதங்களில் கண்டிருந்தன. மற்றும் அதிகாரிகளின் உசிதம் போல் அக்காகிதங்களை தம் கையெழுத்துடன் வெளியிட உரிமை யுண்டு என்றும் கையெழுத்து செய்யவேண்டியிருந்தது.

கைதிகளுக்கோ இந்த நிபந்தனைகளில் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. இருந்தாலும், சந்தோஷமான கல்லூரி 'வாழ்க்கை, தம் பெற்றோர்கள், தம் சொந்த சுதந்திரம் முத லியவை அவர்களை கையெழுத்து செய்யத் தூண்டின. மற்ற மாணவர்கள் அவர்களிடம் வைத்த நம்பிக்கை, கைதிகளின் உற்சாகம், நட்பு, இவற்றை எல்லாவற்றையும் விட முப்பது கோடி மக்களின் சுதந்திரம் இவைகளும் அவர்களின் மனக் கண் முன் தோன்றின. இந்த இழிவான நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு தாம் சம்பாதித்த பெருமையை இழப்பதா? இந்த நெருக்கடியான நிலைமையில் உறுதியிழந்த இதயங்கள் ஒன்றிரண்டு இருந்தன. ஆனால் அவர்களுக்கு பேச நாவெழவில்லை.

"விடுதலை செய்தால் நாங்கள் வீட்டுக்குப் போகிறோம். ஆனால் எதிலும் கையெழுத்துப் போடமாட்டோம்," என்று குமார் எல்லோரையும் சேர்த்துப் பேசினான்.

"உனக்கு மட்டும் நீ பேசினால் போதும். மற்றவர் களுக்காக அச்சகாரம் வாங்கிக்கொண்டு பேசாதே." சபா பதிப் பிள்ளையின் தொனி ஒலித்தது. "நீயும் ஒரு குட்டி மகாத்மா என்று நினைத்துக்கொண்டாய் போல் இருக்கி றது. உன் பேர் என்ன?" மேஜைக்குப் பக்கத்தில் சென்று

ஒரு காகிதத்தை எடுத்துப் பார்த்தார். "கெட்டிக்காரத்தன மாக வேறே பெயர் சொல்லாதே. எல்லோருடைய பெய ரும் விலாசமும் உங்கள் காலேஜ் மூலமாக எனக்குத் தெரியும்."

" குமார் "

" ஓகோ " இன்ஸ்பெக்டர் முகத்திலிருந்த சிடுசிடுப்பு கொஞ்சம் மறைந்தது. "நீ ராமச்சந்திர உடையார் மகனா? அவர் மிகவும் நல்ல மனிதர். பெரிய மனிதர். அவருக்கா இந்த மாதிரி மகன்! நீ ஜெயிலுக்குப்போனால் அவருடைய அந்தஸ்தை எவ்வளவு பாதிக்கும் தெரியுமா?"

குமார் பதில் சொல்ல வில்லை.

"உங்களைப் பற்றி என்ன?" இன்ஸ்பெக்டர் மறுபடியும் தன் சிடுசிடுப்பை வரவழைத்துக்கொண்டார். உங்களிடம் கெஞ்சிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. உங்களுடைய குடும்பங்களை குட்டிச்சுவர் பண்ண வேண்டுமா உங்களுக்கு?"

யாரும் பதில் சொல்லவில்லை.

" சரி, அது தான் உங்களுடைய முடிவா?"

" ஆம் " என்றான் குமார்.

நாளைக் காலை பதில் சொல்லுங்கள். கையெழுத்துப் போடாவிட்டால் அப்புறம் தெரியும்."

பிறகு ஜவான்களை கூப்பிட்டு இவர்களை வெளியே கூட் டிக்கொண்டு போகச் சொன்னார்.

அத்தியாயம் பதினொன்று.

மாரியுடன் பேசிக் கொண்டிருந்தபோது குமாரின் இதயத்தில் தன்னைப்பற்றிய மனவெழுச்சி தோன்றியதே தவிர சுயராஜ்யம், சத்தியாகிரகம், தொழிலாளர் இயக்கம் இவற்றைப்பற்றிப் பேசினாலும், அவைகள் அவன் மனதை பூரணமாகக் கவர்ச்சி செய்யவில்லை. அன்றைய நடவடிக்கைகளால் தனக்கும் வெளியுலகுக்கும் உள்ள சம்பந்தம் மாறி விட்டதா? தனக்கும் தன் பெற்றோருக்கும் உள்ள சம்பந்தம் மாறுமா? இது எல்லாம் முடிந்த பிறகு என்ன நடக்கப் போகிறது? ஆம், தனக்கு இன்னும் என்னென்ன ஏற்படப்போகிறது?

மாரியின் உதவியால்—அங்கு அவன்தானே தனக்குத் தெரிந்தவன்—இக்கேள்விகளுக்கு விடை அறியக் காத்துக்கொண்டிருந்தான். ஆனால் திரும்பி வந்தபோது மாரி அங்கு இல்லை: ஆழ்ந்த கேள்விகள் வெளிவராமல் உள்ளத்திலேயே குமுறிக் கொண்டிருந்தன. மற்ற கைதிகள் வந்து பேசினார்கள், சிரித்தார்கள். எத்தனையோ விஷயங்களைப்பற்றி தர்க்கம் செய்தார்கள். அவர்கள் பேசிய தினுசைப் பார்த்தால் ஜெயிலில் இல்லாமல் வேறு எங்கேயோ இருக்கிறார்கள் போல் தோன்றியது. குமார் மற்ற மாணவர்களிடம், அவர்களுக்கு இஷ்டமிருந்தால் போலீஸ் இன்ஸ்பெக்டரின் நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொள்ளலாம் என்று சொன்னான். ஆனால் அவர்கள் மறுத்து விட்டார்கள். கைதி என்னும் அசைக்க முடியாத

உண்மைக்கு முன்னால், இந்தப் பேச்சு, சம்பாஷணை, சிரிப்பு, இவைகள் அர்த்தமற்றவைகளாக குமாருக்குத் தோன்றின.

மற்றவர்கள் எல்லோரும் பேச்சில் ஈடுபட்டிருந்த போது குமார் தன் சுற்றுப் புறங்களைக் கூர்ந்து கவனித்தான். மாரி மட்டும் அன்றி இன்னும் சில கைதிகளையும் அங்கு காணவில்லை. ஜனத்தொகை குறைந்ததால் அந்த அறை பெரிதாகத் தோன்றியது. தரை வெகு நாளாகக் கூட்டப்படவில்லை. குப்பை, தூசு, சோற்றுப் பருக்கைகள், எரிந்துபோன நெருப்புக் குச்சிகள் நிறைந்திருந்தன. கம்பிகளுக்கும் சுவற்றிற்கும் இடையே சிலந்திக் கூண்டுகள் தொங்கிக் கொண்டிருந்தன. மூலையில் ஒரு சிறிய பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. சுவற்றின் நிறமோ யாராலும் கண்டு பிடிக்க முடியாது. உஷ்ணத்தினாலும் வியர்வையினாலும் காற்றில் நாற்றம் கலந்திருந்தது.

தான் எங்கிருக்கிறான் என்று தன் தகப்பனாருக்கு இதற்குள் தெரிந்திருக்குமா, என்று குமார் யோசித்துப் பார்த்தான். கைதிக்கூண்டில் அடைக்கப்பட்டால் எப்படியிருக்கும் என்று தன் தாயாருக்குத் தெரியுமா? குழந்தையாய் இருக்கும்போது கல் தடுக்கி விழுந்து காயமானால் தாயாரிடம் ஓடி அழுவதுண்டு. அப்படியே இப்போதும் அவளிடம் போய் அழுதால் மனதிலிருக்கும் பாரம் குறையும் என்று குமாருக்குத் தோன்றியது. ஆனால் இப்போதோ தனக்கு வயதாகி விட்டது. எப்படி அழ முடியும்? ஜெயிலில் இருந்தால்; எப்படி அவளைப் பார்க்க முடியும்? தன் தாயைப் பார்க்க முடிந்தால், அவளுடன் பேச முடிந்தால்,

தன் நடவடிக்கையை விளக்கிச் சொல்ல முடிந்தால், அவ ளுக்கு எல்லாம் அர்த்தமாகும். அர்த்தமாகியே தீரவேண் டும். அப்படி அர்த்தமாகாவிட்டாலும், தனக்காக கடவுளை யாவது வழிபாடு செய்வாள்.

ஆனால் வழிபாட்டினால் என்ன உபயோகம்? குமார் ஒரு நாஸ்திகன்; கடவுளின் மேல் நம்பிக்கை கிடையாது. பதி னைந்தாவது வயதுக்குப் பிறகு கோவிலுக்குப் போனதோ, பிரார்த்தனை செய்ததோ இல்லை. கடவுள் என்று ஒரு பொருள் இருந்தால் ஆகாய விமானம் ரேடியோ முதலிய வற்றைக் கண்டு பிடித்தவர்கள் இன்னும் கடவுளைக் கண்டு பிடிக்காமலா இருப்பார்கள், என்று சில வைதிகப் பெரியோ ரிடம் தர்க்கம் செய்தது ஞாபகத்துக்கு வந்தது. இம் மாதிரி யெல்லாம் பேசி அவர்களுடைய மன நிம்மதியைக் குலைத்து விட்டான். தான் அரஸ்ட் செய்யப்பட்டதைப் பற்றிக் கேள்விப்பட்டால் அப்பெரியோர்கள் என்ன நினைப் பார்கள்? அவர்களுடைய எண்ணங்களைப் பற்றியும் பேச் சுகளைப் பற்றியும் கற்பனை செய்து பார்த்தான். பாவக் குழியில் விழுந்துவிட்ட தன்னை எப்படிக் காப்பாற்றுவது, வைதீக மார்க்கத்திற்கு எப்படித் திருப்புவது என்றெல்லாம் யோசனை செய்வார்கள். ஆனால் கைதியானதைப் பற்றித் தெரிந்ததும், 'படிப்பின் வினை இது. இனி அவனுக்கு விமோசனம் இல்லை' என்று விட்டுவிடுவார்கள். அவர் களுக்கு தான் ஒரு நாஸ்திகன்; இக்காலத்தவரின் கெட்ட நடத்தைக்கு ஒரு அத்தாட்சி. அவர்களுடைய வைதீ கத்தைத் தன் போன்றவர்களிடமிருந்து காப்பாற்றுவதற் காக ஆங்கில அரசாங்கத்துக்குத் தம் வழிபாட்டைச் செலுத்துவார்கள். அவர்களுடைய கடவுளைக்கூட ஆங்கில

அரசாங்கம் தான் காப்பாற்ற வேண்டும். குமாருக்கு சிரிப்பு வந்தது.

ஆயினும் தன் கேள்விகளுக்கெல்லாம் யார் பதில் சொல்லுவார்கள்? அதுவும் ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால். ஏன்? தனக்குத்தானே பதில் சொல்ல வேண்டும். ஆனால் தனக்கு பதில் தெரியாத போது? அல்லது தெரிந்தும் சொல்வதற்கு வார்த்தையில்லாவிட்டால்? யாரைக் கேட்பது? எங்கே திரும்புவது? கடவுளிடமா? ஆபத்தில் நேசன், அனாதை ரக்ஷகன் என்றெல்லாம் குமார் கேள்விப் பட்டிருந்தான். இதுதான் தனது ஆபத்து. இப்போது தான் அனாதை. தான் வழிபடலாமா? "உனது நாஸ்திக மரத்துக்கு வேரில்லை." என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். இல்லை, வழிபாட்டில் பிரயோஜனமில்லை. யாரோ ஒருவர் தன்னிடம் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. "கடவுள் துணையின்றி வாழ்க்கையில் நடப்பது மிகவும் கஷ்டம், ஆனால் அதுவே வீரம்." ஆம், தன்னைக் காப்பதற்கு இப்போது கடவுள் இல்லை. அமிழ்ந்தாலும், மிதந்தாலும், தன் மன வலிமையாலே வாழ்க்கைக் கடலில் நீந்தவேண்டும். ஆனால் தான் கடவுளை விட்டதும் காந்திஜியைப் பின்பற்ற ஆரம்பித்தான். அதுதான் ஆச்சரியம்! காந்தி மதப்பற்றுள்ளவர்தானே. எப்படியோ சத்தியாக்கிரகம் எல்லா இடத்திலும் பரவியிருந்தது. சுவாசிக்கும் காற்றில்கூட சத்தியாகிரக வாசனை வீசிற்று. அதைப் பற்றி நினைக்காவிட்டாலும் அது ஒருவரையும் விடவில்லை. அதைத் தப்பிக்க முடியாது.

வழிபாட்டுக்கு பதிலாக தான் தீர ஆலோசனை செய்ய வேண்டும். தனது வாழ்க்கையை கட்டுப்பாடு செய்து தனது விதிக்கு தானே எஜமானன் ஆகவேண்டும்.

குமார் யோசனை செய்ய ஆரம்பித்தான். தான் ஏன் அங்கு இருக்கிறான்? அந்த நாற்றமடிக்கும் அறையில் சத்தம்போட்டுப் பேசி கொஞ்சமும் நிம்மதி அளிக்காத ஜனங்களின் மத்தியில் எப்படி வந்து சேர்ந்தான்? எப்படி அந்த போலீஸ்காரர்கள் தன்னை ஒரு பொம்மை மாதிரி அங்கும் இங்கும் நடத்திச் செல்லுகிறார்கள்? தன்னுடைய பங்களாவில் சுகமாக இருப்பதற்கு பதிலாக ஏன் இங்கு சோர்வுடனும் பசியுடனும் கிடக்கிறான்? ஆம், மிகவும் பசியெடுத்தது. காலையிலிருந்து சாப்பிடவில்லை. இதயத்தில் குழப்பம் இருந்தமாதிரி வயிற்றில் காலியிடம் இருந்தது. இத்தனையும் எப்படி இவ்வளவு சீக்கிரம் நடந்தது? எல்லாம் எதற்காக?

•

தியாகத்தில் கீர்த்தியும், பெருந்தன்மையும் இருக்கிறதென்றும், அதிலும் சத்தியாக்கிரகமே புனிதமான தியாகமென்றும் பலநாளாக குமார் கனவுகண்டான். எல்லாவற்றையும் தேசத்திற்காக அர்ப்பணம் செய்து, பெருமை, வீரம், இவற்றின் சிகரத்தை அடையப்போவதாக நினைத்தான். ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. குப்பை, வியர்வை நாற்றம், பசி, இவற்றின் மத்தியில் என்ன பெருமை, கீர்த்தி இருக்கமுடியும்? மத்தியானம் வெற்றிகரமாக ஹர்த்தால் செய்ததில் சந்தோஷம் இருந்தது, காரியசித்தியால் ஏற்பட்ட நிம்மதி இருந்தது. ஆனால் ஜெயிலில் ஒன்றும் இல்லை, மனசர்ச்சை தான். அப்படியிருந்தும் தான் ஏன் அங்கே வந்தான்! நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏன் வெளியே போகவில்லை? ஏன் ஆயிரக்கணக்கானவர்கள் தினமும் இதேமாதிரி நடந்து கொண்டு வருகிறார்கள்? இது என்ன, ஒரு பொது ஜனப்

பைத்தியமா? ஆண், பெண் ஆகிய எல்லோரையும் பலவந்தமின்றி ஜெயிலுக்கனுப்பும் இந்த சக்திதான் என்ன?

தன்னை ஜெயிலுக்கனுப்பிய தூண்டுதல் என்ன? அது தான் பிரசனை. தான் பார்த்த வரையிலும் ஜெயில் வாழ்க்கையை வெறுக்க ஆரம்பித்தான். ஆனால் வெளியேயிலும் நிம்மதியுடனும் சந்தோஷத்துடனும் இருக்க முடியாது என்று தெரியும். ஏன்? இது ஏன் இப்படி? நிபந்தனைகளுக்குட்பட்டு வெளியேற மறுத்தது சரியா? சரியானது என்று சொல்லக்கூடிய செய்கை ஒன்று இருக்கிறதா? அது மட்டும் தனக்குத் தெரிந்திருந்தால்! செய்கையற்று ஜெயில்கம்பிகளுக்குப் பின்னல் இருக்கும்போது யோசனை செய்யவேண்டியிருப்பதும், தன்கட்டுப்பாட்டுக்கு உட்படாத பல சக்திகள் பல திசைகளில் இழுத்தும் இடத்தைவிட்டு நகரமுடியாமல் இருப்பதும், இதயத்தைச் சுக்கு நூருக பிரிக்க வேண்டியிருப்பதும், முரண்பாடான எண்ணங்களுக்கும், கொள்கைகளுக்கும், ஆசைகளுக்கும் மத்தியில் அகப்பட்டு வாழ்கைச் சுழலில் தத்தளிக்கவேண்டியிருப்பதும்......................ஐயோ, சந்தேகம் என்னும் வேதனையே!

அத்தியாயம் பன்னிரெண்டு.

அதிர்ஷ்டவசமாக உடையார் போனபோது கிருஷ்ண சாமி ரெட்டி வீட்டில் இருந்தார். அவரிடம் தாம் வந்த விஷயத்தைச் சொன்னார் உடையார். "நீங்கள் எப்படி யாவது அவனை உடனே விடுவிக்கவேண்டும். நீங்கள் பெரியமனிதர். சர்க்காரிடம் உங்களுக்கு செல்வாக்கு இருக்கிறது. எத்தனையோ அதிகாரிகளைத் தெரியும். இந்தக் கஷ்டத்தில் நீங்கள்தான் எனக்கு உதவிசெய்ய வேண்டும். வீட்டில் எல்லோரும் அழுதுகொண்டிருக்கிறார்கள். அவனுக்கு நான் எவ்வளவோ ஏற்பாடுகள் செய்திருந்தேன். இப்போது அது எல்லாம் வீண். எப்படியாவது விடுதலையானால் போதும். கிராமத்திலாவது கொண்டுபோய் வைத்துவிடலாம். இனிமேல் ஒரு தொந்தரவும் கொடுக்காமல் நான் பார்த்துக் கொள்ளுகிறேன். இந்தத் தடவை எப்படியாவது கலெக்டரைப் பார்த்து நீங்கள் சிபார்சு செய்யவேண்டும்." என்றெல்லாம் முறையிட்டார் உடையார்.

உடையாருக்கு உதவிசெய்ய கிருஷ்ணசாமி ரெட்டிக்கும் ஆசையிருந்தது. ஆனால் தமது செல்வாக்கின் வரம்பு உடையாருக்குத் தெரியாது. இருந்தாலும் கலெக்டர் ஸ்லேடர், சி. ஐ. ஈ., ஐ. சி. எஸ். துரையை டெலிபோனில் கூப்பிட்டு, மறுநாள் காலையில் உடையாரும் தாமும் அவரைப் பார்க்க ஏற்பாடு செய்தார்.

பிறகு உடையார் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தன் மகனைப் பார்க்க முயற்சி செய்தார். ஆனால் இதில்

அவர் வெற்றி அடையவில்லை. அங்கிருந்த சப் இன்ஸ் பெக்டர் ராஜீயக் கைதிகளைப் பார்ப்பதற்கு அனுமதிக்கத் தமக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்தார். அவருக்கு உடையாரை நன்ருகத் தெரியும். இருந்தாலும் இந்தச் சமயத்தில் திடீரென்று யாராவது வந்துவிட்டால்? சாதாரணக் கைதிகளைப் பார்ப்பது என்ருல் சுலபம். ஆனல் ராஜீயக் கைதிகளைப்பற்றி மிகவும் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று உத்திரவு" என்ருர் இன்ஸ் பெக்டர்.

மறுநாள் காலையில் உடையார் குடும்பத்தில் சோகம் குடிகொண்டிருந்தது. எல்லோரும் சப்தமின்றி தத்தம் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தனர். வேலைக்காரர்கள் மட்டும் ஒருவரோடொருவர் குசுகுசு என்று பேசிக் கொண்டனர். பிரகாசத்துடன் எரிந்து கொண்டிருந்த சூரியனை திடீரென்று மேகங்கள் மூடிக்கொண்ட மாதிரி இருந்தது. ராஜலட்சுமி அம்மாள் வெகு நேரம் பூஜை அறையிலிருந்து வெளிவரவில்லை. ராமச்சந்திர உடையார் கலெக்டரைப் பார்ப்பதற்குத் தயாரானர். சலவை மல் வேஷ்டியும் சில்க் ஜிப்பாவையும் தரித்துக் கொண்டார். விசிரி மடிப்புப் போட்ட அங்க வஸ்திரம் பாம்பு மாதிரி அவர் கழுத்தைச் சுற்றித் தொங்கிக் கொண்டிருந்தது. நல்ல வேஷ்டி கட்டவோ அல்லது வெளியே போகவோ கொஞ்சமும் இஷ்டமில்லை. ஆனல் கலெக்டரைப் பார்க்க வேண்டுமே? ஆங்கிலேயர்கள் இந்தியரை அவர்களுடைய உடைக்குத் தகுந்த மாதிரி தான் நடத்துவார்கள் என்று கேள்விப்பட்டிருந்தார். ஆகவே தமது அந்தஸ்தையும் செல்வாக்கையும் எடுத்துக்காட்டி கலெக்டர் மனதில் நல்ல

அபிப்பிராயம் ஏற்படுத்த எண்ணித்தான் நன்றாக உடை தரித்துக் கொண்டார்.

கலெக்டரைப் பேட்டி கண்டபோது சம்பாஷணை ஆங்கிலத்தில் நடந்தது. ராவ் பகதூர் கிருஷ்ணசாமி ரெட்டி உடையாருக்காக பரிந்து பேசினார். குமார் தப்பிதமாகத் தான் கைது செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றும், உடையாருடைய குடும்பம் விக்டோரியா மகாராணி காலத்திலிருந்து தலைமுறை தலைமுறையாக ராஜ விசுவாசத்துடன் அரசாங்கத்திற்கு சேவைசெய்து இருப்பதைப்பற்றியும், உடையாருடைய பூஸ்திதி, சொத்து, பெருந்தன்மை முதலியவற்றைப்பற்றியும் விவரமாக எடுத்துச்சொன்னார். உடையாரோ தமிழில் தம் நன்றியைக்குறித்து சில வார்த்தைகள் சொல்லிவிட்டு பின்பு ரெட்டி ஆங்கிலத்தில் சொன்னதற்கெல்லாம் 'ஆம்' என்று தலை அசைத்துக் கொண்டே இருந்தார்.

"மிஸ்டர் ரெட்டி, இந்தப் பையன்தான் காலேஜ் ஹர்த்தாலுக்கு முக்கியமாக இருந்திருக்கிறான் என்று எங்களுக்குத் தெரியவந்திருக்கிறதே? அப்படி தப்பிதமாக அரஸ்ட் செய்யப்பட்டிருந்தாலும், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தால் விடுதலை செய்திருப்பார்களே" என்றார் கலெக்டர்.

"ஓ அது இந்தக் காலத்து பையன்களின் கர்வம்." என்று ரெட்டி பதில் சொன்னார். "இந்த மாணவர்களுக்கு உண்மையில் ஒன்றும் தெரியாது. வெளியே விட்டால் எல்லாவற்றையும் நாளைக்கே மறந்து விடுவார்கள். ஏதோ உற்சாகத்தில் ஹர்த்தால் செய்திருக்கலாம். ஆனால்

இவர்கள் மற்ற பையன்கள் கேலி செய்வார்கள் என்று பயந்து தான் நிபந்தனைகளுக்கு உட்பட மறுத்திருப்பார்கள். வேண்டும் என்றே யோசனை செய்து சட்ட மறுப்பு செய்பவர்களுக்கும் இந்த மாதிரி உற்சாகத்தினால் இதில் சேருபவர்களுக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் இதில் தலையிட்டு இந்த முட்டாள் மாணவர்களை போலீசார் பெரிய 'தேசபக்தர்' களாக்குமுன் நிறுத்தவேண்டும்."

"விடுதலையானால் பிறகு ஒழுங்காக நடந்துகொள்ளுவார்கள் என்று நீங்கள் எனக்கு உறுதி சொல்ல முடியுமா?" கலெக்டர் கேட்டார்.

"குமாரசாமி என்னும் பையனைப் பொருத்தவரையில், ஆம். மற்றவர்களும் இனிமேல் ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று நம்பலாம்."

கலெக்டர் தம் மனதுக்குள்ளேயே நினைத்துக் கொண்டார். "நானும் இந்தியாவில் பதினைந்து வருஷமாக உத்தியோகம் செய்து வருகிறேன். ஆனால் இந்தியர்களை மட்டும் இன்னும் தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்த ராவ் பகதூர் கிருஷ்ணசாமி ரெட்டி நம் அரசாங்கத்துக்கு நண்பன் என்று பெயர். இந்த இரண்டு வாரங்களாக காங்கிரஸ்காரர்கள் எல்லோரையும் ஜெயிலில் போடவேண்டும் என்று என்னை அவசரப்படுத்திக்கொண்டிருக்கிறார். அதே ஆசாமி இன்றைக்கு இந்தப் பையனை விடுவிக்கவேண்டும் என்று கேட்கிறார். இந்த பாழாய்ப்போன தேசத்தில் யாரைத் தான் நம்புவது?"

உடையார் மறுபடியும் தமிழில் தம் அந்தஸ்தைப் பற்றியும் இதனால் குடும்பத்துக்கு வரும் கஷ்டத்தைப்பற்றியும்

உருக்கமாகச் சொல்ல ஆரம்பித்தார். ஆனால் கலெக்டருக்கு அது ஒன்றும் அர்த்தமாகவில்லை. கேட்பதற்கும் நேரமில்லை. அவர் கிருஷ்ணசாமி ரெட்டியைப் பார்த்து, நீங்கள் பலவேலை உள்ள மனிதர். உங்களை இனியும் இங்கு நிறுத்திவைக்க எனக்கு இஷ்டமில்லை. இந்த பையனைப் பற்றி கவனிக்கிறேன் என்று உம் நண்பருடன் சொல்லுங்கள்" என்று பேட்டியை முடித்துக்கொண்டார்.

வீட்டுக்கு வரும் வழியில் கிருஷ்ணசாமி ரெட்டியும் உடையாரும் சம்பாஷித்தார்கள்.

"பார்த்தீர்களல்லவா, நானும் என்னால் முடிந்ததை செய்து விட்டேன். இந்த இங்கிலீஸ் அதிகாரிகள் என்ன செய்வார்கள் என்று சொல்வது கஷ்டம். அவர்களுக்காக உண்மையாக நாம் பாடுபட்டாலும், எவ்வளவு உதவிசெய்தாலும் நம்மை நம்பி ஒரு வார்த்தை சொல்லமாட்டார்கள். என்ன நாம் சொன்னாலும் 'அதை சிரத்தையுடன் கவனிக்கிறேன் அல்லது அனுதாபத்துடன் கவனிக்கிறேன்' என்று தான் சொல்வார்கள்" என்றார் ரெட்டி.

"அதில் எனக்கு என்ன திருப்தி?" என்று கெட்டார் உடையார். பிறகு இந்த மாதிரி எண்ணங்களெல்லாம் பையன்களுக்கு எங்கிருந்து வருகிறதோ? எங்கே பார்த்தாலும் இப்படித்தானே இருக்கிறது" என்று தம் மகனைப் பற்றி பிரலாபித்தார்.

"ஆம். இந்த சுயராஜ்யத்தைப்பற்றிய பேச்சு பையன்களின் மனதைக்கவர்ந்துவிட்டது. வாழ்க்கையைப்பற்றி

ஒன்றும் தெரியாததால் அவர்களுடைய சிந்தனைகளைக் கைப் பற்றுவது சுலபம். அன்றியும் காந்தியின் சத்தியாக்கிரகம் கஷ்டமின்றி கீர்த்தியும் பெருமையும் சம்பாதிக்க வழிகாட்டுகின்றது. எல்லோரும் தியாகிகள் என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வயது வந்தால் எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்றார் ரெட்டி.

அவருடைய வீட்டுக்கு முன்னால் கார் வந்து நின்றது. காரை விட்டு இறங்கும்போது, "குமார் விடுதலையானால், இப்போதைக்கு காலேஜுக்கு அனுப்பி வையுங்கள். சீக்கிரம் சரியான ஒரு பெண் பார்த்து கல்யாணம் செய்து விடுங்கள். நேர்வழிக்கு ஒரு பையனைக் கொண்டுவருவதற்கு பெண்சாதிதான் நல்ல மருந்து" என்று சொல்லி விட்டுப்போனார் ரெட்டி.

அன்று சாயந்திரம் குமாரும், மற்ற மாணவர்களும் ஒரு நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்பட்டார்கள்.

"செய்ததை ஒப்புக்கொள்ளும் வரையில் மூங்கில் தடியால் முடிமுடியாய் அடிப்பார்களாமே போலீஸ் காரர்கள்? அதெல்லாம் உண்மையா?"

"இல்லை அம்மா! குமார் சிரித்துக்கொண்டே சொன்னான். "அரசியல் கைதிகளையெல்லாம் போலீஸ்காரர்கள் சந்தோஷத்தோடு வீட்டுக்கனுப்பி விடுவார்கள். ஆனால் இவர்கள் வந்தால் தானே. இவர்கள் தாங்கள் செய்த குற்றங்களையும் செய்யாத குற்றங்களையும்கூட ஒப்புக் கொண்டு ஜெயிலுக்கனுப்பச் சொல்லிக் கேட்கிறார்கள். போலீஸுக்கு என்ன செய்வதென்று தெரியாது. இல்லை. வீதிகளில் தான் தடியடி. உள்ளே போய்விட்டால் ஒன்றும் இல்லை."

"உலகமே புதுசாகி விட்டது." என்றாள் ராஜலட்சுமி அம்மாள். "ஜனங்கள் ஜெயிலுக்குப் போவோம் என்கிறார்கள், போலீஸ்காரரோ அவர்களை வெளியே போங்கள் என்கிறார்கள். எப்படியிருந்தாலும் உன் தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாகையோடு போயிற்றே. இனிமேலாவது நீ ஒரு தகராறுக்கும் போகாதே. அது உன் வேலை அல்ல. உனக்கு என்ன இல்லாமலிருக்கிறது? சொல்லு. நீ ஏன் நிம்மதியில்லாமல் இருக்கிறாய்? உலகத்தில் நம்ம அந்தஸ்து இருக்கிறது. மற்றவர்கள் அதைப் பார்த்தும் பொறாமைப் படுகிறார்கள். சந்தோஷத்துடன் மரியாதையாக வாழ்க்கை நடத்துவதை விட்டு ஏன் எல்லாவற்றையும் கெடுக்கப் பார்க்கிறாய்? நம்ம மாதிரி குடும்பங்களிலிருக்கும் மற்ற பையன்களைப் பார். உன் போல படிப்பும் கெட்டிக்காரத்தனமும் அவர்களுக்கு இல்லை. ஆனால் இந்த மாதிரி காரியங்களில் அவர்கள் மாட்டிக்கொள்வது கிடையாது. நல்ல உடை

யுடுத்திக் கொண்டு மோட்டார் கார்களில் அங்கும் இங்கும் சுற்றி சந்தோஷமாக காலங்கழிக்கிறார்கள். நீயும் ஏன் அப்படி இருக்கக்கூடாது? நமக்கும் கடவுள் ஏதோ கொடுத்து வைத்திருக்கிறார். அதில் கொஞ்சம் செலவு செய்தால் தான் என்ன ?.................."

ராஜலட்சுமி அம்மாள் இதே தோரணையில் பேசிக் கொண்டே போனாள். குமாரும் பதில் சொல்லாமல் கேட்டுக் கொண்டிருந்தான். எப்படி பதில் சொல்ல முடியும்? தன்னை ஹர்த்தால் செய்யுமாறு தூண்டிய உணர்ச்சிகளையும், ஆசைகளையும், லட்சியங்களையும், பேதையான, உலகமறியாத தன் தாயாரிடம் எப்படி விளக்கிக் கூற முடியும் ? ஆழ்ந்து பதிந்திருந்த தன் கொள்கைகளை, உருவற்ற சிந்தனைகளை எப்படி அவளுக்கு அர்த்தமாகுமாறு வெளிப்படுத்துவது ?

"நான் தேசத்துக்கு தொண்டு செய்ய விரும்புகிறேன். சாப்பிட ஆகாரம் இல்லாமல், உடுத்த துணியில்லாமல் நம்மைச் சுற்றிலும் எத்தனை பேர் இருக்கிறார்கள்? ஏனம்மா, அவர்களைப் பார்த்தால் உனக்குப் பரிதாபமாய் இல்லையா? அன்றியும் வெள்ளைக்காரர்கள் நம்மை அவர்கள் இஷ்டம்போல் நடத்தி வருகிறார்கள். ஆகவே மற்ற தேசத்தாருக்கு நம்மைக் கண்டால் ஏளனமாய் இருக்கிறது. எல்லோரும் காந்தியை பின் பற்றினால் நாம் சுயராஜ்யம் அடைவதும் தவிற எல்லோருக்கும் உணவும் உடையும் கிடைக்குமாறு செய்யலாம். அரசாங்கம் நம் கையில் இருந்தால் நாம் எல்லோருக்கும் வேலை சம்பாதித்துக் கொடுக்கலாம். அதனால்தான் எல்லோரும் காந்தியைப் பின்பற்றுகிறார்கள்."

"ஜனங்கள் வேலை செய்யாமல் சோம்பேரிகளாய் இருந்தால் அதற்கு சர்க்கார் என்ன செய்யும்?" என்று கேட்டாள் இந்திரா. "ஒவ்வொருவரும் கஷ்டப்பட்டு வேலை செய்து பணம் சம்பாதித்து தம் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கனுப்பினால் வெள்ளைக்கார அரசாங்கம் அதைத் தடுத்து விடுமோ?"

"வேலை இருந்தால்தானே செய்ய முடியும்?" என்றான் குமார். முதலில் தயக்கமாகப் பேசினாலும் இந்த குறுக்குக் கேள்விகளினால் உற்சாகத்துடன் பதில் சொல்ல ஆரம்பித்தான். மற்றும், இக்கேள்விகள் தன் மனதிலுள்ள எண்ணங்களை ஒழுங்குபடுத்த உதவின. "ஒருவன் நாள் பூரா வேலை செய்தாலும் அவனுக்கு நாலணு கூலி கிடைக்கிறது. அதைக்கொண்டு அவன் எப்படி உண்டு, உடுத்து, எப்படி குழந்தைகளை படிக்கவைப்பது? சோம்பேறித்தனத்தைப்பற்றிப் பேசுகிறாயே. நீ தினமும் என்ன வேலை செய்கிறாய்?"

"நீ பேசுவதைக் கேட்க நன்றாய் இருக்கிறது குமார்" என்றாள் அவன் தாயார். "உன்னுடன் யாராலும் தர்க்கம் செய்ய முடியாது. ஏழைகளுக்காக நீ இவ்வளவு பரிந்து பேசுவது மிகவும் நல்லது. இந்தக் காலத்தில் பணமுள்ளவர்கள் தாம் சந்தோஷமாகக் காலங்கழிப்பதில் செலவளிக்கிறார்களே தவிர தம் கடமையைச் செய்வதில்லை. ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதோ, அல்லது கோவில்களுக்கு பணம் கொடுப்பதோ கிடையாது. அதனால்தான் உலகத்தில் இவ்வளவு மனக்கசப்பும், கஷ்டமும், குழப்பமும் இன்று ஏற்பட்டிருக்கின்றன. ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று உனக்கு ஆசை

யிருந்தால் தான தர்மம் செய்ய வேண்டும். அதற்குக் கூட உன் தகப்பனார் பணம் இல்லையென்று சொல்லி விடுவார்? அது தான் நல்ல வழி. நானும் என்னால் முடிந்த தர்மம் செய்து கொண்டுதான் வருகிறேன். தர்மம் செய்தால் நல்ல பெயரும் வரும், சுவர்க்கமும் கிடைக்கும். ஆனால் அதில்தான் உனக்கு நம்பிக்கையில்லையே. ஆனால் சட்டத்தை மீறி ஜெயிலுக்குப் போனால், அதனால் ஏழைகளுக்கு என்ன நன்மை?"

"நான் சொல்வது உங்களுக்கு அர்த்தமாகவில்லை." என்றான் குமார். "ஏழைகள் மற்றவர்களுடைய தாராளத்தையும் தானதர்மத்தையும் நம்பி ஏன் இருக்கவேண்டும்? வேலை செய்து பணம் சம்பாதிக்க அவர்களுக்கு உரிமையில்லையா?" குமார் மனதில் எவ்வளவோ எண்ணங்கள் குமுறிக்கொண்டுவந்தன. ஆனால் எப்படி அவைகளை வெளியிடுவான்? எங்கு ஆரம்பிப்பது, எப்படி முடிப்பது?

" நீ அதிகம் படித்திருக்கிறாய் அப்பா. ஆனால் இனிமேலும் இந்த மாதிரி ஏதாவது செய்து எங்களைப் புலம்ப வைக்காதே. அவ்வளவுதான் நான் கேட்டுக்கொள்வது." என்று முடித்தாள் ராஜலட்சுமி அம்மாள்.

"நம் கந்தன் மகன் மாரிகூட இந்த மாதிரியெல்லாம் செய்கிறான்." என்றான் குமார்.

இதுவரை பேசாமல் இருந்த உடையார் கேட்டார். "நீ மாரியைப் பார்த்தாயா?"

"ஆம்"

"என் அப்பா, மாரியை விடுதலை செய்ய ஏதாவது செய்யமுடியாதா? கந்தன் புலம்பலைக் கேட்க முடியவில்லை" என்றாள் இந்திரா.

"அது மிகவும் கஷ்டம்" என்றார் உடையார். "கலெக்டரை இனிமேல் ஒன்றும் கேட்க முடியாது." குமார் விடுதலையானதே அவருக்குப் போதுமென்றாகி விட்டது. பிறகு குமார் மாரியுடன் நடத்திய சம்பாஷணையைப் பற்றிச் சொன்னபோது அவன் ஜெயிலுக்குப் போய் வரட்டும். அப்போது தான் புத்திவரும் என்று பேசாமல் இருந்து விட்டார்.

"குமார் உனக்கு இன்னும் சிறிய வயது. விஷயம் தெரியாது" என்று தன் மகனுக்கு போதனை செய்ய ஆரம்பித்தார் உடையார். "ஜெயிலுக்குப் போவதனால் ஒன்றும் சுயராஜ்யம் கிடைக்கப்போவதில்லை. துப்பாக்கி பிரயோகம் ஆரம்பமானால் எல்லாரும் பயந்துகொண்டு ஓடிவிடுவார்கள். இதெல்லாம் வீண் தான்."

"கஷ்டம் என்பதற்காக நாம் செய்யவேண்டிய காரியத்தை விட்டுவிடலாமா? அதற்கு பதிலாக நம் முயற்சியை அதிகரிக்கவேண்டும்" என்றான் குமார்.

"ராஜீய வாழ்க்கை என்பதில் எவ்வளவோ ஊழல் இருக்கிறது. கீர்த்தி, தியாகம் மட்டுமில்லை. தந்திரம், பொய்சொல்லுவது, பொது ஜனங்களை ஏமாற்றுவது எல்லாம் அதில் உண்டு. கிருஷ்ணசாமி ரெட்டியே சொன்னார் என்னிடம். அவருக்குத் தெரியாமலா இருக்கும்" என்றார் உடையார்.

"ரெட்டியாருடைய கட்சியில் ஊழல்கள், தந்திரம், எல்லாம் இருக்கலாம்; தேச சுதந்திரத்திற்காகப் பாடுபடு பவர்களிடையெ இவையொன்றும் தலையெடுக்காது."

"ரெட்டியார் இல்லாவிட்டால் தெரியும் உன் பேச் செல்லாம்." என்றாள் இந்திரா. "இன்னும் ஜெயிலில் கிடப்பாய்?" ரெட்டி கலெக்டரிடம் சொன்னதால்தான் குமார் விடுதலை செய்யப்பட்டான் என்று அவர்கள் நினைத் திருந்தார்கள்.

"ரெட்டியார் சூழ்ச்சியால் தான் நான் விடுதலை செய் யப்பட்டேனோ?" என்று கேட்டான் குமார்.

அவனுடைய துடுக்கான பேச்சு உடையாருக்கு பிடிக்க வில்லை. கிருஷ்ணசாமி ரெட்டி மிகவும் நல்ல மனிதர் குமார். அவரால் நமக்கு எவ்வளவோ அனுகூலம் உண்டு. அவரைப்பற்றி நீ ஒன்றும் பேசக்கூடாது." என்றார்.

சிறிது நேரம் யாரும் ஒன்றும் பேசவில்லை. இதுவரை யில் தன் தகப்பனுருடன் குமார் இம்மாதிரி பேசியது கிடை யாது. உடையாருக்கு இதைப்பற்றி என்ன நினைப்ப தென்றே தெரியவில்லை. இன்னும் என்ன சொல்கிறானே பார்க்கலாம் என்று, "நீ தான் உன் கொள்கையில் இவ் வளவு பிடிவாதமாய் இருக்கிறாயே, அப்படியானால் இனி மேல் என்ன செய்யப்போவதாக உத்தேசம்." என்றார்.

குமார் இனிமேல் என்ன செய்வது என்பதைப்பற்றி நினைக்கவே இல்லை. எதிர்பாராதபடி விடுதலையானதால்

நினைப்பதற்கும் அவகாசம் இல்லை. ஆகவே பதில் சொல்லாமல் நின்றான்.

"நான் ஒரு யோசனை சொல்கிறேன் கேள்." என்று சொன்னார் உடையார். "பி.ஏ. பரீக்ஷைக்கு இன்னும் ஒரு மாதம்கூட இல்லை. எப்படியாவது படித்து பாஸ் செய்து விடு. அப்புறம் வேண்டுமென்றால் உன் இஷ்டம்போல் செய்யலாம். இப்போது பரீக்ஷைக்குப் போகாவிட்டால் மேற்கொண்டு நீ விசனப்படுவாய்."

"சரி" என்று குமார் ஒப்புக்கொண்டான்.

அத்தியாயம் பதினான்கு.

திரும்பவும் குமார் காலேஜுக்குப் போய்ச் சேர்ந்தான். கைது செய்யப்பட்ட மற்ற மாணவர்களும் ஒவ்வொருவராய்த் திரும்பி வந்துவிட்டார்கள். வெட்கம் கொஞ்சம் பெருமை கொஞ்சம், அவர்கள் மனதில் துடித்துக்கொண்டிருந்தது. மற்ற மாணவர்கள் உற்சாகத்துடன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பெரிய தியாகிகள் மாதிரி அலட்சியமாக பதிலளித்தார்கள். ராஜ நிந்தனை செய்தும் ஜெயிலுக்கு போகவில்லை அல்லவா! அதிலிருந்து அதிகாரிகள் தம்மை எவ்வளவு மரியாதையுடனும் அச்சத்துடனும் நடத்துகிறார்கள் என்று தெரியவில்லையா? ரெட்டியார் கலெக்டருடன் பேசியதைப் பற்றி குமார் வேறொருவருடனும் சொல்லவில்லை.

மாணவர்கள் கைது செய்யப்பட்டதும் மறுநாளே விடுவிக்கப்பட்டதும் சீக்கிரம் மதுரையில் பரவியது. விடுதலை பல வதந்திகளுக்கு இடம் கொடுத்தது. சிலர் 'பையன்கள் ரகசியமாக கையெழுத்துப் போட்டு விட்டுத்தான் வெளியே வந்திருப்பார்கள்' என்றார்கள். இன்னும் சிலர் உடையார் போலீசுக்கு லஞ்சம் கொடுத்து தன் மகனை விடுதலை செய்தார் என்றார்கள். மற்றோர் 'இவர்களை ஜெயிலுக்கனுப்பினால் நகரில் குழப்பம் அதிகமாகுமென்று தான் விடுதலை செய்துவிட்டார்கள்' என்று பேசிக்கொண்டார்கள். எது எப்படியாயினும் 'ஏழைகளுக்கு ஒரு

சட்டம், பணக்காரருக்கு ஒரு சட்டம்' என்பது மட்டும் உண்மை என்பதாக அவர்களுக்குத் தோன்றியது.

குமாருக்கு இந்த வதந்திகள் எல்லாம் எட்டவில்லை. பரீக்ஷைக்குப் படித்துக் கொண்டிருந்தான். தன் நேரத்தை யெல்லாம் காலேஜ் வாசகசாலையிலும் வீட்டில் தன் அறை யிலுமே கழித்தான். சுற்றி நடப்பதில் அதிகம் கவனம் செலுத்தவில்லை. அவன் மனதை தூண்டிய பிரசனைகள், சுதந்திரம், தீண்டாமை, மறியல், இவையெல்லாம் தற்கா லீகமாக பூத பௌதிக பாடங்கள், கணக்கு, ஆங்கிலம் இவைகளுக்கு இடம் கொடுத்தன.

அத்தியாயம் பதினைந்து.

குமார் விடுதலையான தினத்திலிருந்து உடையாருடைய மனதில் ஒரு ஆழ்ந்த மாறுதல் ஏற்பட்டது. தன் மகனை மேலும் படிக்கவைப்பது, இங்கிலாந்துக்கு அனுப்புவது, ஆகிய உயர்ந்த எண்ணங்கள் வெற்றிபெறுது என்பதைக் கண்டுகொண்டார். வீட்டைவிட்டு வேறு இடங்களுக்கு அனுப்பினால் இன்னும் பெரிய குழப்பங்களில் சேர்ந்துகொண்டு தமக்கும் குடும்பத்துக்கும் கெட்டபெயர் வெகு சீக்கிரத்தில் வாங்கிவிடலாம். கலியாணம் செய்து கொண்டு வீட்டுடன் இருந்தால் தமது பெரிய எண்ணங்களும் ஆசைகளும் வீணாகப் போகலாம். இருந்தாலும் குமார் வேறு தகராறுகளில் கலந்துகொள்ளாமல் பத்திரமாக இருப்பான். கடந்த இரண்டு நாட்களின் கவலைக்குப்பிறகு உடையாருக்கு பத்திரமாய் இருப்பதே பெரிதாகத் தோன்றியது. தவிரவும், கிருஷ்ணசாமி ரெட்டியார் குமாருக்குக் கலியாணம் செய்துவிடவேண்டும் என்று சொல்லியிருந்ததும் உடையாருக்கு சரி என்று தோன்றியது.

இந்திராவும் பல வழிகளிலும் யோசனை செய்து அதே முடிவுக்கு வந்தாள். நாகரீக சமூகத்தின் சிகரத்துக்குப் போக தன் தம்பியை ஒரு ஊன்றுகோலாக உபயோகிக்க முடியாது என்று தெரிந்துவிட்டது. அதற்குப் பதிலாக குமாரை ஒரு சுமையாகக் கருதி தானே மேலுக்கு இழுத்துச் செல்லவேண்டும் என்று அறிந்துகொண்டாள்.

சொல்லுங்கள். அவர்களும் இஷ்டப்பட்டால் அப்புறம் பெண்ணின் ஜாதகத்தை வாங்கிக் கொண்டுவரலாம்.” ஒரு வேளை அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்களோ என்று தான் உடையார் ரங்கசாமியைத் தன்னுடைய யோசனை போல் கேட்கச் சொன்னார். “குமாருக்கும் பெண்ணைப் பார்க்கவேண்டும் என்று இருக்கும். கலியாணத்தை சீக்கிரம் முடித்து விடவேண்டும். அதனால் அவர்கள் கூடிய சீக்கிரம் முடிவு சொன்னால் பரவாயில்லை.”

இவ்வளவு முக்கியமான காரியத்தில் தான் கலந்து கொள்வதைப் பற்றி ரங்கசாமிக்கு மிகவும் மகிழ்ச்சி. “ஒரு வேளை என் தகப்பனாரிடம் சொல்லி அவர்களை கேட்கச் சொன்னால் பொருத்தமாய் இருக்கும்” என்றான்

“ஆம், உங்களுடைய தகப்பனார் மூலமாகவே கேட்பது இன்னும் நல்லது” என்றார் உடையார்.

“அவர்களுக்கு சம்மதமாய் இருந்தால் ஜாதகம் கொண்டுவர மறந்து விடாதீர்கள்.” இச் சம்பாஷணையை ஜன்னலுக்குப் பின்னால் இருந்து கவனித்து வந்த ராஜலக்ஷ்மி அம்மாள் சொன்னாள்.

அன்று மாலையே ரங்கசாமி தன் கிராமத்துக்கு புறப் பட்டுச் சென்றான்.

ஜில்லாவிலேயே பெரிய ஜோசியர் ஒருவரை வரவழைக்க ராஜலக்ஷ்மி அம்மாள் முயற்சி செய்துகொண் டிருந்தாள். அந்த ஜோசியரின் புகழ் பல இடங்களிலும் பரவியிருந்தது. அவருடைய ஜோசியத்தில் நம்பிக்கை

கொண்டவர்கள் அவர் எப்படி பல முக்கிய விஷயங்களைப் பற்றி எல்லோருக்கும் முன்பே சொன்னார் என்று சொல்லுவார்கள். பல ராஜீய விஷயங்களைப் பற்றி இவர் சொன்னதை மட்டும் உலக ராஜீயவாதிகள் கவனித்திருந்தால் உலகசரித்திரமே மாறியிருக்கும் என்றெல்லாம் கூட அவரைப் பற்றி பத்திரிகைகளில் போட்டிருந்தது. ஆனால் அது விளம்பரம் என்று ராஜலக்ஷ்மி அம்மாளுக்குத் தெரியாது. அவருடைய தங்க பதக்கங்களைப் பற்றியும், பெரிய ஆங்கில அதிகாரிகள் கூட அவரிடம் பலன் கேட்க வருவதைப்பற்றியும் கேள்விப்பட்டவர்களுக்கு அளவற்ற நம்பிக்கை ஊட்டக்கூடியதாக இருந்தது.

இரண்டு நாளில் ரங்கசாமி பெண்ணின் ஜாதகத்துடன் திரும்பி வந்தான். உடனே ஜோசியரும் வரவழைக்கப்பட்டார். ஜோசியர் வருவது இந்திராவுக்குப் பிடிக்கவில்லை. ஜோசியத்தில் நம்பிக்கையில்லாமல் அல்ல. ஜோசியம் பார்ப்பது கர்னாடக வழக்கம், இக்கால நாகரீகத்துக்கு ஏற்றதல்ல என்று கருதினாள். ஆனால் ஜோசியர் வருவதில் அவளுக்கு ஒரு ஆறுதல் மட்டும் இருந்தது. ஒருவேளை இன்னும் பெரிய இடத்தில் பெண் கிடைத்தால் இந்த பெண்ணின் ஜாதகம் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லிவிடலாமல்லவா?

உடையாருடைய காரில் ஜோசியர் வந்து இறங்கினார். அவருக்கு வயது சுமார் அறுபது இருக்கும். குட்டையாகவும் உருண்டையாகவும் இருந்தார். அவர் வைதீக முறையில் கட்டிக்கொண்டிருந்த பட்டு வேஷ்டிக்குமேல் வயிறு பிதுங்கிக் கொண்டிருந்தது. சந்தனம் பூசி கொழு கொழுப்பாக இருந்த உடம்பின்மேல் பட்டுத் துப்பட்டாவை

போர்த்துக் கொண்டிருந்தார். விபூதி, குங்குமம், ருத்ராக்ஷம், வெள்ளி வெற்றிலை பாக்குப் பெட்டி சகிதமாகக் காட்சியளித்தார். விரல்களில் மின்னிய வைரமோதிரங்கள், யார் ஜாதகம் எப்படியிருந்தாலும் அவருடைய ஜாதகம் குரு திசையில் இருக்கிறது என்று சாட்சி சொல்லின. அவருக்குப் பின்னுல் பயபக்தியுடன் அவருடைய சிஷ்யனும் அடக்க ஒடுக்கமாய் காரிலிருந்து இறங்கி வந்தான்.

ஜோசியருக்காக ஒரு அறையில் ஜமுக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. அங்கே அவர் உட்கார்ந்ததும் சிஷ்யன் சில புஸ்தகங்களை அவர் முன்னுல் வைத்துவிட்டு வெள்ளிப் பெட்டியிலிருந்து வெற்றிலை பாக்கு இடிக்க ஆரம்பித்து விட்டான். ராஜலக்ஷ்மி அம்மாள் குமாருடைய ஜாதகத்தை அவரிடம் கொடுத்தாள். சிஷ்யன் இடித்துக்கொடுத்த வெற்றிலை பாக்கை மென்றுகொண்டே ஜோசியர் ஜாதகத்தைப் பரிசீலனை செய்தார். பிறகு ஒரு காகிதத்தில் குறிப்புப் போட்டுக்கொண்டு தம் முன்பிருந்த புஸ்தகங்களைப் புரட்டிப் பார்த்தார். ஐந்து நிமிஷம் கழித்து வாசலுக்குச் சென்று எச்சில் துப்பிவிட்டு வந்தார். இவ்வளவையும் பார்த்துக்கொண்டே ராஜலக்ஷ்மி அம்மாள் ஆவலுடன் உட்கார்ந்துகொண்டிருந்தாள். உடையாரும் ஒரு தடவை வந்து எட்டிப் பார்த்துவிட்டுப் போனுர். ஆனுல் ஜோசியரோ சிஷ்யன் வெள்ளிக் கூஜாவில் கொண்டு வந்திருந்த ஜலத்தில் வாய் கொப்பளித்துக் கொண்டுவந்து மறுபடியும் வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டார்.

“ஜாதகம் எப்படி இருக்கிறது?” சிறிது நேரம் கழித்து ராஜலக்ஷ்மி அம்மாள் கேட்டாள்.

மென்று கொண்டிருந்த வெற்றிலையை கன்னத்தில் ஒரு குமிழி மாதிரி ஒதுக்கி வைத்துக்கொண்டு ஜோசியர் பேசலானார்.

"இந்த ஜாதகம் சரியாக கணிக்கப்படவில்லை. நான் முதலிலிருந்து பார்த்து பலன் சொல்லவேண்டியிருக்கு. இந்த பையனுடைய ஜாதகம் ரொம்ப அபூர்வமானதா இருக்கு. கிரகங்களெல்லாம் அப்படி அப்படி இருக்க வேண்டிய இடத்தில் இருக்கிறார்கள். இன்னும் சில வருஷங்களில் அவன் தொட்டதெல்லாம் தங்கமாகும்." என்று சரமாரியாக சுக்கிரனைப் பற்றியும் குருவைப் பற்றியும் புதனைப் பற்றியும் பேசிக்கொண்டே போனார். கடைசியாக வடமொழியில் இருந்து சில ஸ்லோகங்களையும் ராகம் போட்டு சொல்லி முடித்தார். ராஜலக்ஷ்மி அம்மாளுக்கு அந்த ஸ்லோகங்கள் அர்த்தமாகாவிட்டாலும் ஜோசியரின் மேல் இருந்த நம்பிக்கை அதிகமாயிற்று.

"அவனுடைய கல்யாணத்தைப் பற்றி எதாவது சொல்லுதுங்களா?"

"ஜாதகம் எல்லாவற்றைப் பற்றியும் சொல்லும். அதை உங்களுக்கு எடுத்துச் சொல்வதுதான் என் வேலை" என்றார் ஜோசியர். மறுபடியும் ஒரு முறை ஜாதகத்தைப் புரட்டிப் பார்த்துவிட்டு ஏதேதோ கணக்கு போட்டார். பிறகு "இந்த மூன்று மாதங்களாகவே அவனுக்கு கலியாண யோகம் இருந்துகொண்டிருக்கு. இன்னும் ஆறு மாதம் வரைக்கும் இருக்கிறது. அது தவிர்ந்தால் அப்புறம் மூன்று வருஷத்துக்கு மேற்பட்டுத்தான். ஆனால் இப்பவே முடிச்சால் நல்லது" என்றார். ஏன் இன்னும் ஆறுமாதக்

திற்குள் கலியாணம் ஆகவேண்டும் என்பதற்கு ஜோதிட சாஸ்திரத்தின் முறைப்படி கோட்பாடுகள் எடுத்துச் சொல்லலானுர். எந்தக் கிரகம் எந்த வீட்டில் இருக்கிறதென்றும் எந்த கிரகத்தை பார்க்கிறதென்றும் இப்போது எந்த திசை நடக்கிறதென்றும் விரிவாக எடுத்துரைத்தார். இவையொன்றும் ராஜலக்ஷ்மி அம்மாளுக்கு அர்த்தமாகாவிட்டாலும் கலியாணத்தைப் பற்றி அவர் சொன்னது மனதுக்குத் திருப்தி அளித்தது.

பின்பு பெண் ஜாதகத்தையும் ஜோசியர் பரிசீலனை செய்தார். இரண்டு ஜாதகங்களுக்கும் பொருத்தம் இருப்பதாயும், கலியாணம் நடக்கலாமென்றும் 'இரண்டையும் புதிதாக கணித்து விரிவாக பலன் எழுதி அனுப்புவதாகவும் சொல்லிவிட்டு' வெற்றிலை பாக்குடனும் நூறு ரூபாயுடனும் விடை பெற்றுக்கொண்டார். ராஜலக்ஷ்மி அம்மாளின் மனம் நிம்மதி அடைந்தது.

நிச்சய தாம்பூலத்திற்கும் நாள் குறித்தாகி விட்டது. குமார் பெண்ணைப் பார்த்து 'சரி' என்று சொல்வதுதான் பாக்கி. "இன்னும் மூன்று நாளில் பரீக்ஷை முடிந்து விடும். அப்புறம் அவனுடன் கலியாணத்தைப்பற்றி சொல்லலாம்" என்று முடிவு செய்தார்கள்.

அத்தியாயம் பதினாறு.

பரீக்ஷை முடிந்த அன்று மாலை குமாருக்கு மிகவும் சோம்பலாய் இருந்தது. வெராண்டாவில் இருந்த சோபா ஒன்றில் சாய்ந்துகொண்டிருந்தான். பரீக்ஷையைப் பற்றிய பல நினைவுகள் வந்தன. இனிமேல் ஒரு பரீக்ஷையும் எழுத வேண்டியிருக்காது, என்னும் சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்தான்.

இந்திராவும், ராஜலக்ஷ்மி அம்மாளும் அங்கு வந்தார்கள். உடையார் எங்கோ வெளியில் போயிருந்தார். "குமார், பரீக்ஷைதான் முடிந்துவிட்டதே? எங்களை சினிமாவுக்குக் கூட்டிக் கொண்டு போயேன்." என்றாள் இந்திரா.

"இல்லை அக்கா. எனக்குத் தூக்கம் வருகிறது. நீயும். மைத்துனரும் போங்கள். நல்ல படம் ஒன்றும் இல்லை. ஆனால் உனக்கு அதைப்பற்றி என்ன? எந்தமாதிரி சினிமாவானாலும் போகவேண்டியதுதானே?" என்றான் குமார்.

"பரீக்ஷை முடிந்த உடனேயே என்னைக் கேலி செய்ய ஆரம்பித்து விட்டாயா?" என்றாள் இந்திரா.

"அவனைத் தொந்தரவு செய்யாதே இந்திரா?" என்றாள் ராஜலக்ஷ்மி அம்மாள். "இப்போதுதான் பி. ஏ. பரீக்ஷை எழுதிவிட்டு வந்திருக்கிறான். சோம்பலாய் இருக்குமோ இல்லையோ?"

" இனி என்ன. கலியாணம் செய்து விட்டால் அப்புறம் மனைவி வந்து சோம்பலாய் இருக்கும் போதெல்லாம் கால் பிடிப்பாள் அவனுக்கு." என்றாள் இந்திரா.

" எனக்கு மனைவியும் வேண்டாம். வேறொன்றும் வேண்டாம். " குமாருக்கு தன் கலியாணத்தைப் பற்றிய இந்த பழைய பேச்சுகளைக் கேட்டுக் கேட்டு சலித்து விட்டது. " அப்படி எனக்கு மனைவி இருந்தாலும் அவள் என் கால்களைப் பிடிக்க விரும்பமாட்டேன். எனக்கு மட்டும் சொல்லுகிறாயே? நீ உன் புருஷனுக்கு எத்தனை தடவை கால் பிடித்திருக்கிறாய்? " என்று கேட்டான்.

" கலியாணம் செய்துகொள்ள வேண்டும் என்று யாராவது சொல்கிறார்களா? " என்று பொதுவாக சொன்னாள் ராஜலக்ஷ்மி அம்மாள்.

சில நாட்களாக தன் கலியாணத்தைப் பற்றி இந்திராவும் ராஜலக்ஷ்மி அம்மாளும் ஜாடையாகப் பேசுவதைக் குமார் கவனித்து வந்தான்.

" உன் கலியாணத்திற்கப்புறம் நம்ம குடும்பத்தில் வெகு நாளைக்கு விஷேம் ஒன்றும் இல்லை. அதனால் இதை மிகவும் சிறப்பாகச் செய்யவேண்டும்." என்றாள் இந்திரா.

" இந்தக் காலத்தில் என்ன கலியாணம்! " ராஜலக்ஷ்மி அம்மாள் சொன்னாள். " இப்போதெல்லாம் மணப் பெண்ணுக்கு வாத்தியார் அம்மா மாதிரி சேலை கட்டுகிறார்கள். நகை இங்கொன்று அங்கொன்று கண்ணுக்குந்

தெரியாத மாதிரி போடுகிறார்கள். மாப்பிள்ளையைப் பார்த்தால் 'டை' யும் அதும் இதும் கட்டிக்கொண்டு கோர்ட்டுக்குப் போகும் வக்கீல் மாதிரி இருக்கிறானே தவிர மாப்பிள்ளை மாதிரியா இருக்கிறான்? மோட்டார்காரில் ஏறிக்கொண்டு இங்கொருதடவை அங்கொருதடவை போகிறார்கள்; ஒரே நாளில் கலியாணம் முடிந்து விடுகிறது. கலியாணமென்றால் நாங்களெல்லாம் பண்ணிக்கொண்ட போதுதான் கலியாணம்! மாப்பிள்ளையின் உருமாலை என்ன? பெண்களின் பச்சை, சிகப்பு நிறம் போட்ட பட்டுச் சேலைகள் என்ன? கால் சங்கிலியின் ஒலியே போதுமே; வேறு சங்கீதமே கலியாணத்துக்கு வேண்டியிருக்காது. முதலில் மாப்பிள்ளை வீட்டுச் சடங்குகள், அப்புறம் மாப்பிள்ளை வெள்ளைக் குதிரைமேல் ஏறிக்கொண்டு ஊர்வலம், கோவிலுக்குப் போவது! பெண்வீட்டில் முகூர்த்தம்! முன்பெல்லாம் முகூர்த்தம் என்றால் குறைந்தது இரண்டு மணி நேரமாவது ஆகும். இப்போது மந்திரங்களைக் கூடக் குறைத்துவிட்டார்கள் போலிருக்கிறது. எல்லாம் அரை மணி நேரத்தில் முடிந்து விடுகிறது." ராஜலக்ஷ்மி அம்மாள் தன்காலத்துக் கலியாணங்களைப் பற்றி சொல்லிக் கொண்டே போனாள். "பெண்கள் மாப்பிள்ளையைப் பற்றியும் பெண்ணைப் பற்றியும அனேக கேலிப் பாட்டுகள் பாடுவார்கள். செண்டாடுவது, மோதிரம் தேடுவது என்று எத்தனையோ தமாஷான சடங்குகள் இருக்கும். மோதிரம் தேடும்போது உன் தகப்பனார் என்ன செய்தார் தெரியுமா? என் கையைக் கிள்ளிவிட்டார். நான் உடனே மோதிரத்தை அவருக்குக் கொடுக்கவேண்டி ஏற்பட்டது."

"நீ திருப்பிக் கிள்ளியிருக்கவேண்டும்" என்றாள் இந்திரா.

"பெண்களுக்குத்தான் ஆண்களைவிட நகங்கள் கூர்மையாய் இருக்குமே" என்றான் குமார்.

"உங்கள் மாதிரி புத்திசொல்ல எனக்கு அப்போது யாரும் கிடையாது" என்றாள் ராஜலக்ஷ்மி அம்மாள். "புருஷன் கையைக் கிள்ளுவதா? இந்த மாதிரி எல்லோரும் பேசுவதினால்தான் உலகமே தலைகீழாய் இருக்கிறது."

இப்படி பேசிக் கொண்டிருக்கும் போது ரங்கசாமி வந்து சேர்ந்தான். எல்லா பெற்றோர்களைப் போலவே குமாரின் பெற்றோர்களுக்கும் கலியாணத்தைப் பற்றி தம் மகனுடன் பேச ஒருவித வெட்கமாய் இருந்தது. ஆகவே ரங்கசாமி இதைப் பற்றி குமாருடன் சொல்லவேண்டும் என்றும் பின்பு பெண்ணைப் பார்க்க குமாரை தன் கிராமத்துக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன்படியே ரங்கசாமி வந்ததும் இந்திராவும் ராஜலக்ஷ்மி அம்மாளும் அவர்களைத் தனியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

"பரீக்ஷை எப்படி எழுதியிருக்கிறாய் குமார்?" என்று ரங்கசாமி சம்பாஷணையை ஆரம்பித்தான்.

"பரவாயில்லை. அனேகமாக பஸ்ட் கிளாஸ் வரும்."

"இனி என்ன, கவலையில்லாமல் உன் இஷ்டம் போல் இருக்கலாம்."

"ஆம். பரீக்ஷை முடிந்தது என்றாலே அது ஒரு தனி திருப்திதான். சுலபமாகவே பாஸ் ஆனால் கூட பரீக்ஷை என்றால் எனக்கு கொஞ்சம் பயம்தான்."

" நான் ஒரு பரீக்ஷை கூட பாஸ் செய்ததில்லை. நீ பி. ஏ. படித்ததில் எல்லோருக்குமே ஒரு பெருமை. "

" இதில் பெருமை என்ன இருக்கிறது " என்றான் குமார். பி. ஏ. பாஸ் செய்தால் ஒரு சமயம் கலியாண மார்க்கெட்டில் விலை அதிகமாகலாம். அவ்வளவுதான். "

கலியாணத்தைப் பற்றி குமாரே முதலில் பேசியதால் ரங்கசாமி இந்தச் சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு குமாரின் கலியாணப் பேச்சை எடுத்தான். "மாமா அவர்களுக்கு உனக்கு சீக்கிரம் கலியாணம் செய்யவேண்டும் என்ற யோசனை இருக்கிறது. " என்றான்.

" பெண்ணெல்லாம் பார்த்தாகிவிட்டதா? " என்று கேட்டான் குமார் தமாஷாக.

" மீனாக்ஷி " என்று பதிலளித்தான் ரங்கசாமி. மெதுவாகவும், படிப்படியாகவும் விஷயத்தைச் சொல்லலாம் என்று ஆரம்பித்தவன் குமாரின் கேள்விக்கு திடீரென்று பதில் சொல்ல நேரிட்டது.

" எல்லாம் முடிந்துவிட்டதாக்கும்." என்றான் குமார்.

" ஏறக்குறைய எல்லாம் ஆகிவிட்டது. அவர்களும் ஜாதகம் அனுப்பிவிட்டார்கள். அதுவும் பொருத்தமாய் இருக்கிறது. நீ................................"

" இவ்வளவும் முடிந்திருந்தால் இப்போது என்னைக் கேட்பானேன்? " என்று குமார் இடைமறித்தான்.

நானென்ன, கேவலம் மாப்பிள்ளைதானே. மாப்பிள்ளை என்று வைத்துவிட்டால் பொருத்தம் இன்னும் அதிகமாக இருக்கும்!" குமாருக்கு கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. ஆனால் ரங்கசாமி மேல் கோபப்பட்டு பிரயோஜனமில்லை யென்றும் தன் பெற்றோர்கள் சொல்லச் சொன்னதைத் தான் தன்னிடம் சொல்கிறானென்றும் குமாருக்குத் தெரியும்.

"நான் சொல்வதை கொஞ்சம் கேள் குமார்" என்று ஆரம்பித்து ரங்கசாமி நடந்ததெல்லாவற்றையும் எடுத்துச் சொன்னான். ஜாதகம் வாங்கப் போனது, ஜோசியர் வந்தது, ஆகிய எல்லாம் சொன்னான். "பார் குமார். நீ என்னோடு கிராமத்துக்கு வா. பெண்ணைப் பார்த்துவிட்டுவரலாம். அதற்கப்புறம்தான் நிச்சயார்த்தம் நடக்கும். பெண் உனக்குப் பிடிக்கவில்லை என்றால் பிறகு வேறு இடத்தில் பார்க்கலாம். ஆனால் எல்லோரும் இன்னும் இரண்டு மாதத்திற்குள் கலியாணத்தை நடத்தவேண்டும் என்று இருக்கிறார்கள்."

"நான் பரீக்ஷைக்கு படித்துக் கொண்டிருந்தபோது நீங்களெல்லாம் இந்தவேலையில் ஈடுபட்டிருந்தீர்களாக்கும்" என்றான் குமார். "அம்மா, அப்பா இவர்களுக்குத் தோன்றுமல் போனாலும் முதலில் என்னைக் கேட்கவேண்டும் என்று உங்களுக்காவது தோன்றவில்லையா? நான் கலியாணமே வேண்டாமென்றால், அல்லது அந்தப் பெண் பிடிக்கவில்லையென்றால், அப்புறம் என்ன?"

"எல்லோருக்கும் அதிக கவலையை ஏற்படுத்துவாய். அதிலும் முக்கியமாக மாமிக்கு."

" பெற்ரோர்கள் தானே முக்கியம்." குமார் தனக்குத் தானே சொல்லிக்கொன்டான். பிறகு ரங்கசாமியை நோக்கி, " ராஜா எப்படி பொம்மைகளை வைத்துக் கொண்டு விளையாடுகிருனே அதே மாதிரி நீங்களெல்லோரும் என் வாழ்க்கையை வைத்துக்கொண்டு விளையாடுகிறீர்கள். அவன் எப்படி சீக்கிரத்தில் அவைகளை ஒடித்துப் பாழ் படுத்துகிருனே அதே மாதிரி நீங்களும் இதை ஒடித்து விடுவீர்கள். கலியாணம் அதிக முக்கியமானது. நான் என்ன செய்வது என்று யோசனை செய்து முடிவுசெய்து கொண்டபிறகுதான் கலியாணத்தைப் பற்றியும் யோசனை செய்யவேண்டும். எப்படியிருந்தாலும் என் கலியாணம் தானே. இப்போதுதான் பரீக்ஷையை முடித்துக்கொண் டிருக்கிறேன். ஒரு நிமிஷம்கூட ஓய்வெடுக்க நேரமில்லை. அதற்குள் ஏன் இவ்வளவு அவசரம்? "

" மாமி சொல்வதுதான் உனக்குத் தெரியுமே " என்ருன் ரங்கசாமி. " கலியாணம் செய்யாவிட்டால் வயது வந்த பையன்கள் கெட்ட வழியில் சென்று விடுவார்கள் என்று தான். "

" நான் என்ன கெட்ட வழியில்.............. " என்று கேட்க ஆரம்பித்தான் குமார். உடனே ஞானேதயம் மாதிரி ஒரு எண்ணம் மனதில் உதித்தது. " எனது கெட்ட வழிகள் ராஜீயக் கொள்கைகள், பள்ளிக்கூடத்தை ஹர்த்தால் செய்தது. கலியாணம் செய்து வைத்து விட்டால் அதை யெல்லாம் மறந்து விடுவேன். ஏன் அப்படித்தானே ?"

" அதொன்றும் எனக்குத் தெரியாதப்பா குமார் " என்ருன் ரங்கசாமி. இந்த சம்பாஷணையைத் தான் சரிவர

நடத்தவில்லை என்பதை உணர்ந்தான். "நான் அவர்கள் கூட என்ன சொல்வது? பெண்ணைப் பார்க்க எப்போது போகலாம்" என்று முடிவாகக் கேட்டான்.

"அவர்களுடன் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். நான் ஒன்றும் சொல்லமுடியாது. என் மனம் சோம்பலாய் இருக்கிறது; ரொம்ப குழம்பியிருக்கிறது. என் தாய் தகப்பன் என்மேல் அன்பாய் இருந்தார்கள். நான் சந்தோஷமாய் இருக்கவேண்டும் என்று இருந்தார்கள் என்று நினைத்திருந்தேன். இப்போது நான் நினைத்திருந்தது சரியா என்று எனக்கு சந்தேகம் வருகிறது. நீங்கள் அவர்களுடன் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் வெளியில் போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லி விட்டு எழுந்து சென்றான்.

நடந்ததையெல்லாம் ரங்கசாமி உடையாருக்கும் ராஜலக்ஷ்மி அம்மாளுக்கும் தெரிவித்தான். பகவானே, என் மகனுக்கு புத்தி வருமாறு நீ தான் செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள் ராஜலக்ஷ்மி அம்மாள்.

அத்தியாயம் பதினேழு.

குமார் வேகமாக நடந்தான். கால் அடிகள் இருதயத் துடிப்புடன் போட்டிபோடுகிறதோ என்று சொல்லுமாறு நடந்தான். பல வீதிகளைத்தாண்டி வைகையாற்றின் கரைக்குச் சென்றான். நீண்ட மணல் திட்டுகளின் நடுவில் மாலை வெளிச்சத்தில் மின்னும் கயிறுபோல் ஆறு ஓடிக் கொண்டிருந்தது.

ஆற்றங்கரை குமாருக்கு மிகவும் பிடித்த இடம். குமாரின் மனம் அங்குதான் வளர்ந்து பண்பட்டது. ஆழ்ந்த எண்ணங்களெல்லாம் அங்கு தனியே உலாவிக்கொண்டிருக்கும்போதுதான் தன் மனதில் உதித்தன. குழந்தைப் பருவத்திலிருந்து அங்கு ஏற்பட்ட மாறுதல்களையெல்லாம் கவனித்து வந்திருந்தான். விசேஷ தினங்களில் பல ஆயிரக் கணக்கான மக்கள் ஆற்றில் குளிக்க வருவதைப் பார்த்திருந்தான். ஆம். அங்கு எத்தனை மாலை நேரங்களைக் கழித்தான்! எத்தனை மாலைகளில் மற்ற மாணவர்களுடன் இளமையில் தோன்றும் பரிசுத்தமான எண்ணங்களைப் பற்றி ஆவேசத்துடன் விவாதித்திருக்கிறான்! எத்தனை விதமான சிந்தனைகள் அவன் மனதில் உதித்தன! சுதந்திரம், காதல், கவிதை, நாடு.. எவ்வளவு எண்ணங்கள்!

ஆற்றங்கரைக்கு வந்ததும் பல நினைவுகள் ஒன்றின் பின் ஒன்றாகத் தோன்றின. தனக்கு வாழ்க்கையில்

இப்போது என்ன ஏற்பட்டிருக்கிறது? தனது எதிர் காலம் என்ன? தனக்கு கலியாணம் செய்துகொள்ள விருப்பமா? ஆம். அந்த ஆசை இருக்கிறதா?

இல்லை, கலியாணம் செய்துகொள்ள குமாருக்கு ஆசையில்லை. எதிர் காலத்தில் அந்த ஆசை இருந்தாலும் இப்போது வேண்டாம். ஏன்? ஒரு வேளை தான் யார் மேலாவது காதல் கூடக்கொள்ளலாம். ஆம். குமார் பெண்களைப்பற்றி மனோ உலகில் கனவு காண்பது உண்டு. இரவின் அந்தகாரத்திலே, நகரின் அசுத்தங்களும், ஆபாசங்களும், இன்பதுன்பங்களும் மறைந்திருந்தபோதும் அல்லது மதி ஒளியிலே, வெண் மணல் பரப்பிலே, தங்கச் சங்கலிபோல் பிரகாசிக்கும் ஆற்றின் முன்னிலையிலேயும் எத்தனை தடவைக் காதலைப்பற்றி கனவு கண்டிருக்கிறான்! தனியே, இருட்டின் நிம்மதியிலே எத்தனை தட்வை தன் இதய ஆத்மாவின் உண்மை நிலையை அறிந்திருக்கிறான்! அறிந்து அதைப்பற்றி கவியும் எழுதியதுண்டு. கிராமப் புறங்களுக்குப் போன சமயங்களில் ரவிக்கை போடாத இளம் பெண்களின் ஒய்யார நடையையும், சிரித்த முகங் களையும், குலுங்கும் மார்புகளையும், தன் மனதையும் மீறி கண்கள் பார்த்ததுண்டு. ஆனால் அவர்களுடன் பேச நேரிட்டாலோ வெட்கமும் மனக்குழப்பமும் அதிக மாயிற்று.

தான் யாருடன் காதல் கொள்ளலாம்?' தன் அக்காளைப் பார்க்கவரும் பெண்களில் ஒருவளுடனா? அதை விட முடியாதது வேறொன்றும் இல்லை. அவர்களெல்லோரும் குணத்திலும் ஆசைகளிலும் தன் தமக்கையை

ஒத்திருந்தனர். அல்லது, ஒருவேளை தன் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த ஒரே பெண்ணான மிஸ். ஐயங்காருட்டனா? அதை நினைத்ததும் குமாருக்கு சிரிப்பு வந்தது. அப் பெண்மணி அழகு தெய்வம் அளித்த கொஞ்சம் செல்வத்தையும் கலைதெய்வத்தினிடம் தியாகம் செய்து விட்டாள்.

குமாருக்கு வேண்டியது யாரென்றால், ஒரு துணைவி ....ஒரு கவர்ச்சியுடைய அழகான துணைவி; தான் செய்யும் காரியங்களில் உதவிசெய்யக்கூடியவளாயும் தனது இன்பதுன்பங்களையெல்லாம் பகிர்ந்து அனுபவிக்கக் கூடியவளாயும் தனக்காக உயிரை வேண்டுமானாலும் மனமுவந்து தியாகம் செய்யக்கூடியவளாயும் உள்ள ஒரு பெண்ணை மனைவியாகவேண்டும். தன் மனைவி ஒரு சுமையாய் இருக்கக்கூடாது. தனது வாழ்க்கைப் பெருக்கைத் தடுக்கும் மனைவியாய் இருக்கக்கூடாது. ஒருவேளை தான் இன்னொரு தடவை அரஸ்ட் செய்யப் பட்டால்? அல்லது ஜெயிலுக்கே அனுப்பப்பட்டால்? தன் மனைவியும் தன் தாயைப்போல உதவியற்று அழுவதையும் கடவுளிடம் வரம் கேட்பதையும் குமார் விரும்பவில்லை. அதற்கு பதிலாக தானும் ஜெயிலுக்குப் போக கிளம்பவேண்டும். ஆனால் தன் பெற்றோர் தேர்ந்தெடுக்கும் ஒரு பெண் அம்மாதிரி செய்ய மாட்டாள் என்று குமாருக்குத் தெரியும். எப்படியிருந்தாலும் தன் மனைவியைத் தேர்ந்தெடுப்பது தன் உரிமையல்லவா? நான்தானே அவளுடன் வாழ்க்கை நடத்த வேண்டும். கலியாணம் செய்து கொள்வதோ பிரமச்சாரியாய் இருப்பதோ தன் உரிமை. தன் இஷ்டம். அது தன் வாழ்க்கைதானே; அதில் தான் என்னவேண்டுமானாலும் செய்யலாமல்லவா? அது ஒரு அடிப்படையான

உரிமை. 'உரிமை' என்னும் வார்த்தை குமாரின் இதயத்தில் பதிந்துவிட்டது.

இல்லை, தனக்கு கலியாணம் செய்துகொள்ள இஷ்டமில்லை. ஆனால் தன் தாயாரை துயரத்துக்குள்ளாக்காமலும் தகப்பனாரை கோபத்துக்குள்ளாக்காமலும் அதைத் தவிர்ப்பது எப்படி? கலியாணம் செய்துகொள்ளாவிட்டால் வேறு என்ன செய்வது? தகப்பனார் கேட்டால் என்ன பதில் சொல்வது? அவருக்குக் கேட்க பாத்தியதை இல்லை என்று சொல்லலாமா? கேட்க அவருக்கு பாத்தியதை இல்லையா? அதைப்பற்றி தன் மனதிலாவது தெளிவாக இருக்கவேண்டாமா?

குமாருக்கு தான் இப்போது ஜெயிலில் இருக்கக் கூடாதா என்று தோன்றிற்று. இருந்தால் எவ்வளவோ சுலபமாக இருக்கும். தான் ஒன்றும் முடிவு செய்ய வேண்டியதில்லை. எல்லாம் சர்க்கார் அதிகாரிகள் முடிவு செய்து விடுவார்கள். ஆனால் தன் பெற்றோரின் முடிவையே எதிர்க்கும் பொழுது சர்க்காரின் முடிவை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? பெற்றோரைவிட அதிகாரிகள் மேலா? அதிகாரிகள் தன்னை சிறையில் அடைப்பார்கள். பெற்றோர்களோ, கலியாணம் என்னும் சிறையில் வாழ்நாள் முழுதும் தள்ளப் பார்க்கிறார்கள். இரண்டும் ஒரே குற்றத்திற்காக; தன் உரிமையை நிலைநாட்ட முயற்சித்ததற்காக. ஒன்று சுய உரிமை; மற்றொன்று தேசீய பொது உரிமை. அவ்வளவுதான் வித்தியாசம். ஆனால் இன்னும் ஒரு வித்தியாசமும் இருக்கிறது. ஒரு பெரிய வித்தியாசம்; தான் தன் பெற்றோர்களை நேசித்தான். அதுதான் பெரிய கஷ்டமாய் இருக்கிறது. சர்க்கார் அதிகாரிகளோ, பலாத்

காரத்தை உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் பெற்றோர்களோ அன்பையே ஆயுதமாக உபயோகப்படுத்துகிறார்கள். பெற்றோர்களின் முடிவை உதறித்தள்ளிவிட்டு தானே தன் வாழ்க்கையை நடத்த தைரியம் இருக்கிறதா? குமார் தன் தாயின் செல்லக் குழந்தை. இதனால் தான் தாயாருக்கு அளிக்கும் துன்பத்தை தன்னால் பொறுக்க முடியுமா? இதைப்பற்றியெல்லாம் அவர்களுக்கு தெளிவாக எடுத்துச் சொல்லி தன்பக்கம் திருப்பமுடியுமா?

குமார் திரும்பி வீட்டுக்கு நடந்தான். மிகவும் சோர்வாக இருந்தது. மாலையின் சப்தங்களெல்லாம் அடங்கிவிட்டன. இரவு நிசப்தமாய் இருந்தது. வீதிகளில் ஜன நடமாட்டமும் குறைந்துவிட்டது. யாருடனும் பேசாமல் நேராகப்போய் படுத்துக் கொண்டான்.

ஆனால் தூக்கம் வருகிறதா? தன் பெற்றோருடன் எப்படியாவது சமரசம் செய்துகொள்ள முடியுமா? என்று யோசனை செய்தான். எத்தனை நாளைக்கு இப்படியே இருக்க முடியும்? இதற்கெல்லாம் என்ன முடிவு? ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், கலியாணம் செய்துகொள்ளக் கூடாது. தூங்குவதற்கு முன்னால் அதுவே குமாரின் கடைசி எண்ணம்.

அத்தியாயம் பதினெட்டு.

மறுநாள் காலையில் குமார் எங்கும் வெளியில் போக வில்லை. நேரம் கழித்து எழுந்திருந்தான். தனியாக சமையல்காரன் பரிமார காப்பி சாப்பிட்டான். தன் தாயார் அங்கு இல்லாமல் இருந்தது ஒருவிதத்தில் மனதுக்கு நிம்மதி அளித்தது. பிறகு தான் படிக்கும் அறையில் புஸ்தகங்கள் முதலியவற்றை ஒழுங்காக எடுத்து வைத்தான். உடையார் நேரத்தில் வெளியே போய் விட்டார். ராஜலக்ஷ்மி அம்மாளும் இந்திராவும் குமார் இருந்தபக்கம் வரவே இல்லை.

மத்தியானம் ஒரு சினேகிதன் குமாரைப் பார்க்க வந்தான். அவன் பெயர் பாலசுந்தரம்; தன் வகுப்பில் ஒரு மாணவன். குமார் கைது செய்யப்பட்டபோது கூட பாலசுந்தரமும் கைது செய்யப்பட்டான்.

'ஹல்லோ பாலு!' குமார் ஜன்னல் வழியே கூப்பிட் டான். பாலு சைகிளை வெளியில் வைத்துவிட்டு குமாரின் அறைக்குள் வந்தான். பாலு குமாரைவிட குட்டையாயும் பருமனுயும் இருந்தான். அம்மைத் தளும்பு நிறைந்த முகம் பார்ப்பதற்கு அழகாக இல்லாவிட்டாலும் எப்போதும் சிரித்துக் கொண்டே கவர்ச்சி பொருந்தியதாக இருந்தது. கனத்த மூக்குக் கண்ணுடியும் போட்டுக் கொண்டிருந்தான் பாலு.

"என்ன செய்துகொண்டிருக்கிறாய்?" என்றான் பாலு.

"வேண்டாத புஸ்தகங்களையெல்லாம் எறிந்துவிட்டு மற்றவைகளை ஒழுங்கு படுத்திக்கொண்டிருக்கிறேன்" என்று பதிலளித்தான் குமார்.

"உனக்கென்ன, எல்லாவற்றையுமே எறிந்துவிடலாம். நீ கண்டிப்பாக பாஸ் செய்துவிடுவாய்" என்றான் பாலு.

"ஏன் நீ மட்டும் பாஸ் செய்யமாட்டாயோ?" என்று கேட்டான் குமார்.

"நான் பாஸ் செய்தாலும் செய்யாவிட்டாலும் எனக்கு அக்கறை இல்லை" என்று அலட்சியமாக பேசினான் பாலு. பிறகு குமாரைப் பார்த்து சோகத்துடன் பேசலானான்: "நம் நகரில் இயக்கம் முறியடிக்கப் பட்டு விட்டது குமார். தலைவர்களையெல்லாம் ஜெயிலுக்கனுப்பி விட்டார்கள். தொண்டர்களையெல்லாம் அடித்து விரட்டியும், ஜெயிலுக்கனுப்பியும் கலைத்துவிட்டார்கள். சில காங்கிரஸ்காரர்களோ, பயங்கொள்ளிகளாகி வெளியே வர மாட்டேனென்கிறார்கள். நமக்கோ ஒரு இரவு போலீஸ் ஸ்டேஷனில் கழிந்ததே போதும்போல் தோன்றுகிறது. நம்மை பொருத்தவரையில் சத்தியாக்கிரக இயக்கம் இறந்து விட்டது என்றுசொல்லலாம்." எப்போதும் புன்னகை தவழும் முகத்தில் ஒரு வினாடி துன்பம் காணப்பட்டது.

"நானும் அதைப்பற்றியெல்லாம் நினைத்தேன்" என்றான் குமார். "ஆனால் நாம் என்ன செய்யமுடியும்?

நாம் ஒரு பொதுக் கூட்டமோ அல்லது ஊர்வலமோ நடத்த முற்பட்டால் நம்மையும் உடனே ஜெயிலுக்கனுப்பி விடுவார்கள். அப்புறம் என்ன? நம்மைப் பின்பற்ற யார் இருக்கிறார்கள்?

"ஆனால்..............." பாலு இடைமறித்தான்.

"அவசரப்படாதே. நாம் வெளிப்படையாக ஏதாவது செய்தால் ஒன்றும் பிரயோஜனமில்லை. வேறு ஏதேனும் செய்யவேண்டும். ஆனால், என்ன என்பதுதான் கேள்வி?"

"வேறு என்ன செய்யலாம்?"

"தெரியவில்லை. தெரிந்தால் சொல்லமாட்டேனா?"

"ஏதாவது செய்யவேண்டும் என்று எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். என்ன என்றுதான் யாருக்கும் தெரியமாட்டேன் என்கிறது. அதனால் இன்று ராத்திரி எல்லோரும் ஒன்றாகக்கூடி யோசனை செய்யப்போகிறோம். வருகிறாயா?"

"சரி, எங்கே சந்திக்கலாம்?" என்று கேட்டான் குமார்.

"வடக்குத் தேர் வீதி தெரியுமல்லவா?" என்று பாலு இடத்தைச் சொன்னான். "அங்கே 105-ஆம் நம்பர் வீடு. அங்கு வந்ததும் என்னைப் பார்க்கவேண்டும் என்று கேள்."

"அது உன் வீடல்லவே?" என்றான் குமார்.

"இல்லை, ரங்கநாயகி அம்மாள் வீடு"

"அது யார் ரங்கநாயகி அம்மாள்?"

"சுந்தரம் தெரியுமல்லவா? அவருடைய மனைவி"

"சரி வருகிறேன்" என்றான் குமார். "போலீஸ் ஸ்டேஷனில் அவரைப் பார்த்தபோது அவருடைய வீட்டுக்குப் போய் விசாரிப்பதாகச் சொன்னேன்."

"ஊரில் இருக்கும் போலீஸ்காரர்களையெல்லாம் கூட்டிக்கொண்டு வராதே" என்றான் பாலு சிரித்துக் கொண்டே. "பக்கத்தில் ஒரு வெற்றிலைபாக்கு கடை இருக்கும். நீ வெற்றிலை போடுவதில்லை. இருந்தாலும் காலணாவுக்கு வெற்றிலை, பாக்கு வாங்கிக்கொண்டு ரெண்டு நிமிஷம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, எங்கேயோ போகிறவன்போல் போய் மெதுவாக கதவைத் தட்டு."

"ஏது, திருட்டுத்தனமாக நடமாடுவதில் உனக்கு ரொம்ப பழக்கம் இருக்கும்போல் இருக்கிறதே!" என்றான் குமார். இருவரும் சிரித்தார்கள்.

தான் வந்த வேலை முடிந்ததும் பாலு போக எத்தனித்தான். 'காப்பி சாப்பிட்டுவிட்டுத்தான் போகவேண்டும்' என்று நிர்ப்பந்தப்படுத்தி, குமார் காப்பி வரவழைத்தான்.

சில நிமிஷங்களில் ராஜலட்சுமி அம்மாளே காப்பி கொண்டு வந்தாள்.

"பாலுவை உனக்குத் தெரியுமா அம்மா?" என்று குமார் பாலுவை அறிமுகம் செய்துவைத்தான்.

"உன்னை முன்னே ஒரு தடவை பார்த்த ஞாபகம் இருக்கிறது" என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

"ஆம்" என்றான் பாலு.

"போன தை பொங்கலின் போது வந்தது நீ தானே?" என்று கேட்டாள் ராஜலட்சுமி அம்மாள்.

"என் சிநேகிதர்களையெல்லாம் அம்மாள் அவர்கள் வந்திருந்த பண்டிகை மூலமாகத்தான் ஞாபகம் வைத்திருக்கிறாள். அவர்களுடைய பெயர் ஞாபகம் இருப்பதில்லை" என்றான் குமார். பின்பு தன் தாயைப் பார்த்து "ஏனம்மா, மற்றசமயங்களில் அவர்கள் யாரும் வருவதில்லையா?"

"நான் பண்டிகையின் போதுதான் பார்க்கிறேன். மற்ற சமயங்களில் அவர்கள் உன்னைப் பார்த்துவிட்டுப் போய் விடுவார்கள்" என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

"நீ பரீக்ஷை நன்றாக எழுதியிருக்கிறாயா?" என்று பாலுவைப் பார்த்து ராஜலட்சுமி அம்மாள் கேட்டாள்.

"நான் பாஸ் ஆவது கஷ்டம்" என்றான் பாலு.

"அதேன் அப்படி? குமார் பாஸ் செய்துவிடுவானே?" என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

"குமார் கெட்டிக்காரன்" என்றான் பாலு. "எனக்கு பாஸ் செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒன்றுதான்."

"அதேன் அப்படி?" என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

"இந்தக் காலத்தில் பி. ஏ. பட்டத்தினால் என்ன பிரயோஜனம்?" என்றான் பானு. "முன்னாலேயாவது பி. ஏ. என்றால் கலியாண மார்க்கெட்டில் நல்ல மதிப்பு இருந்தது. இப்போ அதுகூட கிடையாது. வேலை வேண்டுமென்றால் சிபார்சைப் பொருத்திருக்கிறதே தவிர படிப்பைப் பொருத்து இல்லை. அதனால் பி. ஏ. பாஸ் செய்தோம் என்னும் பெருமையைத் தவிர வேறு ஒரு உபயோகமும் இல்லை."

"நீ ரொம்ப ஆச்சர்யமாய் பேசுகிறாயே? உனக்கு வேறு தொழில் ஏதாவது உண்டா?" என்று கேட்டாள் ராஜலட்சுமி அம்மாள். பெரிய பி. ஏ. பட்டத்தைப் பற்றி தன் புருஷனிடமிருந்தும் இந்திராவினிடமிருந்தும் எவ்வளவோ கேள்விப்பட்ட பிறகு பானுவின் மனப்பான்மை ஆச்சர்யத்தை உண்டு பண்ணியதில் சந்தேகமில்லை. பிறகு, சம்பாஷணையை மாற்றி, "குமார் சீக்கிரம் கலியாணம் செய்து கொள்ளப்போகிறான்" என்றாள்.

"இல்லை, குமார் கலியாணம் செய்துகொள்ளப்போவதில்லை" என்று குமார் இடைமறித்தான்.

"அம்மா சொல்வதென்னவென்றால், எல்லோரும் சேர்ந்து எனக்கு கலியாணம் செய்யப் பார்க்கிறார்கள் என்பதுதான். ஆனால், நான் கலியாணம் செய்து கொள்வதில்லை என்று முடிவு செய்து விட்டேன்."

"இந்தக் காலத்தின் பையன்களின் பேச்சே எனக்கு அர்த்தமாவதில்லை" என்றாள் ராஜலட்சுமி அம்மாள் சிரித்து கொண்டே, "நீ கலியாண மார்க்கெட் என்று ஏதோ

சந்தைக் கடைக்கு ஒப்பிட்டு பேசுகிறாய். குமாரோ, கலியாணமே வேண்டாம் என்று பிடிவாதம் செய்கிறான். நல்ல விஷயங்களைப் பற்றி மோசமாக பேசுவதுதான் இந்தக் காலத்திய தத்துவம்போல் இருக்கிறது. பேசாமல் என் பேச்சைக் கேட்டு நல்ல பெண்ணாய் பார்த்து கலியாணம் செய்து கொண்டால்தான் உங்கள் இருவருக்கும் நல்லது."

"நான்தான் கலியாணம் செய்து கொள்வதில்லை என்று சொல்லியாகிவிட்டதே" என்றான் குமார்.

"அவன் சொல்வதை கவனிக்க வேண்டாம்" என்றாள் ராஜலட்சுமி அம்மாள் பாலுவைப் பார்த்து. "பெண் பார்த்தாகி விட்டது. ஜாதகமும் பொருத்தமாய் இருக்கிறது. பெண்ணும் பார்ப்பதற்கு, நன்றாய் எழுதிய படம் மாதிரி இருக்கிறாள்........."

"உன்னை இதெல்லாம் யாரம்மா கேட்டார்கள்?" என்று சத்தம் போட்டான் குமார்.

"ஏன், இதில் என்ன தப்பு குமார்" என்றாள் ராஜலட்சுமி அம்மாள் மிகுந்த வினயத்துடன்.

இந்த குடும்பத் தர்க்கத்தைக் கேட்கவும் அதில் கலந்து கொள்ளவும் பாலுவுக்கு இஷ்டமில்லை. "நான் போகவேண்டும், கொஞ்சம் வேலையிருக்கிறது" என்று நாற்காலியிலிருந்து எழுந்தான்.

"நான் கொண்டு வந்த காப்பி அப்படியே வைத்து விட்டாயே?" என்று காப்பியைக் காட்டினாள். பாலு, காப்பியை குடித்துவிட்டு "நான் போய் வருகிறேன் குமார்",

என்று சொன்னான். கடைசியாக கலியாணத்துக்கு என்னைக் கூப்பிட மறந்துவிடாதே" என்று சிரித்துக்கொண்டே கண்ணைச் சிமிட்டிவிட்டு வெளியே போனான்.

"கலியாணத்தைப் பற்றி பாலுவிடம் எதற்கம்மா பிரஸ்தாபித்தாய்?" என்றான் குமார்.

"ஏன்? அதனாலென்ன. சீக்கிரம் எல்லோருக்கும் தெரியவேண்டியது தானே?"

"நான் கலியாணம் செய்து கொள்ளாவிட்டால் ஏன் தெரியப் போகிறது? கலியாண சமாச்சாரம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டால் பிறகு நான் மறுக்க முடியாதென்று தானே?

"சும்மா இரு குமார். பெண்ணைப் பார்த்தால் சீக்கிரம் கலியாணம் ஆகவேண்டும் என்று நீயே அவசரப்படுவாய். கோபமாய் இருக்காதே. உன் தகப்பனார் உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்" என்று சொல்லிவிட்டு ராஜ லட்சுமி அம்மாள் வெளியே சென்றாள்.

குமாரின் காப்பி, குடிக்கப்படாமல் டம்ளரிலேயே இருந்தது.

அத்தியாயம் பத்தொன்பது.

உடையார் வழக்கம்போல் மாலை ஐந்து மணிக்கு வீட்டுக்கு வந்தார். குமார் காலேஜ் ஹார்த்தாலில் கலந்து கொண்டதிலிருந்து உடையார் அவனுடன் அதிகமாகப் பேசியதில்லை. அவருக்கு ஒருவேளை அதிக கோபமாய் இருக்குமோ என்று குமார் யோசனை செய்து கொண்டிருக்கும்போது இந்திரா அங்கே வந்தாள்.

"அய்யா உன்னை கூப்பிடுகிறார்" என்றாள். குமார் அவளுடன் பேசாமல் சென்றான். அவன் மனதில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருந்தது. முக்கியமாக ஏதோ நடக்கப் போகிறது என்று தோன்றியது.

உடையார் ஒரு சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தார். அப்போதுதான் சூடாக காப்பி சாப்பிட்டதினாலும் வெய்யிலினாலும் முகத்தில் வியர்வை படிந்திருந்தது. மிகவும் சோர்ந்து காணப்பட்டார். ராஜலட்சுமி அம்மாளும் கவலை தோன்றிய முகத்துடன் நின்றுகொண்டிருந்தாள்.

"இதென்ன குமார்?" என்று குமார் உள்ளே வந்ததும் உடையார் பேச்சை ஆரம்பித்தார். "கலியாணஞ் செய்துகொள்ள மாட்டேன் என்கிறாயாமே!"

"ஆம்"

"பெண்ணைப் பார்த்தாயா?"

"இல்லை."

“ரொம்ப அழகான பெண்” என்றார் உடையார். “நீ அவளைப் பார்த்த பிறகு உனக்கு பிடிக்காவிட்டால் அது வேறு விஷயம். அப்படியிருந்தால் கூட அழகை ஒன்று மட்டும் கவனித்தால் முடியுமா ?”

“இல்லை அப்பா. இந்தப் பெண்ணைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. கலியாணமே இப்பொழுது வேண்டாம் என்று தான் சொன்னேன்.”

“ஏன்?”

“அவசரமாகக் கலியாணஞ் செய்துகொள்ள எனக்கு இஷ்டமில்லை.”

“இதில் அவசரம் என்ன வந்தது? நம்மைப் போன்ற அந்தஸ்துள்ள குடும்பங்களில் படிப்பு முடிந்து வயது வந்ததும் கலியாணம் செய்துகொள்ள வேண்டியதுதானே? பிறகு ஏதோ தொழில் அல்லது உத்தியோகம் செய்யலாம் அல்லது குடும்ப சொத்தைப் பராமரித்து வரலாம். எல்லோரும் அப்படித்தான் செய்கிறார்கள். அதுதான் நம் கடமை, நம் தர்மம்.”

தகப்பனுருக்கு முன்னால் நின்று பேசும்போது குமாரின் பதில்களும், தன் உரிமையைப் பற்றிய வாதங்களும் வார்த்தைகளாக வெளிவர மறுத்தன. மெதுவாக, தயக்கமாக பேச ஆரம்பித்தான். “நான் கலியாணம் செய்துகொண்டால் நாம் வாழ்க்கை நடத்தும் முறையில் மனைவி ஒரு சுமையாக இருப்பாளே தவிர நான் செய்ய விரும்புவதற்கெல்லாம் உதவியாய் இருக்கமாட்டாள்.” இம்மாதிரி பேசும்போது குமாரின் இருதயம் ‘படபட’வென்று அடித்துக் கொண்டது.

"முட்டாள்தனமாக பேசாதே, குமார்" என்றார் உடையார் சிரித்துக்கொண்டே. "உன் வயதில் எல்லோரும் தான் கலியாணம் செய்துகொள்ள இஷ்டப்படுவார்கள். நீ மட்டும் என்ன இதற்கு விலக்கா? நான் கலியாணம் செய்வதற்கு முன் உன் அம்மாளைப் பார்த்ததுகூட இல்லை. நீங்களெல்லாம் இந்தக் காலத்தில் பெண்ணைப் பார்த்துவிட்டுத்தானே செய்து கொள்ளுகிறீர்கள்? சும்மா நீ போய் பெண்ணைப் பார்த்துவிட்டு வா."

"கலியாணம் செய்துகொள்ள இஷ்டமிருந்தால் தானே பெண்ணைப் பார்க்கப் போக வேண்டும்? சாமான் ஒன்றும் வாங்காமல் கடைக்கு போகிற மாதிரி." குமாரும் இதைச் சிரித்துக்கொண்டே சொன்னாலும், அது அவனுடைய தீர்மானத்தைக் காட்டியது.

"ஐயோ, குமார். கலியாணத்தைப் பற்றி 'கடையில் சாமான் வாங்குகிற மாதிரி' என்று பேசலாமோ?" என்று ராஜலட்சுமி அம்மாள் பிரலாபித்தாள். "கலியாணம் தெய்வீகமானது. அக்கினி சாட்சியாக கடவுளுக்கு முன்னால் நடக்கிறதல்லவா?"

"நான் கலியாணம் செய்து கொள்ளவேண்டும் என்று கடவுள் நினைத்தால் அவரே எனக்கு பெண் பார்த்து செய்து வைத்து விட மாட்டாரா அம்மா? நீங்கள் ஏன் இவ்வளவு பிரயாசைப் படுகிறீர்கள்?" என்று குமார் தமாஷாகப் பேச ஆரம்பித்தான்.

"இந்த மாதிரியெல்லாம் பேசுவது பாவம் குமார்," என்று அவன் தாயார் கடிந்து கொண்டாள். "ஏதோ,

இனிமேலாவது கடவுளைப்பற்றி தமாஷாகப் பேசுவதை விட்டுவிடு. உன் கலியாணத்தைப்பற்றி நான் எவ்வளவோ நினைத்துக் கொண்டிருந்தேன். இந்தப் பெண் தப்பிவிட்டால் அப்புறம் வேறு நல்ல பெண் கிடைக்காது."

"பார் அம்மா, இந்திரா. நான் சொல்வதைக் கொஞ்சம் கவனித்துக் கேளுங்கள்" என்று குமார் ஆரம்பித்தான். எப்படியாவது அவர்களைத் தன் எண்ணங்களை அர்த்தம் செய்துகொள்ளச் செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டான். "ஆயிரக்கணக்கானவர்கள் முன்பின் தெரியாமல் கலியாணம் செய்துகொண்டு சந்தோஷமாய் இருக்கவில்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் இப்போது உலகமே மாறிக்கொண்டு வருகிறது. நம் மூதாதைகள் வாழ்ந்த மாதிரியே நாமும் வாழ முடியுமா? தேசத்திலேயே ஒரு புரட்சி ஏற்பட்டு வரும்போது பழைய ஐதீகங்கள் இக்காலத்துக்கு உதவாது."

பிறகு, "நீங்கள் இரண்டு ஆத்மாக்களை சாகும்வரையில் பிரிய முடியாமல் ஒன்று சேர்த்துப் பிணைக்கப் போகிறீர்கள். எங்களுக்கு ஒருவரையொருவர் தெரியாது. எனக்கு தனியாக ஒரு மனம், உள்ளம், உணர்ச்சி எல்லாமிருக்கின்றன. நீங்கள் என் பெற்றோர். இருந்தாலும் எனது வாழ்க்கை என்னுடையதுதானே? ஆகவே என் வாழ்க்கையைப் பற்றிய முடிவுகளையெல்லாம் நானே செய்து, நானே பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். என் இஷ்டப்படி சாப்பிடச் சொல்லுகிறீர்கள். இஷ்டப்பட்ட புஸ்தகங்களையும் துணி மணிகளையும் வாங்கிக்கொள்ளச் சொல்லுகிறீர்கள். இஷ்டப்பட்டவர்களோடு சிநேகம் செய்துகொள்ள விட்டுவிடு

கிறீர்கள். ஆனால் இந்த முக்கியமான கலியாண விஷயத் தில் என் இஷ்டப்படி விடமாட்டீர்களா?" என்றான்.

"பெற்றோருக்குக் கீழ்படிய வேண்டியதில்லையே உன் சட்டப் பிரகாரம்?" இது வரை பேசாமலிருந்த உடையார் இப்போது கேட்டார். "பெரியோருக்கு மரியாதை, குடும் பத்துக்கு உன் கடமை ஒன்றும் கிடையாதோ?"

"நான் உங்கள் அடிமையாய் இருந்தால், உங்களுக்குக் கீழ்படிந்து நடந்து கொள்வேன். ஆனால் நான் உங்கள் மகன். உங்கள் மேல் எனக்கு அன்பு, அபிமானம், மரி யாதை எல்லாம் உண்டு. ஆனால் எனக்கு வேண்டியதைப் பற்றி நான்தானே முடிவு செய்துகொள்ளவேண்டும்."

"அப்படி யெல்லாம் பேசாதே குமார்" ராஜலட்சுமி அம்மாளுக்கு உணர்ச்சி பொங்கிக்கொண்டு வந்தது. "பெற்றோர் வார்த்தையைத் தட்டிப் பேசும் மகன் பிறக்க வேண்டும் என்பது என் விதி! நான் உனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டேன்! நீ குழந்தையாய் இருக்கும்போது உன் காலில் அடிபட்டால் என் கண்ணில் நீர் வந்தது. உனக்கு சிறிது உடம்புக்கு சரியில்லாவிட்டாலும் நான் பகவானை வேண்டிக்கொண்டேன். எங்கே அம்மா, என்று கூப்பிடு கிறாயோ என்று நினைத்து இரவும் பகலும் உன் பக்கத்தில் விழித்திருந்து சிசுருக்ஷை செய்தேன். அதற்கெல்லாம் வந்த பலன் இது."

"அதெல்லாம் எனக்கு செய்ததற்காக இப்போது என் வாழ்க்கையையே உங்கள் இஷ்டப்படி நடத்துவது சரியா?" என்றான் குமார்.

"தெய்வமே! இதற்கு முன்பே நான் இறந்து போய் இருக்கக்கூடாதா?" ராஜலட்சுமி அம்மாளுக்கு இதுவரை அடக்கி வைத்திருந்த அழுகை இப்போது வந்துவிட்டது. கண்ணீரும் விம்மலும் பேச்சை இடைமறித்தன. ஒவ்வொரு வார்த்தையும் அவளுடைய இதய வேதனையைக் காட்டின. "நான் செத்திருந்தால் என்மகன் இந்த மாதிரி பேசுவதையெல்லாம் கேட்க நேர்ந்திருக்காதே! ஆனால் உன்னைக் குற்றம் சொல்லி என்ன பிரயோசனம்? உனக்குக் கெட்ட காலம். என் விதி அப்படியிருந்தால் நீ என்ன செய்வாய்?"

"அம்மா, அழ வேண்டாம். இந்த வருஷம் இல்லாவிட்டால் ஒருவேளை அடுத்த வருஷம் நான் கலியாணம் செய்து கொள்ளுகிறேன். வேண்டாம் அழாதே" என்று சோகக்குரலில் கூறினன் குமார். அவன் இதயத்தை ஏதோ பிடித்ததுபோல் தோன்றியது. ஒரு தாயின் கண்ணீர்! தன்னைப் பெற்றெடுத்து தனக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்த தாயின் கண்ணீரை, கொள்கைக்காகவும், சுயநல உரிமைக்காகவும், எதிர்த்து நிற்க முடியுமா? தான்தானு அவளுடைய மனதிற்கு துன்பம் கொடுக்க வேண்டும்? குமாரின் உள்ளமும் விவரிக்கமுடியாத வேதனைப்பட்டது.

பக்கத்தில் நின்றிருந்த இந்திராவுக்குந் தன் கலியாணமும், தன் கணவன், மாரி, இவர்களைப்பற்றிய எண்ணங்களும் மனதில் தோன்றின. ஒருவேளை ஆண் பிள்ளையாய் இருந்தால் தானும் குமார் மாதிரி கலியாணம் செய்து கொள்ள மறுத்திருக்கலாம். ஆனுல் இப்போது? "கொஞ்ச

மாவது மற்றவர்கள் பேச்சைக் கேட்டால் உன் கௌரவம் குறைந்து விடுமோ?" என்றாள் குமாரைப் பார்த்து.

"சாகுமுன் உன் கலியாணத்தை கண்ணால் பார்க்க வேண்டும் என்று தவம் பண்ணினேன்" என்றாள் ராஜ லட்சுமி அம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டு, "நான் சாகும் காலத்தில் நீ ஏன் இவ்வளவு பிடிவாதமாயிருக்கிறாய்? இத்தனை நாளும் உன்னைத்தான் நம்பியிருந்தேன். நீயே இப்படி செய்வதினால் தான் விசனம் அதிகமாய் இருக் கிறது."

"எனக்கு மட்டும் வருத்தமில்லையா?" என்று கேட் டான் குமார். "நீங்கள் சொல்வதையெல்லாம் தட்டிப் பேசுவது எனக்கு சந்தோஷமா? நேற்று சாயந்திரம் இதைப்பற்றி கேள்விப்பட்டதிலிருந்து நான் எவ்வளவு யோசனை செய்தேன்! ஒரு வழிகண்டு பிடிக்க எவ்வளவு வேதனைப் பட்டேன்! ஏன் அம்மா, நீ அழுதால் அது என் இருதயத்தில் பாயாதிருக்குமோ? உங்களுக்காக நான் என்ன செய்யமாட்டேன்? மற்றவை வரும், போகும். ஆனால் பூரணமாக என்னுடையது என்று சொல்லக்கூடியது என் வாழ்க்கை ஒன்றுதானே? எனக்கு அது மிகவும் அருமையானது. அதனால் என் சொந்த வாழ்க்கையை மட்டும் எனக்கு விட்டுவிடுங்கள்."

"நீ நன்றாகப் பேசுகிறாய். ரொம்ப கெட்டிக்காரன், படித்தவன். எதையெதையோ பற்றிப் பேசுகிறாய். ஆனால் பெரியோர் சொல்வதையும் கொஞ்சம் கேட்கவேண்டும்" என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

"குமார், உனக்கு கர்வம் அதிகம்" இதுவரை பேசாமல் கேட்டுக்கொண்டிருந்த உடையார் சொன்னார். "ஆனால் வாழ்க்கையையும் மற்றவர்கள் சொல்வதைக் கேட்டுத்தான் நடத்தவேண்டும்."

"நீங்கள் என்மேல் அன்பாக இருந்தால் நான் சொல்வதை நீங்கள் கவனிக்கக் கூடாதா?" என்று பதிலளித்தான் குமார்.

"நீ சொல்வதை எப்படி இன்னொருவர் கவனிக்க முடியும்? நீதான் எல்லோரையும் ஜெயிலுக்குப் போகச் சொல்கிறாயே? கலியாணம் செய்துகொள்வதில்லை என்றால் கெட்டிக்காரத்தனம் என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்" என்றாள் இந்திரா.

"கெட்டிக்காரத்தனம் இதில் என்ன இருக்கிறது? எனக்கு இப்போது கலியாணம் செய்துகொள்ள இஷ்டமில்லை. ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்க்கையைத் தாமே நடத்தவேண்டுமென்று நம்புகிறேன். பெற்றோர் கூட புத்திசொல்லலாமே தவிர அதில் தலையிடக்கூடாது என்று நம்புகிறேன், அவ்வளவுதான்" என்று குமார் சொன்னான்.

"நீ காங்கிரஸ் இயக்கத்தில் சேரப்போகிறாய். அதனால்தான் கலியாணம் செய்துகொள்ள இஷ்டமில்லையோ?" என்று உடையார் கேட்டார்.

"அப்படித்தான் யோசனை செய்துகொண்டிருக்கிறேன்" என்றான் குமார்.

"நான் நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது. நீயும் உன்னுடைய உரிமையும் பேச்சும். நீ கெட்ட வழியில் போகாமல் இருக்க நானும் எவ்வளவோ கஷ்டப்பட்டு நல்ல பெண்ணைகப் பார்த்து கலியாணம் நடத்திவைக்க பிரயத்னப்படுகிறேன் நீ இப்படிப் பேசுகிருய்!" என்று உடையார் கோபத்துடன் சொன்ஞர்.

"நான் சந்தோஷமாக இருக்கவேண்டுமென்றல்ல. காங்கிரசில் சேரக்கூடாது என்பதற்காகத்தான் கலியாணத்தை இவ்வளவு அவசரமாக ஏற்பாடு செய்தீர்கள் என்று எனக்குத் தெரியும்" என்ருன் குமார்.

"இம்மாதிரியெல்லாம் பேசுவதற்காகத்தான் உனக்கு பணம் கொடுத்து காலேஜில் படிக்க வைத்தேன்! வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டால் அப்புறம் உன் பேச்சு, உரிமையெல்லாம் எங்கே?"

"தேசமே சுதந்திரத்திற்காக பாடுபடுகிறது. சமூகமே மாறிக்கொண்டு வருகிறது. அதைத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறீர்களே, வீட்டை விட்டு அனுப்பிவிடுவதாக பயமுறுத்திஞல் பணிந்து மனதை மாற்றிக்கொள்ள மாட்டேன். பசியோடாவது காலங் கழிப்பேன்."

"கொஞ்சம் பேச வேண்டாம் சும்மா இருங்கள்" என்று ராஜலட்சுமி அம்மாள் குறுக்கிட்டாள். இப்படி பேசிக்கொண்டு போனல் ஏதாவது விபரீதமாக நடந்துவிடும் என்று பயப்பட்டாள். "நீங்கள் போடும் சப்தத்தில் வேலைக்காரர்கள் எல்லோரும் இனி வேடிக்கைப் பார்க்க வருவார்கள். நாளைக்கு ஊரெல்லாம் பேசிச் சிரிப்பார்கள். குமார், உன் தகப்பஞரிடம் மரியாதையாய் பேச தெரி

யாதா உனக்கு?" ஆனால் ராஜலட்சுமி அம்மாள் பேசும் போதே நிலைமை மீறிப் போயிற்று.

"வெளியேபோ முட்டாள், நன்றி கெட்ட நாய், ஒரு நிமிஷம் என் முன்னால் நிற்காதே. வீட்டை விட்டுப் போய் விடு" என்று உடையார் கோபமாக சத்தம் போட்டார்.

குமார் இதை எதிர்பார்க்கவில்லை. தன் தகப்பனாரை ஒரு வினாடி சோகத்துடன் பார்த்தான். அவருடைய முகம் கோபத்தால் கருத்திருந்தது. அவருக்கு அடிக்கடி கோபம் வருவதில்லை, ஆனால் வந்துவிட்டால் பிறகு அவருடன் பேசிப் பிரயோஜனமில்லை என்று குமாருக்குத் தெரியும். தன் மகனுக்காக எவ்வளவு பாடுபட்டார், கஷ்டப்பட்டார்; அவனை முன்னுக்கு கொண்டுவர எத்தனை திட்டம் போட்டிருந்தார். தன் எல்லா ஆசைகளுக்கும் பிரதானமாகத் தன் மகனின் முன்னேற்றத்தைக் கருதியிருந்தார். அவர் ஆயிரம் தடவை கண்ட கனவை பாழ்படுத்தியதும்தவிர இப்படி சொன்னபடி கேட்காமல் விவாதிப்பவனை வைத்துக்கொண்டு என்ன செய்வது? தனக்கு இனிமேல் மகனே வேண்டாம்!

தகப்பனாரும் குமாரும் ஒரே வழியில் பிறந்தவர்கள் தானே? ஒரே இரத்தம். ஒரே பிடிவாதம்! தலை குனிந்து பேசாமல் வெளியே நடந்தான்.

"குமார்! நில்" தாயின் இதயம் வீரிட்டுக் கதறியது. "போகாதே, வா; திரும்பி வா" பிறகு தன் புருஷனைப் பார்த்து, "கூப்பிடுங்கள். அவனைத் திரும்பி கூப்

பிடுங்கள். அவன் வரமாட்டான் பிடிவாதக்காரன். ஐயோ, கொஞ்சம் கூப்பிடுங்கள்." உடையார் இரும்புச் சிலை மாதிரி அசைவற்று உட்கார்ந்திருந்தார். பிறகு "அவன் சுதந்திரம் எப்படி இருக்கிறது என்று இரண்டு நாள் ருசி பார்த்தால் பிறகு தானே வந்து விடுவான். நீ அவனுக்கு பணம் ஒன்றும் கொடுக்காதே" என்றார்.

"ஓ! கடவுளே" என்று ராஜலட்சுமி அம்மாள் வெராண்டாவுக்கு ஓடினாள். "பகவானே, நான் என்ன செய்வேன், இப்படிப்பட்ட புருஷனையும் மகனையும் வைத்துக் கொண்டு? நீ தான் ஒரு வழி செய்யவேண்டும். குமார்! குமார்!"

ஆனால் குமார் அங்கே இல்லை.

அத்தியாயம் இருபது

ரோடு மிகவும் புழுதியாய் இருந்தது. ஒரு முனிசிபாலிடி லாரி தூசியைப் படியவைக்க தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தது. தூரத்தில் ஒரு நாய் குரைக்கும் சத்தம் கேட்டது. வீட்டுக் கேட்டைத் தாண்டினதும் குமார் அவ்வளவு விரைவாக நடக்கவில்லை. திரும்பி ஒரு தடவை இதுவரைக்கும் தன் வீடாய் இருந்த கட்டிடத்தைப் பார்த்தான். மாலை வெய்யிலில் அது சுத்தமாயும் அழகாயும் இருந்தது. இதுவரையிலும் தான் தகப்பனுருடைய மகன், பணமும் அந்தஸ்தும் உடைய ராமச்சந்திர உடையாருடைய மகன், மற்றவர்கள் தன்னை அந்த முறையில்தான் மதிப்பிட்டு நடத்தினுர்கள். ஆனுல் இப்போதோ? தான் வீடற்று ரோட்டில் சுற்றித் திரியும் அதோ அந்த நாய் மாதிரி. தன் தகப்பனுரே தன்னை நாய் என்று கூப்பிடவில்லையா?

குமார் நடந்து கொண்டே போனுன். நாயும் கொஞ்ச தூரம் பின் தொடர்ந்து வந்து, பிறகு நின்று விட்டது.

ஆனுல் தன் தாயாரின் மேல், தகப்பனுரின் மேல், இந்திராவின் மேல் எவ்வளவு அன்பு இருந்தது! அந்த அன்புதான் தன்னை வேதனைப் படுத்தியது; சித்திரவதை செய்தது. வீட்டை விட்டு தூரமாக நடக்க நடக்க, மனத் துன்பமும் இதயத்தில் ஆழமாகப் பதிய ஆரம்பித்தது. தன் சொந்த தாய் தந்தையுடன் சண்டை பிடித்துக்

கொண்டான் என்று நினைக்க, ஒருவேளை இனிமேல் அவர்களைப் பார்க்கமாட்டான் என்று நினைக்க, இனி அவர்களுடன் பேசுவதும் சிரிப்பதும் இல்லை என்று நினைக்க, துக்கம் பொங்கிக்கொண்டு வந்தது. முடியாது ! ஒருக்காலும் முடியாது ! ஆனாலும் அது உண்மைதான். தனக்குத் தெரிந்தவர்கள், தன் மேல் அன்பாய் இருப்பவர்கள், தனக்கு வேண்டியதைச் செய்பவர்கள் இனி யாரும் கிடையாது. ஆம், அது வேறே இருக்கிறது. தனக்கு வேண்டியதை இனி யார் செய்வார்கள் ?

தான் தனியே இருப்பதாக குமாருக்கு ஒரு உணர்ச்சி தோன்றியது. அங்கு, அப்போது மட்டும் அல்ல, எப்போதும் எல்லா இடங்களிலும்; தன் பெற்றோரே தன்னைத் தெரியாதவர்கள், அன்னியர்கள் மாதிரி நடந்து கொண்டால் தனக்குத் தெரிந்தவர்கள் வேறு யார் ? தன் எண்ணங்களைப்பற்றியும் கொள்கைகளைப்பற்றியும், தன் மனதுக்கே எட்டாத கற்பனை உலகில் செய்யும் சஞ்சாரங்களைப் பற்றியும் அவர்களுக்கு என்ன தெரியும்? தன் இருதயத்தில் கொந்தளித்து தன் மனத்தை எழுப்பி காரியம் செய்யத் தூண்டும் உணர்ச்சிகளைப்பற்றி சில சமயங்களில் தனக்கே அர்த்தமாகாத உணர்ச்சிகளைப் பற்றியெல்லாம் மற்றவர்களுக்கு எப்படி எடுத்துச் சொல்வது? தான் தனக்கே அன்னியனு என்று தோன்றிற்று. ஏனெனில் தான் தன் பெற்றோரிடம் இவ்வளவு கடினசித்தத்துடன் நடந்துகொள்வான் என்று முன்பு தெரியவில்லை. இருதயத்தின் ஆழத்தில் மறைந்து பதிந்துள்ள எண்ணங்களாலும் காரணங்களாலும் வாழ்க்கை நடத்தும் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு அன்னியரே ஆவர்.

ஆம். இவ்வுலகில் தான் தனியாகத்தான் இருந்தான். ஆனால் சுதந்திரத்துடன் இருந்தான். பழைய ஐதீகங்களிலிருந்தும் மூட நம்பிக்கைகளிலிருந்தும், சமூக கட்டுப்பாடுகளிலிருந்தும், அந்தஸ்திலிருந்தும் பெற்றோர்களிடம் இருந்தும்கூட விடுவித்துக் கொண்டான். இப்போது தான் வெறும் குமார். ஆனால், பழைய ஞாபகங்கள் சுலபமாக விட்டுப் போகுமா? அந்தக் கொடுமையான பிசாசுகள் பல இன்பமான விஷயங்களை நினைவூட்டிக்கொண்டே யிருந்தன. கழிந்த காலத்தை சுலபமாக மறக்க முடியுமா?

குமார் இன்னும் அதே ரோட்டில் போய்க்கொண்டிருந்தான். பெரிய பிரமுகர்களின் பங்களாக்களையும் தோட்டங்களையும் தாண்டி, விளையாட்டு மைதானங்கள், பெரிய ஸ்டோர்கள், கார் கம்பெனிகள், சர்க்கார் ஆபீஸ்கள், முதலியவற்றையும் தாண்டி நடந்தான். கார்களும், ஜட்கா வண்டிகளும் ஜன நடமாட்டமும் ரோட்டில் அதிகமாயின. சலவை வேஷ்டி, சில்க் ஷர்ட் போட்டுக்கொண்டு உலாவப் போகிறவர்களும், பந்து விளையாட போகும் மாணவர்களும், ஆபீஸ்களிலிருந்து திரும்பும் குமாஸ்தாக்களும், கோர்ட்களில் நாள் பூராவும் விவாதித்துவிட்டு வரும் வக்கீல்களும், பக்கத்து கிராமங்களிலிருந்து நகருக்கு பல வேலைகளுக்காக வந்த கிராமவாசிகளும், பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும், தர்க்கம் செய்துகொண்டும் குமாரின் மனதில் அடித்துக் கொண்டிருந்த புயலைப்பற்றி ஒன்றும் தெரியாதவர்களாய் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களில் எத்தனை பேருக்கு உரிமை, சுதந்திரம், லக்ஷியம், இவைகளைப்பற்றி தெரியும்? எத்தனை பேர் அவற்றைப்பற்றி கவலைப்பட்டார்கள்? எல்லோரும் தம் சொந்த சிந்தனைகளிலும் பிரச்

சனைகளிலும் ஆழ்ந்திருந்தனர். எல்லோரும் ஒருவருக்கொருவர் அன்னியரேயாவர்.

திடீரென்று குமாருக்கு ஒரு எண்ணம் உதயமாயிற்று. எப்படியாவது ஒருவாராக எல்லாம் முடிந்ததே என்று. அதை நினைத்துப் பெருமூச்சு விட்டான். இந்த மாதிரி தனக்கும் தன் பெற்றோருக்கும் சுத்தமான, பூரணமான முடிவு ஏற்பட்டது நல்லது என்று தோன்றியது. முடிவு மிகுந்த வேதனைப்படுத்தியது. ஆனால் கூர்மையான கத்தியால் பளீர் என்று வெட்டின சுத்தமான காயத்தின் வேதனை! கோபம், பொறாமை முதலிய விஷம் படாமல் பாதுகாத்தால் நாள்பட காயம் குணமடையும். வேறுவழியின்றி வீட்டிலேயே இருந்துகொண்டும் தினமும் பெற்றோருடன் சண்டை பிடித்துக்கொண்டும், குற்றம் சொல்லிக்கொண்டும், ஒருவருக்கொருவர் மனக்கசப்பு ஏற்படுத்திக்கொண்டும் துன்புறுவதைவிட இதுவே பரவாயில்லை என்று நினைத்தான். அம்மாதிரி துன்பப்பட்டால் அது ஒரு விஷப்புண் மாதிரி என்றும் ஆறாது. மனதில் சந்தேகம், சஞ்சலம், முடிவின்மை இருப்பதை விட இம்மாதிரி முடிவு எவ்வளவோ மேல்.

ஆனால் இனிமேல் என்ன? தான் எப்படி வாழ்க்கை நடத்துவது? எங்கு சாப்பிடுவது, தூங்குவது, வசிப்பது? ஒரு தொழில் செய்யலாமா? அப்படிச் செய்தால் தன் லக்ஷியங்களெல்லாம் என்ன ஆகும்? தன் வாழ்க்கை பூராவும் ஒரு ஆபீசில் சம்பளத்துக்குக் கழிப்பதா? இல்லை. தான் அது செய்ய முடியாது. வேறு அதிகம் ஏதாவது செய்யவேண்டும். எழுதிப் பணம் சம்பாதிக்கலாமா?

குமாருக்கு எழுத்தாளர் நிலைமை தெரியாது. தன் கவிதைகளை ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு அனுப்பலாமா? பணத்தின் ஞாபகம் வந்ததும் குமார் சட்டைப்பையில் கை விட்டுப் பார்த்தான்.

நல்ல வேளையாக 'பர்ஸ்' இருந்தது. ஒரு வேளை தகப்பனார் கோபமாய் இருந்தாலும் தாயார் பணம் அனுப்பலாமல்லவா? ஆனால் அது குமாருக்கு இஷ்டமில்லை. தான் படித்தவன். தன் செலவுக்கு தானே சம்பாதித்துக் கொள்ளவேண்டும். ஆனால் படிப்பது என்ன திறமையை அளித்திருக்கிறது? குமாஸ்தாவாகலாம், அல்லது மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்கலாம்; அவ்வளவுதான். அது என்ன உபயோகம்?

இப்போதிருந்து தனக்கு ஒரு புது வாழ்க்கை ஆரம்பமாகிறது. எதிர்காலத்தில் என்ன நடந்தாலும் ஒன்று மட்டும் நிச்சயம். தன் தகப்பனாரின் மகன் என்று ஒன்றும் செய்யமுடியாது. இனிமேல் தன் காலால்தான் நிற்க வேண்டும். ஊன்று கோல் இல்லை.

திடீரென்று ஒரு கார் ஹார்ன் சத்தம் கேட்டு குமார் அப்படியே நின்றுவிட்டான். நடுரோட்டில் நடந்து கொண்டிருப்பதை உணர்ந்தான். சிந்தனை உலகில் சஞ்சரித்துக் கொண்டே கடைவீதி வரைக்கும் வந்து விட்டான். கூட்டம் அதிகமாய் இருந்தது. போவதற்கே இடமில்லை. காப்பியாவது சாப்பிடலாம் என்று பக்கத்திலிருந்த பிச்சு ஐயர் காப்பி கிளப்புக்குள் நுழைந்தான்.

அத்தியாயம் இருபத்தொன்று.

பிச்சு ஐயர் காப்பிக்கடை சிறிதாயும் அவ்வளவு சுத்தம் இல்லாமல் இருந்தாலும் பலகாரங்களுக்கு மிகவும் பிரசித்தமானது. ஒரு இருண்ட நடையில் நுழைந்து தான் உள்ளே போகவேண்டும். உள்ளே ஒரு பெரிய அறையின் கதவின் பக்கத்தில் சாக்ஷாத் பிச்சு ஐயரே தரிசனம் தருவார். உள்ளே சாப்பிட வருபவர்களைப் பார்த்து சிரித்துக்கொண்டே வெளியே போகிறவர்களிடம் பில்படி பணம் வசூல் செய்வார். அடையாளம் தெரிந்தவர்கள் வந்தால் ஒரு கும்பிடுபோடுவார். மிகவும் வேண்டியவர்கள் யாராவது உள்ளே நுழைந்தால் "வரணும், வரணும்" என்று சொல்லிவிட்டு "டே அம்பி, ஐயாவைப் பார்த்து கவனிச்சுக்கோ" என்று பக்கத்திலிருக்கும் பரிமாறுபவனிடம் சொல்வார்.

குமார் உள்ளே சென்று காலியாய் இருந்த ஒரு மேஜைக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று சுற்றிப் பார்த்தான்.

"ஹல்லோ குமார்!" இவ்வார்த்தைகளுடன் முதுகில் ஒரு தட்டு விழுந்தது. உடனே குமாருக்கு தட்டியது ராமமூர்த்தி என்று தெரியும். ராமமூர்த்தி ஒரு சிறிய அச்சுக்கூடம் வைத்திருந்தான். அங்கு அச்சடித்த துண்டுப் பிரசுரங்களை குமார் காலேஜில் வினியோகம் செய்தது உண்டு. குமார் திரும்பிப் பார்த்து இம்மாதிரி பலமாக

முதுகில் தட்டுவது சிநேகத்தைக் காட்டுவதானாலும் முது குக்கு வலி கொடுக்கிறது என்று சொல்வதற்குள் ராமு பக் கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு 'அம்பி' யிடம் குமாருக்கும் சேர்த்து தின்பண்டங்களைக் கொண்டு வரச் சொன்னான்.

ராமுவுக்கு சுமார் முப்பது வயது இருக்கும். அகன்ற நெற்றி, பெரிய கண்கள், வெற்றிலை பாக்கு கறையேறிய பற்கள் — இவைகளே ராமுவின் முகத்தில் முக்கியமானவை. உயரத்துக்கு தகுந்தபடி கை கால்களும் நீண்டு வளர்ந்திருந் தன. 'ஆர்டர்' போட்டுவிட்டு குமாருடன் பேசலானான்.

"என்ன, நம்ம ஜமீன்தார் எப்படியிருக்கிறார் இன்று?" என்றான். உடையாருடைய அந்தஸ்தை உத்தேசித்து சில நண்பர்கள் குமாரை ஜமீன்தார் என்று தமாஷாக அழைப்பது வழக்கம்.

"நேற்று வரைக்கும் பரீக்ஷை. அதனால் வேறொன் றுக்கும் நேரமில்லை. நீ எப்படி இருக்கிறாய்? என்றான் குமார்.

"நான் ரொம்ப பெரிய மனிதனாகிவிட்டேன்" என் றான் ராமு உற்சாகமாக. "யார் அப்படி நினைக்காவிட் டாலும் போலீஸ் அப்படி நினைக்கிறார்கள். சில நாளைக்கு முன் அவர்கள் என் அச்சுக்கூடத்துக்கு விஜயம் செய்தார் கள். சோதனை போட்டார்கள். அவர்களுக்கு வேண்டியது ஒன்றும் கிடைக்கவில்லை. என் வேலை ஒரு நாள் கெட்டது தான் மீதி. ஆனால் நான் 'காணோம்' என்று கைவிட்ட சில புஸ்தகங்களை அவர்கள் தேடிக் கண்டுபிடித்தார்கள்.

வேறு ஒன்றும் விசேஷம் இல்லை. பிச்சு ஐயர் பில் அச்சடிப்பது தான் வேலை."

"உன்னை எப்படி இன்னும் அரஸ்ட் செய்யவில்லை."

"இப்போதே அநேகம் பேர் அங்கே போய் சேர்ந்து விட்டார்கள். நானும் போனால் கூட்டம்தான் அதிகமாகும்."

பரிமாறுபவன் அவர்களுக்கு வேண்டிய தின்பண்டங்கள் கொண்டுவந்தான். சில நிமிஷங்கள் இருவரும் சாப்பிடுவதில் ஈடுபட்டிருந்தார்கள். அன்று நடந்த சம்பவங்கள் இன்னும் குமார் மனதை வாதித்துக் கொண்டிருந்தன. யாருடனாவது சொன்னால்தான் கொஞ்சமாவது நிம்மதியிருக்கும். ராமுவுடன் சொல்ல ஆரம்பித்தான்.

"ராமு, நான் வீட்டை விட்டு வந்து விட்டேன்."

"என்ன சொன்னாய்?" என்று ராமு சாப்பிடுவதை நிறுத்திவிட்டு கேட்டான்.

"தகப்பனார் என்னை வீட்டை விட்டு வெளியே ஓட்டி விட்டார்."

"ஏன்?"

பிறகு குமார் முதலிலிருந்து கடைசி வரை நடந்ததையெல்லாம் விரிவாகச் சொன்னான்.

"உனக்கு கொஞ்சமாவது சமயோசித புத்தி, முன் யோசனை ஒன்றுமே கிடையாது." என்றான் ராமு. "என்னைப் பார், வயது முப்பதாகிறது. இது வரையில்

கலியாணம் செய்து கொள்ளாமல் வீட்டிலும் சண்டையில்லாமல் காலம் தள்ளிக்கொண்டு வருகிறேன். எப்போது என் தாயார் அதைப்பற்றி பிரஸ்தாபித்தாலும், பெண் பிடிக்கவில்லை, படிப்பில்லை, சங்கீதம் தெரியாது, வரதக்ஷிணை பத்தாது என்றெல்லாம் சாக்குச் சொல்லி விடுகிறேன். நினைத்தால் ஆயிரம் காரணங்கள் கண்டு பிடிக்கலாம். அதை விட்டுவிட்டு வீணாக சண்டை பிடித்துக் கொள்ளுகிறாய். நாளைக்கு இதைப்பற்றி ஊரெல்லாம் பேசிக் கொள்ளுவார்கள்."

"நீ சொல்வதும் ஒரு யோசனைதான்" என்றான் குமார் காப்பி குடித்துக்கொண்டே.

"பரவாயில்லை எப்போதும் இப்படியேயா இருக்கும்? நீ ஒரே மகன். இரண்டே நாளில் உன்னை வீட்டுக்கு வந்துவிடச் சொல்லுவார்கள்."

குமார் இதை எதிர்பார்க்கவில்லை. தான் செய்தது தான் சரி. இந்த நிலைமையில் வேறொன்றும் செய்திருக்க முடியாது. கலியாணம் செய்து கொள்ளவேண்டும் என்று கட்டாயப்படுத்தியது தன் பெற்றோர்கள்மேல் தப்பு என்று ராமு சொல்லியிருக்கவேண்டும். உலகில் இப்போது தனியாய் இருந்த தனக்கு அன்பு, கருணை, இரக்கம், இவைகளை ராமு அளித்திருக்கவேண்டும்.

"வருத்தப்படாதே குமார். சில நாளில் எல்லாம் சரியாய் போய்விடும். பேசாமல் எங்க வீட்டுக்கு வா போகலாம். உன் வீடு மாதிரி அரண்மனையில்லை. ஆனாலும் நீ

வந்தால் ரொம்ப சந்தோஷம்.” ராமு கூப்பிட்டதைப் பற்றி குமாருக்கு திருப்தி. ஆனால் அங்கு போவதைப் பற்றி ஒன்றும் சொல்லாமல், “இப்போது நடக்கப்போகும் கூட்டத்தைப்பற்றி தெரியுமா?” என்று கேட்டான்.

“ஆம், தெரியும்.”

“நீயும் வருகிறாயா?”

“இல்லை.”

இது குமாருக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. “நீ கண்டிப்பாக வரவேண்டும்” என்றான்.

“அம்பி, பில்” என்று கூப்பிட்டான் ராமு. குமார் மறுபடியும் பேசுவதற்கு முன்பே “நான்தான் குமார் இந்தத் தடவை” என்று ‘பில்’லை கையில் எடுத்துக் கொண்டு குமாரையும் இழுத்துக்கொண்டு பிச்சு ஐயரிடம் போனான்.

பிச்சு ஐயர் இருவரையும் பார்த்து சிரித்துக்கொண்டே “எங்கே ரொம்ப நாளாய் காணோம். நீங்களெல்லாம் அடிக்கடி வராவிட்டால் என் கதி என்ன?” என்றார்.

“நீங்கள் கொடுக்கும் ‘ஸ்பெஷல் டிஷ்’களை தினமும் சாப்பிட்டு வயிற்றைப் பாழ்படுத்திக்கொள்ள நான் இருக்கிறவரைக்கும் உங்களுக்கு பயமில்லை” என்றான் ராமு சிரித்துக்கொண்டே.

“நம்ம ‘ஸ்பெஷல்’ அவ்வளவு மோசமாய் இருந்தால் நீங்கள் தினமும் வருவீர்களா? என்றார் பிச்சு ஐயர். பிறகு “என்ன சட்டமறுப்பு யெல்லாம் நம்ம ஊரில் ஒன்றுமே காணோம்? பம்பாயிலே நேற்று ஒரே நாளில் பதினையாயிரம் பேரை அரஸ்ட் பண்ணினார்களாம். கல்கத்தாவிலும்

அப்படித்தான் இருக்கும் என்று பேப்பரில் போட்டிருக்கிறது. இன்னும் பேப்பருக்குத் தெரியாத எத்தனைபேரோ? நீங்கள் என்ன சொன்னாலும் சரி, நமக்கு சுயராஜ்யம் வந்தால் அது வடஇந்தியர்களால்தான். நாம் என்ன ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லை. நம்ம சுந்தரத்தைப் பிடித்து அடைத்ததும் எல்லாம் அப்படியே அடங்கிவிட்டது."

"ஏன் நீங்களும் சட்டமறுப்பு செய்து ஜெயிலுக்குப் போவதுதானே?" என்று கேட்டான் ராமு.

"நான் குடும்பஸ்தன் ஸார்" என்றார் பிச்சு ஐயர். "எனக்கு பல தொல்லைகள், கவலைகள் உண்டு. அந்த மாதிரி தியாகமெல்லாம் உங்களைப் போன்றவர்கள்தான் செய்யவேண்டும்."

"எல்லோருக்கும் உங்கமாதிரி சாக்கு இருக்கிறது" என்றான் ராமு.

"சரி நாங்கள் போகவேண்டும்" என்று கிளம்பினான் குமார். ராமு பில்லுக்கு பணம் கொடுத்த பிறகு இருவரும் வெளியே சென்றார்கள்.

"நீ கூட்டத்திற்கு வரவில்லையா?" என்றான் குமார் காப்பிக்கடைக்கு வெளியே.

"முடிந்தால் வருகிறேன்."

"அது என் 'முடிந்தால்'?"

"ராத்திரி தூங்க என் வீட்டுக்கு வா. எல்லாம் அப்புறம் சொல்கிறேன்" என்று ராமு விடை பெற்றுக் கொண்டான்.

அத்தியாயம் இருபத்திரெண்டு

சூரியன் அஸ்தமித்துவிட்டான். நீண்ட நிழல்கள் மறைந்து இருட்டாகும் நேரம். ராமுவை விட்டுப்பிரிந்ததும் குமார் பல குறுகிய சந்துகளின் வழியே நடந்து சென்று வடக்கு தேர்வீதியை அடைந்தான்.

வடக்குத் தேர்வீதியில் முக்கியமாக 'பிராமணர்கள் தான் குடியிருந்தார்கள். குமாஸ்தாக்கள், உபாத்தியாயர்கள், வக்கீல்கள், டாக்டர்கள் முதலியவர்கள் தான் அதிகம். குமார் அங்கு வந்தபோது வீதி விளக்குகள் போட்டாகிவிட்டது. தன்னை யாராவது சந்தேகிக்காமல் இருப்பதற்காக வீதியின் ஒருகோடியிலிருந்து மற்றொரு கோடிவரைக்கும் நடந்தான். பிறகு 105 ஆம் நம்பரைப் பார்த்துத் தெரிந்துகொண்டு பாலு சொன்னபடி வெற்றிலை பாக்குக் கடையில் கொஞ்சநேரம் நின்று வெற்றிலையும் வாங்கிக் கொண்டு சுந்தரத்தின் வீட்டை அடைந்தான்.

வாசற்படிக்கு வந்ததும் பாலுவே உள்ளேயிருந்து கூப்பிட்டான்.

"ஏது வந்துவிட்டாயே" என்றான் பாலு.

"ஆம்"

"நீ வருவாய் என்று நான் நினைக்கவில்லை."

"ஏன்?"

"மனைவியைப் பற்றி கனவுகண்டு கொண்டிருப்பவனுக்கு தேசத்தைப்பற்றி நினைக்க நேரம் ஏது?"

"சும்மா இரு பாலு, தமாஷ் செய்யாதே."

மற்றயாரும் இன்னும் வரவில்லை. பாலுவும் குமாரும் கீழே விரித்திருந்த ஜமக்காளத்தின்மேல் உட்கார்ந்து கொண்டார்கள். ரங்கநாயகி அம்மாள் உள்ளே சமையல் செய்து கொண்டிருந்தாள். யாரோ பேசியதைக் கேட்டதும், "கொஞ்சம் இருங்கள் இதோ வந்துவிட்டேன்" என்றாள்.

ஒருவர் இருவராக மற்றவர்களும் வர ஆரம்பித்தார்கள். உள்ளே வந்தவர்களில் ஒருவர் "எதற்கய்யா இங்கே வரச் சொன்னீர்கள்? காரியம் செய்யாமல் சும்மா பேசி என்ன பலன்?" என்றார்.

"சத்தம் போட்டு பேசவேண்டாம். அப்புறம் ஒரு காரியமும் செய்ய முடியாமல் போலீசார் பார்த்துக் கொள்வார்கள்" என்றார் இன்னொருவர்.

"ஏன் சத்தம் போடக்கூடாது?" என்று முதலில் பேசியவர் மறுபடியும் கொஞ்சம் சத்தமாகப் பேசினார். "சத்தியாக்கிரகிகளுக்கு பயம் என்ன? நாம் என்ன குற்றம் செய்திருக்கிறோம்? நான் காந்தியைப் பின்பற்றுபவன்; அதற்காக ஜெயிலில் போட்டால் பயமில்லை."

"கொஞ்சம் காலை வரைக்கும் பொறுத்துக்கொள்ளுங்கள்" என்றார் இன்னொருவர். "நாளைக்கு ஒரு மீட்டிங் போடலாம். அப்புறம் வேண்டுமானால் நீங்கள் பேசி ஜெயிலுக்குப் போகலாம்."

"ஏதாவது செய்தால்தான் ஆகும்" என்றார் முதலில் வந்தவர்.

வந்தவர்களெல்லாம் இப்படிப் பேசிக்கொண்டார்கள்.

"நீ என்ன செய்யலாம் என்று உத்தேசம்?" என்று கேட்டான் பாலு, குமாரைப் பார்த்து.

"சட்டமறுப்பு செய்யலாம் என்றுதான் நினைத்திருக்கிறேன்" என்றான் குமார்.

கதர் சீலை கட்டிக்கொண்டு ரங்கநாயகி உள்ளிருந்து வந்து ஒரு மூலையில் உட்கார்ந்தாள். மேஜைமேல் வைத்திருந்த லாந்தரின் வெளிச்சத்தில் அவள் முகம் குமாருக்குத் தெரியவந்தது. வெள்ளிக்கம்பி போட்ட கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தாள். வந்து உட்கார்ந்ததும் எல்லோருக்கும் நமஸ்காரம் செய்தாள். கூட்டத்தில் இருந்தவர்களில் இருவர் அவள் பக்கத்துக்குச் சென்று ஏதோ பேசினர். 'அதுதான் ரங்கநாயகி அம்மாள். அவளுக்கு வலது புறம் பேசிக்கொண்டிருப்பது திருமலை' என்று பாலு குமார் காதில் 'குசுகுசு' வென்று சொன்னான்.

சுருட்டை மயிருடனும் கருத்த முகத்துடனும் அங்கு இதுவரையில் பேசாமல் உட்கார்ந்திருந்ததுதான் திருமலை என்று குமாருக்குத் தெரியவந்தது. திருமலையைப் பற்றி குமார் பலவிதமாக கேள்விப்பட்டிருந்தான். கம்யூனிஸ்ட் என்றும், சோஷியலிஸ்ட் என்றும், பலாத்காரப் புரட்சியில் நம்பிக்கைகொண்டவன் என்றும் காங்கிரசைத் தன் கொள்கைகளுக்காகப் பயன் படுத்திக் கொள்ளுகிறான் என்றும் வதந்தி இருந்தது. ரங்கநாயகிஅம்மாளின் முகத்தில் சாந்தம் குடிகொண்டிருந்தது என்றால், திருமலையின்

முகத்தில் அவசரம், ஆவேசம், ஆத்திரம் குடிபிருந்தது என்று சொல்லலாம். தடித்த உதடு, கூர்மையான கண்கள், நடுத்தரமான உயரம்.

ரங்கநாயகி அம்மாள் வந்ததும் மற்றவர்களுடைய பேச்சு அடங்கிவிட்டது. அங்கு சுமார் பதினைந்துபேர்கள் தான் இருந்தார்கள். போலீசாருக்குத் தெரியாமல் அவர்களுடைய சட்டத்தை மீறி ரகசியமாகக் கூடுகிறோம் என்று குமாருக்கு மனவெழுச்சி அதிகமாக இருந்தது. ஆனால் ஒரு சந்தேகமும் இருந்தது. இந்தப் பதினைந்துபேர்— இரண்டு மூன்று மாணவர்கள், சில குமாஸ்தாக்கள், 'வியாபாரிகள், காங்கிரஸ் தொண்டர்கள்—இவர்களால் என்ன செய்யமுடியும்? ஆனால் ஒவ்வொரு நகரிலும், கிராமத்திலும், இம்மாதிரி பத்துபேர், பதினைந்துபேர் இந்தியா முழுவதிலும் இல்லையா?

" சகோதரர்களே ! " ரங்கநாயகி அம்மாள் மெதுவாக மிருதுவான குரலில் பேச ஆரம்பித்தாள். குமாரின் எண்ணங்களும் தடைபட்டன. " நம் இயக்கத்தில் ஈடுபட்ட அநேக நண்பர்கள் இன்று சிறையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். ஒரு தொண்டன் போலீசாரால் அடிக்கப்பட்டு இறந்துவிட்டதும் தெரியும். காங்கிரஸ் மகாசபை சட்ட விரோதமாக்கப்பட்டு நம்மிடமிருந்த பணமும் பறிமுதல் ஆகிவிட்டது. நமக்கு கோபமூட்டக்கூடிய இத்தனை காரியங்கள் நடந்தும் நாம் அஹிம்சா தர்மத்தைக் கைவிடாதிருப்பது நமது தலைவர் மகாத்மா காந்தியிடம் நமக்கிருக்கும் அன்பையும் நம்பிக்கையும் காட்டுகிறது. மற்ற இடங்களில் இயக்கம் எவ்வாறு நடைபெறுகின்றது என்று தெரிந்துகொள்ள நமக்கு

வழியில்லை. நமது கடிதப் போக்குவரத்தையும் போலீசார் தடுத்துவிட்டார்கள். இதைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். நாளைக்கு என்ன செய்யவேண்டும், என்பதையே எல்லோரும் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஆனால் ரங்கநாயகி அம்மாள் பேசிக்கொண்டே போனாள். "நண்பர் திருமலை போலீசார் கண்காணிப்புக்குத் தப்பித்துக் கொண்டு தமிழ் நாட்டில் பல இடங்களுக்குப் போய்விட்டு வந்திருக்கிறார். அதைப்பற்றி அவர் நமக்கு இப்போது சொல்லுவார்."

"சகோதரர்களே!" என்று திருமலை ஆரம்பித்தான். "இந்த சில வாரங்களாக நான் தமிழ் நாட்டில் எல்லா நகரங்களிலும் பல கிராமங்களிலும் சுற்றிக்கொண்டு வந்தேன். இத்தனை அடக்குமுறைச் சட்டங்களைப் பிரயோகித்தும், நம் இயக்கத்தை முறியடிக்க முடியவில்லை. ஆனால் சர்க்காரிடம் சட்டம், அதிகாரம், ஆயுதம் ஆகிய எல்லா சக்தியும் இருக்கிறது. நாம் இவ்வளவு தியாகம் செய்தும் இன்னும் சர்க்காரை அசைக்கமுடியவில்லை. நம் தியாகம்தான் என்ன அவ்வளவு பெரிதா?" என்று கேட்டான் சிரித்துக்கொண்டே. "மற்ற நாடுகள் சுதந்திரம் பெற எத்தனை உயிர்களைத் தியாகம் செய்திருக்கிறார்கள்! எத்தனை வருஷம் போராடியிருக்கிறார்கள்! நாமும் இன்னும் அதிக கஷ்டப்படவேண்டும்."

"ஆம், ஆம்," என்றனர் சிலர்.

"நாம் சிலர்தான் இப்போது மிகுந்திருக்கிறோம். அதனால் அவசரப்பட்டு நாம் எல்லோரும் ஜெயிலுக்குப் போய்விடக்கூடாது. காந்திஜி என்ன சொல்லியிருக்கிறார்

என்று எனக்குத் தெரியும். ஆனால் இன்றைக்கு இந்த அறையில் இருப்பவர்கள் எல்லோரும் ஜெயிலுக்குப்போய் விட்டால் நாளைக்கு மதுரையில் சத்தியாக்கிரகம் இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அதனால் நாம் ரகசியமாக ஒன்று சேர்ந்து மற்றவர்களையும் நம்முடன் சேரச் செய்யவேண்டும். அதுதான் இப்போது நம்முடைய வேலை. ரகசியமாக இந்தியாவின் மற்ற பாகங்களில் என்ன நடக்கிறது என்பதைப்பற்றி துண்டுப் பிரசுரம் மூலம் விளம்பரம் செய்யவேண்டும் முக்கியமாக மில் தொழிலாளர் களையும் நம் இயக்கத்தில் ஈடுபடுமாறு செய்யவேண்டும்."

"நமது பழைய திட்டங்களெல்லாம் என்ன ஆகும்? அன்னியத் துணிக்கடைகள், கள்ளுக்கடைகள் மறியல், உப்பு சத்தியாக்கிரகம், இவைகளெல்லாம் என்ன ஆகும்?" என்றார் ஒருவர்.

"இப்போது ஜனங்கள் நம்மை பின்பற்ற பயந்து கொள்கிறார்கள். ஆகவே காங்கிரஸின் பெயரால் ஏதாவது வெளிப்படையாக செய்தால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை. அன்றியும், மறியல், உப்பு சத்தியாக்கிரகம், இவைகள் ஜனங்களை முன்மாதிரி இப்போது கவர்ச்சி செய்வதில்லை" என்றான் திருமலை.

"ரகசியமாக நாம் ஒன்றும் செய்யக்கூடாது. கடைசியில் அது நம்மை பலாத்காரத்தில் கொண்டுபோய்விடும். இயக்கம் வெளிப்படையாகத்தான் நடத்தவேண்டும். யாரும் போலீசுக்குக் கிடைக்காமல் இருக்கக்கூடாது, என்று காந்திஜியே கட்டளையிட்டிருக்கிறார். ஆகவே நாளைக்கு நாம் ஒரு பொதுக்கூட்டம் போட்டு 144-ம்

சட்டத்தை வெளிப்படையாக மீறவேண்டும்" என்முன் பாலு.

"அது ரொம்ப சுலபம்" என்றான் திருமலை தன் சுருட்டை மயிரைத் தடவிக்கொண்டே. "அம்மாதிரி செய்தால் தேசத்திற்கு சேவை செய்ததாக நமக்கும் பெருமை ஏற்படும். நம் மனசாட்சியும் சமாதானமடையும். ஆனால் இப்போது நாம் செய்ய வேண்டியதென்னவென்றால் பயந்துகொண்டிருக்கும் பொது ஜனங்களுக்கு ஊக்கமளித்து நம்மை பின்பற்றச் செய்யவேண்டும். இன்று நாம் ஜெயிலுக்குப் போனால் சிலர் நம்மை பின்பற்றலாம். ஆனால் முன்கூட்டியே வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு பிறகு வெளிப்படையாக பிரசாரம் செய்தால் அநேகம்பேர் நம்மைப் பின்பற்றுவார்கள்." அங்கிருந்த பலருக்கு இது சரியாகத் தோன்றியது.

"நான் ஒரு திட்டம் வகுத்திருக்கிறேன்" என்று பிறகு திருமலை தன் திட்டத்தை வெளியிட்டான். 'நாளைக்கு உடையார் மில் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யச் சொல்லி அவர்களையே ஒரு பொதுக்கூட்டம் போடச் சொல்லலாம். அவர்களுக்கு எவ்வளவோ குறைகள் இருக்கின்றன. காங்கிரஸ் மூலமாக நாம் யாராவது பேசுவதாக ஒத்துக்கொண்டால் அவர்கள் கூட்டத்துக்கு வர தயாராய் இருக்கிறார்கள்.'

"வெள்ளைக்காரரை வெளியே துரத்துவதற்கும் தொழிலாளர் வேலைநிறுத்தத்துக்கும் என்ன சம்பந்தம்? அந்தமாதிரி விஷயங்களில் நாம் இப்போது கலந்துகொள்ளக்கூடாது" என்றார் ஒருவர்.

பாலு குமாரைப் பார்த்தான். 'வேலை நிறுத்தத்துக்கு எதிரிடையாக தன் தகப்பனாரை ஆதரித்து பேசவேண்டும் என்று குமாருக்குத் தோன்றியது. ஆனால் மற்றவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்கவேண்டும்' என்று பேசாமல் இருந்தான். தன்னை வீட்டை விட்டு துரத்திய தகப்பனாரையா தான் ஆதரிக்கவேண்டும்? ஆனால் அவருக்கு இன்னும் வேதனை அளிக்கக் கூடிய விஷயங்களில் தான் கலந்து கொள்ளலாமா?

"நண்பர்களே, சுதந்திர இந்தியாவில் தொழிலாளர்களுடைய குறைகளை நிவர்த்திக்க தொழில் சங்கங்கள் வேண்டாமா? அதனால் அச்சங்கங்களை பலப்படுத்த இப்போதே நாம் தொழிலாளருக்கு உதவிசெய்யவேண்டும். அன்றியும் அவர்களும் தேசபக்தர்கள் என்று காட்டிக் கொள்ள நாம் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்."

உடனே பாலு, "உடையாரின் மகன் இங்கே இருக்கிறார். அவருடைய அபிப்பிராயத்தையும் தெரிந்துகொள்வது நல்லது" என்றான்.

இதைக் கேட்டதும் அங்கிருந்தவர்களுக்குள் ஒரு கலக்கம் உண்டாயிற்று. 'அவர் எப்படி இங்கு வந்தார்? அவர் நம்கட்சிதானா அல்லது சர்க்காருக்கு உடைந்தையா?' என்ற கேள்விகள் எழும்பின. எல்லோரும் குமார் இருந்த இடத்தை திரும்பிப் பார்த்தார்கள். "உன் அபிப்பிராயத்தைச் சொல் குமார்" என்றான் பாலு.

"நண்பர்களே, நான் காங்கிரசைப் பின்பற்றுபவன். சுயராஜ்யத்துக்காக பாடுபட இஷ்டமுடையவன். ஆகையால் சுயராஜ்யம் வாங்க மில் தொழிலாளர் வேலைநிறுத்தம்

செய்யவேண்டும் என்றால் எனக்கு சம்மதமே." குமார் நன்றாக யோசனை செய்து இவ்வார்த்தைகளை சொன்னான். தனக்கும் தன் தகப்பனாருக்கும் உள்ள தகராறை வெளிப் படுத்த இஷ்டமில்லை.

இதைக் கேட்டதும் எல்லோருக்கும் திருப்தி ஏற்பட்டது. "உடையாரின் மகனே வேலை நிறுத்தம் செய்வதில் ஆட்சேபம் இல்லையென்றால் நமக்கென்ன?" என்று மற்றவர்களும் ஒன்றும் பேசவில்லை. திருமலை மட்டும் "வேலை நிறுத்தம் வேண்டுமா, வேண்டாமா? என்று நாம் முடிவு செய்யவேண்டியதில்லை. எப்படியிருந்தாலும் அது நடக்கப்போகிறது. நாம் அக்கூட்டத்தில் பேசவேண்டுமா, இல்லையா? என்றுதான் முடிவு செய்யவேண்டும்" என்றான்.

மறுநாள், காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்ததற்காக தொழிலாளர் ஹர்த்தால் செய்வதென்றும், மாலையில் 144-ஆம் சட்டத்தை மீறி பொதுக்கூட்டம் நடத்துவதென்றும் அக்கூட்டத்தில் ரங்கநாயகி அம்மாள் பேசுவதென்றும் முடிவாயிற்று. ஆனால் மற்றவர்கள் கைது செய்யப்படக்கூடாது என்றும் சிலநாள் கழிந்து வேறு ஏற்பாடுகள் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. திருமலை ஒவ்வொருவரும் மறுநாள் என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றி தனித்தனியாகச் சொன்னான். பிறகு ஒவ்வொருவராக வெளியேசெல்ல கூட்டம் கலைந்தது.

அத்தியாயம் இருபத்திமூன்று

மற்றவர்கள் எல்லோரும் சென்ற பிறகு திருமலையும் ரங்கநாயகி அம்மாளும், பாலு, குமார் இவர்களுடன் பேசினர். பாலு காலேஜ் ஹர்த்தாலைப்பற்றியும் அதைக் காரணமாக வைத்துக்கொண்டு குமாருக்கு கலியாணத்துக்கு ஏற்பாடாகிக் கொண்டிருப்பதைப்பற்றியும் அவர்களுடன் சொன்னான். பிறகு குமார் தான் அதற்கு இணங்காமல் வீட்டைவிட்டு வெளியேறியதைப் பற்றிச் சொன்னான். "நீ செய்ததுரொம்ப நல்லது. அதைப்பற்றி விசனப் படவேண்டாம், சந்தோஷப்படு" என்றான் திருமலை.

"ஏதாவது பலகாரம் கொடுக்கிறேன் சாப்பிடுங்கள். உங்களுக்கு பசியாயிருக்கும்" என்று ரங்கநாயகி அம்மாள் பலகாரம் கொண்டுவந்து வைத்தாள். பிறகு "குமார், நாளைக்கு என்னை அரஸ்ட் செய்து விடுவார்கள். ஆனால் இன்றைக்கு ராத்திரி நீ இங்கேயே தூங்கலாம்" என்றாள்.

"இல்லை. என்னுடன் வா. நாளைய மீட்டிங்கைப் பற்றித் தெரியவந்தால் ரங்கநாயகி அம்மாளை இங்கேயே காலையில் அரஸ்ட் செய்யலாம். நீ இருந்தால் உன்னையும் அரஸ்ட் செய்வார்கள். நீ இன்னும் சிலநாள் வெளியே இருப்பது நல்லது" என்றான் திருமலை. குமாருடன் பல நாள் பழகினவன் மாதிரி பேசியது குமாருக்கு ஆச்சரியத்தை அளித்தது. பிறகு "நான் இன்று மத்தியானம்

உன் தகப்பனருடன் தொழிலாளரின் கோரிக்கைகளைப் பற்றிப் பேசினேன். அவர் அவைகளைப் பற்றி பேசவே மறுத்துவிட்டார். "வேலை நிறுத்தம் செய்பவர்கள் குறும்புக்காரர்கள். யோக்கியமாய் இருப்பவர்கள் தவருமல் வந்துவிடுவார்கள்" என்று என்னென்னமோ சொல்லி என்னை வெளியில் அனுப்பிவிட்டார்."

"நாளைய வேலை நிறுத்தத்தைப் பற்றி அவருக்குத் தெரியுமா?" என்று கேட்டான் குமார்.

"ஆம், தெரியும்."

அதனுல்தான் தன் தகப்பனருக்கு தன்மேல் அவ்வளவு கோபம் வந்தது என்று குமாருக்குத் தெரியவந்தது. கோபமாக வீட்டுக்கு வந்தார். பிறகுதான் கலியாணம் செய்து கொள்வதில்லையென்று சொன்னதும் தன் மீதும் கோபம் பலமாக வந்துவிட்டது.

"என்னப்பா, குமார். உன் தகப்பனர்தான் கோபமாக உன்னை வெளியே அனுப்பிவிட்டார், உன் தாயார் ஒன்றும் சொல்லவில்லையா?" என்று கேட்டாள் ரங்கநாயகி அம்மாள். பாலுவும் திருமலையும் சத்தியாக்கிரக முறைகளைப்பற்றி வாதித்துக்கொண்டிருந்தார்கள்.

"அம்மா திரும்பி வரச்சொல்லி கூப்பிட்டாள், ஆனல் நான் போகவில்லை."

"உன் தாயாருக்கு நீ இப்படி வந்துவிட்டது எவ்வளவு துக்கமாய் இருக்கும்! நீ எங்கே இருக்கிருயோ, என்னவோ, என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருப்பாள்.

பெண்களுக்கே சீக்கிரம் விசனம் வந்து விடும். ஆனால் அதை சீக்கிரம் நிவர்த்தி செய்து விடலாம். வேண்டுமென்றால் நான் காலையில் உன் வீட்டுக்குப் போய் உன்னைப் பற்றிச் சொல்லி இங்கு அழைத்து வருகிறேன். அவளுக்கும் மனம் ஆறுதலடையும். பிறகு வேண்டுமென்றால் நீயும் இஷ்டம்போல் செய்யலாம். உன் தகப்பனாருடன்தானே சண்டை, தாயாரைப் பார்க்கலாமல்லவா? ''

" என்னைத் திரும்பவும் வீட்டுக்கு வரச்சொன்னால்?'' என்றான் குமார்.

" அது உன் இஷ்டம். நான் அங்கே போவதே உன் பெற்றோருக்கு பிடிக்காமல் இருக்கலாம். உன் தாயாருக்கு இங்கே வர இஷ்டமில்லாமல் இருக்கலாம். ஆனால் நான் போய் உன்னைப் பார்த்ததாகச் சொன்னால் உன் அம்மாளுக்கு சந்தோஷமாய் இருக்கும்.''

குமார் பதில் சொல்லவில்லை. தனக்கு முன்பின் தெரியாத ஒரு ஸ்திரி, தன் பெற்றோருக்கு எதிர்கட்சியில் இருக்கும் ஒரு ஸ்திரி தனக்காகவும் தன் தாயாருக்காகவும் இவ்வளவு அன்புடன் காரியம் செய்ய இசைந்தது ஆச்சரியமாய் இருந்தது.

" என்ன செய்தாலும் வீட்டுக்கு மட்டும் திரும்பிப் போகவேண்டாம். அப்படிப்போனால் உன் வாழ்க்கை லட்சியங்களையெல்லாம் விட்டு விட்டு அவர்களுடைய வாழ்க்கை முறையில் மாட்டிக்கொள்வாய். பிறகு விடுதலைக்கு வழியில்லை'' என்றான் திருமலை. பிறகு பாலு, குமார் இருவரையும் பார்த்துப் பேசினான்: " சில மாதங்களுக்கு நான் ஒரு

சிறிய கிராமத்தில் போய் வசிக்கப் போகிறேன். போலீசார் என்னைக் கண்டுபிடிப்பது கஷ்டம். வாழ்க்கை கஷ்டமாய் இருக்கும். ஆனால் அதில் தேசசேவை, துணிகரம், ஒரு வேளை ஜெயில், எல்லாம் இருக்கிறது. நீங்கள் இரண்டு பேரும் வந்தால் நல்லது.

"அங்கு என்ன செய்யப் போகிறோம்?" என்றான் பானு.

"நாளைக்கு வேலை நிறுத்தம் ஆரம்பமானால் என்னை அரஸ்ட் செய்ய முயற்சி செய்வார்கள். நான் போலீசாருக்கு அகப்படாமலிருந்து நம் இயக்கத்தை நடத்தலாம் என்று இருக்கிறேன்" என்றான் திருமலை. பிறகு "நீங்கள் என்னுடன் இருந்தால் நான் பிடிபட்டாலும் நீங்கள் இயக்கத்தை நடத்தலாமல்லவா?" என்றான்.

ராமு நம்முடன் இருந்தால் நோட்டீஸ் அச்சடிக்க, வினியோகம் செய்ய உதவியாய் இருக்கும்" என்றான் குமார்.

போலீசுக்குக் கிடைக்காமல் ஒளிந்துகொண்டு இயக்கத்தை நடத்துவதிலும் மில் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வதிலும் பானுவுக்கு கொஞ்சம்கூட இஷ்டமில்லை. திருமலையை நம்பி இவைகளில் கலந்து கொண்டால் அது கடைசியில் சாத்விகமாகவும் காந்திய முறையிலும் நடக்காது என்று நினைத்தான். ஆனால் வேறு வழி என்ன; ஜெயிலுக்கு அவர்களைப் பின்பற்ற யார் இருக்கிறார்கள்? ஆகவே சந்தேகத்துடன் ஒப்புக்கொண்டான்.

கடைசியில் ராமுவைப் பார்ப்பதாக முடிவுசெய்தனர். ரங்கநாயகி அம்மாளை மறுநாள் காலையில் பார்ப்பதாக முடிவு செய்துகொண்டு வெளியில் சென்றார்கள். கடைசியாக "குமார், காலையில் இங்கு வந்தால் உன் தாயாரைப் பார்த்து விட்டு வந்து சொல்கிறேன்" என்றாள் ரங்கநாயகிஅம்மாள்.

"சரி," என்று குமார் விடைபெற்றுக்கொண்டான்.

அத்தியாயம் இருபத்திநான்கு.

இரவு நிம்மதியாய் இருந்தது. வீதிகளில் அதிக நடமாட்டம் இல்லை. மிருதுவான காற்று வீசிக்கொண்டிருந்தது. திருமலை, குமார், பாலு ஆகிய மூவரும் பல வீதிகளையும் சந்துகளையும் கடந்து ராமுவின் வீட்டை நோக்கி நடந்தனர். அதிகமாகப் பேசிக்கொள்ளவில்லை. ஒரு மைதானத்தை அடைந்ததும், "நீங்கள் இங்கே இருங்கள். நான் ராமுவை அழைத்து வருகிறேன்" என்று சொல்லிவிட்டு பாலு போனான்.

"உன் தகப்பனாருக்கு எதிரிடையாகப் பாடுபடும் என் போன்றவர்களுடன் கலந்துகொள்வது உனக்கு கஷ்டமாக இருக்கும்" என்றான் திருமலை. "ஆனால் நான் செய்வது சரி என்று தெரியாவிட்டால் நான் உன்னை என்னுடன் சேரும்படி கேட்கமாட்டேன். ஏழைகளுக்காகவும் தொழிலாளர்களுக்காகவும் நான் என் வாழ்க்கையை அர்ப்பணம் செய்துவிட்டேன். ஒரு நாள் அவர்கள் வெற்றியடைந்து வேண்டியதைப் பெறுவார்கள். இன்று நமது போர் காந்திக்கும் வைஸ்ராயிக்கும் அல்லது இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமோ மட்டும் அல்ல. இது ஏழைகள் தம் உரிமைகளுக்காகப் பாடுபடுவதில் முதல் பாகம். இந்த போர்தான் உலக சரித்திரம் என்று சொல்லலாம்."

"இவைகளைப் பற்றி நான் இதுவரையிலும் அதிகமாக நினைத்துப் பார்த்ததில்லை. மாரிதான் முதலில் போலீஸ்

ஸ்டேஷனில் இக்கொள்கைகளைப்பற்றிப் பேசினன்" என்றான் குமார்.

"மாரியை எனக்குத் தெரியும், அவனுக்கு உங்களுடைய கிராமம்தானே சொந்த ஊர்?"

"ஆம். அவனுடைய குடும்பம் பல தலைமுறைகளாக எங்கள் வீட்டில் வேலைசெய்துகொண்டு வந்திருக்கிறது."

"இதிலிருந்தே நம் தேசம் எவ்வளவு மாறி, முன்னேறி வருகிறது என்று தெரியவில்லையா? மாரியின் தகப்பனருக்கு இன்றும் உங்கள் குடும்பத்துக்கு அடிமை செய்வதே பெரிதாகத் தோன்றுகிறது. ஆனல் மகன் அந்தக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்துக்கொண்டு சுதந்திரத்துக்காகப் பாடுபடுகிறான்." பிறகு "நான் ஏதோ பிரசாரம் செய்கிறமாதிரி உனக்குத் தோன்றலாம். ஆனல் நம் தேசத்தில் இன்னும் அதிக பிரசாரம் செய்யவேண்டியிருக்கிறது. நம் மக்களுக்கு அவர்களுடைய சக்தியையும், குறைகளையும் சரித்திரத்தில் அவர்களின் பாகத்தையும் எடுத்துச் சொல்லவேண்டும். ஒருவேளை நான் இப்படிப் பேசிக்கொண்டே போவது உனக்குப் பிடிக்கவில்லையோ?" என்றான்.

"இல்லை யில்லை, அதெல்லாம் பிடிக்கும்" என்றான் குமார்.

"குமார், நீ படித்தவன். பழைய வழக்கங்களிலிருந்தும், மூட நம்பிக்கைகளிலிருந்தும் தைரியத்துடன் உன்னை விடுவித்துக்கொண்டாய். உன் போன்றவர்கள்தான் இந்தியாவின் எதிர்காலத்தை உருவாக்கவேண்டும்." இருவர் தம்மிடம் வருவதைப் பார்த்து திருமலை பேச்சை நிறுத்தினன்.

திருமலையும் குமாரும் கொஞ்சநேரத்துக்கு முன்பு தான் சந்தித்தார்கள். அதற்குள் திருமலை பல நாளைய சினேகிதனுடன் பேசுவதுபோல் பேசினான். திருமலை குமாரை விட வயதில் பெரியவன், உலகத்தை அறிந்தவன்; உறுதியான எண்ணங்களைக் கொண்டவன். குமாரோ இளைஞன். வாழ்க்கைப் புயலில் அகப்பட்டுக் கொண்டு தத்தளிப்பவன். அனுபவமற்றவன். குமாரின் எண்ணங்கள் இன்னும் உருவாகவில்லை. இச்சமயத்தில் திருமலை ஒரு ஊன்றுகோல் போலும், வழிகாட்டி போலும் பேசினான். குமாரின் மனத்தில் இருந்த விவரிக்க முடியாத பல சிந்தனைகளும் உணர்ச்சிகளும் திருமலையின் வார்த்தைகள் மூலம் வெளியாயின என்று சொல்லலாம். பாலு ராமுவைக் கூட்டிக்கொண்டு வந்துசேர்ந்தான். "ராமுவிடம் விஷயத்தை சொன்னாயா?" என்று பாலுவை கேட்டான் குமார்.

"ஆம்" என்றான் பாலு.

"நீ சில துண்டு பிரசுரங்களை அச்சடித்துக் கொடுத்தால் எங்களுக்கு ரொம்ப சௌகரியமாய் இருக்கும்" என்றான் திருமலை.

"செய்வதைப் பற்றி ஒன்றுமில்லை. ஆனால் —" என்று சந்தேகத்துடன் ஆரம்பித்தான் ராமு.

"இஷ்டமில்லாவிட்டால், இல்லை என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடேன்" என்றான் குமார் கோபமாக.

"அப்படியில்லை குமார். ஏதோ என்னால் முடிந்ததை நானும் இதுவரையில் செய்துகொண்டுதான் வந்தேன். ஆனால் போலீஸ் என் வீட்டை சோதனை போட்டதிலிருந்து

என் தாயாருக்கு ரொம்ப பயமாய் விட்டது. நான் எங்கே ஜெயிலுக்குப் போய்விடுகிறேனே என்று அதே கவலையாய் இருக்கிறாள். என் நிலைமை உங்களுக்குத் தெரியாது" என்று ராமு தழுதழுத்த குரலில் பேசினான். "எனக்கு தகப்பனாரோ அல்லது வேறு உறவினரோ கிடையாது. எனக்கு ஏதாவது ஏற்பட்டால் என் தாயாரைப் பார்த்துக் கொள்ள வேறு யாரும் இல்லை. அவளுடைய இருதயம் உடைந்து போகும்."

"இன்று என் தாயாரின் இருதயம் உடையவில்லை என்று நினைத்திருக்கிறாயா?" குமார் ஆவேசத்துடன் பேசினான். "என் தாயார் அழுவதையும் கெஞ்சுவதையும் நான் பார்க்கவில்லையா? தாயின் கண்ணீர் மற்ற எந்த ஆயுதத்தையும் விட இருதயத்தில் ஆழமாகப் பாயும் சக்தி உடையது. அதைப் பற்றிச் சொல்லாதே ராமு. அதை நானும் இன்று அனுபவித்துத்தான் இருக்கிறேன். உனக்கு நம்பிக்கையும் தைரியமும் இருந்தால் தாயாரின் இருதயத்தைப்பற்றி பேசவேண்டிய அவசியமில்லை."

"தைரியத்தையும் தியாகத்தையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டாம்" என்றான் பாலு. "தன்னால் என்ன செய்ய முடியும் என்பதை ராமுதான் முடிவு செய்யவேண்டும்."

"இதோ பார் குமார்," என்று ராமு குமாரைப் பார்த்துச் சொன்னான். "நீ இன்னும் இளமையில் இருக்கிறாய். உன் இருதயம் இளங்காளைமாதிரி துள்ளுகிறது. எல்லோரும் அப்படியே இருக்கமுடியுமா? இந்த உலகில் தியாகம் செய்பவர் சிலரே. பொதுவாக எடுத்துக்கொண்டால் மனிதவர்க்கத்துக்கு தன் நலமே முக்கியம். அதோ,

அந்தக் கோவில் கோபுரத்தைப் பார்" என்று தூரத்தில் தெரிந்த கோபுரத்தைக் காட்டினான். நக்ஷத்திரங்கள் மிகுந்த வானத்திற்கு முன்னால் இருண்ட நிழல் மாதிரி அழகுடனும் கம்பீரத்துடனும் கோபுரம் நின்று கொண்டிருந்தது. "மதத்திலும் பரம்பரையான ஐதீகத்திலும் பற்றற்ற நமக்குக்கூட அதைப் பார்த்தால் ஒருவித அன்பும் பயபக்தியும் உண்டாகிறது. நம் மக்கள் மனதில் ஊன்றியிருக்கும் நம்பிக்கைகளும் அக்கோபுரம் மாதிரி அசைவற்று நிரந்தரமாக நிற்கின்றன. அவைகளை அசைப்பது என்றால் முடியுமா? அதே மாதிரிதான் ஒரு அரசாங்கத்தை அசைப்பதென்றாலும், மக்களின் மனம் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும்வரை நம் போன்றவர்களின் தியாகம் வீணாய்த்தான் போகும். அதைப் பல நாள் எதிர்த்து நின்றால் நம் உறுதி ஒடிந்து, மனத்தில் கசப்பு ஏற்பட்டு வாழ்க்கையில் ருசி இல்லாமல் போகும். ஆகவே நீ பத்திரமாய் இரு, குமார்."

"நம் விரோதிகள் பலவான்கள் என்று இன்று சொன்னால் அவர்களை ஜெயிக்கமுடியாது என்று நாளைக்கு சொல்லுவோம்" என்றான் திருமலை. "நாம் செய்யவேண்டிய காரியம் பெரிதுதான். ஆனால் நம் சக்தி என்ன குறைந்ததா? முன்னேற்றம் நம் கட்சியில் இருக்கிறது. சரித்திரமும் நம் கட்சிதான். நம் ஜனங்கள் இப்போதுதான் விழித்தெழுந்திருக்கிறார்கள். நமது சக்தியை அறிந்திருக்கிறார்கள். நாள் ஆக ஆக இந்த சக்தி ஒரு பெரிய பிரவாகமாக மாறும். ராமு, நாம் ஒரு முக்கியமான காலத்தில் இருந்துவருகிறோம். தேசத்தின் நன்மையோடும் மக்களின் கஷ்டங்களோடும் நமது சொந்த சிறிய இன்ப துன்பங்களை

ஒப்பிட்டுப் பார்க்கும் காலம் இதுவல்ல. சீக்கிரம் நாம் ஒரு புது உலகத்தையே சிருஷ்டி செய்யப்போகிறோம். அதில் பங்கெடுத்துக்கொள்ள உனக்கு இஷ்டமில்லாவிட்டால் வேண்டாம். ஆனால் அதற்காக எங்கள் தியாகம் வீண் என்று சொல்லாதே."

"ஒரு வேளை நாம் ஜெயித்தாலோ ராமு?" என்று கேட்டான் குமார்.

"நாம் ஜெயிக்க மாட்டோம்" என்றான் ராமு. "அது தான் இதில் மிகவும் சோகமான விஷயம். நானும் சத்தியாக்கிரக இயக்கத்தை கவனித்துத்தான் வருகிறேன். ஆயிரக்கணக்கானவர்கள் ஜெயிலுக்குப் போயும், தடியடிக்கு உட்பட்டும், சொத்து, வேலை இவைகளை இழந்தும் தான் வருகிறார்கள். ஆனால் இதன் முடிவு என்ன? சர்க்காரிடம் சக்தியிருக்கிறது. வேறுவழியில் எப்படியும் நம்மை அடக்க முடியாவிட்டால் கடைசியாக துப்பாக்கியால் சுடவும் அவர்கள் தயங்கமாட்டார்கள். ஆனால் நாமோ நம்மைச் சுடுபவர்களை நேசிக்கிறோம். அவர்களுடைய இதயங்களை மாற்றப் பார்க்கிறோம்.................... அதைப்பற்றி நினைத்தாலே வேதனையாய் இருக்கிறது."

"நம் விரோதிகளையும் நேசிப்பதில்தான் நம் சக்தி வெளியாகிறது. நீ இயக்கத்தில் சேராவிட்டாலும் உனக்கு அஹிம்சா தர்மத்தில் கூட நம்பிக்கையில்லையா ராமு?" என்றான் பானு.

"இம்மாதிரி கொள்கைகளைப்பற்றி பேசிக்கொண்டிருந்தால் காரியம் நடக்காது. நீ எங்களுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும். அதற்கு என்ன சொல்கிறாய்?" என்று கேட்டான் திருமலை.

"நேரடியாக நான் ஒன்றும் செய்யமுடியாது. 'டியுப்ளிகேடிங்' மெஷின் ஒன்று கொடுக்கிறேன். அப்புறம் ஏதாவது நோட்டீஸ் வேண்டுமென்றாலும் அச்சடித்துக் கொடுக்கிறேன்" என்றான் ராமு.

"அவ்வளவு போதும் எங்களுக்கு" என்றான் திருமலை. "நீ ஜெயிலுக்கு போகவேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை."

நான்கு பேரும் பேசாமல் திரும்பி நடந்தார்கள். ராமு சீக்கிரம் விடைபெற்றுக் கொண்டான். "பாவம், ராமு மிகவும் நம்பிக்கையானவன். இம்மாதிரி மனக்கசப்பு ஏற்பட ரொம்ப கஷ்டப்பட்டிருக்கவேண்டும்" என்றான் பாலு.

திருமலை ஒரு சிறிய அறையில் வசித்து வந்தான். பாலு வீட்டுக்குப் போனபிறகு குமாரும் திருமலையும் அங்கு வந்து சேர்ந்தார்கள். படுத்துக்கொள்ள குமாருக்கு ஒரு ஜமுக்காளமும் தலையணையும் தான் கிடைத்தது. "உங்களுடைய வீடுமாதிரி இங்கே சௌகரியமாய் இருக்காது. ஆனால் சீக்கிரம் வழக்கமாகி விடும்" என்றான் திருமலை.

திருமலை சீக்கிரம் தூங்கிவிட்டான். குமாருக்கு 'சுதந்திரம்' வீட்டிலிருந்து கிடைத்த பிறகு இது தான் முதல் இரவு. அந்த இருட்டில் எத்தனை எண்ணங்கள் மனத்தை உறுத்தின! எத்தனை கனவுகள் தூக்கத்தை கலைத்தன!

அத்தியாயம் இருபத்தைந்து

"குமார்! குமார்!"

ராஜலட்சுமி அம்மாளின் துன்பம் மிகுந்த குரல் பங்களாவில் ஒலித்தது. ஆனால் என்ன பிரயோஜனம்? முதலில் குமார் போன சில வினாடிகளுக்கு அவன் போய்விட்டதாகவே தோன்றவில்லை. ஒருவேளை தோட்டச் செடிகளின் பக்கம் நின்றுகொண்டிருக்கிறானோ? ஒருவேளை வீட்டின் பின்பக்கத்து வழியாகச் சென்று தன் அறைக்குள் உட்கார்ந்திருக்கிறானோ? ஆனால் அவன் எங்கும் இல்லை. போய்விட்டான் என்ற எண்ணம் ஊர்ஜிதமடைந்தது.

"அவன் போய்விட்டான், போய்விட்டான். இனி என்ன செய்யப்போகிறீர்கள். ஐயோ! நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். ஏதாவது செய்யாமல் சும்மா உட்கார்ந்திருக்கிறீர்களே!" என்று புலம்பினாள் ராஜலக்ஷ்மி அம்மாள். ஆனால் உடையாரோ, பேசாமல், அசையாமல் விக்கிரகம் மாதிரி சோபாவில் உட்கார்ந்திருந்தார். மெதுவாக இடம் மாற்றி உட்கார்ந்தார்; கையினால் தலையைத் தடவிக்கொண்டார். ஆனால் அவர் பார்வையோ வெகு தூரத்திலிருந்தது; எண்ணங்களும் அப்படியே.

ஒருவேளை குமார் திரும்பி வரமாட்டானா? ஆற்றங்கரையில் உலாவிவிட்டு கோபம் தணிந்ததும் வந்துவிடலாமல்லவா? ஆம். கண்டிப்பாக வந்துவிடுவான். இருந்தாலும்

ராஜலட்சுமி அம்மாளுக்கு மனோநிம்மதியில்லை. வீட்டின் உள்ளேயும் வெளிக்கும் நடந்துகொண்டிருந்தாள். உட்கார மனம் இடம் கொடுக்கவில்லை. ஒருவேளை அந்த நிமிஷத்தில் குமார் வந்துவிட்டால்? திரும்பவும் முன் கத வின் வழியே எட்டிப்பார்த்தாள். இல்லை. அவன் வர வில்லை.

மாலை மறைந்து இருட்டடைந்தது. இன்னும் குமா ரைக் காணோம். அவன் எங்கே? என்ன செய்துகொண் டிருக்கிறான்? சாப்பிட அவனுக்கு ஏதாவது கிடைத்ததா? இப்படியே நேராக வெளியில் போய்விட்டானே? அவ னுக்குபசியெடுத்தால்? ராஜலட்சுமி அம்மாளுக்கு ஆறுதல் சொல்லக்கூட யாரும் இல்லை. உடையார் பேசாமல் உட் கார்ந்திருந்தார். இந்திராவுக்கு கோபம் வந்ததே தவிற அனுதாபம் இல்லை.

" அம்மா, கவலைப்படாதே அம்மா. அவனென்ன குழந்தையா? பணம் இருந்தால் காப்பிக்கடைக்குப் போய் சாப்பிடுவான். இல்லாவிட்டால் பேசாமல் வீட்டுக்கு வருவான் " என்றாள் இந்திரா. மறுபடியும் " சொல்லியும் சொல்லாததற்கு முன் அவ்வளவு பிடிவாதமாய் போன வனைப்பற்றி உனக்கு எதற்கு தொந்திரவு? " என்றாள்.

" நான் எப்படி கவலையில்லாமல் இருப்பேன் இந்திரா? எனக்கு அவன் குழந்தைதானே? உன் மனம் கல்லாய் இருந்தாலும் பெற்றமனம் எப்படியிருக்கும்? என் குழந் தைகள் என்ன செய்தாலும் நான் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு உங்களுக்கு வேண்டியதைச் செய்து கொண்டுதானே போகவேண்டும்? நீங்கள் சந்தோஷமாய்

இருந்தால்தானே எனக்கும் நிம்மதியாய் இருக்கும்? அதைத்தவிர வேறு எனக்கு என்ன வேண்டும்?" என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

"அவன் அநேகமாக ராத்திரிக்கு வந்து விடுவான். இல்லாவிட்டால் காலையில் கண்டிப்பாக வந்துவிடுவான்" என்றாள் இந்திரா.

ஆனால் ராஜலட்சுமி அம்மாளுக்கு நிம்மதி ஏற்படவில்லை. ஒவ்வொரு சிறிய சத்தமும் ஒவ்வொரு காலடியும் அவளை குமாரை எதிர்பார்க்கச் செய்தது. ஆனால் நேரம் ஆக ஆக, அவள் நம்பிக்கையும் குறைந்து கொண்டே வந்தது. அழுதாள், கைகளைப் பிசைந்தாள், கடவுளை வழிப்பட்டாள்.

மணி ஒன்பதாகியும் குமார் வரவில்லை. "குமார் இன்னும் வரவில்லையே? நீங்கள் ஏதாவது செய்யக் கூடாதா?" என்று தன் புருஷனைக் கேட்டாள்.

இதுவரை பேசாமல் இருந்த உடையார் "அவன் பெயரை இனி எனக்கு முன்னால் சொல்லாதே" என்று கடிந்து சொல்லிவிட்டு எழுந்து போனார்.

அன்று இரவு படுக்கைக்கு சென்றபின் ராஜலட்சுமி அம்மாள், அப்போது தன் மகன் எங்கிருந்தாலும் அவனுக்கு படுக்க ஒரு படுக்கை கொடுக்கவேண்டும் என்று கடவுளைக் கேட்டுக்கொண்டாள். தான் என்ன செய்ய முடியும்? கேவலம் ஒரு பெண்தானே? தான் தன் புருஷனைப் பின்பற்றி அவர் சொன்னபடி நடக்கவேண்டும். தானே வெளியில்போய் தன் மகனைத் தேட முடியுமா? தன் அந்தஸ்தில் இருப்பவள் தனியே வெளியுலகில் செல்ல முடியுமா? சத்தம் செய்யாமல் வேதனைப்படுவதும்

கடவுளை வேண்டிக்கொள்வதுமே தனது கடமை. தன் மகன் போனதும், குடும்பமே சிதறிவிட்டாற்போலத் தோன்றியது. இதற்கு என்ன முடிவு என்று தெரியவில்லை. இந்தப் பிடிவாதம், கர்வம், அகங்காரம், தகப்பனுர் மகன் இருவரிடத்திலும் இருக்கும் வரை இதற்கு விமோசனம் இல்லை. "பகவானே! என் மகனை எனக்குத் திருப்பிக் கொடுத்துவிடு. நான் வேறொன்றும் கேட்கவில்லை" என்று வேண்டிக்கொண்டாள்.

மறுநாள் காலையில் எதிர்பாராதபடி ராஜலட்சுமி அம்மாளைப் பார்க்க ரங்கநாயகி அம்மாள் வந்தாள். அன்று வேலை நிறுத்தம் செய்வார்கள் என்று எதிர்பார்த்தபடியால் உடையார் அதிகாலையிலேயே மில்லுக்குப் போய்விட்டார். ரங்கநாயகி அம்மாள் வந்ததும் தெரியவில்லை. ராஜலட்சுமி அம்மாளுக்கு முதலில் ஆச்சரியமும், சந்தேகமும் அதிகமாய் இருந்தது. ஆனுல் தான் குமாரைப் பார்த்ததாகவும் பேசியதாகவும் ரங்கநாயகி அம்மாள் சொன்னதும் ஆர்வத்துடனும் ஆசையுடனும் பல கேள்விகள் கேட்டாள்.

"என் பையன் எப்படியிருக்கிறுன், சொல்லுங்கள்? சந்தோஷமாய்க் காணப்பட்டானு? ராத்திரி எங்கே படுத்துக்கொண்டான்? நீங்கள் காங்கிரஸ்தானே? எங்கு பார்த்தாலும் ஏன் இவ்வளவு குழப்பம், அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது? ஏன் எல்லோரையும் சட்டத்தை மீறி ஜெயிலுக்குப் போகச் சொல்லுகிறீர்கள்? இது எல்லாம் எதற்காக?" என்று ராஜலட்சுமி அம்மாள் சரமாரியாக பல கேள்விகள் கேட்டாள். அவளுக்கு எல்லாம் தெரிய வேண்டியிருந்தது. குமாரைப்பற்றி மட்டுமல்ல. அவனுடன் சேர்ந்தவரைப்பற்றியெல்லாம். அவன்

இப்போது எங்கே இருக்கிறான்? யாருடன் இருக்கிறான்? ரங்கநாயகி அம்மாள் அவனை வீட்டுக்கு வரச் சொல்லக் கூடாதா? அவனும் ஜெயிலுக்குப் போகப் போகிறானா?

ரங்கநாயகி அம்மாளை ஒரு பாய்மேல் உட்காரவைத்து வெற்றிலைபாக்கு, காப்பி கொண்டுவந்து வைத்தாள். "குமாரின் தகப்பனார் வீட்டில் இல்லாதது நல்லது. அவருக்கு காங்கிரஸ்காரரைக் கண்டால் பிடிக்காது. அதனால்தான் அவருக்கும் குமாருக்கும் இவ்வளவு தகராறு. குமார் என்ன சொன்னான்? அவனுக்கு ஏதாவது பணம் வேண்டுமா?"

ரங்கநாயகி அம்மாள் குமாரைப் பற்றித் தனக்குத் தெரிந்த வரையிலும் சொன்னாள். அவன் ஒரு நண்பனுடன் அன்று ராத்திரி தங்கியதாகவும், அன்று காலையில் தன் வீட்டிற்கு வருவானென்றும், ராஜலட்சுமி அம்மாள் அங்கே வந்தால் அவனைப் பார்க்கலாமென்றும் சொன்னாள்.

"நான் வருகிறேன். எங்கே வேண்டுமானாலும் வருகிறேன். அவன் மட்டும் நேற்று நடந்ததை மறந்து விட்டு வீட்டுக்குத் திரும்பி வந்துவிட்டால் போதும்."

"நான் ஒன்றுமட்டும் உங்களுக்கு சொல்லவேண்டும்" என்றாள் ரங்கநாயகி அம்மாள். "குமார் இப்போது வீட்டுக்குத் திரும்பி வருவது கஷ்டம். ஆனால் அவன் இஷ்டப்படி விட்டுவிட்டால் சில நாளில் எல்லாம் சரியாகி விடும். அப்படியில்லாவிட்டால் என்றைக்கும் அவன் மனது நோகும்படி ஏற்பட்டு விடலாம்."

இதைக் கேட்க, ராஜலட்சுமி அம்மாளுக்கு திருப்தி ஏற்படவில்லை. இருந்தாலும் குமாரைப் பார்த்தால் எப்படியாவது வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து விடலாம் என்ற எண்ணத்துடன் ரங்கநாயகி அம்மாளுடன் சென்றாள். இருவரும் ஒரு குதிரைவண்டி வைத்துக் கொண்டு ரங்கநாயகி அம்மாள் வீட்டிற்குச் சென்றார்கள். வழியில் ரங்கநாயகி அம்மாள் குமார் ஏன் கலியாணம் செய்து கொள்ள மறுக்கிறான், ஜெயிலுக்குப் போக விரும்புகிறான் என்பதை ராஜலட்சுமி அம்மாளுக்கு எடுத்துச் சொன்னாள். மகனின் மனதைத் தாய்க்கு அர்த்தமாகுமாறு விளக்க முயன்றாள். "நமக்கு வயதாகிவிட்டது. நம் முன்னோர் வாழ்ந்த மாதிரியே நாமும் வாழ்கிறோம். ஆனால் இந்தப் புதிய தலைமுறை வேறுமாதிரி. அவர்கள் நம் வாழ்க்கையைத் தம் இஷ்டப்படி நடத்தவேண்டும் என்று நினைக்கிறார்கள். அப்படி நடத்துவதில் பெருமை கொள்கிறார்கள். நாம் அதைத் தெரிந்துகொண்டு அவர்கள் போகும் வழியிலே விட்டுவிடுவதுதான் நல்லது. உலகமே மாறிக்கொண்டு வரும்போது வயதான நாம் ஏன் அதற்கு எதிரிடையாக நிற்கவேண்டும்?"

ஆனால் இது ராஜலட்சுமி அம்மாளுக்கு அர்த்தமாகவில்லை. "நீங்களும் குமார் மாதிரிதான் பேசுகிறீர்கள். உலகம் ஏன் மாறவேண்டும்? சட்டத்தைமீறி ஜெயிலிக்குப் போவதில் என்ன விசேஷம்? அதனால் யாருக்கு என்ன லாபம்?" என்றாள்.

"நீங்கள் நம் ஹிந்து புராணங்களில் படித்ததில்லையா? எத்தனை மகான்கள் கொடுங்கோல் மன்னரின் ஆட்சியை மீறி பிரசாரம் செய்து தம் வாழ்க்கையை அர்ப்பணம்

செய்திருக்கிறார்கள்? அம்மகான்கள் அரசர்களின் வார்த்தைகளை மீறவில்லையா? அதுதான் இன்றும் நடந்துகொண்டிருக்கிறது.”

“அவர்கள் எல்லாம் மகான்கள். அவர்களிடம் தெய்வீக சக்தி இருக்கிறது. அவர்களுடன் நம்மை ஒப்பிடலாமா?” என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

“நியாயம், சத்தியம், நம் கட்சியில் இருந்தால் நமக்கும் தெய்வீக சக்தி கிடைக்கும். உண்மை தவறாமல் நடந்துகொள்வது, சகல ஜீவராசிகளின் மேலும் அன்பு பாராட்டுவது இவைகளையே நம் வாழ்க்கை லட்சியங்களாகக் கொண்டால் எந்த அரசாங்கம்தான் நம்மை என்னசெய்ய முடியும். இவைகளை பின்பற்றுவதினால்தானே காந்தி பெரிய சாம்ராஜ்யத்தையும் தனியே எதிர்த்து நிற்கிறார்? பெரிய மகான்கள் அப்படித்தான் நடந்துகொண்டார்கள். இன்று காந்தியும் அப்படித்தான் நடந்து கொள்கிறார். அதனால்தான் தேசமே அவரைப் பின்பற்றுகிறது.”

“இந்தமாதிரி எனக்கு யாரும் எடுத்துச் சொன்னதில்லை” என்றாள் ராஜலட்சுமி அம்மாள். இந்து மதத்தை உதாரணமாக எடுத்துச் சொன்னது அவளுக்கு திருப்தி அளித்தது. “ஆனால் என் மகன் ஜெயிலுக்கு போகிறான் என்பதை நினைக்கத்தான் மிகவும் விசனத்தை அளிக்கிறது” என்றாள்.

“தியாகம் செய்யாமல் நம் லட்சியங்கள் கைகூடுமா? ஆனால் நீங்கள் அதைப் பற்றி துக்கப்பட வேண்டியதில்லை” என்றாள் ரங்கநாயகி அம்மாள்.

சீக்கிரம் ரங்கநாயகி அம்மாள் வீட்டை அடைந்தார்கள். ஆனால் குமார் அங்கு இல்லை. ராஜலட்சுமி அம்மாள் ஒரு பாய்மேல் உட்கார்ந்து கொண்டாள். ரங்கநாயகி அம்மாள், தான் ஒருவேளை கைதுசெய்யப்படலாம் என்று நினைத்து வீட்டைப் பூட்ட ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள்.

காத்துக் கொண்டிருக்கும்போது ராஜலட்சுமி அம்மாளுக்கு கொஞ்சம் நிம்மதி இல்லை. "கடவுள் ஏன் எனக்கு இவ்வளவு கஷ்டத்தைக் கொடுக்கிறாரோ தெரியவில்லை! யாருக்கும் நான் கெடுதி நினைத்ததில்லை. என்னால் யாரும் துன்பப்பட்டதும் கிடையாது. எத்தனை நாளைக்கு என்னை அப்படி சோதிக்கப் போகிறாரோ தெரியவில்லை! இவ்வளவு வேதனைப்பட நான் என்ன பாவம் செய்தேனோ?" என்று பேசிக்கொண்டே இருந்தாள்.

"கடவுள் அல்லம்மா, வாழ்க்கையில்தான் இவ்வளவு கஷ்டம் இருக்கிறது" என்றாள் ரங்கநாயகி அம்மாள். "எனக்கு விசனம் இல்லையா? என் புருஷர் பாதிநாள் ஜெயிலில்தான் காலம் கழிக்கிறார். என் மகன் ஊரிலில்லை. இன்றைக்கு என்னைக் கைதுசெய்வார்கள். ஆனால் மற்றவர்களின் துயரத்தைக்கண்டு என்னுடையதை நான் மறந்து விடுகிறேன். நம் தேசத்தில் இருக்கும் துன்பத்தையும் கஷ்டத்தையும் பார்க்கும்போது நம் சொந்த சுக துக்கங்கள் மறைந்து விடுகின்றன. அப்புறம் தியாகம் செய்வதே ஒரு சந்தோஷமாகி விடுகிறது."

இந்த வேதாந்தத்தில் ராஜலட்சுமி அம்மாளுக்கு கொஞ்சமும் சிரத்தையில்லை. அவள் குமாரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். கடைசியாக பானு மட்டும்

வந்து குமார் வரவில்லை என்று சொன்னான். ரங்கநாயகி அம்மாளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. "நான் என்ன செய்வதம்மா. என்னுடன் இங்கே வருவதாக சொன்னான்" என்றாள்.

"என் மகனுக்கே என்னைப்பார்க்க இஷ்டமில்லாத போது நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்றாள் ராஜ லட்சுமி அம்மாள். அவள் கண்ணில் நீர்த்துளிகள் நிரம்பின.

"குமாருக்கு உங்கள்மேல் ரொம்ப பிரியம் உண்டு. என்னிடம் உங்களைப்பற்றி எவ்வளவோ பேசினான். ஆனால் நீங்கள் வீட்டுக்கு வரச்சொல்லி கூப்பிடுவீர்கள் என்றுதான் வரவில்லைபோல் இருக்கிறது" என்றாள் ரங்கநாயகி அம்மாள்.

"என்னமோ, எல்லாம் என் பாக்கியம்" என்று சொல்லி ராஜலட்சுமி அம்மாள் விடை பெற்றுக் கொண்டாள்.

அத்தியாயம் இருபத்தாறு.

காலையில் குமாரும் திருமலையும் நேரத்தில் எழுந் திருந்தனர். திருமலை நகரைவிட்டு வெளிக்கிளம்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். முக்கியமான சில புஸ்தகங்களையும் காகிதங்களையும் எடுத்துக்கொண் டான். இருவரும் பக்கத்திலிருந்த ஒரு சிறிய கிளப்பில் காப்பி சாப்பிட்டார்கள்.

"குமார், எனக்கு சில சில்லரை வேலைகள் இருக் கின்றன. பதினொருமணி ஆகும். நீ வேண்டுமானால் ரங்கநாயகி அம்மாள் வீட்டில் இரு. நான் அங்கே வருகி றேன்" 'என்றான் திருமலை.

"இல்லை அங்கே போனால் ஒரு வேளை என் தாயார் வரலாம். அப்புறம் வீட்டுக்கு போகவேண்டிவரும். நான் பாலு வீட்டில் இருக்கிறேன்."

"சரி, நான் அங்கே வருகிறேன்" என்று சொல்லி விட்டு திருமலை போய்விட்டான்.

குமார் பாலுவின் வீட்டிற்குச் சென்றான்.

குமாரைப் பார்த்ததும் பாலுவுக்கு அதிக சந்தோஷ மும் திருப்தியும் ஏற்பட்டது. "திருமலை இங்கே வரவில் லையா?" என்று கேட்டான்.

"திருமலை ஏதோ வேலையாய் போயிருக்கிறான்."

“குமார், எனக்கு ஏனோ ஒன்றும் பிடிக்கவில்லை. திருமலை ரகசியமாக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்திருப்பதாக சொல்லுகிறார்கள்” என்று பாலு தன் சந்தேகங்களை வெளியிட ஆரம்பித்தான். “வெள்ளைக்காரனை வெளியில் அனுப்புவதற்காக உன் தகப்பனார் மில்லில் ஏன் வேலை நிறுத்தம் செய்யவேண்டும்? வேறு எங்கும் பொதுக்கூட்டம் போட முடியாது, மில்லுக்கு முன்னால் சீக்கிரம் கூட்டம் சேர்ந்து விடும் என்றுதான் திருமலை இந்த யோசனை சொல்லியிருக்கிறான். கம்யூனிஸ்ட்களுக்கு முதலாளி தொழிலாளி போராட்டம்தான் முக்கியம். தேச சுதந்திரம் இரண்டாவதாகத்தான். அன்றியும், மில்லுக்கு முன்னால் வேலைக்குப் போகாதீர்கள் என்று சொல்லி கூட்டம் போட்டால் கண்டிப்பாக அது பலாத்காரத்தில்தான் முடியும். அதனால் நம் இயக்கத்துக்கே கெட்ட பெயர் உண்டாகும்.”

“இதை யெல்லாம் ஏன் நீ நேற்றே ரங்கநாயகி அம்மாளுடன் சொல்லவில்லை?” என்று கேட்டான் குமார்.

“ரங்கநாயகி அம்மாள் கூட்டத்தில் பேசுவதாக ஒத்துக்கொண்டதால்தான் ஒன்றும் சொல்லவில்லை. என்னமோ பார்க்கலாம்.”

“பாலு, நான் இப்போது ரங்கநாயகி அம்மாள் வீட்டிற்கு வருவதாக சொல்லியிருந்தேன். ரங்கநாயகிஅம்மாள் என் தாயாரைப் பார்த்திருந்தால், ஒரு வேளை என் தாயாரும் அங்கு வந்திருக்கலாம். நான் போனால் அப்புறம் வீட்டுக்கு போகவேண்டி ஏற்படலாம். இல்லாவிட்டால் என் தாயாருக்கு மன வருத்தம் அதிகமாகும். அதனால் நீ போய் நான் வரவில்லை என்று சொல்லிவிட்டு வந்துவிடு” என்றான் குமார்.

பாலு முதலில் குமார் போய் அவன் தாயாரைப் பார்ப்பதுதான் நல்லது என்று விவாதித்தான். ஆனால் பிறகு அரைமனதுடன் ஒத்துக்கொண்டு முன் அத்தியாயத்தில் கூறியபடி ரங்கநாயகி அம்மாள் வீட்டுக்குப் போனான்.

ராஜலக்ஷ்மி அம்மாள் விடை பெற்றுக்கொண்டு சென்றதும் மில் தொழிலாளர் கூட்டத்திற்குப் போவதைப்பற்றி பாலுவும் ரங்கநாயகி அம்மாளும் யோசனை செய்தார்கள். பாலு தன் சந்தேகங்களை வெளியிட்டான். எப்படியிருந்தாலும் கூட்டத்தை நடத்தவேண்டும் என்று ரங்கநாயகி அம்மாள் நினைத்தாள். மத்தியானம் 12-மணிக்கு கூட்டமானதால் ரங்கநாயகி அம்மாள் நேராக கூட்டத்திற்குப் போவதென்றும், பாலு, குமார், திருமலை அங்குவந்து பலாத்காரம் ஒன்றும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதென்றும் ஒரு முடிவு செய்துகொண்டு பாலு தன் வீட்டுக்குத் திரும்பினான். குமாரும் திருமலையும் பேசிக்கொண்டிருந்தார்கள். திருமலை சொல்லிக்கொண்டிருந்தான். "இந்த சத்தியாக்கிரகிகளே எப்போதும் இப்படித்தான். அன்பினால் எல்லாம் சரி செய்து விடலாம் என்று நினைக்கிறார்கள். ரங்கநாயகி அம்மாளை எடுத்துக்கொள். உன் தாயாரையும் உன்னையும் அன்பினால் சந்திக்கச் செய்து மனக்கசப்பையெல்லாம் ஒரு நிமிஷத்தில் மாற்றிவிடலாம் என்று நினைக்கிறாள். அன்பைத் தவிர மனித வர்க்கத்துக்கு வேறு ஒருவித பாந்தமும் இல்லை என்று நினைத்திருக்கிறார்கள். அதனால்தான் சுலபமாக பெரிய தியாகங்களையும் செய்ய சத்தியாக்கிரகிகளால் முடிகிறது."

"நீ சத்தியாக்கிரகி அல்லவா?" என்று கேட்டுக்கொண்டே பாலு உள்ளே வந்தான்.

“நான் யார் என்று சொல்ல இப்போது நேரமில்லை. சாவகாசமாக சொல்லுகிறேன். கூட்டத்துக்கு நேரமாயிற்று. போகலாம்” என்று எழுந்தான் திருமலை. மற்றவர்களும் பின்தொடர்ந்தார்கள்.

அச்சம், சந்தேகம், உணர்ச்சி, ஆவல், துக்கம் எல்லாம் ஒன்று சேர்ந்து குமாரின் இதயத்தில் போராடிக் கொண்டிருந்தன.

அத்தியாயம் இருபத்தேழு

வழக்கம்போல் அன்று காலையிலும் உடையார் மில்லில் ஏழு மணிக்கு குழல் ஊதிற்று. தொழிலாளிகளும் கூட்டமாக உள்ளே வந்துகொண்டிருந்தனர். உறங்கிக் கொண்டிருந்த யந்திரங்கள் கர்ஜனை செய்துகொண்டு பஞ்சை விழுங்க ஆரம்பித்தன. அன்று வேலை நிறுத்தம் நடக்கப் போகிறது, குழப்பம் ஏற்படப்போகிறது என்று சிலருக்கே தெரியும். மற்றவர்கள் வழக்கம்போல் வேலை செய்துகொண்டிருந்தனர்.

சில தொழிலாளர் மட்டும் மேஸ்திரிகள் பார்க்காத சமயம் பார்த்து ரகசியமாக ஏதேதோ பேசிக்கொண்டனர். மெல்ல வேலை நிறுத்த சமாச்சாரம் பலருக்கும் பரவியது. வயதானவர்கள், "அது ஒன்றும் நடக்காது. அப்படி நடந்தாலும் ஒரு வாரத்தில் திரும்பி வந்துவிடுவோம்." என்று பேசிக்கொண்டார்கள். ஆனால் சில இளைஞர்கள் மட்டும் உற்சாகத்துடன் எல்லோரையும் மத்தியானத்திற்குப் பிறகு வேலைக்கு வரக்கூடாது என்று எச்சரித்துக் கொண்டிருந்தார்கள்.

"வேலை நிறுத்தம்!"

"ஸ்டிரைக்!"

இந்த வார்த்தை ஒவ்வொருவர் மனத்திலும் புகுந்து குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. வேலை வழக்கம்போல் சுறுசுறுப்பாக நடக்கவில்லை. மேஸ்திரிகள்

நிலைமையை ஆபீசுக்குச் சென்று தெரிவித்தார்கள். உடையார் இதை எதிர்பார்த்திருந்ததினால் அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை.

மத்தியான சாப்பாட்டிற்கு எல்லோரும் வெளியே வந்தார்கள். மில்லுக்கு முன்னாலிருந்த மைதானத்தில் மரங்களின் நிழல்களில் உட்கார்ந்துகொண்டு தாம் கொண்டு வந்திருந்த சாதம் சாப்பிட்டார்கள். அப்போது தான் ரங்கநாயகி அம்மாள் அங்கு வந்துசேர்ந்தாள். அவள் வந்ததைப் பார்த்ததும் முன் ஏற்பாடு செய்திருந்தபடி, பக்கத்திலிருந்த பிள்ளையார் மேடைமீது தேசியக் கொடியை சில இளைஞர்கள் கட்டினார்கள். சிறிது சிறிதாக கூட்டம் சேர்ந்தது. மற்ற மரங்களுக்குக் கீழ் உட்கார்ந்து கொண்டிருந்தவர்களும் படுத்துக் கொண்டிருந்தவர்களும் வந்து கூடினார்கள்.

இதையெல்லாம் தம் ஆபீஸ் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த உடையார் உடனே போலீசுக்கு டெலிபோன் செய்து விட்டார். தமக்குத் தெரிந்தவரையில் அவர் தம் தொழிலாளிகளைக் கருணையுடனே நடத்தி வந்தார். அவர்களுக்கென்ன சம்பளத்தில் குறைவா? வெளியே கூலிக்குப் போனால் ஆறு அணா அல்லது எட்டு அணா கிடைப்பது கஷ்டம். அங்கு மாதம் முப்பது ரூபாய் வரையில் கிடைத்துக் கொண்டிருந்தது. சலுகைகளில் என்ன குறைவா? அப்படியிருக்கும்போது அவர்களுக்கு சங்கம் எதற்கு வேண்டும்? ஏன் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும்? அப்படியாவது நோட்டீஸ் கொடுத்துவிட்டு வேலைநிறுத்தம் செய்கிறார்களா? இந்த முறையில்தான்

அவர் மனது சென்றுகொண்டிருந்தது. இந்த வேலை நிறுத்தம் அவருடைய பெருமைக்கும், அந்தஸ்துக்கும், கௌரவத்திற்கும் பங்கம் விளைவிப்பதாகவே கருதினார். "இவர்கள் வராவிட்டால் வேறு ஆட்களை எடுத்தால் என்ன? அப்போது தெரியும் இவர்களுடைய பிழைப்பு!" என்று எண்ணினார்.

. . . .

பானு, குமார், திருமலை இவர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் கூட்டத்திற்குள் வராமல் எதிரிலிருந்த சோளக்காட்டுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு நடவடிக்கைகளை கவனிக்கலானார்கள். ரங்கநாயகி அம்மாளும் மேடைமீதேறி பேசலானாள். சிலர் "ரங்கநாயகி அம்மாளுக்கு....ஜே!" என்ற கோஷத்தை கிளப்பினார்கள். மற்றவர்கள் வேடிக்கை பார்ப்பதுபோல் சிரத்தையின்றி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"சகோதரர்களே!" என்று ரங்கநாயகி அம்மாள் ஆரம்பித்தாள். "தனக்கு வேண்டிய சங்கத்திலோ, கூட்டத்திலோ சேருவது ஒவ்வொரு மனிதனுடைய தெய்வீக உரிமையாகும். அந்த உரிமையைக் கெடுக்கவோ தடுக்கவோ யாராலும் முடியாது. அதே மாதிரி தான் நம்தேச மக்களுக்கும் சுயராஜ்ய உரிமை உண்டு. நீங்கள் எப்படி சங்கம் ஏற்படுத்தப் போராடுகிறீர்களோ அப்படியே தான் இன்று தேச மக்கள் சுயராஜ்யத்திற்காகப் போராடி வருகிறார்கள்." அவள் பேசியது அநேகமாக யாருக்கும் அர்த்தமாகவில்லை. இருந்தாலும் ஏதோ பெரிய விஷயத்தைப் பற்றிப் பேசுவதால் எல்லோரும் அமைதியாகக் கேட்டார்கள். அப்புறம் சாத்வீகத்தைப் பற்றியும் சத்தியாக்கிரகத்தைப் பற்றியும் பேசிக்கொண்டே போனாள்.

"ஆனால் நாம் நமது உரிமைகளுக்காகப் போராடும் போது வெறுப்பு, பொறாமை, ஆகியவற்றை நம் மனத்திலிருந்து அகற்றவேண்டும், நம் தியாகத்தாலேயே எதிரிகளை நம் கட்சிக்கு மாற்றவேண்டும். அவர்கள் இருதயத்தில் இருக்கும் நல்லெண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும். சாந்த மூர்த்தி மகாத்மா காந்தி போதித்தபடி சத்தியாக்கிரகமே கடைசியில் வெற்றி அடையும்................."

"இந்தத் தத்துவம் எல்லாம் அவர்களுக்கு எப்படி அர்த்தமாகும்?" என்று சொல்லிக் கொண்டான் தூரத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்த திருமலை. "வேலை நிறுத்தத்தைப் பற்றியல்லவா பேசவேண்டும்."

அச்சமயத்தில் மில் கேட்டுக்கு முன்னால் ஒரு போலீஸ் லாரி வந்து நின்றது. சுமார் இருபது ஜவான்களும் இன்ஸ்பெக்டரும் இறங்கி கூட்டத்தில் வழி செய்து கொண்டு ரங்கநாயகி அம்மாள் பேசிக்கொண்டிருந்த மேடைக்குப் பக்கமாக வந்தார்கள். கூட்டத்தில் குழப்பம் உண்டாயிற்று. எங்கே தடியடி, அரஸ்ட் எல்லாம் நடக்குமோ என்று பயந்து சிலர் கூட்டத்திலிருந்து வெளியேற முயற்சித்தார்கள். மற்றவர்கள் போலீசாரைக் கண்டதும் "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கோஷம் செய்ய ஆரம்பித்தார்கள். இந்த ஆரவாரத்தில் ரங்கநாயகி அம்மாளின் பேச்சு யாருக்கும் கேட்கவில்லை, மிகுந்த கஷ்டத்துடன் இன்ஸ்பெக்டர் மேடையை அடைந்து ரங்கநாயகி அம்மாளை 144 ஆவது சட்டத்தை மீறி கூட்டம்போட்டு பேசியதிற்காக அரஸ்ட் செய்திருப்பதாக கூறினார்.

ரங்கநாயகி அம்மாள் "சகோதரர்களே, இன்ஸ்பெக்டர் என்னைக் கைது செய்திருக்கிறார். ஆனால் நான் சிறைச்சாலையைத் தவச்சாலையாக கருதுகிறேன். என்னை அடைத்திருக்கும் இரும்புக் கம்பியே நம் இயக்கத்தின் அறிகுறிகளாய் நிற்கும். இந்தியாவே ஒரு சிறைச்சாலையாய் இருக்கும்போது நான் எங்கு இருந்தால் என்ன?............" மெதுவாக ரங்கநாயகி அம்மாள் மேடையைவிட்டுக் கீழே இறங்கினாள். மற்ற போலீஸ்காரர்கள் கூட்டம் கூட்டியதற்கு முக்கியமாய் இருந்த சிலரைப் பிடித்து லாரிக்கு கொண்டுபோனார்கள். கூட்டத்தில் கோஷங்கள் எழுந்தன. போலீசார் கூட்டத்தைக் கலைக்க ஆரம்பித்தார்கள்.

"பாவம், நமக்காக அவர்கள் அடிபடுகிறார்கள். நாம் தானே இந்தக் கூட்டத்துக்கு மூலகாரணமாய் இருந்தோம்!" என்றான் பாலு.

"நாம் என்ன செய்யமுடியும் பாலு?" என்று கேட்டான் குமார்.

"அவர்களுடன் நாமும் ஒன்றாகக் கலந்து கொள்ளலாம். நாமும் தடியடி வாங்கலாம். மறைவில் நின்று வேடிக்கை பார்ப்பதா நியாயம்?"

"நாம் போய் கைது செய்யப்பட்டால் அதனால் தொழிலாளருக்கு என்ன லாபம்? தேசத்துக்குத்தான் என்ன உபயோகம்?" என்றான் திருமலை. "மறைவில் இருந்துகொண்டு எவ்வளவோ காரியங்கள் செய்யலாம். ஏன், நான் சொல்வது உங்களுக்கு பயத்தினால் என்று தோன்றுகிறதா? அங்கு போகாமல் சகித்துக் கொண்டிருப்பதற்குத்தான் அதிக மனோ திடம் வேண்டும். அடி வாங்குவது, ஜெயிலுக்குப் போவது சுலபம்."

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது கூட்டம் கலைய ஆரம்பித்தது. சிலர் வேலைக்குத் திரும்பிப் போனார்கள். மற்றும் சிலர் ‘வேலைக்குப் போகவேண்டாம்’ என்று மில் கேட்டுக்கு முன்னால் மறியல் செய்தார்கள்.

“இப்பொழுதுதான் அவர்களின் நிலைமை, ஒழுங்கு வெளிப்படவேண்டும்” என்றான் திருமலை. “என்ன செய்தாலும் வேலைக்குப் போகிறவர்களுடன் கைகலக்காமல் இருக்கவேண்டும்.”

ஆனால் சிறிது நேரத்தில் வேலைக்குப் போக விரும்பியவர்களுக்கும் மறியல் செய்தவர்களுக்கும் கலகம் மூண்டு விடும்போல் தோன்றிற்று. இவர்கள் உள்ளே தள்ளிக்கொண்டு போகவும் அவர்கள் தோளோடு தோள் சேர்த்து தடுக்கவும் மிகுந்த குழப்பம் ஏற்பட்டது. தூரத்தில் நின்றுகொண்டிருந்த சிலர் கல் விட்டெறிய ஆரம்பித்தனர். உடனே மறுபடியும் போலீஸ்காரர் வந்து தடியடிப் பிரயோகம் ஆரம்பித்தனர்.

கூட்டத்திலிருந்து ஒரு பையன், குமார், திருமலை இருக்குமிடம் ஓடி வந்தான். அவன் திருமலையைப் பார்த்து ‘போலீஸ்காரர்கள் உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். உங்கமேல் ‘வாரண்ட்’ வந்திருக்கிறது” என்றான்.

உடனே திருமலை, பானு குமார் இருவரையும் பார்த்து “நான் இனி இங்கிருக்கக் கூடாது. நீங்களும் போய் விடுவது நல்லது. நீங்கள் இருவரும் இன்றைக்கே பாளையம் என்னும் கிராமத்திற்குப் போய் அங்கு பள்ளிக்கூட வாத்

தியார் கோபால் ஐயரிடம் நான் அனுப்பியதாகச்சொன்னால் உங்களுக்கு வேண்டியதைச் செய்வார். நான் எப்படியிருந்தாலும் அங்கு இரண்டு நாளில் வந்துவிடுவேன்" என்றான். பிறகு பாளையத்துக்கு எப்படிப் போகவேண்டும் என்று குமாரிடம் சொல்லிவிட்டு திருமலை சோளக்காட்டு வழியே மறைந்து விட்டான்.

தடியடிப் பிரயோகம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. குமார், பானு இவர்களால் மறைவில் நின்று கொண்டு சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் கூட்டத்தின் மத்தியில் ஓடினார்கள். மெதுவாக கூட்டம் கலைந்து கொண்டிருந்தது. திடீரென்று "குமார்!" என்று சொல்லி பானு கீழே விழுந்தான். குமார் திரும்பிப் பார்த்தான். நெற்றியிலிருந்து ரத்தம் வடிந்துகொண்டிருந்தது ...."

கூட்டம் கலைந்துவிட்டது. மறியல் செய்தவர்களையெல்லாம் லாரியில் ஏற்றிக்கொண்டு போலீசார் சென்றனர். மற்றவர்களில் சிலர் வேலைக்குச் சென்றனர். சிலர் பல திக்குகளிலும் போய்விட்டார்கள். ஒரு சிலர் மட்டும் அங்கும் இங்கும் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.

மில் கேட்டிலிருந்து காரில் உடையார் வந்தார். வெளியே என்ன நடக்கிறது என்று எட்டிப் பார்த்தார். தூரத்தில் நடந்து போவது குமார்தான் சந்தேகமில்லை. சொல்லமுடியாத துயரமும் கோபமும் கலந்து மனதில் எழுந்தது. "சீக்கிரம் ஓட்டு!" என்றார் டிரைவரை.

தான் மேலே போட்டுக்கொண்டிருந்த துண்டால் பாலுவின் நெற்றிமேல் உருமாலைபோல் கட்டி ரத்தத்தை நிறுத்தினான் குமார். பார்த்தால் காயம் ஏற்பட்டதாகவே தெரியவில்லை. ஆனால் அதிர்ச்சியால் பாலு சோர்வடைந்து காணப்பட்டான். துரிதமாக நடக்கமுடியவில்லை. வெய்யிலும் வெகு உஷ்ணமாயிருந்தது. இருந்தாலும் பாலு "ஒன்றுமில்லை. சின்னகாயம். 'பிளாஸ்டர்' ஒட்டினால் சரியாய்ப் போய்விடும்" என்று சொல்லிக்கொண்டான்.

மனத்தளர்வுடனும், குழப்பத்துடனும் சோர்வுடனும் குமார், பாலுவை மெதுவாக நடத்திக்கொண்டே மனத்தில் நினைத்தான்: "விரோதிகளை நேசிப்பது, பகைமைக்கு அன்பும், திட்டுக்கு வாழ்த்தும் திருப்பிக் கொடுப்பது, தடியடியையும் பலாத்காரத்தையும் புன்முறுவலுடன் வரவேற்பது............ அதுவே பாலுவின் கொள்கை. அதற்கு இது தான் பலன்."

அத்தியாயம் இருபத்தெட்டு

பாளையம் என்னும் கிராமம் மதுரையிலிருந்து சுமார் முப்பத்தைந்து மைல் தூரத்தில் இருந்தது. வளைந்து வளைந்து செல்லும் குறுகிய ஒரு பாதையின் வழியாக குமார் தனியே அந்த கிராமத்திற்குப் பக்கத்தில் நடந்து வந்துகொண்டிருந்தான். கொஞ்ச தூரத்தில் கிராமம் தெரிந்தது. ஊருக்குப் பின்னால் கரடுமுரடான குன்றுகள் ஆகாயத்திற்கு எதிரே கம்பீரமாக நின்றுகொண்டிருந்தன. மலைச்சரிவுகளில் அடர்த்தியான மரங்கள் கிராமத்தின் அழகை அதிகப்படுத்தின. மலைகளினிடையே வெகு தூரத்தில் வெள்ளிக் கம்பிபோல் காலை வெய்யிலில் மின்னும் ஒரு நீர்வீழ்ச்சி காணப்பட்டது. அந்த நீர்வீழ்ச்சியே ஒரு சிறு ஆறாக பாதைக்குப் பக்கமாக ஓடிக்கொண்டிருந்தது. சாலையின் இரு பக்கங்களிலும் பசுமையான வயல்கள் காணப்பட்டன. வயல்களில் வேலை செய்யப்போகும் கிராம வாசிகள் குமாரை உற்று நோக்கினர்.

குமார் சோர்ந்து காணப்பட்டான். கட்டிக்கொண்டிருந்த வேஷ்டியும் போட்டுக் கொண்டிருந்த ஷர்ட்டும் அழுக்கடைந்து இருந்தன. இரண்டு நாளாக ஷவரம் செய்து கொள்ளவில்லை. தலைமயிர் சீவப்படாமல் காற்றில் ஊசலாடிக்கொண்டிருந்தது.

பாலுவை நெற்றி காயத்துடன் அவனுடைய வீட்டில் விட்டதும் திருமலை சொன்னபடி குமார், பாளையத்துக்குப் புறப்பட்டான். இரண்டு நாளில் பாலு வருவதாகச் சொல்லியும் குமார் நிற்கவில்லை. "நீ இரண்டு நாள்

கழித்து வா. நான் இப்போதே போகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். மதுரையிலிருந்து வரும் பஸ் பாளையத்துக்கு ஐந்து மைல் தூரத்தில் நின்றுவிடும். கடைசி ஐந்து மைலும் மாட்டு வண்டியில் வரவேண்டும் அல்லது நடக்கவேண்டும். ஆனால் குமார் புறப்பட்ட அன்று பஞ்சர் ஆகி பஸ் பாதிவழியிலேயே நின்று விட்டது. அதைச் சரிசெய்து வந்துசேறுவதற்கு இரவு மணி பத்தாகி விட்டது. குமார் பஸ் ஷெட்டிலேயே படுத்துத் தூங்கிவிட்டு காலையில் எழுந்து பாளையத்துக்கு நடக்கலானான்.

குமார் பாளையத்தை அடைந்தபோது மணி சுமார் ஒன்பது இருக்கும். கிராமத் தலைவாசலில் இருந்த ஆலமர நிழலில் உட்கார்ந்து கொண்டு சிலர் பல் தேய்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களுள் ஒரு கிழவரிடம் குமார் பள்ளிக்கூடம் எங்கே என்று கேட்டான்.

"யாரப்பா நீ? கோபாலய்யிரு தம்பியா?" என்றார் கிழவர்.

கோபாலய்யர்தான் பள்ளிக்கூட உபாத்தியாயர் என்பது குமாருக்கு உடனே ஞாபகத்துக்கு வரவில்லை. "நான் பள்ளிக்கூட வாத்தியாரைப் பார்க்க வந்திருக்கிறேன்" என்றான்.

"நீதான் சின்ன வாத்தியாரா? சின்ன வாத்தியார் ஒருத்தர் வருவாருன்னு கோபாலய்யிரு சொல்லிகிட்டிருந்தாரு."

"இல்லே, நான் சும்மா அவரைப் பார்க்க வந்தேன்" என்றான் குமார். தன்னைப்பற்றி எல்லாம் தெரிந்துகொண்டுதான் அவர்கள் விடுவார்கள் போல் தோன்றியது. ஆகவே குமாரும் தன் பதில்களில் மிகவும் ஜாக்கிரதையாக இருந்தான்.

"மதுரையிலிருந்தா ?"

"ஆம் !"

குமாருக்கு முந்திய நாள் மத்தியானத்திலிருந்து சாப்பாடில்லாததால் பசி எடுத்தது. திருமலேயின் பேச்சைக் கேட்டு முன்பின் தெரியாத பள்ளிக்கூட உபாத்தியாயரைப் பார்க்க இவ்வளவு தூரம் வந்தது சரியா என்று தோன்றிற்று. திருமலே கைது செய்யப்பட்டு வராமல் போனல் என்ன ஆகும்? ஆனல் மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்த கிழவருக்கு பேச்சுக்கு புதிதாக ஒருவன் கிடைத்தது சந்தோஷமாக இருந்தது.

பல்குச்சியை மென்று கொண்டே, "மதுரையிலிருந்தா வர்ரெ ?" என்று மறுபடியும் ஆரம்பித்தார். "காங்கிரஸ் காரரெல்லாம் என்ன செய்துகிட்டிருக்காங்க? எல்லாம் கப்சுப் என்று அடங்கிக்கிட்டாங்களாமே? வாஸ்தவமா?" குமாரின் பதிலேக் கேட்ட மற்றவர்களும் பக்கத்துக்கு வந்தார்கள்.

"இல்லே. இன்னும் அரஸ்ட் தடியடி எல்லாம் நடந்து கொண்டுதானிருக்கிறது" என்றான் குமார்.

இதைக் கேட்டதும் குமாருடன் பேசிக்கொண்டிருந்த கிழவர் மற்றவர்களைப் பார்த்து "நான் என்னய்யா சொன்னேன்? பேப்பர்லெ போடரதெல்லாம் நம்பக்கூடாதுண்ணு சொல்லலெயா? அப்படியெல்லாம் அடக்க சர்க்காருக்கு சக்தியேது?" என்றார்.

"வாத்தியார் எங்கே இருக்கிறார்? கொஞ்சம் சொல்லுங்கள், அவரை உடனே பார்க்கவேண்டும்" என்றான் குமார். அவனைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது.

"உனக்கு வாத்தியாரல்ல வேணும்? இந்நேரத்துக்கு வீட்டிலெ இருக்கமாட்டாரு. பள்ளிக்கூடத்திலெதான் இருப்பாரு. இதோபாரு, இப்படியே நேராப் போனால், அடுத்த மூலெயிலெ சாவடி. அதுதான் பள்ளிக்கூடம்" என்றார் கிழவர். பிறகு "நீ இங்கே ரொம்ப நாள் இருப்பையோ?" என்று கேட்டார்.

"சில நாள் இருப்பேன்" என்று சொல்லிவிட்டு குமார் சாவடிப்பக்கம் போனான். பள்ளிக்கூடத்துக்கு பக்கத்தில் போகுமுன்பே 'அ ன, ஆ வன்ன' சத்தம் தூரத்துக்குக் கேட்டது. பக்கத்துக்கு வர, வர சத்தமும் அதிகமாயிற்று. பள்ளிக்கூடத்துக்கு உள்ளே சிலர் நிலத்தில் உட்கார்ந்துகொண்டும், சிலர் பெஞ்சிமேல் உட்கார்ந்துகொண்டும் பாடம் படித்துக்கொண்டும், எழுதிக்கொண்டும் இருந்தார்கள். எல்லா வகுப்புகளும் ஒரே அறையில். எல்லோருக்கும் ஒரே உபாத்தியாயர். அவர் ஒரு பழைய நாற்காலியின் மீது அமர்ந்திருந்தார். சுமார் முப்பது வயதிருக்கும். குமார் உள்ளே போனதும் "யாரது?" என்று சொல்லிக்கொண்டே எழுந்தார்.

"திருமலை உங்களைப் பார்க்கச் சொல்லி அனுப்பினான்" என்றான் குமார்.

"யார்? திருமலையா"

"ஆம்."

"சரி, கொஞ்சம் இருங்கள்" என்று சொல்லிவிட்டு கோபாலய்யர் சட்டாம்பிள்ளையைக் கூப்பிட்டார். "நான் சீக்கிரம் வருகிறேன். எல்லாம் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். யாராவது சத்தம் போட்டால் வந்து தோலை உரித்திடுவேன்" என்று மாணவர்களை பயமுறுத்திவிட்டு குமாரைத் தம் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார்.

வீட்டுக்குப் போகும் வழியில் கோபாலய்யர் குமாரைப்பற்றி விசாரித்தார்.

"உங்கள் பெயர் என்ன?"

"குமார உடையார்."

"ராமச்சந்திர உடையாருக்கு சொந்தம் உண்டா" என்று கேட்டார் உபாத்தியாயர்.

"அவருடைய மகன்."

"ஓகோ, அப்படியா?" கோபாலய்யரின் பேச்சு ஆச்சரியத்தைத் தெரிவித்தது.

"ஆம், திருமலையை நான் இரண்டு நாட்களுக்கு முன் முதல்முதலாக சந்தித்தேன். நேற்று சுந்தரம் மனைவி ரங்கநாயகி அம்மாள் அரஸ்ட் செய்யப்பட்டாள். நான் இங்கே வந்துவிட்டேன். திருமலையும் இரண்டு நாளில் இங்கே வருவான்."

இவ்வளவும்தெரிந்து கொண்டு கோபால் ஐயர் தமக்கும் திருமலைக்கும் உள்ள உறவைப்பற்றி பேசலானார். “திருமலைக்கும் எனக்கும் வெகுநாளைய சிநேகம். இருவரும் மதுரையில் ஒன்றாகப் படித்தோம். அவன் ராஜீயத்தில் சேர்ந்து கொண்டான். நான் திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாராகிவிட்டேன். அவன் வீட்டிற்கு பக்கத்தில்தான் நானும் குடியிருக்கிறேன்.”

“இதுதான் திருமலையின் சொந்த ஊரா?”

“ஆம், அவனுக்கு இங்கே நிலம்கூட கொஞ்சம் இருக்கிறதே?”

இருவரும் கோபால் ஐயர் வீட்டை அடைந்தார்கள். குமாரைத் திண்ணையில் உட்கார வைத்துவிட்டு அவர் உள்ளேபோய் குமார் வந்திருப்பதைப்பற்றி தம் மனைவியுடன் சொல்லி, காப்பி, சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்தார். பிறகு குமாரிடம், “நீங்கள் போய் ஆற்றில் குளித்துவிட்டு வந்தால் அதற்குள் சாப்பாடு தயாராய் இருக்கும். சாப்பிட்டுவிட்டு இளைப்பாருங்கள். நான் போய் அந்தப் பையன்களிடம் மாரடித்து விட்டு வருகிறேன்” என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

குமார் பானுவின் வேஷ்டி, ஷர்ட், சில தனக்காக இரவல் வாங்கிக்கொண்டு வந்திருந்தான். ஆற்றில் போய்க் குளித்துவிட்டு உடைகளை மாற்றிக்கொண்டு வந்து சாப்பிட்டான். அன்றைய சாப்பாடு மாதிரி எந்த சாப்படும் குமாரின் மனதிற்கு திருப்தி அளித்ததில்லை. பிறகு சாயந்திரம் வரையிலும் படுத்துத் தூங்கினான். மனதில் உள்ள எல்லா பிரச்சனைகளும் தூக்கத்துக்கு இடம் கொடுத்தன.

மாலையில் கிராமத்தைச் சுற்றிலும் உலாவிவிட்டு வந்தான். அங்கு பெரிய பணக்காரர் இருப்பதாகத் தெரியவில்லை. எல்லாம் சிறிய வீடுகளாகவே காணப் பட்டன. கிராமம் அசுத்தமாக இருந்தாலும் சுற்றிலும் குன்றுகளும், அடர்த்தியாக மரம், செடி கொடிகளும், ஆறும், பல சிறிய கால்நடைப் பாதைகளும் அழகாக அமைந்திருந்தன. இருட்டாகும் சமயத்தில் திரும்பி வந்தான். கோபால் ஐயரும் குமாரும் ஒன்ருக சாப்பிட் டார்கள். பிறகு திண்ணையில் உட்கார்ந்துகொண்டு இரு வரும் பேசிக்கொண்டிருந்தார்கள். குமார் தான் திருமலை யைச் சந்தித்த விதத்தைப் பற்றியும் வேலை நிறுத்தத்தைப் பற்றியும் பாலு காயம் அடைந்ததைப் பற்றியும் விவரமாகச் சொன்னுன். கோபால் ஐயரும், "திருமலை வருவதாக கடிதம் போட்டிருந்தான். கூட யாரையாவது கூட்டிக் கொண்டு வரலாமென்றும் எழுதியிருந்தான். திருமலையின் சொந்த ஊர் இது என்பது போலீசாருக்குத் தெரியாது. நகரத்துக்கு பக்கமாக இல்லாததால் கண்டு பிடிப்பது கஷ்டம். ஆனுல் இந்த ராஜீய விஷயங்களில் நான் தலை யிடுவதில்லை" என்ருர்.

"திருமலைக்கு வேண்டியவர்கள் இங்கு யாரும் இல் லையா?" என்று கேட்டான் குமார்.

"தாயார், தகப்பனர் இருவரும் இறந்து விட்டார்கள். வேறு யாரும் இல்லை."

"அவன் தகப்பனருக்கு என்ன வேலை? விவசாயம் தானு?"

"அது ஒரு பெரிய கதை" என்று கோபால் ஐயர் தம் கதையை ஆரம்பித்தார். "திருமலையின் தகப்பனுருக்கு சொத்து ஒன்றும் இல்லாவிட்டாலும் மதுரையில் ஒரு நல்ல குடும்பத்தில் கலியாணம் செய்து கொண்டார். ஆனல் புருஷன் பெண்சாதிக்கு எப்போதுமே ஒத்து வரவில்லை போலிருக்கிறது. அவர் ரொம்ப முன் கோபி. திருமலை பிறந்ததற்கப்புறம் அந்த அம்மாள் இங்கு வரவே இல்லை. திருமலையும் தாயாரிடமே இருந்துகொண்டு மதுரையில் படித்துக்கொண்டிருந்தான். தாயார் இறந்த பிறகு மாமன்மார்கள் தயவை எதிர்பார்க்க இஷ்டப் படாமல் இங்கே வந்து சில நாள் இருந்தான். ஆனல் தகப்பனும் சீக்கிரமே இறந்து விட்டார். அதன்பிறகு திருமலை ராஜீய இயக்கங்களில் சேர்ந்துகொண்டு அங்கும், இங்கும் சுற்றிக் கொண்டு வருகிருன். இங்குவந்து இரண்டு மூன்று வருஷத்துக்கு மேலிருக்கும். இருக்கும் நிலத்தையும் வீட்டையும் ஒரு பண்ணையாள் பார்த்து வருகிருன்."

"திருமலை வந்தால் அந்த வீட்டில்தான் நாங்கள் இருப்போம்."

"ஆம், காலையில் பண்ணை ஆள் முருகனிடம் சொல்லி வீட்டைப் பெருக்கி தயார் செய்யச் சொல்ல வேண்டும்."

அன்று இரவு படுத்துக்கொண்ட பிறகு குமார் தனது சுதந்திர வாழ்க்கையைப்பற்றி நினைத்தான். வீட்டை விட்டு வந்த மூன்று இரவுகளில் மூன்று இடங்களில் தூங்க வேண்டி ஏற்பட்டது. வாழ்க்கை பூராவும் இப்படி இடம் விட்டு இடம் மாறி மற்றவர்களின் தயவில் தான் இருக்க

வேண்டுமா? பானுவின் காயம் எப்படி யிருக்கிறதோ? அவன் காயமடைந்ததிலிருந்து எப்படியோ குமாருக்கு அவன் மேல் அன்பும் அனுதாபமும் அதிகமாகி விட்டது. திருமலை சீக்கிரம் வந்தால் பரவாயில்லை. அப்படி வரா விட்டால் என்ன செய்வது? கோபால் ஐயர் வீட்டில் எத்தனை நாளைக்கு இருக்க முடியும்? அந்த கிராமத்தில் என்ன செய்வது? தன் வீட்டில் எல்லோரும் என்ன நினைக்கிறார்களோ? என்ன செய்துகொண்டு இருக்கி ருர்களோ? தன்னைத் தேடுவார்களா? மில் கேட்டுக் கெதிரில் தகப்பனர் காரில் போகும்போது தன்னைப் பார்த்தாரா? பார்க்காமல் இருந்திருந்தால் பரவாயில்லை என்று குமாருக்குத் தோன்றியது. பாவம், அம்மாதான் அழுது கொண்டிருப்பாள். ஆனல் என்ன செய்வது? எதிர்காலத்தில் என்ன நடக்குமோ, யாருக்குத் தெரியும்?..............இப்படி நினைத்துக்கொண்டே தூங்கி விட்டான்.

அத்தியாயம் இருபத்தொன்பது

திருமலை மறுநாள் மத்தியானம் வந்து சேர்ந்தான். சில புஸ்தகங்கள், நிறைய காகிதம், ராமு கொடுத்த டியுப்ளிகேடர், துணிமணிகள் ஆகிய எல்லாவற்றையும் ஒரு ஒற்றை மாட்டுவண்டியில் போட்டுக்கொண்டு வந்து சேர்ந்தான். முருகனின் உதவியுடன் சாமான்களை எல்லாம் இறக்கித் தன் வீட்டுக்குள் வைத்துவிட்டு கோபால் ஐயர் வீட்டுக்கு வந்தான். திருமலையைப் பார்க்க குமாருக்கு சந்தோஷமாய் இருந்தது.

" போலீசார் பல இடங்களிலும் எனக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுதான் என் ஊர் என்று அவர்களுக்கு இன்னும் தெரியாது. நான் சென்னைக்குப் போய்விட்டதாக அவர்களுக்குத் தகவல். அதனால்தான் சுலபமாக இங்கே வர முடிந்தது. ஏன், பாலு எங்கே?" என்றான் திருமலை.

குமார், திருமலை போனபிறகு நடந்ததையெல்லாம் விவரமாகச் சொன்னான்.

" நான்தான் உள்ளே போகவேண்டாம், என்று சொன்னேனே" என்றான் திருமலை மனத்தாங்கலாக. " பாலு காயம் பட்டுப் படுத்துக்கொண்டான்; நமக்கு இங்கே உதவியில்லை. இதனால் தடியடி வாங்கியவர்களுக்கும் ஒருவித நன்மையும் கிடையாது."

"பாலு காயமடைந்ததைப் பற்றி உனக்குக் கொஞ்சமாவது வருத்தமில்லையா?"

"வருத்தமிருந்து என்ன செய்வது? இங்கே பாலு வரவில்லையே என்று இன்னும் அதிக வருத்தமாய் இருக்கிறது. ஆனால் அது உங்களுடைய குற்றம்" என்றான் திருமலை. பிறகு கொஞ்சம் நிதானமாக, "இதோ பார் குமார், நாம் ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம். நமது பலமோ கொஞ்சம். அதைப் பாதுகாத்து எங்கு அவசியமாக உபயோகிக்கவேண்டுமோ அங்குதானே அதைப் பிரயோகிக்கவேண்டும்? சிப்பாய்கள் பின்னிடுகிறார்களே என்று தளகர்த்தர் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சண்டைக்குப் போகிறாரா? அதே மாதிரிதான் இங்கும். நாம் வேறுவிதமான ஆயுதங்களை உபயோகப்படுத்தினாலும் இதுவும் ஒரு யுத்தம் என்பதை மறக்கக்கூடாது."

"தடியடியைப் பார்த்ததும் எங்கள் மனசு தாளவில்லை."

"அம்மாதிரி அனுதாபம் இருப்பது நல்லதுதான். ஆனால் அதைக் கட்டுப்படுத்தி சரியான சமயத்தில் உபயோகிக்கவேண்டும்."

"பாலுவின் காயம் அப்படியொன்றும் பலமில்லை. சீக்கிரம் வந்துவிடுவான்."

"போலீசார் அதற்குள் பிடிக்காவிட்டால்" என்று முடித்தான் திருமலை.

பிறகு இருவரும் திருமலையின் வீட்டுக்குப் போனார்கள். வீடு ஒரே அலங்கோலமாய் இருந்தது. முருகன் மும்முரமாக வீட்டை சுத்தம் செய்வதில் ஈடுபட்டிருந் தான். சுத்தம் செய்த ஒரு அறையில் திருமலை கொண்டு வந்திருந்த காகிதம், டியுப்ளிகேடர், வைக்கப்பட்டன. "எல்லா சமாச்சாரமும் கிராமத்தில் பொது சமாச்சாரம் தான். எல்லாவற்றையும் தலைவாசல் அரசமரத்தடியில் விவாதித்துதான் ஆகவேண்டும். ஆகையால் நம் வேலையைப் பற்றி ஜாக்கிரதையாய் இருப்பது நல்லது" என்றான் திருமலை.

கிராமத்தில் சிலருக்குத்தான் திருமலையை நன்றாகத் தெரியும். அவர்கள் வந்து க்ஷேம சமாசாரம் விசாரித் தார்கள். திருமலையும், மாலையிலும் காலையிலும் தலைவாசலில் உட்கார்ந்திருந்தவர்களுடன் பேசி எல்லோரைப்பற்றியும் சீக்கிரம் தெரிந்துகொண்டான்.

மூன்று நாள் கழித்து பாலுவும் வந்து சேர்ந்தான். நெற்றியில் இன்னும் காயம் இருந்தது. ஆனால் தடியடி வாங்கியும் அஹிம்சையில் அவனுடைய பற்றுதல் அதிக மாயிருந்ததே தவிர மாறவில்லை. குமாரின் மனதில் பாலுவின் மேலிருந்த அன்பும் மதிப்பும் அதிகமாயின.

மூவரும் பாளையத்தில் சுமார் ஒரு மாதம் இருந் தார்கள். அந்த ஒரு மாதத்தில் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தார்கள். அறிக்கைகள் எழுதுவதும் அவற்றை 'டியுப்ளிகேடரில்' எடுப்பதும், அவைகளைப்பற்றி விவாதிப் பதும், அவைகளை எடுத்துக்கொண்டுபோய் ரகசியமாக மதுரைக்கு அனுப்புவதும், அங்கும் மற்ற இடங்களிலும்

என்ன நடந்து வருகிறது என்று தெரிந்துகொள்வதும் ... இவற்றிலேயே காலம் சென்றது. பக்கத்து கிராமங்களில் கூட்டங்கள் போடுவதும், தீண்டாமை ஒழித்தல், மது விலக்கு, முதலியவற்றைப் பற்றிப் பேசுவதும் உண்டு. பாலுவும் குமாரும் 'கிராம முன்னேற்றம்' செய்ய வந்திருப்பதாகவும் ஊரார் நினைத்தார்கள். ஆனால் இவர்களுடைய துண்டுப் பிரசுரங்கள் வெளிப்படையாக நடந்து வந்த இயக்கத்துக்கு ஆதரவளித்து வந்தது. சில சமயங்களில் கிராமவாசிகளுடன் வயல்களிலும் வேலை செய்தார்கள். ஆனால் கிராமவாசிகள் இவர்களுடைய முயற்சிகளைப் பார்த்து சிரித்தார்களேதவிர, வேறொன்றும் சொல்லவில்லை. இப்படியே ஒரு மாதம் கழிந்தது ....

அத்தியாயம் முப்பது.

முதலில் இந்த வாழ்க்கை குமாருக்கு மிகவும் திருப்தி அளித்தது. நகர வாழ்க்கைக்கு முற்றிலும் மாறு பட்டதாய் இருந்தது. கஷ்டப்பட்டு வேலே செய்ததால் சில நாளாக மனதில் எழுந்த புயல் அடங்கி நிம்மதி நிலவிற்று. பல நாட்களுக்குப் பிறகு வேகமான, கூட்டமான நகர வாழ்க்கையிலிருந்தும், மனதில் எழுந்த கேள்விகளிலிருந்தும், குடும்பத்தின் இன்னல்களிலிருந்தும் தன்னே விடுவித்துக் கொண்டான். அடர்ந்த மரங்களுக்கும் புதர் களுக்கும் இடையே செல்லும் குறுகிய கால்பாதைகளில் நடப்பதும், மரநிழலில், புல்லில் படுத்து தூரத்திலிருந்த மலேகளின் அழகைப் பார்த்துக் கொண்டிருப்பதும், சுத்தமாக நீலநிற ஆகாயத்தின் கீழே கம்பீரமாக மிதந்து செல்லும் வெண்மேகங்களின் போக்கை கவனித்துக்கொண்டிருப்பதும், மலேகளின் பின்னல் கதிரவன் மறையும்போது ஏற்படும் மந்திரஜால நிறங்களேப் பருகுவதும், பாறையின் மேல் மோதிவிழும் நீர்வீழ்ச்சியின் ஓசையைக் கேட்பதும், இத்தகைய இயற்கை இன்பங்களில் மனது திருப்தி அடைந்தது.

அதிகாலேயில் எழுந்ததும் குமார் ஆற்றங்கரையில் நடப்பது வழக்கம். அப்போது வானம் நீலஒளி கொண்டிருக்கும். சூரியன் உதயமானதும் மலேகளின் மீது 'மஸ்லின்' துணி போட்ட மாதிரியிருந்த பனித்துளிகள் ஐந்து நிமிஷத்தில் மறைந்து காலே வெய்யிலில் மலேகள்

சயம் மாதிரி இருக்கும். வெள்ளி உருக்கி வார்ப்பதுபோல் நீர்வீழ்ச்சி பிரகாசிக்கும். கிராமவாசிகள் தமது கஷ்டமான வாழ்வில் மற்றொரு நாளைப்போக்க வயல்களுக்குப் போய்க் கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்களின் முகத்தில் கஷ்டம் தெரியாது. பெண்களோ குமாரைப் பார்த்ததும் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொள்ளுவார்கள். ஆனால் கொஞ்சதூரம் சென்றதும் திரும்பிப் பார்த்து அவர்களுக்குள்ளே ஏதோ பேசி சிரிப்பார்கள்.

குமாரும், பாலுவும், திருமலையும் பகலில் வேலை செய்வார்கள். முதலில் குமாருக்கு அவர்கள் வேலை சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஒன்றிரண்டு நாளில் திருமலையின் உதவியால் எல்லாம் கற்றுக்கொண்டான். பிறகு மூவரும் கூட்டாகவும் சுருசுருப்பாகவும் வேலை செய்தார்கள். அறிக்கைகள் எழுதுவதும், அவைகளை எப்படி எழுதவேண்டும் என்று அவர்களுக்குள்ளே தர்க்கம் செய்வதும் பிறகு 'டியுப்ளிகேடரில்' அனேக காப்பிகள் எடுப்பதும், அவைகளை சிறு சிறு மூட்டைகளாகக் கட்டுவதும் தான் அவர்களுடைய வேலை. மத்தியானம் ஆற்றில் குளித்துவிட்டு வந்து முருகன் பரிமார சாப்பிடுவார்கள். ஐந்து நாளைக்கு ஒரு முறை நாம் எழுதிய அறிக்கை மூட்டைகளைக்கொண்டு பக்கத்து ஒரு பெரிய கிராமத்தில் கொடுத்து மதுரைக்கு அனுப்பச் சொல்லிவிட்டு வருவார்கள். அதற்கெல்லாம் திருமலை முன்பே ஏற்பாடு செய்திருந்தான்.

மாலையில் தலைவாசலில் உட்கார்ந்துகொண்டு கிராமவாசிகள் ஊர் விஷயங்களைப்பற்றியும், உலக விஷயங்களைப் பற்றியும் பேசுவது வழக்கம். இவர்களும் சில சமயங்களில் அவர்களுடன் சம்பாஷிப்பதுண்டு. கிராமவாசி

களுக்கு அனேகமாக படிக்கத் தெரியாததால் இவர்கள் பத்திரிகையை சத்தமாகப் படித்து அதிலுள்ளவற்றை விவரித்துச் சொல்லுவது வழக்கம். ஆனல் குமார் இவர் களை விட்டு விட்டுத் தனியே சென்று மாலை அழகை அனுப விப்பதுண்டு. அந்நேரத்தில் மலைகள் தாம்பிரத்தால் செய் யப்பட்டவைபோல் தோன்றும். பிறகு சூரியன் அவை களுக்குப் பின்னல் மறையும்போதோ, கருத்து கம்பீர மாகத்தோன்றும்.

இம்மாதிரி மந்திர ஜாலத்தால் மாறுவது போன்ற மலைகளின் சாரல்களில் காரணமின்றியும், கருத்தின்றியும் குமாரின் மனதில் பல எண்ணங்களும் உணர்ச்சிகளும் தோன்றின. கடந்த பல தினங்களாக மனதில் குடியிருந்த சிந்தனைகளும், முடிவற்ற போராட்டமும், ஆழ்ந்த உணர்ச்சி பொருந்திய ஆர்வமும், இதயக் கற்பனையிலே கண்ட கனவுகளும் உருவெடுத்து பிம்பங்களாக மனதில் தோன்றின. அவற்றில் இளமையின் வெட்கமும், சக்தியும், அச்சமும், துணிகரமும் தனியே வாழ்க்கைப் படகை ஓட் டிச்செல்லும் நூதனமும், வாழ்க்கையின் ஆழத்தைக் கண்டுபிடிக்க விரும்பும் ஆசையும் எல்லாம் கலந்திருந்தன. ஆம், வாழ்க்கையின் ஆழத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். உயர்ந்த நோக்கங்களும், உண்மையான நம்பிக்கையும், ஆசைக்கனவுகளும் நிறைந்தவன், உண்மை அனுபவம் என்ற கொடுமை பொருந்திய பாறையின் மீது மோது வதற்கு முன்னல் மனதில் எழும் லட்சியங்களைக் கொண் டவன் குமார். அவன் மனதில் இப்போது என்ன ஏற்பட்டிருக்கிறது? அந்தப் பாறையின் மீது மோதப் போகிருனு? இதய பொக்கிஷமெல்லாம் உடையப்

போகிறதா? மன பிம்பங்களெல்லாம் உடையப்போகிறதா? எதிர்காலத்தில் எப்படியானாலும், இப்போது அவைகளைப் பற்றி நினைக்க அழகாய் இருந்தது. காரியத்தில் நடக்கலாம் என்று கற்பனை செய்ய மனது ரம்மிய மடைந்தது.

இந்த தனித்த சமயங்களில் குமார் கவிதை எழுதினான். பாளையத்துக்கு வந்த நான்கு நாளைக்குப் பிறகு குமார் ஏதோ எழுதிக்கொண்டிருப்பதைப் பார்த்த திருமலை "அதென்ன குமார்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை. ஏதோ மனதில் தோன்றியதைக் காகிதத்தில் எழுதுகிறேன். அவ்வளவுதான்."

"உனக்கு தனியே இருக்க அதிக ஆசைபோல் இருக்கிறது" என்றான் திருமலை.

"ஆம்"

பிறகு சிறிது நேரம் கழித்து குமார், திருமலையைப் பார்த்து, "நான் கவிதை எழுதுகிறேன்" என்று சொன்னான். அவன் முகத்தைப் பார்த்தால் ஏதோ குற்றம் செய்தவன்போல் காணப்பட்டான்.

"எங்கே பார்க்கலாம்" என்று திருமலை குமார் எழுதியதைப் படித்துப் பார்த்தான். "ஆங்கிலத்தில் எழுதுகிறாயே? ஏன் தமிழில் எழுதக்கூடாது?" என்று கேட்டான்.

எனக்குத் தமிழ் யாப்பிலக்கணம் ஒன்றும் தெரியாதே?"

"அதை அவ்வளவு கவனிக்கவேண்டாம். உன் எண்ணங்களைத் தமிழில் எழுது. அவை உணர்ச்சி பொருந்தியவையாக இருந்தால்தானே கவியாக உன் இருதயத்திலிருந்து வரும். பிறகு வேண்டுமென்றால் யாப்பிலக்கணத்தைக் கற்கலாம். நீ சந்திரனைப்பற்றியும், நக்ஷத்திரங்களைப்பற்றியும், இயற்கையைப்பற்றியும் எழுதுகிறாய்? ஆனால் இவைகளில் இந்த ஆயிரக்கணக்கான வருஷங்களாக ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா? இவைகளைப்பற்றி கம்பன், காளிதாஸன், ஷேக்ஸ்பியர் ஆகிய எல்லோரும் எழுதியதைக் காட்டிலும் புதிதாக நாம் என்ன எழுதப் போகிறோம்? அவர்கள் முன்பு சொல்லியதையேதான் வேறு வார்த்தைகளில் திருப்பிச் சொல்லலாம். ஆனால் உலகத்தைப் பார். வாழ்க்கையைப் பார். ஜனங்களைப் பார். அவர்கள் நாளுக்கு நாள் தாம் அறியாமல் மாறிக் கொண்டே வருகிறார்கள். அவர்களுடைய இன்ப துன்பங்களும், ஆசைகளும், லட்சியங்களும் மாறிக்கொண்டே வருகின்றன. அவைகளைப்பற்றியெல்லாம் எழுதினால், ஏதாவது புதிதாகச் சொல்ல இடமிருக்கும். ஆனால் தமிழில் எழுது."

இந்தச் சிறிய இலக்கிய பிரசங்கத்தைக் கேட்க குமாருக்கு ஆச்சரியமாய் இருந்தது. அப்போது இயற்கையைப் பற்றி எழுதக்கூடாதா? என்று கேட்டான்.

"எழுதலாம். ஆனால் இயற்கையையும் வாழ்க்கையையும் ஒன்று சேர்த்து எழுதவேண்டும். இரண்டுக்கும் உள்ள தொடர்பைப்பற்றி எழுதவேண்டும்" என்றான் திருமலை.

"இலக்கியத்தைப்பற்றி இவ்வளவு தெரிந்திருந்தால் நீயும் ஏன் ஏதாவது எழுதக்கூடாது."

“ இலக்கியத்தைப் பற்றி காலேஜிலும், புஸ்தகங்களிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். ஆனல் எழுதுவதற்கு இதய உணர்ச்சி வேண்டும். வாழ்க்கையைக் கண்ணல் பார்த்துத் தெரிந்துகொள்ளும் தன்மைவேண்டும். மனத்திலிருக்கும் சிந்தனைகள் இடம் கொள்ளாமல் பொங்கி வெளிவரவேண்டும். அப்போதுதான் உண்மை இலக்கியங்களை கற்பனை செய்யமுடியும். இந்த குணங்களெல்லாம் உன்னிடம் இருக்கிறது என்று நினைக்கிறேன்.”

“ ஆம். என்னையறியாமலே என் கை பென்சிலை எடுத்துக் காகிதத்தின் மேல் எழுதுகின்றது” என்ருன் குமார்.

இரண்டு மூன்று நாளில் குமார் தமிழில் ஒரு பாட்டு எழுதினன். மத்தியான நேரத்தில் மரத்து நிழலில் படுத்துக்கொண்டு கிராமப் பையன்கள் பாடும் பாட்டுகளையெல்லாம் கேட்டுக்கொண்டே வந்தான். அப்பாட்டுகளின் சந்தங்களில்தான் குமார் யாப்பிலக்கணத்தையும் கற்றுக் கொண்டான். அவற்றிலுள்ள இனிமையும், தனிமையான சோக உணர்ச்சியும் குமாரின் மனதைக் கவர்ந்தன. அப்பையன்களுடன் பேசியதில் ஆடுமாடுகள் காணமல்போனல் அப்பாட்டுப் பாடித்தான் கூப்பிடுவது என்று தெரிந்து கொண்டான். காணமற்போன சுதந்திரத்தை எப்படித் திருப்பி கொண்டுவருவது என்று குமார் யோசனை செய்தான். அப்போரை நடத்த எந்த ஆயுதத்தை உபயோகிப்பது? ஆம், காந்தி சொல்லவில்லையா? ‘அன்பே நம் ஆயுதம்.’ அதுவே சுதந்திரத்தை திருப்பிக் கொண்டு வரும்.

"அன்பே நம் ஆயுதம்" என்ற பாட்டுத்தான் குமார் எழுதியது. அதைப் படித்துப் பார்த்த பானுவும் திருமலை யும் மிகுந்த சந்தோஷத்தை அடைந்தனர். "நமது சக்தி, பலவீனம், உதவியின்மை, நம்பிக்கை இரண்டையும் இப் பாட்டு வெளிப்படுத்துகிறது. நம்மையறியாமலே நம் இரு தயத்தைக் கவ்விப் பிடித்துக் கொள்ளுகிறது. நம்மை யறியாமலே 'சீட்டி' அடிக்கச் சொல்லுகிறது. எந்த சர்க்காரும் இப்பாட்டைத் தடுக்க முடியாது. சில நாளில் எல்லோரும் இப்பாட்டைப் பாடுவார்கள்" என்று பிரமாத மாகப் பேசினார்கள்.

தான் எப்படி ஆட்டுப் பையன்களின் சந்தத்தில் அதை எழுதினன் என்று குமார் அவர்களிடம் சொன்னன். ஆனல் அவர்கள் குமார்தான் அதை சாதாரண நாட்டுப் பாட்டிலிருந்து ஒரு தேசிய கீதமாக மாற்றியதாகச் சொன் னர்கள்.

கஷ்டப்பட்டு வேலை செய்து, 'டியுப்ளிகேடரில்' நூற்றுக்கணக்கான பிரதிகள் எடுத்து அன்று இரவே அவற்றை பல இடங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய் தார்கள். அச்சுக்கூடம் வைத்திருந்த ராமுவுக்கும் ஒரு பிரதி அனுப்பி அச்சடிக்க முடியுமா? என்று கேட்டார்கள். குமார் மிகவும் பெருமை கொண்டான்.

அத்தியாயம் முப்பத்தொன்று

பாலு கிராம முன்னேற்றத்தில் சிரத்தையெடுத்துக் கொண்டான். ஒரு நாள் பேசிக்கொண்டிருக்கும்போது கிராமத்தார் சிலரிடம் அதைப்பற்றி பிரஸ்தாபித்தான்.

"நீயும் கிராமப் புனருத்தாரணம் செய்ய வந்திருக்கிருயாக்கும்" என்ருர் ஒரு கிழவர்.

"ஆம்" என்ருன் பாலு உற்சாகத்துடன்.

"எல்லோரும் அப்படித்தான் சொல்லிக்கொண்டு வருகிருர்கள். ஆனல் சில நாளில் வந்த வழியே திரும்பி விடுகிருர்கள். நகரத்தில் இருப்பவர்களுக்கு கிராமத்தின் மேல் ஏன் இவ்வளவு ஆசையோ தெரியவில்லை" என்ருர் கிழவர். மற்றவர்கள் சிரித்தார்கள். ஆனல் பாலுவை அவ்வளவு சுலபமாக தமாஷ் செய்து அனுப்பிவிட முடியவில்லை.

"உங்கள் கிராமம் மிகவும் அழகானது. சுற்றிலும் மலைகள், ஆறு, வனங்கள் இருக்கின்றன. ஆனல் குடியிருக்கும் இடத்தை நீங்கள் ஏன் சுத்தமாக வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. சாக்கடைத் தண்ணீரை நடு வீதியில் விட்டு விடுகிறீர்கள். அதற்கு ஒரு வாய்க்கால் வெட்டி ஊருக்கு வெளியே கொண்டுபோய் விடக்கூடாதா? குழந்தைகள் வீதியில் மலஜலம் கழிப்பதைத் தடுத்து அவர்களுக்கு சுகாதார முறைகளை போதிக்கக் கூடாதா?

அவர்கள் நாள் பூராவும் மணலில் புரண்டு விளையாடுவதற்கு பதிலாக பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக்கூடாதா?" இம் மாதிரி பேசியதும் பாலுவுக்கு 'ஏன் இப்படி அவசரமாகப் பேசி விட்டோம்' என்று தோன்றியது. ஒருவேளை கிராம வாசிகள் அவன் மேல் கோபம் கொண்டு ஒத்துழைக்க முன்வராவிட்டால்?"

சிறிது நேரம் யாரும் ஒன்றும் பேசவில்லை. மௌனமாய் இருந்தார்கள். பிறகு ஒருவர் "சாக்கடைத் தண்ணீருக்கு நீ குழி வெட்டுகிறாயா? என்றார்.

"கடப்பாரை மம்மட்டி வேண்டுமானால் நான் கொடுக்கிறேன்" என்றார் இன்னொருவர். மற்றவர்களுக்கு சிரிப்பு வந்தது.

"சரி கொடுங்கள்" என்றான் பாலு. "ஆனால் எனக்கு உதவி செய்ய யார் வருகிறீர்கள்? அதையும் சொல்லவேண்டும்."

ஆனால் உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. பாலு இதைப்பற்றி திருமலையிடம் சொன்னான். திருமலை "பின் அவர்களிடம் நீ என்ன எதிர்பார்த்தாய்?" என்றான்.

"கொஞ்சமாவது ஆதரவு கொடுப்பார்கள் என்று நினைத்தேன்" என்றான் பாலு.

"உற்சாகம் கொண்ட உன்போன்ற சிலர் இந்தியாவின் ஆறு லட்சம் கிராமங்களிலும் உள்ள அழுக்கையும் துர்நாற்றத்தையும் சுத்தம் செய்ய முடியுமா? சமுதாயமே அடிட்

படையாக மாறினால்தான் அது சாத்தியமாகும். அந்தக் கிழவர்களுக்கு சுகாதாரத்தைப்பற்றி என்ன அக்கறை?" என்றான் திருமலை.

"நாம் இவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டாமா? இம்மாதிரி வேலைகளை நாமாக ஆரம்பிக்கா விட்டால், இவர்கள் வெறும் வாய்ப் பேச்சுதான், காரியத்தில் ஒன்றும் இல்லை என்பார்கள்."

"இம்மாதிரியான வேலை சிலருடைய மனச்சாட்சியைத் திருப்தி செய்கிறது. அவர்களைப் பரிகாசம் செய்ய மற்றவர்களுக்கு இடம் கொடுக்கிறது. அவ்வளவுதான்" என்றான் திருமலை.

"மற்றவர்களைப்பற்றி நாம் ஏன் நினைக்கவேண்டும். நல்ல காரியம் என்று தோன்றினால் நாம் அதைச் செய்ய வேண்டியதுதானே?" என்றான் பானு.

ஏதாவது செய்யவேண்டும் என்று முடிவு செய்ததும், திருமலை உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொண்டான். இரண்டு நாளில் சில கிராம இளைஞர்களைச், சேர்த்துக் கொண்டு வீதிகளைச் சுத்தம் செய்தார்கள். இரவில் அவர்களுக்கு படிப்புச் சொல்லிக் கொடுத்தார்கள். பிறகு திருமலை குமார், பானு, இவர்கள் அரசியல் விஷயங்களைப்பற்றி தர்க்கம் செய்தால் அவற்றையும் அவர்கள் கேட்டுக்கொண்டிருப்பது வழக்கம்.

பானு நினைந்திருந்த முன்னேற்றங்களெல்லாம் ஒரு வாரத்தில் செய்து முடித்து விட்டார்கள். வீதிகளும்

முன்பிருந்ததைவிடக் கொஞ்சம் சுத்தமாகக் காணப் பட்டது. குப்பைகள் கண்ட இடங்களிலெல்லாம் கிடப் பதற்கு பதிலாக ஒரு மூலையில் கொட்டப்பட்டிருந்தது. பள்ளிக்கூடத்துக்குப் போகும் குழந்தைகள் அதிகரித்தன. இவர்களுடன் குமாரும் சேர்ந்து வேலை செய்தான். பாலுவின் உற்சாகமும் திருப்தி அடைந்தது.

இந்த சுருசுருப்பும் உற்சாகமும் கிராமப் பெரியோர் களுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. வழக்கம் போல் அரசமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு இதைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

" நாமும் எத்தனையோ வருஷமாக இந்த ஊரில் காலங் கடத்திவிட்டோம். அசுத்தமாயிருக்கிறதாகத் தெரிய வில்லை. நேற்றுப் பிறந்த பையன்கள் நமக்கு புத்திசொல்ல வந்துவிட்டார்கள் " என்றார் ஒருவர்.

" போன வாரந்தான் மதுரைக்குப் போயிருந்தேன். அசுத்தமென்றால் அங்கேதான் பார்க்கவேணும். அதைச் சுத்தம் செய்வதை விட்டு விட்டு இவர்கள் இங்கே ஏன் வருகிறார்கள் ?" என்றார் இன்னொருவர்.

" ராத்திரி பள்ளிக்கூடம் பலமாய் நடக்கிற மாதிரி இருக்குது ? நாமெல்லாம் படிச்சிட்டுத்தான் விவசாயம் பண்ணி சம்பாதிச்சமோ ? ஆனால் இந்த காலம் பையன் களுக்கு படிப்பில்லாவிட்டால் திருப்தியில்லை. நம்மைப் பார்த்தால் கூட கொஞ்சமாவது மரியாதை கிடையாது. "

"இந்த மதுரைப் பையன்கள்தான் இவர்களையும் கெடுக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ்காரராய் இருந்தாலும் இருக்கலாம். யார் கண்டார்கள்?

"கிராமமே இப்போ தலைகீழா நிற்கிறது. எத்தனை நாளைக்கு இந்தமாதிரியெல்லாம் நடக்குமோ கடவுளுக்குத்தான் தெரியும்."

இந்த மாதிரி தினமும் அவர்கள் பேசிக்கொண்டார்கள். கிராமமும் கிராம இளைஞர்களும் அவர்களுக்கு பிடிக்காத முறையில் மாறிக்கொண்டே வந்தார்கள். ஆனால் வயது முதிர்ந்தவர்களோ, மாலை வெய்யிலில் மரத்துக் கடியில் உட்கார்ந்துகொண்டு வெற்றிலை மென்று எச்சில் துப்பிக்கொண்டே விலைவாசிகளைப்பற்றியும், விவசாயத்தைப்பற்றியும் ஊர் விவகாரங்களைப்பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். இந்தியாவுக்கு சுயராஜ்யம் வருவதை விட பக்கத்து வீட்டுக்காரர் நெல் விற்ற விஷயம் அவர்களுக்கு முக்கியமாய் இருந்தது.

அத்தியாயம் முப்பத்திரெண்டு

பாளையத்தில் இருக்கும்போது குமார் அனேக புஸ்தகங்களைப் படித்தான். புஸ்தகங்கள் திருமலையின் வீட்டில் நிறைய இருந்தன. பல இந்தியாவில் அனுமதிக்கப் படாத ஆங்கில புஸ்தகங்கள். அவைகள் ஆங்கில ஆட்சியைப் பற்றியும், சோஷலீசம், கம்யூனிசம் முதலிய புரட்சிகரமான தத்துவங்களைப் பற்றியும் எடுத்துச்சொல்லின. திருமலை அவற்றை வெகு பத்திரமாக சேர்த்து வைத்திருந்தான். குமார் முதல் நாளிலிருந்து உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் படிக்கத் தொடங்கினான். இரவு நேரங்களில் பள்ளிக்கூடம் முடிந்ததும் அரசியல் தத்துவங்களைப் பற்றி பாலுவுக்கும் திருமலைக்கும் அடிக்கடி ஏதாவது தர்க்கம் ஆரம்பமாகும். எவ்வளவு விவாதித்தாலும் அவ்விருவருக்கும் கட்க்க முடியாத அபிப்பிராய பேதம் இருந்தது. அவர்களுடைய அடிப்படையான மனப்பான்மையே ஒன்றுபட்டதாய் இல்லை. குமார் இந்த விவாதங்களை ஆரம்பித்து விடுவான். அப்புறம் அதிக பங்கெடுத்துக் கொள்வதில்லை. ஆனால் மற்ற இருவரும் நடுநிசி வரையிலும் தர்க்கம் செய்து கொண்டே போவார்கள். அவர்களுக்குத் தெரிந்த அளவு குமாருக்குத் தெரியாமல் இல்லை. ஆனால் அவன் மனதில் குழப்பம் ஏற்பட்டு இருந்தது. சிந்தனைகளும், கொள்கைகளும் தெளிவாக இல்லை. மலைகளின் சாரலின் படிந்திருக்கும் மூடுபனி மாதிரி உணர்ச்சி மனதை மறைத்திருந்தது.

“எல்லா மனித உறவுகளும் தொடர்புகளும் பொருளாதாரத்தை அடிப்படையாய் கொண்டவை.

அவைகளை உற்பத்தி செய்யும் முறைகள் மாறும்போதுதான் அந்த உறவுகளும் மாறும். அப்படி மாறிக்கொண்டே வந்து கடைசியில் உற்பத்தி செய்யும் எல்லா யந்திரங்களும் பொது உடைமையாகும்போதுதான், முதலாளி தொழிலாளி என்ற வேறுபாடற்று எல்லோரும் ஒரே தொழிலாளி வகுப்பினராகி பொருளாதார நிம்மதி நிலவும். அப்போது தான் எல்லோரும் சமம் என்பது உண்மையாகும்" என்பான் திருமலை.

ஆனால் பாலுவோ, "அந்தக் கொள்கைகளெல்லாம் ஐரோப்பிய நாகரீகத்துக்கும் வாழ்க்கைக்கும் ஏற்றதாய் இருக்கலாம். ஆனால் நமது சரித்திரத்துக்கும், பண்புக்கும், மனோ பாவத்துக்கும் அவை ஏற்றதல்ல. அடிப் படையான மனிதத் தொடர்பு அன்பால் ஏற்பட்டதே தவிர பொருளாதாரத்தல் ஏற்பட்டதல்ல. அன்பு, உண்மை நீதிமார்க்கம் இவற்றை அடிப்படையாகக் கொண்ட உறவு தான் நிலைக்கும். மற்ற உறவுகளெல்லாம் நிரந்தரமற்றவை. மேல்நாடுகள் மாதிரி புரட்சி இங்கு நிலைக்கக் கூட முடியாது" என்று சொல்வான்.

"புரட்சி முடியாதா? இந்த நூறு வருஷங்களாக நம் நாட்டில் ஒரு புரட்சி ஏற்பட்டு வரவில்லையா? அதுதான் யந்திரப் புரட்சி. அதனால் எத்தனை குடிசைத் தொழில்கள் நாச மடைந்திருக்கின்றன? எத்தனைபேர் கிராமங்களை விட்டு நகரங்களுக்குச் சென்று தொழிற்சாலைகளில் வேலை செய்கிறார்கள்? நாம் என்ன செய்யவேண்டுமென்றால் யந்திரத்தை ஐரோப்பா செய்த தப்புகளிலிருந்தும் விடு வித்து பொதுஉடைமையாக்கவேண்டும். அதுதான் சுய

ராஜ்ய சர்க்காரின் முதல் வேலை. அப்போது நான் மனிதர்களுக்குள் எஜமான், அடிமை, பணக்காரன், ஏழை என்ற வித்தியாசங்கள் ஒழியும். எல்லாப் பொருள்களும் லாபத்தையே கருதி உற்பத்தி செய்யப்படாமல் உபயோகத்துக்காகவே உற்பத்தி செய்யப்படும். வேலையில்லாமை நீங்கி எல்லோருக்கும் வேலை ஏற்படும்" என்று திருமலை தன் கொள்கைகளை விளக்குவான்.

பிறகு சில சமயங்களில் கடவுளைப்பற்றி விவாதிப்பார்கள். பாலு சொல்வான், "உனக்கு கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையில்லை. எனக்கு இருக்கிறது. வைதீகர்களின் மூட நம்பிக்கைகளைப்பற்றியும் அவர்களுடைய மனிதர்களுக்குள் பாகுபாடு செய்யும் சட்டங்களைப்பற்றியும் நம் இருவருக்கும் ஒரே அபிப்பிராயம்தான். ஆனால் இந்த உலகில் சில அசைக்க முடியாத நிரந்தர ஆத்ம விதிகள் இருக்கின்றன என்று நான் நம்புகிறேன். கடவுளிடம் நம்பிக்கை இல்லையென்றால் இந்த ஆத்மவிதிகளிலும் நம்பிக்கையிருக்காது. வாழ்க்கை ஒரு தத்துவத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் சந்தர்ப்பத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கும். நீ சொல்லுவதெல்லாம் உண்மையாகி மனிதர்கள் சந்தோஷமாக இருப்பார்கள் என்று வைத்துக்கொண்டாலும், அப்புறம் என்ன ? வாழ்க்கையின் அர்த்தம் என்ன ? நாம் ஏன் இவ்வுலகில் இருக்கிறோம்? ஏன் பிறப்பும் இறப்பும் நம்மைத் தொடர்ந்துவருகின்றன? இக்கேள்விகளுக்கு பதில் தெரியாவிட்டால் உலகில்வாழ்ந்து என்ன பிரயோஜனம் ?"

"இக்கேள்விகளுக்கெல்லாம் உன் பதில்கள் தான் சரியானவை என்று எப்படித் தெரியும்?" என்று பதில் கேள்வி

கேட்டான் திருமலை. "அன்றியும் ஒருவனின் குழந்தைகள் பசியால் வாடும்போது வாழ்க்கையின் மர்மத்தை அறிய அவனுக்கு ஆவல் இருக்குமா? வாழ்வில் சரித்திரமும் சந்தர்ப்பமும், சூழ் நிலையுமே நம் நடத்தையை முடிவு செய்கின்றன. அப்புறம் அதுதான் சரி என்று நிரூபிப்பதற்காக நாம் தத்துவங்களை தேடுகிறோம்."

"உனது கொள்கைகளை நிலைநாட்ட நீ பலாத்காரப் புரட்சி செய்யவும் தயாராய் இருக்கிறாயா?" என்றான் பானு.

"முடிந்தால் பலாத்காரம் இல்லாமல்; முடியாவிட்டால் பலாத்காரத்துக்காக நான் பின்வாங்கமாட்டேன். மனிதவர்க்கத்தைப் பற்றியும் ஆத்ம விதிகளைப் பற்றியும் பணக்காரரும் ஏழைகளும் நினைத்துப் பார்ப்பதே கிடையாது. படித்த உன்போல் சிலர் தான் அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அப்படியிருக்க அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டால் அது எப்படி பலாத்காரம் இல்லாமல் இருக்கும்?"

"பணக்காரரையும் ஏழைகளையும் நம்போல் படித்தவர்களாக்கி, அவர்களுக்கும் ஆத்மவிதிகளை போதித்தாலோ?" என்பான் பானு.

"விஞ்ஞானத்தால் தான் இனிமேல் உலகம் நடக்கப் போகிறது. விஞ்ஞான மனப்பான்மைதான் எல்லோர் மனத்திலும் ஏற்படுத்தவேண்டும்" என்பான் திருமலை.

"விஞ்ஞான மனப்பான்மைக்கும் ஆத்மீகக்கொள்கைகளுக்கும் ஏன் முரண்பாடு இருக்கவேண்டும்" என்று கேட்பான் பாலு.

இப்படியே முடிவின்றி சோர்வடைந்து படுத்துக் கொள்ளும்வரை விவாதிப்பார்கள். கொள்கைகளில் எவ்வளவு வித்தியாசமிருந்தாலும் மனத்தாங்கலின்றியும் சிநேக பாவத்துடனுமே பேசினார்கள். ஆனால் பேசப்பேச இருவருக்குமிடையே வித்தியாசங்கள் அதிகமாயினவே தவிர குறுகவில்லை. "இவ்விருவரும் — இரு கொள்கைகளும் — எத்தனை நாளைக்கு ஒன்றாக வேலைசெய்வார்கள்?" என்று குமார் யோசனை செய்தான். "நீங்கள் ஒருவருக்கொருவர் பதில் கேள்வி கேட்கிறீர்களே தவிர ஒருவருடைய கேள்விகளுக்கு இன்னொருவர் பதில் சொல்லுவதில்லை" என்றான் சத்தமாக.

"சுயராஜ்யம் கிடைக்கும் வரையில் இந்த வித்தியாசங்களுக்கு இடமில்லை. அப்புறம் பாலுவும் நானும் வெவ்வேறு வழிகளில் போவோம்" என்றான் திருமலை.

அத்தியாயம் முப்பத்திமூன்று

உடையாரும் ராஜலட்சுமி அம்மாளும் ஒருவருடன் ஒருவர் அதிகமாகப் பேசுவதோ அல்லது தம் அன்பை வெளிக்குக் காட்டிக்கொள்வதோ இல்லை. இருந்தாலும், பல வருஷங்களாக கணவனுக்கும் மனைவிக்கும் இருந்த பார்ந்தத்தினாலும் தொடர்பினாலும் ஒருவர் மனதில் இருந்ததை இன்னொருவர் சுலபமாக அறிந்துகொள்ள முடிந்தது.

இப்போது உடையாருக்கு மிகுந்த கவலையுள்ள காலமாய் இருந்தது. தன் மகன் தன்னுடைய வார்த்தையை மீறி வீட்டை விட்டு வெளியேறிவிட்டான். அப்படிப் போனதன்றி தனது மில்லில் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியவர்களுடன் சேர்ந்துகொண்டிருந்தான். அங்கு அவனைப் பார்த்ததை எப்படி மறக்கமுடியும்? பிறகு அவன் அடியோடு மறைந்தே போய்விட்டான்.. எங்கிருக்கிறான் என்று போலீசுக்குக்கூட தெரியவில்லை. அவனைப் பற்றி எத்தனை மனக் கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்தார்! எல்லாம் பாழானதன்றி மகனே தனக்கு இல்லை என்றாகி விட்டது. அப்படி ஒருவேளை எங்கிருக்கிறான் என்று வெளியே தெரிந்தாலும் உடனே ஜெயிலுக்கனுப்பப் படுவான்.

தான் அவ்வளவு கஷ்டப்பட்டு வேலைசெய்து உண்டாக்கிய மில்லும் திருப்தியளிக்கவில்லை. இரண்டு நாளில் வேலைநிறுத்தம் பூர்ணமாக நின்றுவிட்டாலும் அவர் மனதில்

கசப்பை உண்டாக்கிவிட்டது. தம்மைக் கெஞ்சி கேட்டுக் கொண்டு உள்ளே வேலேசெய்ய வந்த பல தொழிலாளிகள் வேலேநிறுத்தத்துக்கு காரணமாக இருந்ததாக அறிந்தார். இதுவரையிலும் மில் தொழிலாளிகளே தம் கிராமத்து விவசாயிகளேப்போலப் பாவித்து அவர்களுடைய சுகதுக் கங்களேயும் வீட்டு சண்டைசச்சரவுகளேயும் விசாரித்து அவர்கள் எல்லோரையும் தமக்கு வேண்டியவர்கள்போல் பாவித்து வந்தார். ஆனல் இப்போது ஒருநாள் சம்பவத் தால் எல்லோரும் விரோதிகள்—தம் மதிப்பையும் அந்தஸ் தையும் குலேக்க வந்தவர்கள் – மாதிரி ஆகிவிட்டார்கள்.

அன்றியும் நூலுக்கும் துணிக்கும் விலே குறைந்து கொண்டே வந்தது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் சீக்கிரம் மில்லுக்கு லாபம் வாராததன்றி நஷ்டம் தான் ஏற்படும் என்று அவருக்குத் தெரியும். இதற்குக் காரணம் என்ன? உலகத்தில் பலர் துணியில்லே என்று கதறும் போது ஏன் துணிவிலே குறையவேண்டும்? பல நாடுகள் பொருளாதார மந்தத்தால் பாதிக்கப்படுவதாயும், பம்பாயில் கூட சில மில்கள் மூடப்பட்டிருப்பதாகவும் பத்திரிகைகளில் படித்தார். இதைப்பற்றியெல்லாம் தமக்கு அர்த்தமாகு மாறு விவரமாக எடுத்துச் சொல்ல குமார் இருந்தால்...... ஆனல் அதைப்பற்றி நினேத்து என்ன பிரயோஜனம்?

பொருளாதார நிலே, அரசியல் போக்கு, மாறும்காலம், சந்தர்ப்பங்களின் சோதனே, இப்படிப்பட்ட பல சக்திகளுக் குள் தாம் தமது குடும்பம் மட்டுமின்றி, மனிதவர்க்கமே அகப்பட்டுக் கொண்டிருப்பது, பாவம், உடையாருக்கு என்ன தெரியும்?

அவருக்குத் தம் கவலைகளை வெளியில் சொல்லவோ காட்டிக்கொள்ளவோ, கொஞ்சமும் இஷ்டமில்லை. ஆனால் அவர் மனைவிக்கு குமாரைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் தான் நிம்மதி. யார் கொஞ்சம் கருணை காட்டினாலும், அனுதாபத்துடன் பேசினாலும், அவர்களுடன் கண்ணீர் விட்டுப் பேசுவதே ஆறுதலாய் இருந்தது. ஆனால் தன்னுடைய வீட்டில் தன் துரதிருஷ்டத்தைப்பற்றிப் பேசுவாரில்லை; தான் பேசுவதை கேட்பாருமில்லை. குமார் பெரிய குற்றம் செய்துவிட்டதாக இந்திரா நினைத்தாள். ரங்கசாமியுடன் தான் பேசலாம். இந்தப் பெரிய துக்கத்தின் முன்னிலையில் மருமகனிடம் வழக்கமாகக் காட்டும் வெட்கத்தையும் விட்டுவிட்டு ராஜலட்சுமி அம்மாள், அவனைத் தன் மகன்போலப் பாவித்து அவனுடன் பேசினாள். ரங்கசாமியும் அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டுருந்தான்.

•

பாவம், ரங்கசாமிக்கும் ஒரு கஷ்டம் இருந்தது. தான்தானே பெண்வீட்டாரிடம் சென்று ஜாதகம் வாங்கிக் கொண்டு வந்தான். இப்போது அவர்களுக்கு சமாதானம் சொல்லவேண்டியிருந்தது. முதலில் அவர்களுக்கு ஏதோ பெரிய அவமானம் ஏற்பட்டுவிட்டதுபோல் தோன்றியது. பிறகு குமார் காணமற்போனதைப்பற்றி கேள்விப்பட்டதும் "நம்ம பெண்ணின் நல்லதிருஷ்டம் தான் இந்தக் கலியாணம் தடைபட்டு விட்டது" என்று திருப்தி அடைந்தார்கள். குமார் காணமற் போனதைப்பற்றி பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். இந்த வதந்திகளுக்கு பதில் சொல்வதும் ராங்கசாமியின் பொறுப்பாய் இருந்தது.

இந்த வதந்திகளெல்லாம் உடையார் காதுக்கு எட்டாமல் இருக்கவும் ஏற்பாடு செய்தான். இவ்வளவுக்கும் மேலாக இந்திராவின் காரசாரமான பேச்சுகளையும் ராஜலட்சுமி அம்மாளின் புலம்பலையும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியிருந்தது.

குமார் காணமற்போன இருபது நாட்களுக்கப்புறம் ஒரு நாள் ரங்கசாமி தன் ஊருக்குப் போய்விட்டு திரும்பி வந்தான். வந்ததும் ராஜலட்சுமி அம்மாள் குமாரைப் பற்றி ஏதாவது சமாசாரம் உண்டா என்று விசாரித்தாள்.

"இல்லை, ஒன்றும் தெரியவில்லை" என்றான் ரங்கசாமி.

"நானும் யோசனை செய்துகொண்டே இருக்கிறேன். அவன் எங்கே போயிருப்பான்?" இப்போது ராஜலட்சுமி அம்மாள் கூட குமாரைப் பெயர் வைத்துக் கூப்பிடுவதில்லை. 'அவன்' என்றுதான் குறிப்பிடுவது வழக்கம். "நாம் மட்டுமா அவனைத் தேடிக்கொண்டிருக்கிறோம்? போலீசாரே தேடுகிறார்களே. மாயத்தில் மறைந்த மாதிரி மறைந்து விட்டானே. 'நான் நன்றாய் இருக்கிறேன்' என்று ஒரு காகிதம் கூட இல்லை. எங்கிருக்கிறானென்று நமக்காவது தெரிவிக்கக் கூடாதா?"

"தெரிவித்தால் ஒருவேளை போலீசுக்கும் தெரிந்து விடும் என்றுதான் நமக்குத் தெரிவிக்காமல் இருக்கிறான்" என்றான் ரங்கசாமி.

"போலீசார் என்னதான் சொல்லுகிறார்கள்?"

"குமாரும், திருமலை என்று ஒருவனும் எங்கேயோ ஒளிந்துகொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். திருமலையின் சொந்த ஊர், பூர்விகம், ஒன்றும் கிடைக்கவில்லை. அதைக் கண்டுபிடித்தால் குமாரும் கிடைத்துவிடுவான். அவர்கள்தான் துண்டு நோட்டீஸ்களைப் போட்டு அனுப்புவதாக வதந்தி."

"அப்போது குமார் கிடைத்தாலும் ஜெயிலுக்கனுப்பி விடுவார்கள். ஏன், அப்படித்தானே? எத்தனை நாளைக்கு இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டுமோ? விசனப் பட்டு பட்டு என் மனதே கல்லாகி விடுமோ என்று தோன்றுகிறது. அழுவதற்குக் கூட தைரியமில்லை. அதுவும் வெளியில் பேசக்கூடாதென்றால் மனசுக்கு எப்படியிருக்கும்? அவன் அப்பா ஏதாவது சொன்னாரா?"

"இல்லை" என்றான் ரங்கசாமி.

"அதுதான் அவரிடம் உள்ள கஷ்டம். அவனைப் பற்றி வீட்டில் யாரும் பேசக்கூடாது என்கிறார். எனக்கு மகனே இல்லை என்று நான் அவர் எதிரில் பாவனைசெய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் மனத்தில் நினைக்காமல் இருக்க முடியுமா? அவர்தான் நினைக்காமல் இருக்கிறாரா? அவர் முகத்தில் தெரிகிறதே? யாருடனும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மணிக்கணக்கில் மெய்மறந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாரே, அப்போது என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறார் என்பது எனக்குத் தெரியாததா? அவர் எத்தனை வேதனைப்படுகிறார். தன் மகனைப்பற்றி எவ்வளவு நினைக்கிறார் என்று எனக்குத் தெரியும்.

அவருடைய உள் மனசில் அவருக்கு அவன்மேல் ஆசை தான். ஆனால் அதை எனக்குக்கூட காட்டக்கூடாது என்று வைராக்கியம் கொண்டிருக்கிறார். அவ்வளவு கர்வம், பிடிவாதம். என்னிடத்தில் கூட இதை ஏன் மறைக்க வேண்டும்? அதனால் நானும் அவரும் ஒரே துக்கத்தை தனித்தனியாக அனுபவிக்கிறோம். நான் எவ்வளவு கஷ்டப் படுகிறேன் என்று அவருக்குத் தெரியாதா? அதுவும் தெரி யும். என்னிடமும் ரொம்ப கருணையுடன் தான் நடந்து கொள்ளுகிறார். ஆனால் மனதிலுள்ளதைப் பேசாவிட்டால் என்ன பிரயோஜனம்?" இப்படி ராஜலட்சுமி அம்மாள் மனக்கண்க்கில் பேசிக்கொண்டே போனாள். அது அவளுக்கு ஆறுதலளித்தது.

"கர்வம். அவ்வளவுதான். பெரும் கர்வம். மகன் கீழ்படிந்து நடக்கவில்லையே என்று கோபம். அவருக்கு தன் வார்த்தையை யாரும் தட்டிச் சொல்லக்கூடாது" என்றாள்.

"நீங்களாவது, அவருடன் இதைப்பற்றிப் பேசக் கூடாதா?" என்று கேட்டான் ரங்கசாமி.

"அவன் வந்து காலில் விழுந்து கெஞ்சினால்கூட அவனை மன்னிப்பாரா என்பது சந்தேகமாய் இருக்கிறது. அவரே அப்படித்தான். அவனும் அப்படியே பிடித்த பிடிதான். நானும் அவன் திரும்பி வருவதைப்பற்றி ஜாடைமாடையாகப் பேசிப்பார்த்தேன். ஆனால் அவர் என்னைப் பார்த்ததிலேயே பயந்துவிட்டேன். அப்புறம் அதைப்பற்றி பேசவே இல்லை. இரண்டு நாளைக்குமுன் அவன் போட்டோ ஒன்றை சுவரில் மாட்டியிருந்தேன்.

அதையும் இன்றைக்கு காணோம். அவர்தான் அதை அப்புரப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் என்ன இருந்தாலும் அவர் அவன்மேல் அன்பாய் இருக்கிறார் என்று எனக்குத் தெரியும். ராத்திரியில் கூட அவர் சரியாகத் தூங்குவதில்லை. நீங்கள் அவருடன் பேசக்கூடாதா?" என்று கேட்டாள் ராஜலட்சுமி அம்மாள்.

"நான் சொன்னால் அவர் கேட்பாரா?" என்றான் ரங்கசாமி.

"நீங்கள் சொன்னால் மரியாதைக்காவது கேட்பார். என் மாதிரி உங்களுக்கு பயம் இருக்கவேண்டியதில்லை. எப்படியாவது போலீசுக்கு முன் நாம் குமாரைக் கண்டுபிடித்து வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டால் பிறகு அவன் ஜெயிலுக்குப் போகவேண்டியிருக்காது." இப்படி ராஜலட்சுமி அம்மாள் சொல்லிக்கொண்டிருக்கும் போதே உடையாரும் வந்துசேர்ந்தார். நேராக இவர்கள் பேசிக்கொண்டிருந்த இடத்துக்கே வந்தார். ரங்கசாமியைப் பார்த்ததும் "இப்போதுதான் ஊரிலிருந்து வந்தீர்களா?" என்று விசாரித்தார்.

உடையார் வந்ததைக் கேட்டதும் இந்திராவின் குழந்தை ராஜு ஓடிவந்து அவர் கால்களைக் கட்டிக்கொண்டான். பெரியோருடைய இன்னல்கள் துன்பங்களைப்பற்றி அவனுக்கு என்ன தெரியும்? உடையாரும் அவனை வாரியெடுத்துக்கொண்டு "அடே ராஜா நீதானடா நல்ல பையன். பெரியவன் ஆனால் நீயும் குறும்பு செய்கிறவனாக மாட்டாயே? எனக்கு மகனே இல்லை. இனிமேல் நீதானடா எனக்கு மகன்" என்றார்.

இந்த வார்த்தைகள், கொடுமை நிறைந்து வேண்டுமென்றே பேசப்பட்ட வார்த்தைகள். அவருடைய மனைவியின் இருதயத்தைத் தாக்கின. தன் புருஷன் தன்னைத் துன்புறுத்துவதற்காகவே இப்படிப் பேசியிருக்கிறார். அவருடைய துயரத்தை மறைத்தமாதிரியே தன்னையும் செய்யச்சொல்கிறார் என்று ராஜலட்சுமி அம்மாள் தெரிந்துகொண்டாள். இந்த வார்த்தைகளால் அவர் தன்னைத் தானே எவ்வளவு துன்புறுத்திக் கொள்கிறார் என்பதும் ராஜலட்சுமி அம்மாளுக்குத் தெரியும்.

"சிலர் மாதிரியே எல்லோரும் பிடிவாதமாய் இருந்தால் உலகம் எப்படி நடக்கும்" என்றாள்.

"இன்றையிலிருந்து ஒன்றுமட்டும் எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டியது" என்றார் உடையார். அவர் பொதுவாகப் பேசினாலும் தம் மனைவிக்காகத்தான் அவ்வார்த்தைகள் பேசப்பட்டன. "இனிமேல், இந்த மாதிரி ஜாடைமாடையாகப் பேசுவது ஒன்றும் கூடாது. என் மனசில் துக்கம் கொஞ்சம்கூட இல்லை. பெருமை, கர்வம் ஒன்றும் கிடையாது. அவனுடைய ஞாபகத்தைக் கூட மறந்துவிட்டேன். அவனைப்பற்றிய பேச்சு இனிமேல் யாரும் எடுக்கக்கூடாது. அதுதான் முடிவு."

"நம் மகனை நாமே இப்படிப் புறக்கணித்துவிட்டால் நமக்குத்தான் அப்புறம் இந்த உலகில் என்ன இருக்கிறது?"

"என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?" உடையார் இப்போது கோபத்துடன் பேசினார். ஒவ்வொரு வார்த்தையும் அவர் இருதயத்திலுள்ள ஆத்திரம், கோபம், இவைகளைக் காட்டின. "உன் அருமை மகனைத் தேடிக் கொண்டு ஊர் ஊராய்ப் போகச் சொல்லுகிறாயா?

அப்புறம் அவனைக் கண்டுபிடித்ததும், 'ஐயோ என் மகனே நான் சொன்னது, செய்தது எல்லாம் தவறு. நீ செய்தது தான் சரி. இருந்தாலும் என் குற்றத்தை மன்னித்து தயவு செய்து வீட்டுக்கு எழுந்தருளவேண்டும். இனிமேல் நீ என்ன செய்தாலும், எந்தமாதிரி குடும்பப் பெயரைக் கெடுத்தாலும் ஒன்றும் சொல்வதில்லை' என்று சொல்லிக் கெஞ்சி அழைக்கச் சொல்லுகிறாயோ? அது நடக்கப் போவதில்லை."

"என்ன கல் மனது" என்றாள் ராஜலட்சுமி அம்மாள். "எவ்வளவு கொடுமை! இருந்தாலும் உங்களுக்கு அவன்மேல் கொஞ்சமாவது அன்பு இல்லாமலா இருக்கும்? உலகம் என்ன சொல்லும் என்றுதான் உங்களுக்கு பயம்."

"சரி, சரி, போதும். நிறுத்து" என்று சத்தம் போட்டார் உடையார். "நான்தான் எனக்கு மகன் இல்லை என்று சொல்லிவிட்டேனே. அதற்காக நீ ஆயுசு பூராவும் அழுதுகொண்டு உட்கார்ந்திருக்கக் கூடாது. எனக்கு வேறு வேலை இருக்கிறது."

"நமது மகன் காணுமல்போய் இருபது நாள் ஆகிறது. உயிரோடிருக்கிறானா இல்லையா என்றுகூட நமக்குத் தெரியாது. நீங்கள் வேறு வேலையிருக்கிறது என்று எப்படிச் சொல்லலாம்? வீட்டில் எதை எடுத்துப் பார்த்தாலும் அவன் ஞாபகமே வருகிறது. அவனை எப்படி மறப்பது. அப்படி மறந்துவிட்டால் நீங்கள் ஏன் ராத்திரிபூராவும் தூங்காமல் நடந்துகொண்டேயிருக்கிறீர்கள். மறந்து விட்டீர்களா இல்லையா என்று உங்கள் முகத்தில் எழுதியிருக்கிறதே. முப்பது வருஷத்துக்குப் பிறகு இது கூடவா எனக்குத் தெரியாமல் போகும்?"

"நீ தான் அவனுடைய போட்டோவை எடுத்து மாட்டினயோ?" என்று கேட்டார் உடையார்.

"வேலைக்காரரும், வேறுயாராவது வந்தால் அவர்களும் என்ன நினைப்பார்களோ என்றுதான் நீங்கள் எடுத்து விட்டீர்களே" என்றாள் ராஜலட்சுமி அம்மாள்.

"உன் போட்டோவை நீயே வைத்துக்கொள்" என்று சொல்லிவிட்டு அவர் அந்த அறையை விட்டு வெளியே போனார். வேறுவழியின்றி ராஜலட்சுமி அம்மாள் கையைப் பிசைந்துகொண்டு நின்றாள். உடையார் திரும்பிவந்து "இந்தா உன் மகன் போட்டோ" என்று நீட்டினார்.

"எங்கே கிழித்து எறிந்துவிட்டீர்களோ என்று இருந்தேன். எவ்வளவு வெறுப்பாகப் பேசினாலும் அதைக் கிழிக்கவோ வெளியே எறியவோ உங்களுக்கு மனசு வர வில்லை. எனக்குத் தெரியும் அவன்மேல் இன்னும் உங்களுக்கு அன்பு இருக்கிறதென்று" ராஜலட்சுமி அம்மாள் போட்டோவை வாங்க கையை நீட்டினாள்.

"அவன்மேல் அன்பா?" இதைக் கேட்டதும் உடையாருக்கு திடீரென்று தம்மை மீறிக் கோபம் வந்தது. உடனே கையிலிருந்த போட்டோவை துண்டுதுண்டாகக் கிழித்து மனைவியிடம் எறிந்தார். "அன்பா? இப்போதாவது தெரிகிறதா?"

இதைக் கண்டதும் ரங்கசாமி பார்க்காதவன்போல் ஒரு மூலையில் போய் நின்றுகொண்டான். ராஜலட்சுமி அம்மாளுக்கு துக்கமும் ஆச்சரியமும் ஒன்றுசேர்ந்து குமுறியது. மெதுவாக கண்களில் நிறைந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு புருஷனைப் பார்த்துப் பேசலானாள்.

"ஆம். உங்களுக்கு அவன்மேல் ஆசையில்லை. சொந்த மகனை ஜென்ம விரோதியாகக் கருதுகிறீர்கள். நான் ஏதோ கர்வத்தினுல்தான் அன்பை வெளிக்கு காட்டாமல் இருக்கிறீர்கள் என்று நினைத்தேன். ஆனல் நான் அப்படி நினைத்தது தப்பு." கண்ணீரையும் உள்ளக் கிளர்ச்சியையும் அடக்கிவைத்துப் பேசக்கூட ராஜலட்சுமி அம்மாளால் முடியவில்லை. உடையார் பேசாமல் தலை குனிந்து நின்ருர். ஆனல் அவர் மனைவி மறுபடியும் பேசிக் கொண்டே போனுள். "எத்தனை வருஷமாய் உங்களுக்காக நான் கஷ்டப்பட்டு, துன்பப்பட்டு, அழுதுகொண்டு வந்தி ருக்கிறேன்? முப்பது வருஷமாய் அப்படியெல்லாம் இருந்ததற்கு இதுதான் பலன். இதுதான் முடிவு" என்று கிழிந்து கீழே கிடந்த போட்டோவின் துண்டுகளைக் காட்டினுள். "இத்தனை கொடுமையாகவும், குரூரமாகவும், பிடிவாதமாகவும் சொந்த மகனையே வெறுப்பீர்கள் என்று கண்டுபிடித்தேன். நீங்கள் சொன்னபடி நடக்காவிட்டால் யாரும் உங்களுக்கு வேண்டாம். நான் என் மகனைத் தேடிக்கொண்டு போய்விடுகிறேன். நீங்கள் உங்கள் இஷ்டம்போல் இருந்துகொள்ளலாம். நான் அவனைப் பார்த்துத்தான் ஆகவேண்டும்." அதற்குமேல் ராஜ லட்சுமி அம்மாளால் பேசமுடியவில்லை. முதலில் அழுது கொண்டு மெதுவாகப்பேசினுலும் பிறகு வார்த்தைகள் இருதயத்தை பிளந்துகொண்டு பிரவாகமாக வந்தன. தனக்கும் தன் கணவனுக்கும் இதுவரை இருந்த தொடர்பு அந்த ஒரு வினடியில் 'படார்' என்று உடைந்து விட்டது. ஆவேசம் வந்தவள் மாதிரி பேசினுள். பிறகு பொங்கிக் கொண்டு வந்த உணர்ச்சியாலும் பேசிய அதிர்ச்சியாலும் நிற்கவும் முடியாமல் கீழே சாய்ந்தாள்.

ராஜலட்சுமி அம்மாளை மெதுவாக ஒரு படுக்கையில் படுக்கவைத்தார்கள். கொஞ்சநேரத்தில் காய்ச்சல் பலமாக அடித்தது. ரங்கசாமி டாக்டரைக் கூட்டிக்கொண்டுவரப் போனான்.

வெராண்டாவில் மேலும் கீழும் நடந்துகொண்டே உடையார் தமது தனிமையையும் துர் அதிருஷ்டத்தையும் பற்றி யோசனை செய்யலானார். தன் மனைவியே தனக்கு எதிராகத் திரும்பிவிட்டாள். காலேஜில் ஹார்த்தால் நடந்த அன்று ராவ்பகதூர் கிருஷ்ணசாமி ரெட்டி இந்த சத்தியாக்கிரக இயக்கத்தைப்பற்றிச் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன. "இந்த இயக்கமானது நம் சமூகத்தின் வெகுகால சம்பிரதாயத்தையெல்லாம் சீர் குலைக்கிறது. ஜெயிலுக்குப் போவதற்காக பெண்கள் வீடுகளிலிருந்தும் பையன்கள் கலாசாலைகளிலிருந்தும் வெளியேறுகிறார்கள். இந்த இயக்கம்......................பாமர ஜனங்களின் மனத்தில் புதிய எண்ணங்களைப் புகுத்தி அவர்களையெல்லாம் சிந்திக்கச் செய்கிறது. மனைவிகளைப் புருஷருக்கு எதிராகவும் ஏழைகளை பணக்காரருக்கு எதிராகவும் எழச் செய்கிறது. உடையாருடைய குடும்பத்திற்கு இந்த வார்த்தைகள் இப்போது எவ்வளவு பொருத்தமாகத் தெரிந்தன!

"ரெட்டி மிகுந்த அறிவாளி" என்ற முடிவுக்கு வந்தார் உடையார்.

அத்தியாயம் முப்பத்திநான்கு

நாட்களும் வாரங்களும் ஒன்றையொன்று தொடர்ந்து சென்றன. குமாரின் உள் மனத்தில் என்னவோ ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நாள் ஆக ஆக கவிதைகூட எழுத முடியவில்லை. தனியாக இருந்தபோ தெல்லாம் மனதை சிந்தனை செய்துகொண்டிருப்பான்.

பல எண்ணங்கள் மனத்தில் புகுந்துகொண்டு நிம்மதி யையும் மகிழ்வையும் குலைத்தன. அதிகமாக நினைக்க நினைக்க மனத்தில் அதிக குழப்பமேற்பட்டது. குடியான வர்களையும் மாடு மேய்க்கும் பையன்களையும் பார்க்கும்போ தெல்லாம் நானும் அவர்கள் மாதிரி வறுமையிலும் மனதை இருட்டிலும் இருக்கக்கூடாதா என்று தோன்றியது. அவர்களுக்கு தான் அனுபவிக்கும் எண்ணங்களும் உணர்ச்சி களும் இல்லை. இருந்தாலும் சிலசமயங்களில் யோசனை செய்வது முக்கியம் என்று தோன்றியது. ஆனால் தன் சிந்தனைகளோ சாதாரண வார்த்தைகளாலும் வாக்கியங் களாலும் பிடிபடவில்லை. மனத்தில் தோன்றிய வினாடி யிலேயே மறைந்தும் விட்டன. சில சமயங்களில் அவைகள் வெறும் உணர்ச்சிகளாகத் தோன்றின. மற்ற சமயங்களில் கனவில் காணும் கற்பனை படங்கள் மாதிரி இருந்தன.

இந்த எண்ணங்களையும் கிளர்ச்சிகளையுமே தன் கவிதையில் எழுத முற்பட்டான். ஆனால் திருமலையோ "மற்றவர்களைப்பற்றியும் அவர்களின் சுகதுக்கங்களைப் பற்றியும் எழுதவேண்டும். தன் சொந்த இன்பதுன்பங்

களையெல்லாம் மறைத்து எழுதவேண்டும்" என்று தினமும் சொல்லி வந்தான். குமாரின் மனத்தில் இதைப்பற்றி ஒரு பெரிய வாதம் நடந்துவந்தது. இக்குழப்பத்தின் நடுவில் தன் பெற்றோரைப் பற்றிய நினைவுகளும் வந்து வேதனைப் படுத்தின. தான் அவர்களுக்குக் கடிதம் எழுதித் தன்னைப் பற்றி சொல்லவேண்டுமா? அப்படிச் சொன்னால் அக்கடிதத்தின் மூலமாக போலீசார் ஒருவேளை தங்களைப் பிடிப்பார்களா? ஒரு மாதத்திற்கு முன்னால் சந்தோஷமாக போயிருப்பான். ஆனால் இன்று திருமலை, பானு இருவரும் தினமும் லட்சியங்களைப் பற்றியும், அவைகளை அடைய வேண்டிய மார்க்கங்களைப்பற்றியும் விவாதிப்பதை கேட்ட பிறகு, எது சரி, எது சரியல்ல என்றே தெரியவில்லை.

ஆனால் எப்படியாவது ஒருநாள் கைதுசெய்யப்படுவார்கள் என்று குமாருக்குத் தெரியும். இப்போதே கிராமத்தில் இவர்கள் காங்கிரஸ்காரர்கள், ஒளிந்துகொண்டிருக்கிறார்கள் என்ற வதந்தி இருந்து வந்தது. இதுவும் குமாரின் மனக்கலக்கத்தை அதிகப்படுத்தியது.

குமாரின் மனத்தில் ஏதோ நடந்துகொண்டிருக்கிறது என்று பானுவும் திருமலையும் சந்தேகித்தார்கள். குமார் அவர்களுடன் அதிகமாகப் பேசவில்லை. இருவரும் யோசனை செய்து குமாருடன் பேசி அவனுடைய மனக் குழப்பத்தை நீக்குவது என்று முடிவுசெய்தார்கள்.

அன்று இரவு படுத்துக்கொள்ளுமுன் திருமலை குமாரிடம் வந்து "ஏன் குமார், சிலநாளாக ஒருமாதிரி இருக்கிறாய்?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லையே?" என்றான் குமார்.

"துயரத்தைக் கற்பனை செய்வதுதான் உனக்கு சந்தோஷம்போல் இருக்கிறது" என்றான் திருமலை.

"நீ கொஞ்சம் சும்மா இரு" என்று திருமலையை அடக்கிவிட்டு பானுகுமாரைப் பார்த்து "நீ கொஞ்சம் விரிவாகவும் தெளிவாகவும் பேசினால்தானே நாங்கள் அர்த்தம் செய்துகொள்ள முடியும்?" என்றான்.

"எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை. என் மனம் சோர்வடைந்திருக்கிறது. மனத்திலிருக்கும் பாரம் தாங்க முடியாமல் இருக்கிறது. அந்த பாரத்தை சுமப்ப தில்லை என்று விட்டுவிட்டால் ஆத்ம வாழ்க்கையே இல்லாமல் போய்விடும். பாரத்தை சுமந்து செல்ல விரும்புகிறேன். அவ்வளவுதான்" என்றான் குமார்.

"இந்த பாரம்தான் என்ன?" பானு கேட்டான்.

"பாரம் என் முதுகின்மேல் இல்லை, இருதயத்தின் மேல் இருக்கிறது" என்றான் குமார். "இந்த சில வருடங்களாக நான் எவ்வளவோ நம்பி, எவ்வளவோ நம்பிக்கையும் இழந்திருக்கிறேன். இப்போது எது நம்புகிறேன் எது நம்பவில்லை என்று தெரியாத நிலைமைக்கு வந்துவிட்டேன். இந்த குழப்பம்தான் என் மனத்தில் பாரமாய் இருக்கிறது.

"இன்னும் எனக்கு சரியாக நீ சொல்வது தெரியவில்லை" என்றான் திருமலை.

"நாம் சிநேகிதர்கள் குமார்" என்றான் பானு. "எங்களிடம் சொல்லக்கூடாதா? ஏன் எப்போது பார்த்தாலும் தனியே உட்கார்ந்துகொண்டு யோசனை செய்துகொண்டிருக்கிறாய்?"

"என்ன என்று நிச்சயமாகத் தெரிந்தால் சொல்வது சுலபமாய் இருக்கும். ஆனால் சும்மா மனத்தில் குடியிருக்கும் சோகத்தையும் குழம்பத்தையும், பதில் சொல்ல முடியாத சந்தேகங்களையும் எப்படி எடுத்துச்சொல்வது?" என்றான் குமார்.

"நான் முதலிலிருந்து சொல்கிறேன்" என்று குமார் ஆரம்பித்தான். மற்ற இருவரும் கவனமாகக் கேட்டனர். "நான் குழந்தையாய் இருக்கும்போது கடவுளில் நம்பிக்கை வைக்க கற்பிக்கப்பட்டேன். இந்த வாழ்க்கை அநித்திய மென்றும் மேலுலக வாழ்வுதான் முக்கியமென்றும் என் தாயார் எனக்குச் சொல்லிக் கொடுத்தாள். எங்கள் குலாசாரப்படி செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் தவறாமல் செய்துவந்தேன். என் தாயாரிடம் எனக்கு நம்பிக்கை இருந்த மாதிரியே இந்த சடங்குகளிலும் இருந்தது. எனக்கு வயது வந்ததும் இருதய வேதனையுடன் தான் கடவுளிடம் இருந்த நம்பிக்கையைக் கைவிட்டேன். முதலில் நம்பி பிறகு கைவிடுவது சுலபமா? நம் கஷ்டங்களையும் முயற்சிகளையும் பலவீனங்களையும் அன்புடனும் அனுதாபத்துடனும் மேலுலகிலிருந்து ஒருவர் கவனித்து வருகிறார் என்று நம்பிவிட்டு பிறகு அந்த நம்பிக்கையைக் கைவிடுவது என்றால் என்ன என்று உங்களுக்குத்தெரியுமா? திருமலை, உனக்கோ எப்போதுமே நம்பிக்கையில்லை. பானு, உனக்கு இன்னும் நம்பிக்கையிருக்கிறது. அதனால் நம்பிக்கையை இழப்பதைப்பற்றி உங்கள் இருவருக்கும் ஒன்றும் தெரியாது. கடவுள் உண்டு இல்லை என்பதற்கு வேண்டிய தர்க்கங்களெல்லாம் எனக்கும் தெரியும். ஆனால் நம்பிக்கை, தர்க்க சாஸ்திரத்தைப் பொறுத்ததா? அப்படியிருந்தால்

4339

உலகில் ஏன் கடவுளைப்பற்றி இத்தனை அபிப்பிராயங்கள் இருக்கின்றன? உண்மையென்னவென்றால் நான் வாழ்க்கையும் அதற்கு சம்பந்தப்பட்ட ஸ்தாபனங்களையும் வெறுக்க ஆரம்பித்தேன்."

"இப்போது மறுபடியும் கடவுளின்மேல் நம்பிக்கை பிறந்துவிட்டதா?" என்றான் திருமலை.

"இல்லை. என் பிரச்னை அவ்வளவு சுலபமானதாக இல்லை. உண்மை உலகில் வாழ, எதிலாவது நம்பிக்கையிருக்கவேண்டும். கடவுளின்மேல் என்று இல்லை. ஏதாவது ஒன்றில் இருக்கவேண்டும். எனக்கு ஒன்றிலும் நம்பிக்கையில்லாததால் வாழ்க்கையை மறந்து கற்பனை உலகில் வாழ்ந்து வந்தேன். அக்கற்பனை உலகில் துக்கத்துக்கோ, பிரச்னைகளுக்கோ இடமில்லை. எல்லாம் அழகாக இருந்தது. லட்சியங்கள் கொண்டதாக இருந்தது. நான்தானே அந்த உலகை உண்டாக்கினேன். என் தாயாரின் மூட நம்பிக்கைகளை தமாஷ் செய்தேன். பள்ளிக்கூடம் சென்று பரீக்ஷைகளில் தேறினேன். ஆனால் உண்மையில் என் மனம் கற்பனை உலகில் தான் சஞ்சரித்தது.

"அந்தக் கற்பனை உலகம் இன்று நிம்மதி அளிக்கவில்லையா?" என்று கேட்டான் பாலு.

"அந்தக் கற்பனை உலகமானது என்னை வெளியுலகத்தின் கொடுமையிலிருந்து காப்பாற்றியது. கவிதைகளைக் கற்றேன்; எழுதினேன். பெண்களைப்பற்றி கனவு கண்டேன். இயற்கையின் அழகைக் கண்டு சந்தோஷப்பட்டேன். ஆனால் காந்தி வந்து என் கற்பனை உலகைக் கலைத்து விட்டார்" என்றான் குமார்.

"காந்தியா?" என்றார்கள் மற்ற இருவரும். பானு மகிழ்ச்சியுடன், திருமலை ஆச்சரியத்துடன்.

"ஆம். காந்தியின் ஆத்ம சக்திதான் என்னை உண்மை உலகிற்கு வரவழைத்தது. மற்றவர்களுக்காக நாம் கஷ்டப் படுவது, தியாகம் செய்வது என் மனதைக் கவர்ந்தது. மற்றவர்களின் குரூரத்தையும், கொடுமையையும் அன்புடன் ஏற்பது எனக்கு ஒரு புது எண்ணமாகத் தோன்றி என்னை இழுத்தது. ஆகவே என் கற்பனை உலகை விட்டுவிட்டு சத்தியாக்கிரகத்தை உதவியாகக்கொண்டு உண்மை உலகில் பிரவேசித்தேன். ஆனால் இன்று சத்தியாக்கிரகமும் உண்மை ஆறுதல் அளிக்கவில்லை."

"சத்தியாக்கிரகம் ஆறுதல் அழிக்காது. தியாகம் செய்து கஷ்டப்படுவதுதானே அதன் அடிப்படை" என்றான் பானு.

"ஆனால் மனக்குழப்பம் ஏன்?" என்று கேட்டான் திருமலை.

"என் கற்பனை உலகை விட்டு வந்துவிட்டேன். ஆனால் திரும்பிப்போக முடியாது. அதனால் தான்" என்றான் குமார். பிறகு பானுவைப் பார்த்து, "உன் நெற்றியிலிருந்து இரத்தம் சொட்டிக்கொண்டிருந்ததைப் பார்த்ததும், எனக்கு சத்தியாக்கிரகத்தில் பாதி நம்பிக்கை போய் விட்டது" என்றான்.

"வாழ்க்கையில் நம்பிக்கையை இழப்பது ஒரு பெரிய நஷ்டம்தான். ஆனால் அது நிரந்தரமானதல்ல. சீக்கிரம் நம்பிக்கை பிறக்கும்" என்றான் திருமலை.

"சீக்கிரம் எல்லோரும் உன் கவிதைகளைப் படித்து உன்னை கொண்டாடப் போகிறார்கள்" என்றான் பாலு.

"அதில் எனக்கு அவ்வளவு ஆசையில்லை. என் மனோ திருப்திகாகத்தான் நான் முக்கியமாக எழுதினேன். தியாகம் செய்யப்போகிறோம். தேசத்திற்கு நன்மை செய்யப்போகிறோம். அனேக செய்கைகள் செய்யப் போகிறோம் என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்படி குக் கிராமத்தில் ஒளிந்துகொண்டு போலீசார் வந்து கைது செய்யக் காத்திருப்போம் என்று நினைக்கவில்லை. அதுவும் எனக்கு ஏமாற்றத்தை அளிக்கிறது" என்றான் குமார்.

"தியாகம், தேசசேவை எப்போதுமே செய்கைகள் நிறைந்ததாக இருக்குமா? ஜெயிலுக்குப் போயிருந்தால் தான் நாம் வேறு என்ன செய்திருக்கமுடியும்?" என்றான் திருமலை.

"என்னமோ தெரியவில்லை. இவைகளெல்லாம் சேர்ந்துதான் என்மனதைக் குழப்புகின்றன. மனத்தை திடப்படுத்தி நானாக முடிவுசெய்யக்கூடிய சக்தி எனக்கு அற்றுப்போய் விட்டது" குமார் சொன்னான்.

இப்படியாக வெகுநேரம் வரையில் பேசிக்கொண்டிருந் தார்கள். கடைசியில் தூங்கப்போகும்போது இவ்வளவு பேசியும் தன் மனதிலுள்ளதை ஒன்றும் வெளிப்படுத்த வில்லைபோல் குமாருக்கும் தோன்றியது.

அத்தியாயம் முப்பத்தைந்து

மறுநாள் மாலை, ராமு, குமார் முதலியவர்களைப் பார்க்க வந்தான். அவன் வந்ததைக் கண்டு மற்றவர்கள் ஆச்சர்யப்பட்டார்கள். மதுரையில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளவும் ஆவலாய் இருந்தார்கள்.

ராமு கொஞ்சமும் உற்சாகமாய் இல்லை. அதிக கவலையுள்ளவனைப் காணப்பட்டான். "நான் ரொம்ப யோசனை செய்த பிறகுதான் வந்தேன். போலீசார் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். ஆனாலும் நீங்கள் இருக்குமிடம் போலீசுக்குத் தெரிவதற்குமுன் உங்களை எச்சரிக்கவேண்டுமென்றுதான் வந்தேன். நீங்கள் இங்கே இருந்தால் இன்னும் ஒன்றிரண்டு நாட்களில் உங்களைப் பிடித்துவிடுவார்கள்" என்றான்.

"போலீசாருக்குத்தான் என்ன தெரியும்?" என்று கேட்டான் திருமலை.

"நீ புறப்பட்டு வந்த அன்றே உன் அறையைச் சோதனை செய்தார்கள். பிறகு நீ சென்னைக்குப் போயிருக்கிறாய் என்று சிலநாள் நினைத்திருந்தார்கள். ஆனால் இப்போது நீங்கள் மூவரும் ஒன்றாக இருப்பதாகவும் துண்டுப் பிரசுரம் போட்டு வருவதும் அவர்களுக்குத் தெரியும்" என்றான் ராமு.

"இது நாம் எதிர்பார்த்ததுதானே" என்றான் திருமலை.

"இதைச் சொல்வுதற்காகத்தான் நீ மதுரையிலிருந்து இங்கே வந்தாயா?" என்று கேட்டான் பாலு.

"வேறு காரணங்களும் உண்டு" என்றான் ராமு. "முதலில் குமார் வேறு பாட்டுகள் ஏதாவது எழுதியிருக்கிறானா என்று பார்க்கவந்தேன். இருந்தால் ஒரு சிறிய புஸ்தகம் போடலாம். உன்னுடைய முதல் பாட்டை எல்லோரும் பாடுகிறார்கள் குமார். போலீசாரால் அதைத் தடுக்கமுடியவில்லை. நானே அதை அச்சிடலாமென்று உத்தேசித்திருக்கிறேன்."

"உன்னைக் கைது செய்தாலோ?" குமார் கேட்டான்.

"இப்போது என்னை கைது செய்வதைப்பற்றி அக்கரையில்லை. மதுரையில் உங்களைப் பார்த்தபோது என் தாயார் ஜுரமாக படுத்திருந்தாள். இருபது நாளுக்குமுன் இறந்து விட்டாள். ஆகவே எனக்கு இனி மேல் ஒருவித முட்டுக்கட்டும் இல்லை. ஆனால் என் தாயார் உயிரோடிருந்தவரைக்கும் அவர் இஷ்டப்படி நடந்தது எனக்கு திருப்தி" என்றான் ராமு. அப்போதுதான் அவர்களுக்கு ராமு முன்பு ஏன் இயக்கத்தில் பங்கெடுத்துக் கொள்ள மறுத்தான் என்று தெரியவந்தது. அவனிடம் அனுதாபப்பட்டார்கள். இயக்கம் அதிகநாளைக்கு நடக்காது என்று தெரிந்தும் தமக்கு உதவிசெய்ய வந்திருக்கிறான் என்று மகிழ்ந்தார்கள்.

"நான் வந்ததற்கு இன்னும் ஒரு காரணம் உண்டு" என்று மறுபடியும் ராமு மெதுவாகப் பேச ஆரம்பித்தான். "குமார், உன் தாயார் அதிக ஜுரமாக இருப்பதாகக் கேள்விப்பட்டேன். உங்கள் டாக்டரை எனக்கு நன்றாகத்

தெரியும். அவர்தான் சொன்னர். ஜுரம் பலமாக இருக்கிறது. மனம் தடுமாறிப் பேசியபோதுகூட உன்னைப் பற்றித்தான் கேட்டதாகச் சொன்னர். நீ வீடுபோய்ச் சேர்ந்தால் பாதி குணமாகிவிடும் என்கிருர்."

"அப்படியா?" என்ருன் குமார். இன்னும் ஏதாவது சொல்வான் அல்லது கேட்பான் என்று மற்றவர்கள் எதிர் பார்த்தார்கள். ஆனல் குமார் வாயைத் திறக்கவில்லை. பேசாமல் ஒரு நிமிஷம் உட்கார்ந்துவிட்டு குமார் எழுந்து வெளியே சென்ருன்.

"நீ அதைப்பற்றி சொல்லாமல் இருந்திருக்கலாம்" என்ருன் திருமலை ராமுவைப் பார்த்து.

"நானும் சொல்வதா வேண்டாமா என்று ரொம்ப யோசனை செய்துபார்த்தேன். கடைசியில் சொல்வது தான் நல்லது என்ற முடிவுக்கு வந்தேன்" என்று சொன்னன் ராமு.

"ஆம், நீ சொல்வதுதான் சரி. நாம் குமாரை எப்படியாவது வீட்டுக்கு அனுப்பி ஜெயிலுக்கு போவதற்கு முன்னல் தாயாருக்கு ஆறுதலாவது சொல்லிவிட்டு வரச் செய்யவேண்டும்" என்ருன் பாலு.

குமார் ஆற்றங்கரைப்பக்கம் நடந்து சென்ருன். தனியேயிருந்து இப்போது என்னசெய்யவேண்டும் என்று தன் மனதுக்குள்ளே ஒரு முடிவுக்குவர இஷ்டப்பட்டான். தனக்கும் தன் தாயாருக்கும் உள்ள அன்பைப்பற்றிய பல எண்ணங்கள் நினைவுக்கு வந்தன. இருந்தாலும் இப்போது

தான் தன் தாயாரிடம் இருந்தும் குடும்பத்திலிருந்தும் வேறுபட்டவன் மாதிரி தோன்றியது. சிலநாட்களாக மனதைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்த இருதயவேதனை இன்று அதிகமாகிவிட்டது. சக்தியுடையவை, நிரந்தர மானவை என்று மனதில் வேரூன்றியிருந்த எவ்வளவோ நம்பிக்கைகள் இன்று தவிடுபொடியாகிக்கிடந்தன. இவை யெல்லாம் போதாதென்று தாயாரின் நோய் வேறு வந்து சேர்ந்தது. இந்த சமயத்தில் என்ன செய்வது சரி, தன் மனதிலிருக்கும் பாரத்தைக் குறைக்க வழி என்ன? எது சரி என்பதுகூட அவ்வளவு முக்கியமல்ல. மனதுக்குக் கொஞ்சம் ஆறுதல் இருந்தால் போதும். எத்தனைநாளைக்கு இந்த வேதனையும் சந்தேகங்களையும் பொறுத்துக்கொண் டிருப்பது? எத்தனை நாளைக்கு?

சிறிது நேரம் கழித்து பாலு, திருமலை, ராமு இவர்கள் குமாரைத் தேடிக்கொண்டு வந்தார்கள். சூரியன் மலை களுக்குப் பின்னால் மறைந்துகொண்டிருந்தான். மெதுவாக ஓசையின்றி ஆறு ஓடிக்கொண்டிருந்தது. தூரத்தில் ஆடு மாடுகளை வீட்டுக்கு ஓட்டிக் கொண்டுவரும் சத்தம்தான் கேட்டது. குமார் ஆற்றோரம் இருந்த ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

குமாரிடம் வந்ததும் "நீ போய் உன் தாயாரைப் பார்ப்பது நல்லது" என்றான் பாலு.

குமார், "நீங்கள் இந்த ஒரு மாதத்தில் எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறீர்கள். கூடப்பிறந்தவர்கள் மாதிரி நடந்துகொண்டிருக்கிறீர்கள். உங்களிடம் இருந்து எவ்வளவோ தெரிந்துகொண்டேன். உங்கள் ஒவ்வொரு

வருக்கும் ஒரு வாழ்க்கைத் தத்துவம் இருக்கிறது. வாழ்க்கையில் என்ன செய்யவேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். அதனால்தான் நீங்கள் எப்போதும் சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் வேலை செய்கிறீர்கள்" என்ருன்.

"நீ வீட்டுக்குப் போய் உன் தாயாரைப் பார்த்தால் உன் கவலையை மறந்து விடுவாய்" என்ருன் ராமு.

"நேற்று ராத்திரி நான் உங்களுடன் எல்லாம் விவரமாகச் சொல்லவில்லை. எப்போதுமே நான் என் தாயாரிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தேன். கடவுளின்மேல் எனக்கிருந்த நம்பிக்கை என் தாயார் வளர்த்ததுதான். அந்த நம்பிக்கையும் என் அன்பும் ஒன்ருக கலந்திருந்தன. நான் ஒரு மாதத்துக்குமுன் வீட்டைவிட்டுக் கிளம்பிய போது என் மனதுதான் முடிவு செய்தது. இருதயத்தைப் பின்னல் விட்டுவிட்டு வந்தேன்" என்ருன் குமார்.

"அப்படியிருந்தால் நீ உடனே திரும்பிப் போக வேண்டும்" என்ருன் திருமலை.

"நான் சொல்வதை முழுதும் கேட்டுவிட்டு அப்புறம் வேண்டுமானல் பேசுங்கள்" என்ருன் குமார். "என்னைப் பார்க்காமல் என் தாயார் இறந்துவிட்டால் என் வாழ்க்கை அப்புறம் சூனியமாகிவிடும். எனக்குப் பயித்தியம் பிடித்தாலும் பிடித்துவிடும். இப்போதுகூட என் அம்மா படுக்கையில் படுத்துக்கொண்டு நோயின் வேதனை மட்டுமன்றி என்னல் ஏற்பட்ட வேதனையையும் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். சாகுந்தருவாயில்கூட இருக்கலாம். இங்கு வேதாந்தம் பேசிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு உடனே அவளைப்போய் பார்க்கவேண்டும் என்று என்

மனத்தில் ஒரு பாகம் உறுத்துகிறது. ஆனால் இன்னொரு பாகம் நானும் என் தயாரும் அன்னியர்கள் என்று சொல்லுகிறது. எங்கள் இருவருக்கும் பொதுவாக இருந்த நம்பிக்கை அற்றுவிட்டது. எனக்காக எவ்வளவோ கஷ்டப்பட்டு, என் சந்தோஷத்துக்காக எவ்வளவோ கவலைப்பட்டு, என் வாழ்க்கைக்காக எவ்வளவோ தியாகம் செய்த என் தாயார் அங்கே படுத்துக்கொண்டிருக்கிறாள். இருந்தாலும் என் இருதயத்தில் துயரம் இல்லை. அவளிடம் போகவேண்டுமென்று ஆசையில்லை. எனது கல் நெஞ்சையும், கொடுமையையும் கண்டு நானே ஆச்சரியப்படுகிறேன். என்ன செய்வதென்றே தெரியவில்லை."

மற்றவர்கள் ஒன்றும் பேசவில்லை. குமாரை அனுதாபத்துடன் பார்த்தார்கள்.

"ஏதாவது சொல்லுங்கள். நான் நன்றிகெட்ட மகனென்றோ. உணர்ச்சியற்ற, அன்பற்ற மனிதனென்றோ சொல்லுங்கள். ஆனால் போசமல் மட்டும் இருக்காதீர்கள்" என்று குமார் சத்தம் போட்டான்.

"உன் மனத்தில் ஒரு வியாதி இருக்கிறது. வாழ்க்கையில் நம்பிக்கையற்றதாலும், வீட்டைவிட்டு வெளியேறியதாலும், சத்தியாக்கிரகம் நீ நினைத்தமாதிரி நடக்காததாலும் மனத்தில் குழப்பமேற்பட்டுவிட்டது. நீ உடனே வீட்டுக்குப் போய் உன் தாயாருக்கு குணமேற்படும் வரையில் இருந்து நீயும் மன ஓய்வெடுத்துக்கொண்டால் சிலநாளில் உன் மனம் நேராகிவிடும். வேறு நம்பிக்கைகள் ஏற்படும்" என்றான் திருமலை.

"மனிதனுடைய மனம் என்ன ஒரு யந்திரமா?" என்று கேட்டான் குமார். "சிந்தனைகளையும் உணர்ச்சிகளையும் நாம் கட்டுப்படுத்தி மாற்றமுடியுமா?"

"முதலில் கடவுளின்மேல் நம்பிக்கை யிழந்தாய்" என்றான் பானு. "இப்போது சத்தியாக்கிரகத்திலும் நம்பிக்கையில்லை என்கிறாய். அதனால்தான் மனத்தில் உனக்கு இவ்வளவு வேதனை உண்டாகிறது. வெறுப்புக்கும் விரோதிகளுக்கும் அன்பும், திட்டுவோருக்கும் நல்வார்த்தையும் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று நினைத்தபோது மனத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் இருந்தது. இவற்றில் இன்னும் கொஞ்சமாவது நம்பிக்கையிருந்தால் நீ உடனே உன் தாயாரைப் போய் பார்க்கவேண்டும். நீ சிலநாளைக்கு முன் எழுதிய பாட்டு ஞாபகம் இருக்கிறதா? "அன்பே நம் ஆயுதம்............" அப்பாட்டில்கூட உனக்கு இப்போது நம்பிக்கையில்லையா?"

"எனக்கு என் தாயாரின்மேல் அன்பு இல்லை என்று நினைக்கிறீர்களா?" என்றான் குமார். "அந்த அன்புதான் என்னை இப்படி வேதனைப் படுத்துகிறது; இருதயத்தை அறுக்கிறது. நீ சொல்வது சரி, பானு. அன்புதான் ஓர் ஆயுதமாக என் ஆத்மாவுக்குள்ளே ஆழமாகப் பாய்ந்திருக்கிறது. என் தாயாரும் என்மேலுள்ள அன்பினால்தான் இவ்வளவு துன்பப்பட நேர்ந்திருக்கிறது. என் தகப்பனார் மாதிரியே தாயாரும் எனது சக்திக்கும், மன உறுதிக்கும் மாறுபட்டால் அதை நான் தைரியமாக எதிர்க்கலாம்.

ஆனால் என் அன்பை, பலவீனத்தைத் தாக்கினால் என்ன செய்யமுடியும்? அதனால்தான் அன்பிலும் கொடுமை யிருக்கிறது, குரூரம் இருக்கிறது. ஆம், அன்பே நம் ஆயுதம்தான்."

"ஒருவேளை மதுரைக்குப் போனதும் உன்னைக் கைது செய்தாலோ?" என்றான் திருமலை.

"இல்லை, இப்போது நான் உங்களைவிட்டு போக மாட்டேன்" என்றான் குமார். "உனக்கு ஞாபகமிருக் கிறதா பானு. காலேஜ் ஹர்த்தாலுக்கு முன்னால் நாம் எவ்வளவு உற்சாகமாக இருந்தோம்? எவ்வளவு உணர்ச்சி யுடனும்,ஆர்வத்துடனும் இருந்தோம்? சுதந்திரம் அடுத்த மூலையில் இருக்கிறது என்று நினைத்திருந்தோம். மலை களையும் தகர்த்தி விடலாம் என்று நினைத்திருந்தோம். ஜெயிலுக்குள்ளேகூட கோஷங்களைக் கிளப்பினோம். ஆனால் இப்போது நம் நிலைமை என்ன? நண்பர்களெல் லாம் ஜெயிலில் இருக்கிறார்கள். எத்தனையோ பேர் கஷ்டப்பட்டும் தியாகம் செய்தும் பயந்து ஒடுங்கிவிட் டார்கள். நாமோ, ஏதோ குற்றம்செய்தவர்கள் மாதிரி இங்கே ஒளிந்து கொண்டிருக்கிறோம். இங்கிருந்து தப்பி னாலும் போலீசுக்குப் பயந்துகொண்டு சாதாரண திருடர் மாதிரி பிடிபடும் வரையில் காலம் கழிக்க வேண்டும். முன் பிருந்த உற்சாகம் நம்பிக்கை எல்லாம் இன்று இந்த ஏமாற்றத்தில் வந்து முடிந்திருக்கிறது. மனத்தின் மேல் பரப்புக்குக் கீழே ஏற்பட்டிருக்கும் இந்த எண்ணங்களை யெல்லாம் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல ஆசையா யிருக்கிறேன். என்னுடைய சிந்தனைகளையும் சுக துக்கங்

களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பு கிறேன். அதனால்தான் கவிதை எழுதுகிறேன். ஆனால் இந்த சில நாளாக நம்பிக்கைக்கு பதிலாக ஏமாற்றத்தைப் பற்றியும், அடைய முடியாத ஆசைகளைப்பற்றியும், எதிர் பார்க்கும் துக்ககரமான சம்பவங்களைப்பற்றியும்தான் எழுத முடிகிறது. என் இளமையை இழந்து வயதாகி விட்ட மாதிரி தோன்றுகிறது. மனக்கசப்பையும், ஏமாற் றத்தையுமே வெளிக்காட்ட முடிகிறது ...... ”

குமார் இப்படியே அதிக நேரம் பேசினான். தன் இருதயத்தின் வெள்ளப் பெருக்கை வார்த்தைகள் மூல மாகத் தன் நண்பர்களுக்கு வெளிப்படுத்தினான். அவர்கள் அனுதாபத்துடனும், பொறுமையுடனும் கேட்டார்கள். அவர்களால் என்ன பதில் சொல்ல முடியும்? அன்பாய் ஆறுதல் அளித்தாலும் கூட இதயப் புண்களின் வேதனை அதிகரித்தது.

“குமார்” பாலு பேசினான். “உனக்கு நாங்கள் என்ன சொல்வது. துன்பப்படுவதற்கே பிறந்தவர்களில் நீயும் ஒருவன் மாதிரி தெரிகிறது. உலகத்தின் துயரங் களையெல்லாம் உன் துயரங்களாகக் கருதிக் கஷ்டப்படு கிறாய். இன்று நம் தேசத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. அதனால் ஒரு தலைமுறைக்கும் மற்றொரு தலைமுறைக்கும் உள்ள வித்தியாசங்கள் அதிக மாகி விட்டன. முன்னேற்றத்திற்கு புறப்பொருள்களின் தியாகம் மட்டும் போதாது. உன் மாதிரி உணர்ச்சியுள்ள ஆத்மாக்கள் அகப்பொருள்களையும் தியாகம் செய்துதான் ஆகவேண்டும். அதனால் நீ இந்த மாதிரி சோகத்திற்கு இடம் கொடுக்காதே.”

"நான் மிகவும் சோர்வடைந்து விட்டேன்" என்றான் குமார். "என்னை நினைத்துக் கொண்டே, என்னைப் பார்க்காமல் என் தாயார் இறந்து விட்டால் நான் ஒரு கொலைகாரனுக்கு சமமாவேன். உலகத்தாரும் அப்படித்தான் நினைப்பார்கள். நான் இங்கே உட்கார்ந்து கொண்டு எனது சொந்தத் துயரங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். கடவுளின் மேல் நம்பிக்கை யிழந்து உண்மையை அறிய முயற்சிசெய்ய ஆரம்பித்தேன். கடவுள், மதம், நன்மை, தீமை, இவற்றை யெல்லாம் கடந்து வாழ்க்கையின் ஆழத்தை அறிய ஆரம்பித்தேன். அன்றிருந்து நானும் என் தாயாரும் அன்னியர்களாகி விட்டோம். அன்பிருக்கிறது, போய்ப் பார்க்கவில்லையே என்ற குறை இருக்கிறது. ஆனால் என் மனமோ பல உணர்ச்சிகளும், சிந்தனைகளும், முற்றுப் பெறாத ஆசைகளும், போர் செய்யும் ஒரு போர்க்களம் மாதிரி ஆகி விட்டது. ஒரு பாகம் இன்னொரு பாகத்துடன் சண்டை யிடுகிறது. இந்தச் சண்டை நடக்கும் வரையில் எனக்கு நிம்மதியில்லை. சந்தேகம், வேதனை, துன்பம் இவைகள் நிறைந்த உலகில் நான் வாழ வேண்டும்............"

சூரியன் மறைந்து இருட்டடைந்து விட்டது. மரங்கள் பூதங்கள் மாதிரி நின்றன. ஓடும் நீரின் ஓசை மட்டும் கேட்டது. காற்று கூட இல்லாமல் இரவு நிம்மதியாயிருந்தது. நால்வரும் மெதுவாகத் திரும்பி நடந்தார்கள். ஒவ்வொருவருடைய மனத்திலும் குமாரின் துயரம் பரவி யிருந்தது. மறுநாள் காலையில் குமாரும் ராமுவும் மதுரைக்குப் போவதென்றும், பாலு, திருமலை இவர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களுக்குப் போவதென்றும் முடிவு

செய்திருந்தார்கள். பாலு தான் கைதியாவது என்று முடிவு செய்து விட்டான். திருமலேயோ இன்னும் ஒளிந்து கொண்டே ஜனங்களைச் சர்க்காருக்கு விரோதமாக எழச் செய்ய வேண்டும் என்று முன்பே தீர்மானம் செய்திருந்தான். "இந்த இயக்கம் வெற்றி பெருது" என்று திருமலேக்கு நன்ருகத் தெரியும்.

எங்கும் நிம்மதியாய் இருந்தது. வீடுகளில் சிறு சிறு எண்ணெ விளக்குகள் எறிந்து கொண்டிருந்தன. நால்வரும் திருமலேயின் வீட்டுக்குள் வந்து லாந்தர் வெளிச்சத்தில் உட்கார்ந்தார்கள். "என் உள்ளத்தில் உள்ளதையெல்லாம் உங்களிடம் சொன்ன பிறகு ஆறுதலாய் இருக்கிறது. நாளைக்கு மதுரைக்குப் போகிறேன்" என்ருன் குமார்.

திடீரென்று நான்கைந்து பேர் திருமலேயின் வீட்டிற்குள் நுழைந்தார்கள். போலீஸார்! அவர்களைப் பார்த்ததும் திருமலே லாந்தரை அவித்து விட்டான். இருட்டில் மிகுந்த குழப்பமேற்பட்டது. போலீசார் ஒரு "டார்ச்" போட்டு அங்கிருந்தவர்களைப் பிடித்தார்கள். ராமு, பாலு, குமார் மூவரும் கைது செய்யப்பட்டார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு தான் ராமுவை திருமலே என நினைத்திருந்தது இன்ஸ்பெக்டருக்குத் தெரிய வந்தது. இருட்டில் எப்படியோ திருமலே போலீஸ் வலேயிலிருந்து தப்பித்துக் கொண்டான்.

அத்தியாயம் முப்பத்தாறு

ராஜலட்சுமி அம்மாளுக்கு பலமாக காய்ச்சல் அடித்தது. பல கம்பளிகள் போர்த்தியும் குளிரும் உடல் நடுக்கமும் நிற்கவில்லை. பல நாளாக இருந்த துக்கத்தாலும் சரியாக சாப்பிடாததாலும் உடம்பு பலவீனமாய் இருந்தது. காய்ச்சல் வெறியில் மனம் கலங்கி கண்டபடி பேசலானாள். இந்திரா எப்பொழுதும் பக்கத்திலிருந்து வந்தாள்.

"எப்படி இருக்கிறது டாக்டர்?" என்று கவலையுடன் விசாரித்தார் உடையார். முடிவாகச் சொல்ல டாக்டருக்கு இஷ்டமில்லை. உடம்பு மிகவும் பலவீனனாய் இருக்கிறதென்றும், காய்ச்சல் மூளையைத் தாக்கி இருக்கிறதென்றும், எப்போதும் யாராவது பக்கத்தில் இருக்கவேண்டுமென்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

உடையாருக்கு மிகுந்த வருத்தமாய் இருந்தது. தன் மனைவியின் வியாதிக்குக் காரணம் என்ன? குமார் மறைந்து போனதா? அல்லது அவளுடன் தான் அவ்வளவு கோபத்துடன் பேசியதா? அவளும் தன்னுடன் அம் மாதிரி அதற்குமுன் பேசியதில்லை. கிழே சாய்வதற்கு முன் ராஜலக்ஷ்மி அம்மாள் பேசிய பேச்சும் அவளுடைய துடித்த முகமும் சிவந்த கண்களும் ஞாபகத்துக்கு வந்தன. தன் மகன் மேல் தான் எவ்வளவு அன்பாய் இருந்தாள்! இப்போது உடையார் இருந்த நிலையில் தன் மனைவியின் காய்ச்சல் நன்றாக ஆவதற்காக என்ன வேண்டுமானாலும் செய்

திருப்பார். இவ்வளவு வருஷங்கள் அவருக்குக் கலியாணம் ஆகியிருந்தும் இன்றுதான் தன் மனைவிக்கும் தனக்கும் உள்ள பாந்தத்தைப் பற்றி அறிந்தார். அன்போ ஆசையோ மட்டும் அல்ல. அவருடைய ஆத்மாவே ராஜலக்ஷ்மி அம்மாளுடன் பிணைக்கப்பட்டிருந்தது. இந்தப்பிணைப்பிலிருந்து பிரிவதென்றால் குமார் வீட்டை விட்டுப் போனதெல்லாம் அல்பமாகத் தோன்றியது. அடுத்த அறையில் படுத்துக்கொண்டிருந்த தன் மனைவியின் பிதற்றலைக் கேட்ட போதெல்லாம் அவர் மனம் அவரை வாட்டியது. ஆனால் அந்த அறைக்குள் போகவும் முடியவில்லை. தான் எதோ குற்றம் செய்துவிட்டதாக தோன்றிற்று.

குமாரிடம் தனக்கு அன்பு உண்டு என்று ராஜலக்ஷ்மி அம்மாள் சொன்னபோது தனக்கேன் அவ்வளவு கோபம் வந்தது? அவள் சொன்னது உண்மைதானா? தனக்கு உண்மையில் குமாரின் மேல் இப்போது அன்பு உண்டா? அக்கேள்விக்கு முதல் தடவையாக உடையார் பதிலளிக்க முயன்றார். அதை மறைக்க முயன்றாரா? ஆனால் குமாரின் நடைத்தைக்குப் பிறகு தனக்கு அவன்மேல் ஆசையிருப்பதாக எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? ஆகவே, கோபத்தாலும், மன எரிச்சலாலும் தன் மனைவியின் மனத்தைப் புண்படுத்திவிட்டார். ஆனாலும் தன் மனதைப்பற்றி தனக்குத் தெரிந்ததை விட ராஜலக்ஷ்மி அம்மாளுக்கு அதிகம் தெரிந்திருந்தது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

இப்போது எதைப் பற்றியும் அக்கரையில்லை. தன் மனைவி சௌக்கியமானால் போதும். தான் மட்டும் அந்தப் போட்டோவைக் கிழிக்காமல் இருந்திருந்தால்.............. ஒரு வேளை தன் மனைவிக்கு காய்ச்சலே வந்திருக்காதோ?

ராஜலக்ஷ்மி அம்மாள் காய்ச்சல் வெறியில் பிதற்றுவது நிற்கவில்லை. மணிக்கணக்காக இந்திரா பக்கத்திலிருந்து வேண்டியதைச் செய்து வந்தாள். குடிப்பதற்கு பார்லி கஞ்சி, சுடுநீர் கொடுப்பதும், தலையைப் பிடிப்பதும், கேட்கும் கேள்விகளுக்கு ஆறுதளிக்குமாறு பதில் சொல்வதுமே இந்திராவின் வேலையாய் இருந்தது. சில சமயங்களில் ராஜலக்ஷ்மி அம்மாள் சாதாரணமாகப் பேசுவதாகத் தோன்றியது. நடுக்கம் நின்று கண்களிலிருந்த மிரண்ட பார்வையும் மாறியது, ஆனால் சிறிது நேரத்தில் மறுபடியும் "குமார்! குமார்!" என்று கூப்பிட்டாள்.

இந்திராதான் பதில் சொன்னாள். "என்னம்மா? என்ன வேண்டும்?"

"அது யார்?" என்றாள் ராஜலக்ஷ்மி அம்மாள்.

"நான்தான் இந்திரா."

"இந்திரா, குமார் எங்கே? அவன் ஏன் இன்னும் வரவில்லை? இருட்டான பிறகு கூடவா காலேஜ் இருக்கும்? நீ ஏன் அவனுக்குச் சொல்லி அனுப்பவில்லை? ஐயோ, தாகமாகிறது."

"இதோ பார்லி, கொஞ்சம் சாப்பிடுங்கள்."

"தாகத்திற்கு ஒன்றும் வேண்டாம். குமாரைத்தான் பார்க்கவேண்டும். அவன் வந்ததும் நேராக இங்கே வரச்சொல்லு. அவனுக்கு சாப்பிட ஏதாவது தயாராய் வைத்திரு. பாவம் பசியோடு வந்தாலும் வருவான்."

"அதிகமாய்ப் பேசக்கூடாது என்று டாக்டர் சொல்கிறார். பேசாமல் தூங்கம்மா. குமார் வந்ததும் நான் வரச்சொல்கிறேன்."

"குமாரின் கலியாணத்துக்கு உனக்கு எந்த மாதிரி சேலை வேண்டும் இந்திரா? பெண்ணுக்கு எந்த மாதிரி சேலை எடுக்க வேண்டும்? எனக்கு இதெல்லாம் தெரியாது. நான் கர்நாடகம். நீ தான் எல்லாம் வாங்க வேண்டும். குமார் வந்திருக்கிறானா என்று போய்ப் பார்த்து விட்டு வா."

"சரி" என்று இந்திரா வெளியே சென்றாள்.

அங்கே உடையார் காத்துக்கொண்டிருந்தார். "என், எப்படியிருக்கிறது?" என்று கேட்டார் ஆவலுடன்.

"அப்படியேதான்" என்றாள் இந்திரா.

"என்னைப்பற்றி ஏதாவது கேட்டாளா?"

'இல்லை' என்று இந்திரா தலையை அசைத்தாள்.

"இப்போது நான் உள்ளே வரவில்லை. தூங்கின உடனே என்னுடன் வந்து சொல்லு" என்றார் உடையார்.

"இந்திரா, நிறுத்து, நிறுத்து, அதோ அவர்கள் அவனை பிடித்துக்கொண்டு போகிறார்கள். திருப்பிக் கொண்டுவரச்சொல்லு. நீங்கள் இத்தனைபேர் இருந்தும் அவனைக் காப்பாற்ற முடியவில்லையா?" என்று ராஜலக்ஷ்மி அம்மாள் அலறினாள். அவள் உடம்பு புயலில் அகப்பட்ட புல்போலத் துடித்தது. கண்ணில் அடிக்கடி நீர் வந்து கொண்டிருந்தது.

சில நிமிஷங்களுக்குப் பிறகு மறுபடியும் நிம்மதியாக இருந்தாள். சிறிது நேரத்தில் தூங்கியும் விட்டாள். ஆனால் இந்திரா தன் தாயார்மேல் வைத்தகண்களை எடுக்காமல் மங்கலான வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு

சிந்தனை செய்துகொண்டு இருந்தாள். தன் தம்பியைப் பற்றி எவ்வளவு மனக்கசப்புடன் நினைத்தாள்! எவ்வளவு தான் பிடிவாதமாய் இருந்தாலும், தன் சொந்தப் பெற்றோருக்கு இவ்வளவு கொடுமை செய்யக்கூடியவனு? கோபமும் துயரமும் கலந்து அவளைக் கண்ணீர்விடச் செய்தது. இந்த உலகத்தில் நாம் மட்டும் முயற்சி செய்தால் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கலாம்! தனது சந்தோஷம் ஏன் இந்த மாதிரி தம்பியைப் பொருந்திருக்கிறது, அந்தத் தம்பியுடன் இணைக்கப்பட்டிருக்கிறது? தன் தாயார் ஏன் இப்படிப்பட்ட மகனைப்பற்றி இவ்வளவு கஷ்டப்படுகிருள்? தான் ஏன் இந்த உலகில் பலவிதமான பாந்தங்களுக்கு உட்பட்டு கஷ்டப்படுகிருள்? பெற்ருேர், சகோதரன், புருஷன், குழந்தை இத்தனைபேரும் ஏன் ஒன்ருகப் பிணைக்கப்பட்டிருக்கிருர்கள்? இத்தனைபேரும் அன்பால் பிணைக்கப்பட்டிருந்தும் ஏன் ஒருவருக்கொருவர் கஷ்டங்களை உண்டுபண்ணுகிருர்கள்?

இந்திராவுக்கு எல்லோர்மேலும் கோபம் வந்தது. எல்லோரும் தனது சந்தோஷத்துக்கு முட்டுக்கட்டைகளாக இருப்பதாகத் தொன்றியது. தான் சந்தோஷமாக இருப்பாள் என்று நினைத்துத்தான் இந்திரா சமூகத் தளைகளையெல்லாம் ஒப்புக் கொண்டு அதன்படி நடந்து வந்தாள். மற்றவர்களும் அம்மாதிரி ஏன் செய்யக் கூடாது? குமார் மட்டும் ஏன் சமூக வழக்கங்களைப் புறக்கணித்து வேறு வழியில் செல்ல வேண்டும்? காலில் ஏறிய முள் மாதிரி எப்போதும் அவன் உறுத்திக்கொண்டே இருந்தான். எங்கே போனுலும், யாருடன் பேசினுலும் எல்லோரும் தன்னைப் பார்த்து சிரிக்கிற மாதிரி தோன்றியது. “இவளுடைய தம்பி வீட்டை விட்டு ஓடி விட்டான்”

என்று நினைக்கிற மாதிரி தோன்றியது. ஆனால் இப்போது தன் தாயாரே பலமாகப் படுத்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்காக ஆவது குமார் வீட்டுக்கு வரக்கூடாதா என்று தோன்றியது இந்திராவுக்கு. ஆனால் மற்றவர்களுக்கு இவ்வளவு கஷ்டத்தை விளைவித்த அவனும் கஷ்டப்படவேண்டும் என்றே நினைத்தாள்.

இரவின் நிம்மதியில் உட்கார்ந்து யோசனை செய்து கொண்டிருந்த இந்திராவின் சிந்தனை ராஜலக்ஷ்மி அம்மாளால் கலைக்கப்பட்டது. "இந்திரா, குடிக்கக் கொஞ்சம் ஜலம் கொடு." என்றாள். இந்திரா எழுந்து பக்கத்துக்குப் போனாள்.

"கடவுள் ஏன் என்னை இப்படி வாதிக்கிறாரோ" என்றாள் ராஜலக்ஷ்மி அம்மாள். "இந்த ஜென்மத்திற்கு இவ்வளவு துன்பம் போதும். நானும் இறந்து போகக் கூடாதா? ஆனால், பாவம் செய்தவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு தானே இருக்க வேண்டும்? அவர் மேல் பூரண நம்பிக்கை வைத்தவர்களை கைவிடமாட்டார் என்று சொல்கிறார்களே, என்னை மட்டும் ஏன் இப்படி வேதனைப் படுத்துகிறார்? நான் இனி எதற்கு உயிரோடிருக்க வேண்டும்? உனக்குக் கலியாணம் ஆகி விட்டது. குமார் அவன் வழியே போய் விட்டான். இனி நான் வாழ்ந்து என்ன பிரயோஜனம்?" இந்திராவின் கண்களில் நீர் தாரையாக வடிந்தது. தாயாருக்குத் தெரியக் கூடாதே என்று தலையை வேறு பக்கம் திருப்பிக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"உன் தகப்பனார் எங்கே இந்திரா?"

"வெளியே இருக்கிறார். இதோ கூப்பிடுகிறேன்."

"தூங்குகிறாரோ என்னமோ, தொந்தரவு செய்யாதே."

இந்திரா தன் தகப்பனாரைக் கூப்பிட்டாள். அவரும் மெதுவாக சத்தம் செய்யாமல் உள்ளே வந்து படுக்கைக்குப் பக்கத்தில் நின்றார். ஆனால் அவர் வந்ததை சில வினாடிகள் ராஜலட்சுமி அம்மாள் கவனிக்கவில்லை. அவருக்கு அது அதிக நேரமாகத் தோன்றியது. மெதுவாக கண்களைத் திறந்து அவர் பக்கம் பார்த்தாள். பிறகு உற்று நோக்கினாள். அக்கண்களில் கோபம் இல்லை. முகத்தில் அன்பு காணப்பட்டது. இப்போது உடையாருடைய கோபத்தை ராஜலட்சுமி அம்மாள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. முன்பே அதை மறந்து விட்டாள். ஆனால் தம் மனைவியின் பார்வையிலிருந்து அவர் தம் முகத்தை திருப்பிக் கொண்டார். முன்பு வந்த கோபம் அவருக்கு வெட்கத்தை அளித்தது. கடைசியாக அவர்கள் கண்கள் சந்தித்தன. ஒருவருடன் ஒருவர் பேசவில்லை. இருந்தாலும் ஒருவருடைய மனத்திலிருந்தது மற்றவர் தெரிந்து கொண்டார்கள். தன் மேல் கோபம் இல்லை என்று அவருக்குத் தெரிய வந்தது. குமார் திரும்பி வந்தால் மன்னித்து விடுவார் என்று ராஜலட்சுமி அம்மாளும் தெரிந்து கொண்டாள்.

"மணி என்ன இந்திரா?" என்று கேட்டாள் ராஜலட்சுமி அம்மாள்.

இரவு கழிந்து காலை நேரமாகி விட்டது. சீக்கிரம் மன நிம்மதியுடனும், திருப்தியுடனும் ராஜலட்சுமி அம்மாள் தூங்கி விட்டாள்.

மறுநாள் காலையில் வந்து பார்த்த டாக்டர் "கண்டம் தீர்ந்து விட்டது. நாள்பட குணம் ஏற்படும். ஆனால் குமார் வந்தால் சீக்கிரமே குணம் ஏற்படும்" என்று சொல்லி விட்டுப் போனார்.

ராஜலட்சுமி அம்மாள் நாள் ஆக ஆக மெதுவாக முன்னேறி வந்தாள். மனத்தில் ஊன்றியிருந்த துயரத்தைப்பற்றி யாரும் அவளுடன் பேசவில்லை. உடையாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. எப்படிக் குமாரைக் கண்டு பிடிப்பது? அதைப்பற்றி எப்படித் தன் மனைவியுடன் பேசுவது? அவர் மட்டும் மனம் விட்டுப் பேசியிருந்தால், அதுவே நோயாளிக்கு மருந்தாக இருந்திருக்கும். ஆனால் அது அவருக்கு எப்படித் தெரியும்?

அத்தியாயம் முப்பத்தேழு

ராஜலட்சுமி அம்மாளுக்கு காய்ச்சல் வந்த ஒரு வாரத்துக்குப் பிறகு குமாரைப்பற்றிய செய்தி தெரிய வந்தது. அதுவும் போலீசார் மூலமாகத் தெரிய வந்தது. உடனே நகரில் எல்லோரும் அதைப் பற்றியே பேசிக்கொண்டனர். பத்திரிக்கைகளிலும் குமார், பாலு, ராமு, இவர்கள் கைது செய்யப்பட்ட விவரங்கள் வெளியாயின. சிலநாளாக நிம்மதியாய் இருந்த நகரில் மறுபடியும் சட்டத்துக்கு விரோதமாக ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. குமார்தான் 'அன்பே நம் ஆயுதம்' என்னும் பாட்டு எழுதியது என்று பகிரங்கமாக வெளிவந்ததும், எல்லோர் அன்புக்கும் பாத்திரப்பட்ட வனுகி விட்டான். பாலு, ராமு இவர்களைப்பற்றி பொது ஜனங்கள் அனுதாபப்பட்டார்கள். அவர்களின் தேச பக்தியைப் புகழ்ந்தார்கள். ஆனல் குமாரின் முந்திய வாழ்க்கையைப் பற்றியும், வீட்டை விட்டுப் போனதைப் பற்றியும் பலவித வதந்திகள் பரவின. அவனுடைய தியாகமும் ஜனங்களுக்குப் பெரிதாகத் தோன்றியது. குமாரின் சுகதுக்கங்களை அந்த சிலநாளைக்கு பொது ஜனங்கள் தம் சொந்த இன்பதுன்பங்களாகப் பாவித்தார்கள்.

உடையார், குமார் கைது செய்யப்பட்டதைப்பற்றி கேள்விப்பட்டதும் தான் என்ன செய்யவேண்டும் என்று யோசனை செய்தார். தானே தேடிக்கொண்ட விதிக்குத் தன் மகனை விட்டு விடுவதா அல்லது முயற்சி செய்து

விடுவிப்பதா? தன் மனைவி எதை விரும்புவாள் என்று அவருக்குத் தெரியும். அதன்படியே முடிவு செய்தார். ஆகவே குமாரை ஜாமீனில் விடுதலை செய்ய முயற்சி செய்தார். ஆனால் கோர்ட்டில் ஜாமீன் கொடுக்க மறுத்து விட்டார்கள். இந்தத் தடவை கிருஷ்ணசாமி ரெட்டியாரால் கூட ஒன்றும் செய்ய முடியவில்லை.

ராஜலட்சுமி அம்மாள் மிகுந்த நிம்மதியுடன் சமாசாரத்தைக் கேட்டாள். "இப்போது எங்கிருக்கிறான் என்றாவது தெரியுமே!" என்றாள். தன் புருஷன் குமாரை ஜாமீனில் விடுதலை செய்ய ஏற்பாடு செய்கிறார் என்று தெரிந்ததும் அவளுக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டது. குமார் என்ன செய்தாலும் அவன் பெற்றோர்கள் அவனைக் கைவிடவில்லை என்பது உறுதியாகி விட்டதல்லவா?

ராஜலட்சுமி அம்மாள் மெதுவாக குணமடைந்து வந்தாள். குமார் கைது செய்யப்பட்ட விவரம் பத்திரிக்கைகளில் வந்ததிலிருந்து பத்திரிக்கை படித்துவர ஆரம்பித்தாள். பொதுவாக வெளியுலக விஷயங்களில் அதிக சிரத்தை காட்டினாள். குமாரைப்பற்றிப் படித்தபோதும் கேட்டபோதும் அவளுக்கு ஒரு புதிய பெருமை ஏற்பட்டது. "அவன் சாதாரண குற்றம் செய்து ஜெயிலுக்குப் போவதாய் இருந்தால் பொதுஜனங்கள் இப்படிக் கொண்டாடுவார்களா?" என்று நினைத்தாள். ரங்கசாமி மட்டும் குமாரை ஜெயிலில் போய் பார்த்துவிட்டு வந்து எல்லா விஷயங்களையும் ராஜலட்சுமி அம்மாளுடன் சொன்னான்.

குமார் விடுதலையாவது மிகவும் சந்தேகம் என்று வக்கீல் சொன்னார். அன்றியும் குமார் தன்மேல் குற்ற மில்லை என்று வாதாடமாட்டான் என்று எல்லோருக்கும் தெரியும். எத்தனை மாதம் ஜெயில், என்பது ஒன்றுதான் விசாரணையில் தெரியவேண்டிய விஷயம்.

இந்திரா ஒருவள் தான் இப்போது மிகுந்த விசனத் துடனும் குமாரின்மேல் ஆத்திரத்துடனும் இருந்தாள். கடைசிவரையில் எப்படியாவது குமாரைத் தப்பித்து விடலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தாள். ஆனால் இப்போது அவன் ஜெயிலுக்கும் போய்த்தான் ஆக வேண்டும் என்று தெரிந்தது. பத்திரிக்கைகள் எல்லாம் தன் தம்பியைப்பற்றி கொட்டை எழுத்தில் எழுதியிருந் தன. அவனுடைய செய்கைகள் இப்போது உலகுக்கே தெரியும். பாமர ஜனங்கள் அவன் ஏதோ தியாகம் செய்து விட்டதாகப் போற்றுவதைப்பற்றி இந்திராவுக்கு அக்கரை யில்லை. ஒருவிதத்தில் இந்தப் போற்றுதல்தான் இந்தி ராவின் துயரத்துக்கும் கோபத்துக்கும் ஒரு முக்கிய காரண மாய் இருந்தது. குமாரின் பெருமையைப்பற்றிப் பேசிய வர்களைக்கூட இந்திராவால் மன்னிக்க முடியவில்லை. மற்றவர்கள் தன்னையும் எங்கே குமார் மாதிரி நினைத்து விடுகிறார்களோ என்று பயமாய் இருந்தது.

இந்த பயத்துக்கும் வெறுப்புக்கும் இடையில் இந்தி ராவுக்கு நிம்மதிகொள்ள வில்லை. குமாரின் விசாரணை நாள் பக்கத்துக்கு வரவர இந்திராவின் மனம் புயலில் அகப்பட்ட இலைபோலத் தத்தளித்தது. வெளியேபோனால் எல்லோரும் குமாரைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள். வீட்டிலும் இடங்கொள்ளவில்லை. கிராமத்துக்குப் போகலாம்

என்றுலோ, ஒருவேளை எதிர்பாராவிதமாக இங்கு ஏதாவது ஏற்பட்டால்? சில சமயங்களில் ஜனங்கள் ஊர்வலங்கள் நடத்தியதாகவும், குமாரின் பெயரை கோஷம் செய்ததாகவும், அவர்களைப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்ததாகவும், அதனுல் பலருக்கு காயம் ஏற்பட்டதாகவும் அவள் செவிக்கு எட்டியது. ஆனுல், தன் தாயாரின் பிதற்றலை கேட்டபின்பு அவள் இருதயம், கல்லாகி விட்டது. மனது உருகவில்லை. உலகத்தின் மேலேயே கோபம் கொண்டாள். ஏதாவது செய்ய, உடைக்க, நாசம்செய்ய, தன் கோபத்தை எப்படியாவது வெளிக்காட்ட ஆசை கொண்டாள். ஆனுல் எப்படிக் காட்டுவது, தன் கோபத்திற்குக் காரணமானவன் பத்திரமாக ஜெயிலில் அடைபட்டிருந்தான். ஆகவே தனது உணர்ச்சிகள் என்ன என்று காட்ட அவனுக்கு ஒருகடிதம் எழுதினுள். எழுதி தன் புருஷனையே அக்கடிதத்தை குமாரிடம் கொடுக்கச் சொன்னுள்............................

"அன்பார்ந்த தம்பி குமாருக்கு,

நம் துரதிருஷ்டம் பிடித்த குடும்பத்தில் இன்று நிலைமை எப்படியிருக்கிறது என்று சொல்லத்தான் இந்த கடிதம் எழுதுகிறேன். ஒரு மாதத்துக்கு முன்புதான் நீ உன் படிப்பை முடித்துவிட்டாய். நாங்களும் உன் கலியாணத்தைப்பற்றியும், இனிமேல் நீ இருக்கவேண்டியதைப் பற்றியும் ஏற்பாடு செய்துகொண்டிருந்தோம். உன் கலியாணத்தை வெகு விமரிசையாகச் செய்யவேண்டுமென்று அம்மா ரொம்ப பாடுபட்டாள். அப்போது எல்லோரும் எவ்வளவு சந்தோஷமாய் இருந்தோம். ஆனுல் இந்த ஒரு மாதத்தில் நீ செய்ததையெல்லாம் நினைக்க நினைக்க என் இருதயம் உடைந்து விட்டது.

நீ வீட்டைவிட்டு ஓடிப்போய் கண்டவர்களுடன் சாவகாசம் செய்ததிலிருந்து நாங்கள் மரியாதையாய் இருப்பவர்களுடன் பேசக்கூட முடியவில்லை. எப்படிப் பேசுவது? உனக்கு ஜுரமாய் இருந்தால் எங்களுக்கு வியாகூலமாய் இருக்கும். டாக்டர் மருந்து கொடுத்திருப்பார். ஆனால் உனக்குப் பிடித்திருக்கும் இந்தப் பைத்தியத்துக்கு யார் மருந்து கொடுப்பார்கள்? நீ செத்துப் போயிருந்தால் ஒரே துக்கமாய் இருந்திருக்கும். வைகைக் கரையில் தகனம் செய்துவிட்டு அழுதுகொண்டிருப்போம். கொஞ்ச நாள் கழித்து நீ யில்லாவிட்டாலும் உன் ஞாபகமாவது சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆனால் இப்போதோ உன் பெயரைக் கேட்கும் போதெல்லாம் எங்களுக்கு ஒரு புதுத் துயரம் உண்டாகிறது. துயரம் மட்டு அல்ல. எங்கள் மானம் போகிறது. நீ ஜெயிலுக்குப் போவதை சீக்கிரம் மறக்கமுடியுமா? அம்மா காய்ச்சல் வெறியில் "குமார்! குமார்!" என்று கூப்பிடுவதைத் தான் எப்படி மறப்பேன். அப்படியிருக்கும் போது நீ இறந்து இருந்தாலே நல்லது என்றுதான் நினைக்காமல் என்ன செய்வது?

ஐயோ குமார்! எங்களையெல்லாம் ஏன் இந்த நிலையில் தவிக்க விட்டாய்? நான் எப்படி அம்மாளின் துன்பத்தை கண்டு சகிப்பேன்? என்ன செய்வேன்? அப்பா வெளியில் ஒரு வார்த்தை சொல்வதில்லை. ஆனால் அவர் மனதில் என்ன நடக்கிறதென்று எனக்குத் தெரியும். நான் அம்மாள் கூப்பிடுவதற்கு பதில் சொல்லுவதா, ராஜா, "ஏன் அழுகிறாய் அம்மா?" என்று கேட்பதற்கு பதில் சொல்லுவதா? எங்கள் ஒவ்வொருவரையும் பற்றித் தனித்தனியே நினைத்துப்பார். அப்போது எங்களுக்கு எவ்வளவு வேதனை

உண்டாக்குகிருயோ அவ்வளவு வேதனை உனக்கும் உண்டாகும். ஆனல் உன் இருதயம் கல்லாய் இருந்தால் என்ன சொல்லித்தான் பிரயோஜனம் என்ன?

இப்படிக்கு,

இந்திரா.

இக் கடிதம் எழுதி அனுப்பிய பிறகு இந்திராவின் மனம் கொஞ்சம் நிம்மதி அடைந்தது.

கைது செய்யப்பட்ட இரண்டு வாரத்துக்குப் பிறகு விசாரணை நடந்தது. சர்க்கார் தரப்பில் ஏராளமான சாட்சிகள் இருந்தார்கள். திருமலை வீட்டிலிருந்த 'டியுப்ளிகேடர்', புஸ்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், கையெழுத்துப் பிரதிகள், இவைகளெல்லாம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன. ஆனல் அவைகள் வேண்டியிருக்கவில்லை. கைது செய்யப்பட்ட மூவரும் தமது செய்கைகளெல்லாம் ஒப்புக்கொண்டும், தமது இந்தச் சிறிய தியாகத்தால் தேசத்துக்கு உழைக்க சந்தர்ப்பம் ஏற்பட்டதைக் குறித்து சந்தோஷப்பட்டும், நீதிபதிக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்கள். அவ்வறிக்கை படிக்கப்பட்டதும் கோர்ட்டில் உட்கார்ந்திருந்த பொது ஜனங்கள் எல்லோரும் கைதட்டித் தம் சந்தோஷத்தைக் காண்பித்தார்கள். பிறகு சர்க்கார் தரப்பு வக்கீல் கொஞ்சநேரம் பேசியபிறகு கோர்ட் ஒத்திவைக்கப்பட்டது. மத்தியானம் கோர்ட் கூடியதும் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு அளிக்கப்பட்டது.

ராமமூர்த்தி	இரண்டு வருஷம்	கடுங்காவல்
பாலசுந்தரம்	ஒரு வருஷம்	”
குமார் உடையார்	ஒரு வருஷம்	”

——)0(——

அத்தியாயம் முப்பத்தெட்டு

ஒரு வருட சிறை வாழ்க்கை! ஒரு வருட சிந்தனை, மனோராஜ்யம், ஆவல், அதுவே ஒரு தனி உலகமாய் இருந்தது. உயர்ந்த சுவர்கள் வெளியுலகத்தை மறைத்தாலும் அதன் பாந்தங்களை அறுக்க முடியவில்லை. ஆனால் வெளியுலகின் தாரதாம்யங்களும் விருப்பு வெறுப்புகளும் மறைந்த இந்தச் சிறிய சிறை உலகில் புது ஆசைகளும் புதிய மனோபர்வமும் தோன்றின. பெயருக்குப் பதிலாக எண்; சாம்பல் நிறமுள்ள சிறிய அறை;பாய் தலையணை; முகட்டுக்குப் பக்கத்திலுள்ள துவாரத்தின் வழியே சில சமயங்களில் தெரிந்த தாரகைகள் இவைகளே குமாரின் நண்பர்கள். ஒரு வருட காலத்தில் இவைகள் தான் ஒருவனுக்கு எவ்வளவு அன்யோன்யமாகி விட்டன! ஒன்றையொன்று மெதுவாகத் தொடர்ந்து வந்த நாட்களையும், மணிகளையும் கூட எத்தனை தடவை எண்ணினான்! மதுரைக்குப் போகும் ரயிலில் சிறையிலிருந்து விடுபட்ட குமார் வந்து கொண்டிருந்தான். அன்றுதான் விடுவிக்கப்பட்டிருந்தான். ஆனால் சிறைச்சாலை ஞாபகங்கள் மனதில் வந்து குவிந்தன.

இந்த ஒரு வருட சிறை வாழ்வில் குமார் மிகவும் மாறி காணப்பட்டான். 'பால் வடியும் முகத்தில்' இப்போது பால் வடியவில்லை. கலாசாலை நாட்களில் இருந்த பிருதுத் தன்மை நீங்கி முகம் கரடு முரடாகக் காணப்பட்டது. சிறை செல்வதற்கு முன்பும் பின்பும் பட்ட கஷ்டங்கள் அனுபவங்கள் எல்லாம் முகத்தில் பிரதிபலித்தன. ஜனங்கள்

நிறைந்த ஒரு மூன்றும் வகுப்புப்பெட்டியில் உட்கார்ந்து கொண்டிருந்தான். பெரியோரின் தர்க்கம், குழந்தை களின் அழுகுரல், தாய்மார்களின் குசுகுசுப்பு, இவைகள் நிறைந்திருந்தன. மூட்டை முடிச்சுகள், தகரப்பெட்டிகள், படுக்கைகள், கீழே அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மேல் பலகையின் மேல் ஒருவர் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். குமாருக்குப் பக்கத்தில் இருந்த குழந்தை பலகாரம் சாப்பிட்ட கையை குமாரின் சட்டை மேல் துடைத்துக் கொண்டிருந்தது. பெட்டியில் வியர்வை நாற்றம் வீசியது. ஆனல் குமாரோ சூழ் நிலையை மறந்து மனே உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். எல்லா எண்ணங்களையும் விட ஒரு எண்ணம் தான் மனத் தில் திரும்பித் திரும்பி வந்து கொண்டிருந்தது— தான் சிறையை விட்டு வந்து விட்டான்.

ஆம். சிறையை விட்டு வெளி வந்து விட்டான், ஆனல் சிறை ஞாபகங்கள் திரும்பத் திரும்ப மனத்தில் எழுந்தன. தனிமை, செய்ததையே தினமும் திருப்பித் திருப்பி செய்வது, உடம்பின் மேல் இருந்த கட்டுப்பாடு, அடிமைத்தனம், இவைகளை மறக்க முடியவில்லை. சிறை யில் வெளியுலகின் நிம்மதியின்மை, பிரச்சனைகள், குழப் பம் ஒன்றும் கிடையாது. கீழ் படிதல் ஒன்றுதான் முக்கியம். நாட்களை எண்ண வேண்டியதுதான். தான் இப்போது விடுதலை அடைந்து விட்டதால் உலகத் தில் துயரங்களுக்கும், மகிழ்வுக்கும், ஆனந்தங்களுக்கும் வழக்கம் செய்து கொள்ள வேண்டியிருந்தது. மனத்தில் பல கேள்விகள் எழுந்தாலும் அவைகளையெல்லாம் ஒத்தி வைத்து விட்டு தான் விடுதலையான ஒன்றைப்பற்றியே நினைத்து சந்தோஷப்பட்டான்.

இரவெல்லாம் குமார் அந்த மூன்றும் வகுப்புப் பெட்டியிலேயே கழித்தான். தூங்கியும் விழித்தும் கலை ஊசலாடிக் கொண்டிருந்தது. காலை நேரமானதும் குமார் தனக்கு நன்ருகத் தெரிந்த சுற்றுப் புறங்களில் ரயில் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான். சீக்கிரம் மதுரை நகரை அடைந்து கொண்டிருந்தது. அதோ தூரத்தில் கோபுரம் தெரிந்தது. குமார் சென்னையிலிருந்து புறப்படு முன்பே வீட்டுக்குத் தந்தி கொடுத்திருந்தான். ஸ்டேஷனில் யாராவது காத்துக் கொண்டிருப்பார்கள் என்று தெரியும். சீக்கிரம் வீட்டை அடைந்து விடுவான். அப்புறம் என்ன? ஆனுல் ரயில் ஸ்டேஷனுக்கு வந்து நின்றுவிட்டது.

உடையாரின் கார் டிரைவர் மட்டும் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்தான். குமார் கையில் இருந்த சிறிய மூட்டையைத் தன் கையில் வாங்கிக் கொண்டு குமாரை மரியாதையுடன் வரவேற்ருன். அவனிடமிருந்து குமார் தன் பெற்ருேர்கள் கிராமத்தில் இருப்பதாகவும் தன்னை அங்கே கூட்டிக்கொண்டு வரச் சொல்லியிருப்பதாகவும் தெரிந்து கொண்டான்.

தான் தண்டிக்கப்பட்டபின் அதே பிளேட்பாரத்திலிருந்து சென்னை ஜெயிலுக்குப் போன காட்சி குமாருக்கு ஞாபகம் வந்தது. தன்னைப் பார்க்க எத்தனை கூட்டம்? போலீசாரால் எவ்வளவு பந்தோபஸ்து? எத்தனை கோஷங்கள்! அன்று தனக்கு எவ்வளவு புகழ், பெருமை! ஆனுல் இன்று? தன் தகப்பனுரின் டிரைவர் ஒருவன் தான். ஸ்டேஷனில் நடமாடிக் கொண்டிருந்தவர்கள் கூட தான்

யாரென்று கவனிக்கவோ திரும்பிப் பார்க்கவோ இல்லை. அம்மாதிரி புகழ், பெருமை, நிலையானதல்ல. பொது ஜனங்களுக்கு மறதி அதிகம் என்று குமார் தெரிந்துகொண்டான்.

தன் பங்களாவில் குளித்து சாப்பிட்டுவிட்டு சிறிது நேரத்திற்கெல்லாம் கிராமத்துக்குப் புறப்பட்டான். கார் வேகமாகச் சென்றது. கிராமத்துக்குப் பக்கத்தில் வரவர சுற்றுப்புறம் குமாருக்கு பல பழைய நினைவுகளை ஞாபக மூட்டியது. ஒவ்வொரு வேலியையும், மரத்தையும், சாலை தோட்டங்களையும், வாய்க்கால்களையும் குமார் தெரிந்துகொண்டான். ஒவ்வொன்றும் கண்முன்னே வரவர குமாரின் இருதயம் அளவில்லா ஆவல்கொண்டது. நீல வானமும், காற்றும்கூட ஏதோ புதிதாக இருப்பதாக குமாரின் மனத்தில் பட்டது. மரங்களின் கிளைகள் என்றுமில்லாத அழகுடன் காற்றில் ஊசலாடிய மாதிரி தோன்றியது. "இது என் ஊர். என் ஆசைக்கிருப்பிடம்" என்று நினைத்தான் குமார்.

துடிக்கும் இருதயத்துடன்தான் தன் தாயாரைச் சந்தித்தான். கார் வந்த சத்தம் கேட்டு முன் வாசற்படி மேல் நின்றுகொண்டிருந்தாள் ராஜலட்சுமி அம்மாள். குமார் காரை விட்டு இறங்கியதும் சில விநாடிகள் அவனை உற்றுப்பார்த்தாள். பிறகு அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு "குமார்!" என்றாள்.

"அம்மா!"

"ஐயோ! நீ எவ்வளவு மாறிவிட்டாய்?"

அதற்குமேல் ராஜலட்சுமி அம்மாளால் தன் கண்ணீர் வெள்ளத்தைத் தடுக்கமுடியவில்லை.

குமார் வீட்டிற்கு வந்தபிறகு தன் தாயார் சொல்லி யும், தகப்பனாரைப் போய்ப் பார்க்கவில்லை. அன்று மாலை அவரே குமார் இருந்த இடத்துக்கு வந்தார். ஆனால் சந்திப்பு அன்பு அற்றதாய் இருந்தது. பழைய ஞாபகங்கள் வந்து உண்மைச் சம்பாஷணையைக் குறுக்கிட்டன. மனத்திலிருந்ததை வெளியில் சொல்ல இருவராலும் முடியவில்லை.

“எப்படி இருக்கிறாய் குமார்?” என்றார் உடையார்.

“பரவாயில்லை” சுருக்கமாக பதிலளித்தான் குமார்.

“பரவாயில்லை!” என்றாள் ராஜலட்சுமி அம்மாள். தன் வாழ்க்கைக்கு இன்றியமையாத இவ்விருவரும் எங்கே மறுபடியும் பிடிவாதமாகப் பேசாமல் இருந்து விடுகிறார் களோ என்று பயப்பட்டாள். ஆகவே இருவரையும் வைத்துக்கொண்டு சம்பாஷணை நடத்துவது தன் பொறுப்பு என்று நினைத்துப்பேசலானாள். “எலும்பும் தோலுமாய் இருக்கிறான், பரவாயில்லையாம்! டாக்டரைப் பார்த்து உடனே ஏதாவது மருந்து சாப்பிடவேண்டும்.”

“அவ்வளவு மோசம் இல்லையம்மா.”

ஆனால், ராஜலட்சுமி அம்மாள் குமாரின் உடல் நிலையைப்பற்றிப் பேசினாள். “நீ......வெளியே வருவதற்கு முன் (ஜெயில் என்னும் வார்த்தையை உபயோகிக்க மனம் வரவில்லை.) உனக்கு நோய் ஏதாவது கண்டிப்பாக வந்தி ருக்கும். கைகளெல்லாம் கட்டை மாதிரி ஆகிவிட்டன. சிலநாளைக்காவது இளைப்பாற வேண்டும்.”

"ஆம். நீ கிராமத்திலேயே இருந்து இளைப்பாறுவது நல்லது" என்றார் உடையார். பிறகு "நான் சொன்னால் தான் நீ கேட்பதில்லையே. ஆனால் இப்போது சத்தியாக்கிரகம் நின்றுவிட்டது. ஆகவே நீ மறுபடியும் ஜெயிலுக்குப்போவதில் பிரயோஜனமில்லை. இனிமேல் என்ன செய்யப்போகிறாய்? அதை நீ தான் முடிவுசெய்யவேண்டும். இங்கே இருந்து நம் நிலங்களைப் பார்த்துக் கொள்ளலாம். அல்லது மதுரையில் ஏதாவது வியாபாரம் ஆரம்பிக்கலாம். உனக்கு எது இஷ்டமோ அப்படிச்·செய்."

இந்த மாதிரி பேசியது உடையாருக்குப் பெரிய கஷ்டமாய் இருந்தது. குமாரை இங்கிலாந்துக்கு அனுப்புவது என்பதைப் பற்றியெல்லாம் எவ்வளவோ நினைத்திருந்துவிட்டு கடைசியில் தன் அதிகாரத்தையெல்லாம் இந்த மாதிரி விட்டுக்கொடுக்க மனம் வரவில்லை. ஆனால் இப்படிப் பேசி முடிந்ததும் அவர் மனம் ஆறுதலடைந்தது. மனத்திலிருந்த பாரத்தை இறக்கி வைத்துவிட்ட மாதிரி தோன்றியது. இம்மாதிரி பேசியதைக் கேட்க அவருக்கே சிரிப்பு வந்தது. அந்த நிமிஷத்தில் தன் தகப்பனாருக்குத் தன் மேல் கோபம் இல்லையென்றும், அன்புதான் இருக்கிறதென்றும் குமார் அறிந்து கொண்டான்.

"நான் யோசனை செய்து சொல்லுகிறேன்" என்றான் குமார்.

"சரி"

பிறகு பல சில்லரை விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். உண்மை உணர்ச்சிகள் இருவர் மனத்திலும் மறைந்து கிடந்தன.

——)o°o(——

அத்தியாயம் முப்பத்தொன்பது

பல வருஷங்களுக்குப் பின் குமாரும் ராஜலக்ஷ்மி அம்மாளும் தம் கிராமத்தில் தனியே இருந்தார்கள். உடையார் அடிக்கடி மதுரைக்குப் போய்விடுவார். ஊரிலிருந்தாலும் இவர்களுடன் அதிகமாகப் பேசுவதோ பழகுவதோ இல்லை. இந்திராவும் குமார் ஜெயிலுக்குப் போன பிறகு தன் புருஷன் வீட்டிலேயே அதிகமாக இருந்து வந்தாள். குமாரைப்பற்றி ராஜலக்ஷ்மி அம்மாளின் மனப்பான்மை இந்திராவுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே குமாரும் ராஜலட்சுமி அம்மாளும் குமார் சிறிய பையனாய் இருந்த போது எப்படி கிராமத்தில் வசித்தார்களோ அப்படியே இப்போதும் இருந்தார்கள்.

நகரத்தின் பல சோதனைகளிலிருந்தும் விடுவித்துக் கொண்டு கிராமத்துக்கு வந்த தன் மகனைத் தன் வழியில் திருப்ப கடைசி முயற்சி செய்தாள் ராஜலட்சுமி அம்மாள். அவன் கிராமத்திலேயே இருக்கவேண்டும். தனது பழைய எண்ணங்களையெல்லாம் முற்றுப் பெறுமாறு செய்ய வேண்டும் என்றும் நினைத்தாள். கிராமத்தில் இருந்தபோது அவனுடைய குழந்தை மகிழ்வுகளையும், நினைவுகளையும் அவனுக்கு நினைவூட்டினாள். வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருளும், சந்தித்த ஒவ்வொரு மனிதனும், போய்ப் பார்த்த ஒவ்வொரு தோட்டமும் ராஜலட்சுமி அம்மாளுக்கு பழைய நினைவுகளைப்பற்றிப் பேச புதிய சந்தர்ப்பங்களை அளித்தன.

"பருவ மழை ஒன்றிரண்டு நாளில் வரும் என்று சொல்கிறார்கள். இடி, மின்னல் இவைகளைக் கேட்டால் நீ முன்பு எவ்வளவு பயப்படுவாய் ஞாபகமிருக்கிறதா?" என்பாள் குமாருடன்.

ஆம், குமாருக்கு ஞாபகமிருந்தன. மழை வருவதற்கு முன்னால் நீலவானமும் வெண்மை சூரியனும் மறைந்தன. திடீரென்று கருத்த மேகங்கள் உலகத்தையே மூடிக் கொண்டாற்போல் தோன்றும். இடியும், மின்னலும் கூடவே வரும். குழந்தை குமார் இந்த இயற்கை விநோ தத்தைக் கண்டு பயப்பட்டான்; ஆனால் அதைக் கண்டு பரவசமும் அடைந்தான். தாயாரின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு ஜன்னலண்டைபோய் முகத்தை ஜன்னல் கம்பிகளின்மேல் சாய்த்துக்கொண்டு இந்த வெளி யுலகின் மாறுதலைக் கவனித்தான். தூரத்திலிருந்த மலைகள் இப்போது தெரியவில்லை. மரக்கிளைகளிடையே காற்று ஊடுருவிப்பாய்ந்தது. மழை பிரவாகமாகக் கொட்டிற்று. கூரையின்மேல் மோதும் மழை சத்தத்தைக் கேட்கக் கேட்க குமார் தன் தாயின் கையை இன்னும் இறுக்கிப் பிடித்துக்கொண்டான். மண் கலந்த சிவந்த நீர் வீதிகளில் ஓடிற்று: நீர்மேல் எழுந்த குமிழிகளைக்கண்டு ஆனந்தப் பட்டான்.

மழை நின்றுவிட்டது. வானம் மறுபடியும் நீல நிறத்தைப்பெற்றது. வெண்மேகங்கள் தனித்தனியே மிதந்து சென்றன. ராஜலக்ஷ்மி அம்மாள் இப்போது அவனை விட்டுவிட்டு தன் வேலைகளைக் கவனிக்கச் செல்ல லாம். ஆனால் குமார் இன்னும் ஜன்னலண்டை நின்று கொண்டிருந்தான். மழை வெள்ளம் வீதிகளிலிருந்த

குப்பை கூழங்களை அடித்துக்கொண்டு போய்விட்டது. கடைசி மழைத்துளிகள் மட்டும் இன்னும் வீட்டுக் கூரைகளிலிருந்து விழுந்துகொண்டிருந்தன. ஜலம் ஓடும் சத்தமும் தவளைகள் கத்தும் சத்தமும் தூரத்தில் கேட்டது. ஈர மணலில் குடியானவர்களின் குழந்தைகள் வீதிகளில் வீடுகட்டி விளையாடினார்கள். ஆனால் குமாரோ இதையெல்லாம் ஜன்னல் கம்பிகளுக்குப் பின்னால் இருந்து பார்க்க வேண்டியிருந்தது. அப் பையன்களுடன் ஒரு மணி நேரம் விளையாட தன் தகப்பனார் வாங்கிவந்த உயர்தர பொம்மைகளையெல்லாம் சந்தோஷத்துடன் தியாகம் செய்திருப்பான்!

"நீ கன்னம் சிவக்கும்படி ஜன்னல் கம்பிகளின்மேல் உன் முகத்தை அழுத்திக்கொண்டு வேடிக்கை பார்ப்பாய், ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டாள் ராஜலக்ஷ்மி அம்மாள்.

"என்னை ஒரு நாளாவது மழை நீரில் விளையாட விட்டதில்லை" என்றான் குமார்.

"எல்லாம் நேற்று மாதிரி இருக்கிறது" என்று ராஜலக்ஷ்மி அம்மாள் பெருமூச்சு விட்டாள்.

ஒவ்வொரு நாளும் ராஜலட்சுமி அம்மாள் இந்த மாதிரி பேசிக்கொண்டேபோக குமாரின் மனத்தில் தன் குழந்தைப் பருவம் தெளிவாக எழுந்தது. ஒரு சந்தோஷமான கனவு மாதிரி தோன்றியது. தன் மனோ வளர்ச்சி தான் எப்படி தன் சுற்றுப்புறத்தைப்பற்றி அறிந்துகொள்ள ஆவலுள்ள சிறு பையனிலிருந்து இன்றைய மனோ

ஆராய்ச்சி நிலைக்கு வந்திருக்கிறான் என்பது தெரிய வந்தது. ஆம். ஞாபகம் ஒன்றுதான் இப்போது குமாரின் துணை. எங்கு திரும்பினாலும் ஞாபகமே தன்னை வரவேற்றது.

தனது உபாத்தியாயருடன் மாலைவேளைகளில் நடந்து போனது நினைவுக்கு வந்தது. அப்போது தன் வயதுள்ள மற்ற கிராமப் பையன்களைச் சந்தித்தான். அவர்கள் சந்தோஷமாக சிரித்துக்கொண்டும், ஆடிப் பாடிக்கொண்டும் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு போனார்கள். அப் பையன்களுக்கு படிக்கவோ எழுதவோ தெரியாது. இடுப்பில் அழுக்குப் பிடித்த ஒரு துண்டைத் தவிர வேறு உடை அவர்களுக்கு இல்லை. தானும் ஏன் அவர்கள் மாதிரி இருக்கக்கூடாது என்று குமார் யோசனை செய்தான். தானும் ஏன் ஒரு ஆட்டுமந்தையை ஓட்டக்கூடாது? வெயில் அதிகமாய் இருந்தபோது தானும் ஏன் ஒரு மர நிழலில் படுத்துத் தூங்கக்கூடாது, அல்லது ஒரு கிணற்றில் குதித்து நீந்தக்கூடாது? பல் கூசும் மாங்காய்களைத் திருடி வேலி மறைவில் தின்பதற்குப் பதிலாக தான் மட்டும் ஏன் வீட்டிற்குப்போய் நன்றாக சமைக்கப்பட்ட சாப்பாட்டைச் சாப்பிட வேண்டும்? தனக்கு இஷ்டமான காரியங்களைச் செய்வதற்குப்பதிலாக தான்மட்டும் ஏன் அர்த்தமில்லாத புஸ்தகங்களை கற்கவேண்டும்? ஏன்?

குமாரின் குழந்தை உள்ளத்தில் இக் கேள்விகள் எழுந்தன. பதில் தெரியாமல் விழித்தான். கடைசியில் தன் உபாத்தியாயரைக் கேட்டான்.

"நானும் மற்ற பையன்களுடன் மரமேறி விளையாடக் கூடாதா?"

"கூடாது, உனக்கு காயம்பட்டுவிடும்."

"அவர்களுக்கு காயம் படாதா?"

"அது அவர்களுக்கு வழக்கம். அன்றியும் அவர்கள் வேலை செய்து சம்பாதிக்கவேண்டும்."

"நான் வேலை செய்து சம்பாதிக்கவேண்டியதில்லையா?"

உபாத்தியாயர் குமாரைப் பார்த்து சிரித்தார். "நீ செய்யவேண்டியதில்லை. உன் தகப்பனர் பணக்காரர். நீ கல்வி கற்கவேண்டும்."

"அந்தப் பையன்கள் கல்விகற்க வேண்டியதில்லையா?"

"அவர்களுக்குப் பள்ளிக்கூடம் போக பணம் இல்லை."

"ஏன் என் தகப்பனருக்கு மட்டும் பணம் இருக்கிறது?"

இந்தக் கேள்விக்கு எப்படி பதில் சொல்வதென்று உபாத்தியாயருக்குத் தெரியவில்லை. கடைசியில் "கடவுள் உன் தகப்பனருக்குப் பணம் கொடுத்திருக்கிறார்" என்று சொன்னர்.

தர்க்க சாஸ்திரத்தில் குமாருக்கு இதுதான் முதல் பாடம் என்று சொல்லலாம். இன்று, பல வருஷங்களுக்குப் பிறகு, அப்போதே தன் மனத்தில் சந்தேகங்கள் கிளம்பின என்று தெரிந்துகொண்டான். ஆனல் வயது ஆக ஆக தன் கேள்விகள் அதிகரித்தன. மனத்தில் எழுந்த சந்தேகங்களையெல்லாம் நிவர்த்தி செய்துகொள்ள முயற்சித்தான். ஆனல் தன் கேள்விகளுக்கு பெரியோர்கள்

அளித்த பதில்கள் திருப்தி அளிக்கவில்லை. அடிக்கடி இந்த மாதிரி கேள்விகளெல்லாம் கேட்கக்கூடாது என்று கூடச் சொன்னார்கள்.

சிலசமயங்களில் குமார் தன் தாயாரைக் கேட்பதுண்டு. ராஜலட்சுமி அம்மாள் அவனுடைய கேள்விகளுக்கு சரியான பதில் கொடுப்பதே இல்லை. ஆனால் குமார் செய்யக் கூடாததைச் செய்தால் மட்டும் அவன்மேல் கோபப்படுவது உண்டு. ஒருநாள் குமார் தன் கையிலிருந்த மிட்டாய்களை ஒரு ஹரிஜனப் பையனுக்குக் கொடுத்தான். அப்படிக் கொடுக்கும்போது அவனைத் தொட்டுவிட்டான். உடனே அவனைக் குளிக்கச் செய்து அப்புறம்தான் ராஜலட்சுமி அம்மாள் வீட்டுக்குள்ளே அனுமதித்தாள்.

"இனிமேல் அந்தமாதிரி தொடக்கூடாது குமார்" என்று கண்டித்தாள்.

"நான் அவனுடன் விளையாடக் கூடாதாம்மா?"

"நீ அவனைத் தொடக்கூடாது. அவன் கீழ் ஜாதி."

"அவன் என் கீழ் ஜாதி?"

"கடவுள் அவனுடைய பாவங்களுக்காக அவனை அப்படிப் பிறப்பித்திருக்கிறார்."

அந்தத் தர்க்கத்துக்கு அதுதான் முடிவு!

குமாரின் பல கேள்விகள் இந்த மாதிரி தான் முடிவடைந்தன. "அது கடவுளின் இஷ்டம்." "கடவுள் உன்னை தண்டிப்பார்" என்று. இவற்றிலிருந்தெல்லாம் குமார் தன் உள்ளத்திலேயே கடவுள் எப்படி இருப்பார் என்று கற்பனை செய்தான். கடவுள் தமது அதிகாரத் திற்கும் சக்திக்கும் தக்க பொறுப்பு, நீதி இல்லாதவர் மாதிரி

தோன்றியது. அவருடன் சண்டைக்கு போவதோ அல்லது வேறு விதத்தில் அவருக்கு அதிருப்தி அளிப்பதோ அவ்வளவு உசிதமல்ல என்றும் தெரிந்து கொண்டான். கடவுளுடைய முக்கியத்தைத் தெரிந்து கொண்டதும் குமாரின் கேள்விகளும் கடவுளைப்பற்றியே இருந்தன. ஆனால் இதிலும்கூட பதில்கள் திருப்தி அளிக்கவில்லை. தனக்குக் கிடைத்த செய்திகளையெல்லாம் ஒன்று சேர்த்து குமார் கடவுள் கோவிலில் இருக்கிறாரென்றும், நன்மையை காப்பாற்றி தீமையை ஒழிக்கிறாரென்றும், எல்லோரும் அவரை வழிபடவேண்டுமென்றும், தேங்காய் பழம், சாதம், சில சமயங்களில் பணம், அவருக்குக் கொடுக்க வேண்டு மென்றும் அறிந்து கொண்டான். அப்போதே கடவுள் எல்லா இடத்திலும் இருந்தாலும் கண்ணுக்குத் தெரிய மாட்டார் என்றும் தெரிந்துகொண்டான்.

இப்போது சந்தேகம், சமுசயம் நிறைந்த பல வருஷங்களுக்குப் பிறகு, கடவுளைப்பற்றிய இந்தக் குழந்தை எண்ணங்கள் நினைவுக்கு வந்தன.

அப்புறம் தன் தாயாருடன் கோவிலுக்குப் போனதை பற்றி நினைத்தான். வழிபாட்டுக்குப் பிறகு வினியோகம் செய்யப்பட்ட பலகாரங்களுக்காகத்தான் குமார் போனான். ஆனால் சீக்கிரத்தில் அந்த தெய்வீக சூழ்நிலையில் தானும் இரண்டறக் கலந்து விட்டான். தன் தாய் மெய்மறந்து வழிபட்டபோது அவள் கண்களில் தெரிந்த ஜோதியைக் கண்டான். கைகூப்பி நிம்மதியான மனத்துடன் விழுந்து கும்பிட்டபோது குமாரும் அதேமாதிரி பின்பற்றினான். தன் சிறிய கரங்களைக் கூப்பினான். ஆனால் கடவுளைத் தொழ வில்லை. தன் தாயார் என்ன நினைக்கிறாள், எதைக் குறித்து வழிபடுகிறாள் என்று யோசனை செய்தான்.

மெதுவாக அசையும் அந்த உதடுகள்—அவை என்ன சொல்கின்றன? பிறகு மற்றவர்களைக் கவனித்தான். ஒவ்வொருவரும் நிம்மதியுடன் தனித்தனியேயும், ஒன்றாக வும், கடவுளுடன் பேசுவதாகக் குமாருக்குத் தோன்றியது. குமாரைத் தவிர வேறொருவரும் வழிபாட்டிற்குப் பிறகு வழங்கப் போகும் பிரசாதத்தைப்பற்றி நினைத்ததாகவே தெரியவில்லை.

பிறகுதான் குமாருக்கு கடவுளின் மேல் உண்மை யான நம்பிக்கை பிறந்தது. புனிதமான, கபடறியாத குழந்தை உள்ளத்தின் நம்பிக்கை. கோயில் சுவரைத் தாண்டி, வானத்தைத்தாண்டி, பிரபஞ்சத்தையே சூழ்ந்த நம்பிக்கை. தன் தாய் வழிபடும்போது கண்களில் தெரிந்த தெய்வீக ஒளிக்குத்தான் அந்த நம்பிக்கையைஒப்பிடலாம். இப்போது கோயிலில் வழிபட்டால் குமார் சுற்றிலும் பார்க்கவில்லை. தன்குற்றங்களை மன்னித்து தான் பல நாளாகக் கேட்டுக்கொண்டு வந்த கோரிக்கைகளை அனுக் கிரகிக்குமாறு வேண்டிக்கொண்டான். ஆனால் கடவுளைப் பற்றிய சந்தேகங்கள் பூரணமாக நிவர்த்தி ஆகவில்லை. கோயிலிலும் இருந்துகொண்டு, சர்வவியாபியாகவும் இருந்து கொண்டு எப்படியிருக்க முடியும்? ஒரு நாளைக்கு பலகாரம் கொடுத்து மறுநாள் ஏன் உண்ணாவிரதம் இருக்கச் சொல் கிறார்? ஒரு சிறு கோரிக்கைக்கும் இத்தனை நாள் காக்க வைப்பவர் யார்? அவர் உண்மையில் எப்படி இருப்பார்?

இந்த சர்ச்சைதான் குமாரை வெகுதூரம் இழுத்துச் சென்று அறிவைத்தந்து நம்பிக்கையைக் குலைத்து நிம் மதியை அழித்து மனமகிழ்வை நாசம் செய்து விட்டது.

ராஜலட்சுமி அம்மாள் இவைகளைப் பற்றியெல்லாம் பேசினுள். இவ்வளவு நாள் நம்பிக்கையற்று அலேந்து கஷ்டப்பட்ட பிறகு இப்போதாவது கடவுளின் பக்கம் திரும்ப மாட்டாஞ என்று முயற்சி செய்தாள். ஆனல் குமாரின் மனத்தில் இப்போது அந்த சர்ச்சை தீர்ந்து விட்டது. தன் தாயின் வேண்டுகோளுக்கிணங்கி கோயிலுக்குக்கூடப் போனுன். ஆனல் அங்கு தெய்வீக சக்தியையோ கடவுளின் சந்நிதியையோ காணவில்லே. விக்கிரகத்தையும், அர்ச்சகரையுமே கண்டான். கற்பூர சாம்பிராணி வாசனையையே முகர்ந்தான். தன் தாயாரை கருணை தோய்ந்த கண்களுடன் பார்த்தான். அவ்வளவுதான்.

மறுபடியும் கோயிலுக்குப் போகவில்லே.

அத்தியாயம் நாற்பது

ஒரு நாள் குமாரை பார்ப்பதற்காக இந்திரா தன் கணவன் வீட்டிலிருந்து வந்தாள். குமார் ஜெயிலில் இருக்கும்போது இந்திரா தான் தன் தம்பிக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி பலதடவை நினைத்துப்பார்த்தாள். அவன் எப்படி நடந்து கொண்டிருந்தாலும் தான் அவ்வளவு கொடுமையாக எழுதி இருக்கக்கூடாது, என்று சில சமயங்களில் தோன்றியது. ஆனால் அவன் செய்தது மட்டும் கொடுமை யல்லவா? என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டாள். இப்போது, அவன் ஜெயிலிலிருந்து வந்ததும் போய் பார்த்து, பேசி அவனை மன்னித்து விடுவது; ஜெயிலில் இருந்த பிறகாவது புத்தி வந்திருக்கும் எஃறு நினைத்துக் கொண்டு வந்தாள்.

“உன் கடிதத்துக்கு பதில் எழுத முடிய வில்லை இந்திரா. அப்போது எழுதும் நிலையில் நான் இல்லை” என்றான் குமார் சிரித்துக் கொண்டே. ஆனால் அவன் மனத்தில் உள்ள புண் மட்டும் ஆறவில்லை என்பதை அவன் பேச்சு காட்டியது. இந்திராவும் “பெரிய தியாகியாக இருப்பது உடம்புக்கு ஒத்துக் கொள்கிறதா? என்றாள்.

“எனக்கு தியாகியாக இஷ்டமில்லை. நான் தியாகியும் அல்ல. நம் தேசமே—என் உலகமே—மாறிக் கொண்டே வருகிறது. அதில் என் பங்கைச் செய்ய ஆசைப்பட்டேன். அவ்வளவு தான்.

"உலகத்தை எதற்காக மாற்ற வேண்டும்? அதில் வாழ்ந்து சந்தோஷமாக இருந்தால் போதாதா? உன் மாதிரி உலகத்தை மாற்ற முற்படுபவர்கள் தான் ஜனங்களுக்கு இவ்வளவு கஷ்டங்களையும் துயரங்களையும் உண்டு பண்ணுகிறார்கள்" என்றாள் இந்திரா.

"உலகத்தை நானா மாற்றுகிறேன்? உயிருள்ள பொருள்கள் வளருகின்றன. அப்படி வளருவதில் மாறுகின்றன. உலகத்துக்கும் ஜீவன் இருக்கிறது. அப்படி இருக்கும் வரையில் சமூகம் மாறித்தான் தீரும். அப்படி மாறா விட்டால் சமூகமே இறந்து விடும். நம் பாட்டனார் வாழ்க்கைக்கும் நம் வாழ்க்கைக்கும் வித்தியாசமில்லையா? மாட்டு வண்டியில் உன்னால் எத்தனை மைல் செல்ல முடியும்? காரில் தானே நீ செல்கிறாய்? அது மாறுதல் இல்லையா? உலகில் ஏற்படும் எல்லா மாறுதல்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சில மாறுதல்கள் தான் வேண்டும், சில வேண்டாம் என்று சொல்ல முடியாது. இம்மாதிரி உலகம் மாறுவது நல்ல அறிகுறி."

"நானும் முன்னேற்றத்தை விரும்புகிறேன். ஆனால் அதற்காக அரசாங்கத்துக்கு விரோதமாக புரட்சி செய்ய வேண்டுமா என்ன? நாகரீக முறையில் முன்னேற்றம் ஆகக் கூடாதா? கலை, இலக்கியம் இவற்றை எடுத்துக் கொள்............"

"நாகரீகத்தைப் பற்றி உனக்கென்ன தெரியும் இந்திரா?" என்று குமார் இடைமறித்தான். "உன் ஜாக்கெட்களின் கைகளைக் குட்டையாகவும் கழுத்தை பெரிதாகவும் கத்தரித்துத் தைத்துக் கொண்டால் அது தான் நாகரீகம்

என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய். நெற்றியின் மத்தியில் நேர் எடுப்பதற்கு பதிலாக ஓரத்தில் நேர் எடுப்பதால் அம்மாளை விட நீ அதிக நாகரீகமாய் இருப்பதாக உன் எண்ணம். பாகவதம், ராமாயணம், முதலிய புத்தகங்களுக்கு பதிலாக உதவாக்கரை நாவல்கள் சிலவற்றைப் படிப்பதால் முன்னேறி வருவதாக நினைக்கிறாய். பழைய நம்பிக்கைகளுக்கு பதிலாக புது மூடநம்பிக்கைகளில் நீ ஆழ்ந்திருக்கிறாய். ஆழமாகவும் தெளிவாகவும் பார்த்து, ஒவ்வொரு மனிதப் பிரச்சனையும் அனுதாபத்துடனும், உணர்ச்சியுடனும், தாராள மனப்பான்மையுடனும் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும்—அது தான் நாகரீகம், பண்பட்ட உள்ளத்தின் அர்த்தம். ஜெயிலுக்குப் போவதில் எனக்கென்ன ஆசையா? ஆனால் சமூகத்தில் பிறந்துள்ள வளரும், மாறும் சக்திதான் என்னையும் என்னையொத்தவர்களையும் புதிய வழிகளில் இழுத்துச் செல்கிறது. உன் மேலும், நம் பெற்றோர் மேலும் உள்ள அன்பை எப்படி நான் மறக்க முடியாதோ, அதே மாதிரி தான் இந்தச் சக்தியும் என்னை விட்டுப் பிரியாது. ஆனால் இந்த இரண்டிற்கும் போர் எழுந்தால்தான் கஷ்டம்.”

இம்மாதிரி சகஜமாக தன்மேலுள்ள அன்பைப் பற்றி குமார் பேசியது இந்திராவுக்கு ஆச்சரியத்தையும் திருப்தியையும் அளித்தது. ‘தன்னை உதாசினம் செய்து விட்டுத் தான் குமார் ஜெயிலுக்குப் போயிருக்கிறான்’ என்று இந்திரா நினைத்தாள். பாவம் அவனும் கஷ்டப்பட்டிருக்க வேண்டும் என்ற உணர்ச்சி தோன்றியது.

“எங்கள் மேல் இன்னும் உனக்கு அன்பிருக்கிறதா?” என்றாள்.

"என்ன அக்கா இந்த மாதிரி கேட்கிறாய்? என்றான் குமார். "அப்படியில்லாவிட்டால் நான் ஏன் என் மனதிலுள்ளதையெல்லாம் உன்னிடம் சொல்லி என்னை அர்த்தம் செய்து கொள்ளச் செய்ய வேண்டும்?"

அந்த நிமிஷத்தில் இந்திராவும் குமாரை மன்னித்து விட்டாள்.

* * *

அன்று மாலை எதிர்பாராதவிதமாய் திருமலை குமாரைப் பார்க்க வந்தான். "என்மேல் இருந்த அரஸ்ட் வாரண்டை ரத்து செய்து விட்டார்கள். ஆகவே நான் தலைமறைவில் திரிய வேண்டியதில்லை. என்னை பகிரங்கமாக வரவேற்கலாம்" என்றான் ஆச்சரியப்பட்ட குமாருடன்.

இருவரும் வெகு நேரம் பழைய நாட்களைப்பற்றிப் பேசினார்கள். பிறகு திருமலை குமாரின் ஜெயில் அனுபவங்களைப்பற்றி விசாரித்தான்.

"நான் போன பள்ளிக்கூடங்களில் எல்லாவற்றையும் விட அதுதான் சிறந்தது" என்றான் குமார். "ஒரு வருடம் மானிட வர்க்கத்தின் உதவி, அன்பு, அனுதாபம் ஒன்றும் இல்லாமல் இருப்பதைவிட வேறென்ன வேண்டும்? ஜெயில் வாசம் என் மனதை திடப்படுத்தி எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் நானே சிந்தித்து எனது சுய முடிவுக்கு வரக்கூடிய சக்தியை எனக்கு அளித்து விட்டது. அந்த சக்தி இல்லாததினால் நான் ஜெயிலுக்குப் போகுமுன் நான் அவ்வளவு கஷ்டப்பட்டேன்."

"அந்த முடிவு என்ன?"

"எந்த முடிவு?"

"இனிமேல் என்ன செய்வதாக உத்தேசம்? நானும் பானுவும் தர்க்கம் செய்தோமே, அதில் யார் கொள்கை

சரி என்ற முடிவுக்கு வந்திருக்கிறாய்? அதைப் பொருத்துத் தானே உன் எதிர் காலமும் இருக்கும்?"

"இதோ பார் திருமலை, உன் கொள்கைகளில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. முடிவில் அவை தான் வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அம் முடிவை அடையும் மார்க்கம் என்ன? அதில்தான் உனக்கும் எனக்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கிறது. பலாத்காரப் புரட்சி செய்து, ரகசிய சதிசெய்யும் மனப்பான்மையை ஏற்படுத்தி ரத்தக்கிளரியில் புரண்டெழுந்து பொது உடைமையை நிலைநாட்டினால் அது உண்மையான ஜனநாயகம் ஆகுமா? அதில் மக்கள் மகிழ்வுடனும் திருப்தியுடனும் வாழ முடியுமா?

"இதுவரையில் கேவலம் சிலருடை நலத்திற்காக மனிதவர்க்கம் எத்தனை தடவை ரத்தக்கிளரியில் புரண்டெழுந்திருக்கிறது?"

"அதனால் தான் மனிதவர்க்கம் உண்மையான ஜனநாயகத்தை அடையவில்லை."

"நீ பேசுவது தான் நினைத்திருந்ததை ஊர்ஜிதப் படுத்துகிறது" என்றான் திருமலை சிரித்துக்கொண்டே.

"எப்படி?"

"ஒவ்வொருவருடைய அரசியலும் அவர்களுடைய சொந்த பொருளாதார நிலைமையைப் பற்றியது. ஜெயிலிலிருந்து வெளியே வந்ததும் உண்ண உணவில்லாமல், போக இடமில்லாமல், செய்ய வேலையில்லாமல் சிலநாள் திரிந்திருந்தால் நீயும் என் மாதிரியே நினைப்பாய்."

"சமூகத்தின் வளர்ச்சி, போக்கு, பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டதுதான். ஆனால் தனி

மனிதனுக்கு நியாய உணர்ச்சி, மனச்சாட்சி, அன்பு இவைகளும் கொள்கைகளை நிர்ணயிக்கின்றன."

"கடவுளின் மேல் நம்பிக்கை இல்லாத போது கூடவா?" என்றான் திருமலை.

"ஆம். உன் மாதிரியே எனக்கும் கடவுளின் மேல் நம்பிக்கையில்லை" என்றான் குமார். நான் விஞ்ஞான மனப் பான்மை கொண்டவன்; யந்திரத்தை அடிமை செய்து மனிதவர்க்கத்தை முன்னேற்றலாம் என்ற நம்பிக்கை யுடையவன்." "ஆனால் மனிதவர்க்கம் ஒன்று; எல்லோரும் சகோதரர்கள் என்பதைக் கடவுள் வந்து சொல்ல வேண்டுமா, என்ன? நம் பகுத்தறிவிற்கே தெரியுமே. அதுதான் காந்தீயத்தின் தனி மகிமை. கடவுளின்மேல் நம்பிக்கையில்லாதவர்களும் பொதுவுடைமைக்காரர்களும் அதைப் பின்பற்றலாம். 'பக்கத்து வீட்டுக்காரனின் மேல் அன்பாயிரு' என்றார் இயேசுநாதர். ஆயிரத்துத் தொளாயிரம் வருஷங்களுக்கு அப்புறம் பக்கத்து வீட்டுக் காரன் மீதுள்ள அன்பை எப்படி வெளியே காட்டுவது, உலக நன்மைக்காக அதை எப்படி உபயோகப்படுத்துவது என்று காந்திஜி காட்டியிருக்கிறார். அதுதான் உலகிற்கு இந்தியாவின் ஒப்பற்ற வெகுமதி. அன்று நான் 'அன்பே நம் ஆயுதம்' என்று பாட்டாக எழுதினேன். இன்று அது என் இதய கீதமாக மாறி விட்டது............

இப்படி குமார் உற்சாகத்துடன் பேசிக்கொண்டே போனான். திருமலையும் பொறுமையாகக் கேட்டான். பிறகு "குமார் இங்கு தான் நம் பாதைகள் பிரிகின்றன. இனிமேல் வெவ்வேறு வழிகளில் தான் செல்ல வேண்டும்" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டான்.

———)0(———

அத்தியாயம் நாற்பத்தொன்று

குமாரை கிராமத்திலே இருக்குமாறு செய்ய ராஜ லட்சுமி அம்மாள் அரும்பாடு பட்டாள். ஆனால் குமார் அதைப்பற்றி பேசவேயில்லை. ஆகவே தானாக அவனுடன் நேரில் பேசுவது என்று அவன் தாய் முடிவு செய்தாள்.

"குமார், நம் கிராமக் குடியானவர்களுக்கு நீ ஏன் ஏதாவது உதவி செய்யக்கூடாது? உன் தகப்பனார் தான் இப்போது இங்கு இருப்பதில்லை. நீயாவது இங்கே இருந்து கொண்டு நம் நிலங்களையெல்லாம் பார்வையிட்டு உன் பாட்டனார் இருந்தமாதிரி கிராமத்தில் ஒற்றுமை, நிம்மதி, ஒழுங்கு ஏற்படுத்தக்கூடாதா?" என்று கேட்டாள்.

"பாட்டனார் இங்கு சர்வாதிகாரியாக அரசு செலுத்தி வந்தார். இந்தக் காலத்தில் அது முடியுமா? அன்றியும் நம் நிலங்களை நன்றாகப் பார்த்துக் கொண்டதனால் ஊரில் நிம்மதி ஏற்படுமா? உலகத்திலேயே நிம்மதியில்லாதபோது இங்கே மட்டும் நம்மால் என்ன செய்யமுடியும்? அப்படிச் செய்தால் தான் அது நிலைக்குமா? உலக சரித்திரம் முன்னேறும்போது அதை நம் கிராம எல்லையில் நிறுத்திவிட முடியுமா?" என்றான் குமார்.

"உன் மனத்திலாவது நிம்மதி ஏற்பட்டால் போதும். அது கூட இல்லையே" என்றாள் அவன் தாயார்.

"என் மனத்தில் நிம்மதி உண்டு அம்மா. நீ அதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். வெளியுலகில் பங்கெடுத்துக் கொள்ளாமல் இருப்பதால் மனத்தில் நிம்மதி ஏற்பட்டு

4337

விடாது. ஊர்ஜிதமான நம்பிக்கைகள் இருந்து அதன்படி நடக்கவும் சக்தியிருந்தால் தான் மனோ நிம்மதி ஏற்படும்" என்றான் குமார்.

சிறிது நேரம் இருவரும் மௌனமாய் இருந்தார்கள். பிறகு ராஜலட்சுமி அம்மாள் "குமார், உன் மூதாதைகளில் ஒருவர் உன் மாதிரிதான் இருந்தார். கிராம வாழ்க்கை பிடிக்காமல் யுத்தத்துக்குப் போனாராம். பாட்டி சொல்லக் கேட்டிருப்பாய்" என்றாள்.

ஆம். அந்த மூதாதையைப் பற்றி குமார் கேள்விப் பட்டிருந்தான். குமாரைப் போலவே அவரும் குடும்ப பழக்கவழக்கங்களை எதிர்த்தவர் தான்; கற்பனை உலகிலும் வெளியுலகிலும் சஞ்சரித்தவர். அவர் காலத்தில் திப்பு சுல்தானுக்கும், கிழக்கிந்திய கம்பெனிக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. உற்சாகத்தில் "வெள்ளைக் காரனை வெளியே ஓட்டுவதற்காக" அவரும் திப்புவின் பட்டாளத்தில் சேர்ந்தார். இந்த வழக்கமற்ற நடத்தை அந்த சுற்றுப்புறத்திலேயே ஒரு பரபரப்பை உண்டுபண்ணியது. அவர் போனதற்கு ஏதோ ஒரு பெண்ணும் காரணம் என்று அப்போது பேசிக்கொண்டார்களாம். குடும்பத்தார் எல்லோரும் சிலநாளில் அவர் இறந்துவிட்ட தாகவே பாவித்து அழுது சமக்கடன்களையும் செய்தார்கள். ஆனால் குடும்ப மறுபுக்கு பாருன இக்காரியம் சீக்கிரத்தி லேயே நேர் செய்யப்பட்டது. திப்புசுல்தான் தோல்வி யடைந்து பல ஜில்லாக்களை ஆங்கிலேயர் வசம் விடவேண்டி நேரிட்டது. குமாருடைய மூதாதையும் ஏமாற்றமடைந் தவராய் வெள்ளைக்காரன் ஆட்சிக்கு திரும்பி வந்தார்.

ஆனல் மனக்கசப்பு போகவில்லை. சண்டையின் வெறுப்பு; தோல்வியின் மான நஷ்டம், தனது கத்தியையும் துப்பாக்கியையும் ஆங்கிலேயருக்கு விட்டு விட்டு வரநேர்ந்த அவமானத்தை அவர் மறக்கவில்லை. ஆங்கில அரசாங்கமும் அவர் வாழ்நாள் முழுவதும் அவரை சந்தேகித்துக் கொண்டே வந்தது. குமாரும் அந்த மூதாதையைப்பற்றி அனுதாபத்துடன் நினைத்தான்.

"என்ன யோசிக்கிருய் குமார்?" என்று கேட்டாள் அவன் தாயார்.

"ஒன்றுமில்லை அம்மா" என்று சொல்லி விட்டு குமார் மறுபடியும் தன் குடும்ப சரிதத்தைப்பற்றி யோசனை செய்தான்.

நாள் ஆக ஆக யுத்தத்தால் எழுந்த வெறுப்புத் தீ அணைந்து விட்டது. சாம்பல் மட்டும் புகைந்து கொண்டிருந்தது. பின்பு வந்தவர்கள் ஆங்கில அரசாங்கத்தை வெறுத்தாலும் 'அது தான் விதி' என்று சும்மா இருந்தார்கள். சும்மா இருந்ததுமன்றி குமாரின் பாட்டனர் தான் ராணி விக்டோரியாவின் விசுவாசமுள்ள பிரஜை என்றும் வெளிக்காட்டிக்கொண்டார். அதை ஊர்ஜிதப் படுத்துவதற்காக அடிக்கடி ஆங்கில அதிகாரிகளுக்கும், உயர்ந்த இந்திய அதிகாரிகளுக்கும் வெகுமதிகள் கொடுத்தும் அவர்களைக்கண்டு பேசியும் வந்தார். இதனல் அக்கம் பக்கத்து கிராமங்களிலெல்லாம் அவருக்கு ஒருவித மதிப்பு உண்டாயிற்று. 'பெரியவர்' அல்லது 'பெரிய உடையார்' என்று அவருக்கு பெயர் ஏற்பட்டது. இந்த வழிகளிலெல்லாம் அந்தஸ்தை அவர் உயர்த்தினர்.

காலமும் மாறிக்கொண்டே வந்தது. கிராமத்தின் பொருளாதாரம், திருப்தி, தனிமை, இவையெல்லாம் அயல் நாட்டு ஆட்சியின் முன்பும் ஆங்கிலேய கைத்தொழில் புரட்சியின் முன்பும் மாறிக்கொண்டு வந்தன. 'இரும்புப் பிசாசு' என்று கிராமத்தார் நினைத்துவந்த ரயில் அன்னியத் துணிகளையும், பண்டங்களையும் தேசத்தில் கொண்டுவந்து கொட்டிற்று. இந்தியக் கைத்தொழில்கள் நாசமடைந்தன. கைத்தொழில் செய்து வந்தவர்கள் எல்லோரும் விவசாயத் தாலேயே ஜீவனம் செய்யவேண்டி ஏற்பட்டது. அடிக்கடி பஞ்சங்கள் வந்தன. 'ராமன் ஆண்டாலென்ன ராவணன் ஆண்டால் என்ன' என்று ஆயிரக்கணக்கான வருஷங் களாக நிம்மதியுடன் மாறுதது தொழில் செய்துவந்த கிராம வாசிகளும் இந்தப் பொருளாதாரச் சுழலில் முதன்முதலாக அகப்பட்டனர்.

கைத்தொழில் புரட்சி ஏற்பட எல்லாம் பொருந்தி யிருந்தன. உடையாரும் தம் மில் ஆரம்பித்தார்.

மக்களுக்கு அரசியல் விழிப்பு ஏற்பட்டது. ஜன நாயகம், சுதந்திரம், சமதர்மம் என்னும் கோஷங்கள் கிளம் பின. காந்திபும் தென் ஆப்ரிக்காவில் சோதனை செய்து வெற்றி அடைந்த சத்தியாக்கிரக ஆயுதத்தை மக்களுக்கு அளித்தார்.

ஒவ்வொரு தலை முறையிலும் அப்போது எது முன் னேற்றமாக இருந்ததோ, எது சரியோ, அதையேதான் முன்னோர்கள் செய்துவந்திருப்பதாகத் தோன்றியது. திப்பு சுல்தானுடன் சேர்ந்து சண்டையிட்ட மூதாதை, பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் ஆங்கில சர்க்

காரை ஆதரித்த பாட்டனர், கைத்தொழிலே ஆரம்பித்த தந்தை, இன்று சுதந்திரப் போரில் பங்கெடுத்துக் கொள் ளும் தான்—எல்லோரும் தத்தம் முறையில் தேச மாறு தலுக்கு உதவி செய்திருக்கிறார்கள்.

ஆம். குடும்ப சரித்திரமும், மரபும், சூழ்நிலையும் குமாரின் வாழ்க்கையை பிறப்பதற்கு முன்பே முடிவுசெய்து விட்டன. ஆனல் விதியை எதிர்த்து சுதந்திரம் கேட்ட மக்களின் போர், உண்மையும் அன்புமே ஆதாரமாகக் கொண்ட சத்தியாக்கிரகம்; இவைகள் தன் வாழ்க்கையில் மாறுதல்கள் செய்து தன் மூதாதையைப் போலவே குடும் பத்திலிருந்து வெளியே இழுத்துச் சென்றுவிட்டன. தானும் தன்னைப் போன்றவர்களும்தான் இனிமேல் ஏற் படும் புது இந்தியாவை சிருஷ்டி செய்யப் போகிறார்கள்.

இதெல்லாம் எப்போது குமாருக்கு இவ்வளவு தெளி வாகத் தெரிந்தது? புஸ்தகங்களில் படித்தான? திருமலே யும் பாலுவும் சொல்லிக்கொடுத்தார்களா? எப்படியிருந் தாலும் இப்போது மனத்தில் தர்க்கம், புயல் ஒன்றுமில்லை. தன் முடிவைத் தாயாருக்கு தெரிவிக்கவேண்டியது தான் பாக்கி. அவள் ஒத்துக்கொண்டால் போதும். இந்திராவும் தகப்பனரும் சந்தோஷத்துடன் ஒத்துக்கொள்வார்கள் என்று குமாருக்குத் தெரியும்.

ராஜலட்சுமி அம்மாள் பக்கத்தில் தான் இருந்தாள். குமாரின் முகத்தைக் கூர்மையாக கவனித்துப் பார்த்து அவன் இருதயத்தில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்ள முயன்றாள்.

குமார் தான் இதுவரை நினைத்ததையெல்லாம் சொன்னான். உள்ளத்தில் உள்ளதையெல்லாம் அப்படியே — தன் தாயாரிடம் வார்த்தைகளாக அள்ளிக் கொட்டினான். குடும்ப பரம்பரையைப் பற்றியும் தேசத்தைப் பற்றியும் ஆவல், உற்சாகம், ததும்பப் பேசினான்.

"அம்மா, நான் வெளிநாடு போகவிரும்புகிறேன். அங்கு சென்று பல தொழில்களையும் அவர்களுடைய வாழ்க்கையையும் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நம் நாட்டில் சீக்கிரம் கைத்தொழில்கள் பரவும். அவற்றை நன்றாக நடத்தத் தெரிந்தவர்கள் இருக்க வேண்டியது அவசியம். சுதந்திர இந்தியாவின் தொழில்களெல்லாம் இந்தியர்களே நடத்தவேண்டும். மேனாட்டு சாஸ்திரங்களையும் கொள்கைகளையும் கற்று அவற்றிலிருந்து நமக்கு வேண்டியவற்றை உபயோகிக்கவேண்டும். கிராமத்தில் இருந்து கொண்டு நான் என்ன செய்யமுடியும்?"

ஆம். மறுபடியும் குமார் வீட்டை விட்டுப் போக எத்தனித்தான். குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் போக விரும்பினர். அன்றியும் மற்றவர்களையும் அதே வழியில் இழுத்துச் செல்ல முயன்றனர். அசைக்க முடியாத விதி அவர்களை ஒன்றாகப் பிணைத்துவிட்டது. அன்பென்னும் பாசம் அப்பிணையை பலப்படுத்தியது. ஆனால் மனம் — இந்திராவின் பெண் மனம், தாயாரின் வைதீக மனம், தகப்பனாரின் அதிகாரம் பொருந்திய மனம், குமாரின் லட்சிய மனம் — தன் வழியில் போக முயன்றது.

"உலகமே மாறிவிட்டது. எப்போதும் மாறாது என்று நான் நினைத்ததெல்லாம் மாறிக்கொண்டு வருகின்றன. நீ கூட மாறிவிட்டாய். நான் ஒருவள்தான்

அப்படியே இருக்கிறேன்; பின் தங்கிவிட்டேன், இந்த உலகத்தில் எனக்கு வேலை இல்லை" என்ருள் ராஜலட்சுமி அம்மாள்.

"நம் குடும்பம் இருக்கும் வரையில் உனக்கு வேலையிருக்கிறது. நான் எவ்வளவு தூரம் போனுலும், உங்களையெல்லாம் எப்படி மறப்பேன்?" என்ருன் குமார். பிறகு "அம்மா, இந்த வெளியுலகம் மிகவும் கொடுமை பொருந்தியது. உன்னைப்பற்றி நினைக்கும்போதுதான் அதை மறக்க முடியும். ஆனுல் அக்கொடுமையைத் தகர்த்து வெற்றி பெறுவதே என் தலைமுறைக்கு வேலை. ஆனுல் உன் அன்பு இல்லாவிட்டால் நான் அக்கொடுமையைப் பொறுக்க முடியாது" என்ருன்.

"நீ மேல்நாடு சென்று படித்து எவ்வளவோ பெரிய மனிதனுவாய். ஆனுல் எனக்கு நீ குழந்தைதான். அதை மறக்கமாட்டாயே? இந்திராவும் உன் தகப்பனுரும் சந்தோஷப்படுவார்கள்."

"அப்போது நான் போகலாமல்லவா?"

"ஆம் சந்தோஷமாகப் போய் வா. உனக்கு நம்பிக்கையில்லாத அந்தக் கடவுளே உன்னைப் பாதுகாப்பார்."

ராஜலட்சுமி அம்மாளின் கண்களிலிருந்து முத்துக்கள் போன்ற இரு நீர்த்துளிகள் சிந்தின.